மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகப் பணி துவங்கி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இடையில் குளச்சல் மீனவ கிராம மக்களுக்கும், அந்த ஒப்பந்ததாரருக்கும் இடையிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டு, அது நடைமுறையில் உள்ள சாத்தியக்கூறுகளின்படி இல்லாமல், அதனை இன்னும் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதி மீனவ மக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்த வகையில், அம்மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. சுரேஷ் ராஜன் அவர்களும், நானும் மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகளும், மீன்பிடித் துறைமுகம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்து ஆலோசித்திருக்கிறோம். விரைவில் அந்தத் துறைமுகப் பணி தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

பட்டா

***61385—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம், பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தினுடைய பணிகள் குறித்து சட்டப் பேரவையில் அறிவித்தும் இன்னும் அந்தப் பணிகள் துவங்கப்படவில்லை. திரு. ஜெயபால் அண்ணன் அவர்களும், நாங்களும் சட்டமன்றக் குழுவின் ஆய்வுப் பயணத்தின்போது அங்கு சென்றிருந்தபோது இது குறித்து ஆய்வு செய்தோம். அங்கே அந்தப் பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகப் பணி துவங்கி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இடையில் குளச்சல் மீனவ கிராம மக்களுக்கும், அந்த ஒப்பந்ததாரருக்கும் இடையிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டு, அது நடைமுறையில் உள்ள சாத்தியக்கூறுகளின்படி இல்லாமல், அதனை இன்னும் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதி மீனவ மக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்த வகையில், அம்மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. சுரேஷ் ராஜன் அவர்களும், நானும் மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகளும், மீன்பிடித் துறைமுகம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்து ஆலோசித்திருக்கிறோம். விரைவில் அந்தத் துறைமுகப் பணி தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

பட்டா

***61385—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம், பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம், பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனைப் பட்டா வழங்குவதற்காக ஓமலூர் வட்டாட்சியர்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமத்தில் உள்ள, பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 40 ஆண்டுகளுக்கு முன்பே துவங்கப்பட்டது. அது 2,500 உறுப்பினர்களைக்கொண்டு 30 கேன்கள் அளவிற்கு 1,200 லிட்டர் பாலை தினமும் கொள்முதல் செய்து வருகிறது. நேற்றையதினம்கூட இரவு 8-1/2 மணி வரை அங்கே பால் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கென்று 10 சென்ட் நிலப்பரப்பிலே பால் உற்பத்தியாளர்களே தங்கள் சொந்தப் பணத்தில் மூன்று இலட்ச ரூபாயில் தார்சு கட்டடத்தைக் கட்டியுள்ளார்கள். கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கப் பெயரிலே இதற்கு வீட்டு வரி கட்டப்பட்டு ரசீதும் இருந்திருக்கிறது. மேற்படி நிலம் கடந்த காலங்களில் கிராம நத்தம் புறம்போக்காகவும் இருந்திருக்கிறது. ஆனால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வளர்ச்சிக்காக இந்த நிலம் எடுக்கப்பட்டு எந்தவித வளர்ச்சியும் செய்யப்படாமல் அதன்பெயரிலேயே இருக்கின்ற காரணத்தினாலே, இது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே பட்டா மாற்றம் செய்யப்படவில்லை. இதை வேணுகோபால் என்ற தனியார் சேகர் என்பவருக்கு விற்றிருக்கிறார். எனவே, பால் வளத் துறை இந்த நிலத்திற்கு பட்டா பெறாமல் இருந்தது ஏன்? எனவே, இதற்கு பால் வளத் துறை, கூட்டுறவுச் சங்கம் பெயரிலே பட்டா பெற்றுத் தருமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம்,

2010 ஏப்ரல் 15]

பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 1978-லிருந்து நடைபெற்று வருகிறது. இதில் 350 சங்க உறுப்பினர்கள் தினந்தோறும் 1700 லிட்டர் பாலை சங்கத்திற்கு வழங்கி வருகிறார்கள். இந்த இடமானது சுமார் 15 சென்ட் நிலத்தில், புல எண் 282-ல் 4,945 சதுர அடியில் அமைந்திருக்கிறது. மேற்படி இடத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த இடம் தனக்குத்தான் சொந்தம் என்று பி.எஸ். வேணுகோபால் என்பவர் அவருடைய பவர் ஏஜென்ட் நெடுஞ்செழியன் எங்ன்பவர் மூலமாக உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 242/05 என்ற வழக்கைத் தொடுத்திருந்தார். அந்த வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு, பால் வளத் துறையினுடைய அந்த சொசைட்டியின் வெங்கடாஜலம் என்ற செயலாளர் 12-7-2007 அன்று திரு. வேணுகோபால், திரு. நெடுஞ்செழியன், திரு. எஸ்.கே. சேகர் ஆகியோருக்கு எதிராக 65/07 என்ற எண்ணுள்ள வழக்கினைத் தொடுத்து ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெற்றிருக்கிறார். தற்போது அந்த 4,945 சதுர அடி நிலத்திற்கு பட்டா பெறவேண்டும் என்று அந்தச் சங்கத்தினுடைய செயலாளர்மூலம் கேட்பு மனு செய்யப்பட்டது. அந்த மனுவின் மேல் விசாரணை செய்தபோது இதுபோன்ற வழக்குகள் நிலுவையில் இருந்த காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டு, இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்திற்கு அது சொந்தமான இடமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் ஒப்புதலைப் பெற்று நில மாற்றம் செய்யப்பட்ட பிறகு, அரசு மூலமாகப் பட்டா வழங்கப்படும். இதுகுறித்து நேற்றையதினம் நானே தொலைபேசியிலே வட்டாட்சியரிடம் தொடர்புகொண்டு கேட்டேன். அவர் எனக்கு இதுகுறித்த நகலினை அனுப்பியிருக்கிறார். அந்த அடிப்படையிலே இதை ஆய்வு செய்தபிறகு நில மாற்றம் செய்து நிச்சயமாகப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பட்டா பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டு பட்டா பெற்றுத் தருவோம் என்று சொன்னார்கள்.

இருந்தாலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போது, இது வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் என்று இங்கு சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்பாக இது கிராம நத்த நிலமாக இருந்திருக்கிறது. கிராம நத்த நிலம், அரசுக்குச் சொந்தமாக இருந்த நிலம், வீட்டு வசதி வாரியத்திடம் போய் இருக்கிறது. வீட்டு வசதி வாரியத்திடம் சென்ற பிறகு, அதன் பின்னர் தனியாருக்குக் கிரயமாகி இருக்கிறது. இப்போது தனியார் அந்த நிலத்தின்மீது ஸ்டே வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆக, இடையிலே நமது பால் வளத் துறையினர் தனியார், கோர்ட்டிலே ஸ்டே பெறுவதற்கு எப்படி விட்டார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். எனவே, மீண்டும் அதிலே தனிக் கவனம் செலுத்தி, அரசுக்குச் சொந்தமான நிலம் தனியாருக்குப் போகிறது. முன்பே அங்கே பால் வளத் துறையின் சங்க உறுப்பினர்களெல்லாம் சொந்தமாகக் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதற்குக்கூட நாம் அரசின்மூலமாகப் பட்டாவைப் பெற இயலாத நிலையில் இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, இதிலுள்ள குறைகளையெல்லாம் நீக்கி, மீண்டும் பால் வளத் துறையின் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பட்டா பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறைக்கு எதிராகப் பிறர் யாரும் உறுத்துக் கட்டளை வாங்கவில்லை. பால் வளத் துறைதான் உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெற்றிருக்கிறது. மற்றவர்கள் அத்துமீறி அந்த இடத்தில் நுழைந்துவிடக் கூடாது என்பதற்காக, மூவர்மீது நிரந்தர உறுத்துக் கட்டளையைக் கேட்டுப் பெற்றிருக்கிறோம். அதேநேரத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை வீட்டு வசதி வாரியத்திற்காக எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களின் தேவை போக, பாக்கி நிலத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்கிறார்கள். ஆனால், கட்டடம் கட்டி இருக்கிற இடம் தற்போது வீட்டு வசதி வாரியத்திடம் இருப்பதாக கோட்டாட்சியர் என்னிடம் இன்றைக்குத் தகவல் தந்திருக்கிறார். ஆக, வீட்டு வசதி வாரியத்திடமிருந்து நிலத்தை அரசு பெற்று, அதன் பிறகுதான் பால் வளத் துறை கூட்டுறவுச் சங்கத்திற்கு, அரசுத் துறையின் மூலமாகப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 15]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1 முதல் 3 வரை)@

பட்டியல் 1

1—

புதிய கட்டடம்

வினா எண் 63269—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வடமதுரையிலுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடமும், காவலர்கள் குடியிருப்பு வீடுகளும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேடசந்தூர், வடமதுரை மகளிர் காவல் நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்குத் தகுதியான நிலம் தற்பொழுது காவல் துறை வசம் இல்லை. தகுதியான நிலம் பெறப்பட்டதும், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு அடுத்த 3 ஆண்டுகளில் படிப்படியாக புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மூன்றாம் காவல் ஆணையத்தின் பரிந்துரையின்படி, இக்காவல் நிலையத்திற்கு வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

2—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3649—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கோட்டமேடு பகுதி, தாராபுரம் ஊராட்சி, குரும்பன்காடு பகுதி, வேப்பிலை ஊராட்சி, மங்காணிகாடு பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கோட்டமேடு, தாராபுரம் ஊராட்சி, குரும்பன்காடு என்ற குருமண்காடு மற்றும் வேப்பிலை ஊராட்சி, மங்காணிகாடு ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கும் ஏற்கெனவே தனித்தனியாக மக்கள் தொகைக்கேற்ப 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் அவசியம் எழவில்லை.

3—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 4985—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், ஏரிசின்னகாரம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கெலமங்கலம் ஒன்றியம், இராயக்கோட்டை ஊராட்சி, ஏரிசின்னகாரம்பட்டி என்ற ஏரி சின்னகவுண்டம்பட்டி

2010 ஏப்ரல் 15]

குடியிருப்புக்கு 2001 ஆம் ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயலாக்கப்பட்டுப் பயனில் உள்ளது. இத்திட்டத்தின் நீராதாரத்தின் கொடுதிறன் குறைந்துள்ளதால் 2006-2007-ல் மாற்று நீராதாரம் ஏற்படுத்தப்பட்டுப் போதுமான குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

4—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 7162—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தணக்கர்குளம் ஊராட்சி வி.ஓ.சி. நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், தணக்கர்குளம் குடியிருப்பில் வி.ஓ.சி. நகர் என்பது ஒரு பகுதியாகும். தணக்கர்குளம் குடியிருப்பில் அதன் தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது, நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்தும், இக்குடியிருப்பிற்கு ஆற்று நீரும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2006-2007 ஆம் ஆண்டு தணக்கர்குளம் நீராதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்குழாய்க் கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குடிநீர் திட்டங்களின் மூலமாகத் தணக்கர்குளம் குடியிருப்பில் உள்ள மக்களுக்கு நாளொன்று, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும், இதன் ஒரு பகுதியாக அமைந்துள்ள வி.ஓ.சி. நகரிலும் நாளொன்று, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும், குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், வி.ஓ.சி. நகருக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியமில்லை.

5—

நவீன சுகாதார வளாகம்

வினா எண் 7560—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, குட்டைமேடு காலனி பகுதியில் நவீன கழிப்பிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், ஒலக்கடம் பேரூராட்சிக்கு உட்பட்ட குட்டைமேடு காலனி பகுதியில் 2006-2007 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் இருந்து ரூ.3.00 இலட்சமும் மற்றும் பேரூராட்சியின் பங்குத் தொகையாக ரூ.0.10 இலட்சமும் மொத்தம் ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுகாதார வளாகம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மகளிர் சுகாதார வளாகம் செப்டம்பர் 2007 முதல் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6—

குடிநீர் வசதி

வினா எண் 8069—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, நவக்கரை மாவூத்தம்பதி ஊராட்சிப் பகுதிகளில் அத்திக்கடவு தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, நவக்கரை மாவூத்தம்பதி ஊராட்சிப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட, பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் போதுமான அளவு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 9661—திரு. என். ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, தாமரங்கோட்டை வடக்கு ஊராட்சியில் ராசியங்காட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, தாமிரங்கோட்டை வடக்கு ஊராட்சியில் ராசியங்காட்டில் ஏற்கெனவே மக்கட்தொகைக்கேற்ப 10,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், ராசியங்காடு வடக்குத் தெரு குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செப்டம்பர் 2007-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் குடியிருப்புகளுக்குப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

[2010 ஏப்ரல் 15

8—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 14124—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், கஞ்சா நகரம் ஊராட்சி, கீழத் தெரு மற்றும் ஆக்கூர் ஊராட்சி, புங்கையன் தோப்பு தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி செம்பனார்கோவில் ஒன்றியம், கஞ்சா நகரம் குடியிருப்பில் புதிய ஆழ்துளைக் கிணறு, மின் அறை, மின் இறைப்பான், நீர் உந்துக் குழாய்கள் பதிக்கப்பட்டு தற்போது பயனில் உள்ளது. மேலும், ஆக்கூர் ஊராட்சி, புங்கையன் தோப்புத் தெருவிற்கு ஆக்கூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள *60,000* மற்றும் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிய மேல்நிலை நீர்த்தொட்டிகளுக்கான அவசியம் இல்லை.

9—

கான்கிரீட் தளம்

வினா எண் 15911—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சி சௌண்டம்மன் கோவில் அருகில் கான்கிரீட் தளம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட 3-வது வார்டு சௌண்டம்மன் கோவில் அருகில் ஏற்கெனவே கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டுள்ளது. சௌண்டம்மன் கோவில் திருவிழா வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுவதால் மேற்படி சாலையின் குறுக்கே பூக்குழி அமைப்பதற்காக சுமார் 10 அடி அகலமும், 20 அடி நீளமும் உள்ள சாலையை வெட்டி பூக்குழி அமைத்துப் பொது மக்கள் பண்டிகை கொண்டாடி வருகின்றனர். வருடாவருடம் இவ்வாறு சாலையை வெட்டி பூக்குழி அமைப்பதனால் மேற்படி இடத்தில் கான்கிரீட் அமைக்க இயலாத நிலையில் உள்ளது.

10—

ஆக்கிரமிப்புகள்

வினா எண் 20603—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் ஆபீசர் லைன், லாங்கு பஜார், சிட்டிங் பஜார், மண்டி தெரு, ஆற்காடு சாலை, காந்தி சாலை, தென்னமரத் தெரு, ஜீ.பி.எச். சாலைகளில் ஆக்கிரமிப்புக் கடைகளால் போக்குவரத்து பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வேலூர் தொகுதியிலுள்ள, வேலூர் நகரில் லாங்கு பஜார் மற்றும் ஆறு தெருக்களில் நடைபாதை மற்றும் தள்ளுவண்டி கடைக்காரர்களால் ஏற்படுத்தப்படும் ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது நகராட்சியால் போக்குவரத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாவண்ணம் அகற்றப்பட்டு வருகின்றன.

[2010 ஏப்ரல் 15

11—

பழுதுபார்க்கும் பணி

வினா எண் 23049—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, பெருமாப்பட்டு ஊராட்சி தொடக்கப் பள்ளியின் பழுதடைந்த மேற்கூரையை அகற்றிவிட்டு தளம் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாப்பட்டு ஊராட்சியில் உள்ள பெருமாப்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடத்தில் 2008-09 ஆம் நிதியாண்டில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு பள்ளிக் கட்டடம் தற்போது நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது.

12—

ஆக்கிரமிப்பு

வினா எண் 27365—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் அரண்மனைப் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள அரண்மனைப் பகுதியில் அவ்வப்போது ஏற்பட்டுள்ள தற்காலிக

2010 ஏப்ரல் 15]

ஆக்கிரமிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையில் வருவாய்த் துறை, காவல் துறை உடன் இணைத்து நகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

13—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 42348—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பாண்டியம்பாளையம் ஊராட்சி, குஞ்சரமடை வீரய்யன் கோயில் அருகில், துடுப்பதி ஊராட்சி கைக்கோளான் தோட்டம், பெரியகாடு குடியிருப்புப் பகுதிகள், செங்கப்பள்ளி ஊராட்சி பூசாரிபாளையம், மணியோசை நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பாண்டியம்பாளையம் ஊராட்சி, குஞ்சரமடை வீரய்யன் கோயில் துடுப்பதி ஊராட்சி கைக்கோளான் தோட்டம், பெரியகாடு ஆகிய பகுதி குடியிருப்புகளுக்கு முறையே குஞ்சரமடை மற்றும் டி. ஓலப்பாளையம் ஆகிய குடியிருப்புகளில் அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. செங்கப்பள்ளி ஊராட்சி, பூசாரிபாளையம் மற்றும் மணியோசை நகர் குடியிருப்புகளுக்கு முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுப்புமுனை IV மற்றும் IV-A மூலம் மணியோசை நகரில் மக்கட்தொகையையும் கணக்கில் கொண்டு பூசாரிபாளையம் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து இரு குடியிருப்புகளுக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2010 ஏப்ரல் 15

14—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45390—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் ஆயாமரத்துக்காடு பகுதி, எம். செட்டிபட்டி ஊராட்சி, 2-வது வார்டு தெற்கு காடு பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எம். செட்டிப்பட்டி ஊராட்சி, 2-வது வார்டு தெற்கு காடு பகுதி தெற்கு காடு குடியிருப்பைச் சார்ந்தது. இங்கு கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 2-வது வார்டு தெற்கு பகுதிக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விரண்டு பகுதிகளுக்கும் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் இல்லை. ஆயாமரத்துக்காடு பகுதிக்கு குடிநீர்த் திட்டம், வரும் நிதியாண்டுகளில் செயல்படுத்த பரிசீலிக்கப்படும். தற்போது இப்பகுதிக்கு அருகிலுள்ள கந்தன் பிச்சானூர் AR-ல் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2010 ஏப்ரல் 15]

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45413—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, இலைக்காரன் வளவு பகுதி, அமரகுந்தி ஊராட்சி, இலைக்காரன் வளவு 4 சாலை பகுதி, பாப்பம்பாடி ஊராட்சி, சந்தைப்பேட்டை துவக்கப் பள்ளியின் பின்புறம், கருக்கல்வாடி ஊராட்சி, சஞ்சீவராயன் கோயில் அருகில், ராமிரெட்டிப்பட்டி ஊராட்சி, துட்டம்பட்டியான் காட்டுவளவு பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மல்லிக்குட்டை ஊராட்சி, இலைக்காரன் வளவு குடியிருப்புக்கு அதிகாரம்பட்டி காட்டுவளவு குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அமரகுந்தி ஊராட்சி இலைக்காரன்வளவு 4 சாலைப் பகுதிக்கு நடப்பு நிதியாண்டில் (2009-2010) குடிநீர்த் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாப்பம்பாடி ஊராட்சி, சந்தைப்பேட்டை துவக்கப் பள்ளியின் பின்புறப் பகுதி பாவடி தெரு குடியிருப்பைச் சார்ந்தது. கருக்கல்வாடி ஊராட்சி, சஞ்சீவராயன் கோயில் அருகில் என்பது சஞ்சீவிகாடு குடியிருப்பைச் சார்ந்தது. ராமிரெட்டிபட்டி ஊராட்சி, துட்டம்பட்டியான் காட்டுவளவு பகுதி என்பது துட்டம்பட்டியான் வட்டம் குடியிருப்பைச் சார்ந்தது. இம்மூன்று பிரதான குடியிருப்புகளிலும் கட்டப்பட்டுள்ள முறையே 10,000 லிட்டர், 30,000 லிட்டர், 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

[2010 ஏப்ரல் 15

16—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 45501—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சி நெய்க்காரன் காட்டுவளவு, திண்டமங்கலம் ஊராட்சி, திண்டமங்கலம் காட்டுவளவு மற்றும் நாச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி ஊராட்சி நெய்க்காரன் காட்டுவளவு மற்றும் செலவடை ஊராட்சி நாச்சம்பட்டி குடியிருப்புகளில் ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஓமலூர் ஒன்றியம், திண்டமங்கலம் ஊராட்சி, திண்டமங்கலம் காட்டுவளவு பகுதிக்கு வேப்பமரத்தூர் பிரதான குடியிருப்பிலிருந்து தனியாகக் குழாய் நீட்டிப்புமூலம் குடிநீர் வழங்கும் பணிகள் நடப்பு நிதியாண்டில் *(2009-2010)* மேற்கொள்ளப்பட உள்ளன. எனவே, மேற்சொன்ன பகுதிகளுக்குப் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் அவசியம் இல்லை.

17—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 46874—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம், மூஞ்சிறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், மூஞ்சிறை ஒன்றியம், மூஞ்சிறை ஊராட்சிக்குட்பட்ட பார்த்திபபுரம் குடியிருப்பின் குறைந்த மக்கட்தொகையைக் கணக்கில் கொண்டு குழித்துறையாற்றில், மங்காடு பகுதியில் ஒரு நீருறிஞ்சு கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு, 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் (மேல்நிலைத் தொட்டி) மூஞ்சிறை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

18—

சுற்றுச் சுவர்

வினா எண் 49080—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, சந்தாபுரம் ஊராட்சி, நரிமேடு கிராம நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, சந்தாபுரம் ஊராட்சி, நரிமேடு கிராம நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டும் பணியானது ஊரக கட்டமைப்புத் திட்டம் 2008-09-ன்கீழ் (கிராம ஊராட்சிகள்) எடுத்துக்கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49238—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், சித்திரப்பட்டி புதூர் ஊராட்சி, கருங்காடு, ராமயம்மன் நகர், கொசக்காரன் மேட்டுக் கொட்டாய், சௌரியார்பாளையம், அண்ணா நகர், தின்னப்பட்டி ஊராட்சி, புதுவேலமங்கலம் பேருந்து நிறுத்தம், செலம்பன்காடு, குட்டிய கவுண்டனூர்—எச் மற்றும் தாண மூர்த்திகாடு புதூர் ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், சித்திரப்பட்டி புதூர் ஊராட்சி, கருங்காடு, கொசக்காரன் மேட்டுக் கொட்டாய், தின்னப்பட்டி ஊராட்சி, செலம்பன்காடு, குட்டிய கவுண்டனூர்-எச், மற்றும் தாண மூர்த்திகாடு புதூர் ஆகிய குடியிருப்புகளுக்கு கடந்த நிதியாண்டில் *(2008-09)* மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன. சித்திரப்பட்டி புதூர் ஊராட்சி, ராமயம்மன்நகர், சௌரியார்பாளையம், அண்ணா நகர் மற்றும் தின்னப்பட்டி ஊராட்சி, புதுவேலமங்கலம் பேருந்து நிறுத்தம் ஆகிய *3* குடியிருப்புகளுக்கு முறையே சித்திரப்பட்டி புதூர், சௌரியார்பாளையம் மற்றும் சேத்துகுழி குடியிருப்புகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தேவையில்லை.

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49241—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மூலக்காடு ஊராட்சி அச்சங்காடு-எச், நேதாஜி நகர், ஜோதிமனூர்-தெற்கு, விராலிகாடு-எச், மற்றும் சாம்பள்ளி ஊராட்சி,

2010 ஏப்ரல் 15]

கோம்பைக்காடு-கே.வி. ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், மூலக்காடு ஊராட்சி, நேதாஜி நகர் மற்றும் விராலி-எச் குடியிருப்புகளில் தனித்தனியாக 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. அச்சங்காடு-எச் குடியிருப்பிற்கு இக்குடியிருப்பின் மக்கட் தொகையையும் கணக்கில் கொண்டு அச்சங்காடு குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சாம்பள்ளி ஊராட்சி கோம்பைக்காடு—கே.வி. குடியிருப்புக்கு, இக்குடியிருப்பின் மக்கட்தொகையையும் கணக்கில் கொண்டு கோம்பைக்காடு குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தும், ஜோதிமனூர் தெற்கு குடியிருப்புக்கு, ஜோதிமனூர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 15,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தும் போதுமான அளவு குடிநீர் வழங்கபபட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புகளுக்குத் தனியாக மேல்நிலைத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

21—

ஆக்கிரமிப்பை அகற்றுதல்

வினா எண் 49475—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி, 15-வது வார்டு பகுதியிலுள்ள சுனங்காப்பாறை குளத்தின் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சியில் உள்ள 15-வது வார்டு பகுதியிலுள்ள சுனங்காப்பாறை குளம் வருவாய்த் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளது, அக்குளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய்த் துறை மூலமாகத்தான் அகற்ற இயலும்.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 58521—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, திருவிளையாட்டம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருவிளையாட்டம் ஊராட்சியில் மொத்தமுள்ள 8 குடியிருப்புகளில், 7 குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டங்கள்மூலம் முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 1 குடியிருப்பான குளத்தங்கரை தெருவிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2010 ஏப்ரல் 15]

23—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 59021—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், அக்ரஹாரம் ஊராட்சி, அ. வெளாம்பட்டி அருந்ததியர் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் ஒன்றியம், அக்ரஹாரம் ஊராட்சி பகுதியில் 2 கையிறைப்பான்கள், ஒரு சிறு மின்விசைத் திட்டம் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம்மூலம் முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அருந்ததியர் பகுதிக்கென்று தனியாக குடிநீர்த் திட்டம் அமைக்கும் அவசியம் இல்லை.

24—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 62305—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சி, கண்டியகவுண்டனூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சியில் கண்டியகவுண்டனூர் இல்லை. ஆனால், கண்ணமநாயக்கனூர் ஊராட்சியில் உள்ள கண்டியகவுண்டனூர் குடியிருப்பில் உள்ள மக்கட்தொகைக்கேற்ப இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் அவசியம் எழவில்லை.

25—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 62649—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வள்ளிபுரம் ஊராட்சி, 2-வது வார்டு அணைப்பதிபுதூர் ஆதி திராவிடர் காலனி, முதலிபாளையம் ஊராட்சி, பொன்னாபுரம், வட்டக்காட்டுப்புதூர், மானூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், வள்ளிபுரம் ஊராட்சி, 2-வது வார்டு அணைப்பதிபுதூர் ஆதி திராவிடர் காலனிக்கு, வெங்கமேடு பெத்தாம்பாளையம் குடியிருப்பில் ஆதி திராவிடர் காலனியின் மக்கட்தொகையினை கணக்கில் கொண்டு கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. முதலிபாளையம் ஊராட்சி, பொன்னாபுரம், வட்டக்காட்டுப்புதூர் ஆகிய குடியிருப்புகளுக்கு அக்குடியிருப்புகளில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், மானூர் குடியிருப்பிற்கு அக்குடியிருப்பில்

2010 ஏப்ரல் 15]

கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அவசியம் இல்லை.

26—

குடிநீர் வசதி

வினா எண் 65842—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், வெற்றியூர் மற்றும் சாந்தமங்கலம் ஊராட்சிகளுக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், சாந்தமங்கலம் ஊராட்சியில் மொத்தமுள்ள 4 குடியிருப்புகளில் வண்ணம், புத்தூர் மற்றும் சாந்தமங்கலம் குடியிருப்பு ஆகிய 3 குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சாந்தமங்கலம் காலனிக்கு தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வெற்றியூர் ஊராட்சியில் மொத்தமுள்ள 7 குடியிருப்புகளில் வெற்றியூர், கல்லூர், விரகலூர், திருப்பையூர் மற்றும் திருப்பையூர் ஆதி திராவிடர் காலனி ஆகிய 5 குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள வெற்றியூர் காலனி, கல்லூர் காலனி ஆகிய குடியிருப்புகளுக்கு தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்காணும் ஊராட்சிகளில் புதிதாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு தற்போது பரிசீலனையில் இல்லை.

[2010 ஏப்ரல் 15

27—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 66257—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, கரிவேடு ஆதி திராவிடர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு ஒன்றியம், கரிவேடு ஊராட்சியைச் சேர்ந்த கரிவேடு காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் தற்போது செயலாக்கத்தில் உள்ளது. எனவே, ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்கும் அவசியம் இல்லை.

28—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 70065—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, தம்மரெட்டிபாளையம் ஊராட்சி, ரங்காம்பாளையத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, தம்மரெட்டிபாளையம் ஊராட்சி, ரங்காம்பாளையத்தில் மக்கட்தொகைக்கேற்ப ஏற்கெனவே உள்ள 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், கூடுதலாக மேல்நிலைத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

29—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 75648—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் அடங்கிய காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள பத்து ஊராட்சிகள் மற்றும் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் வள்ளிபுரம், வழுவாதூர், தத்தளூர், நால்பாக்கம், விலாசம் ஆகிய ஊராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள பத்து ஊராட்சிகள், திருக்கழுக்குன்றம் ஒன்றியம் வள்ளிபுரத்திற்குட்பட்ட 3 குடியிருப்புகள் வள்ளிபுரம், வள்ளிபுரம் காலனி, வள்ளிபுரம் புதுக்காலனி, வழுவாதூருக்குட்பட்ட 6 குடியிருப்புகள் வழுவாதூர் ஏரிக்கரை காலனி, காட்டூர் கல்பாக்கம் காலனி, திம்மூர், ஆரித்தம்பட்டு மற்றும் தத்தளூர், தத்தளூர் ஆதி திராவிடர் காலனி, முறுமுகை ஆகிய குடியிருப்புகளுக்கும் தனி மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேற்கண்ட பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும் அவசியம் இல்லை.

[2010 ஏப்ரல் 15

30—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 90930—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பாலபட்டி கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பாலபட்டி ஊராட்சியிலுள்ள 60,000 மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து முறையே பொதுக் குடியிருப்பு மற்றும் ஆதி திராவிடர் காலனிக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

31—

காவிரிக் குடிநீர்

வினா எண் 93214—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, தங்காயூர் ஊராட்சி, மணக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, மணக்காடு பகுதி ஆலங்காடு பிரதான குடியிருப்பைச் சார்ந்தது. இக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் மணக்காடு பகுதிக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதி குடியிருப்புக்கென தனியாக மேல்நிலைத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

32—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 93224—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி ஊராட்சி, புதுப்பட்டி அருந்ததியர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

எடப்பாடி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி ஊராட்சியில், புதுப்பட்டி அருந்ததியர் காலனி குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர் திட்டத்தினை 2009-2010 ஆம் நிதியாண்டில் செயலாக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் மார்ச் 2010-க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

33—

குடிநீர் வசதி

வினா எண் 97130—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, ஆண்டிஅள்ளி ஊராட்சி, நாயக்கன் கொட்டாய் உயர்நிலைப் பள்ளிக்கு தென்பெண்ணை ஆற்றுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, ஆண்டிஅள்ளி ஊராட்சி, நாயக்கன்கொட்டாய் உயர்நிலைப் பள்ளிக்கு தென்பெண்ணை ஆற்றைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் நடுப்பட்டி மற்றும் 47 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து இணைப்பு கொடுத்து, தென்பெண்ணை ஆற்று நீர் வழங்கப்பட்டு வருகிறது.

34—

கட்டடம்

வினா எண் 103391—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, புளியங்குளம் ஊராட்சி, அரசங்குளம், வெங்கடேசபுரம், ஸ்ரீரங்கபுரம், எம். குமரெட்டியாபுரம், கல்குமி ஆகிய கிராமங்களில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓர் ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழு கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், அனைத்து ஊராட்சிகளிலும்

2010 ஏப்ரல் 15]

சுய உதவிக் குழுக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அரசங்குளம் கிராமம் புளியங்குளம் ஊராட்சியையும், வெங்கடேசபுரம் கிராமம் வள்ளிநாயகிபுரம் ஊராட்சியையும், ஸ்ரீரங்கபுரம் கிராமம் அருங்குளம் ஊராட்சியையும், எம். குமரெட்டியாபுரம் கிராமம் கழுகாசலபுரம் ஊராட்சியையும், கல்குமி கிராமம் ஆற்றங்கரை ஊராட்சியையும் சேர்ந்தவை. மேற்குறிப்பிடப்பட்ட ஊராட்சியின் தலைமையிடங்களில் சுய உதவிக் குழுக் கட்டடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டு, அவ்வூராட்சியைச் சார்ந்த அனைத்து சுய உதவிக் குழுக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

35—

மயான வசதி

வினா எண் 108912—திருமதி ஜி. லதா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் நகரம், எம்.ஜி.ஆர். நகர் ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதிக்கு மயான வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

குடியாத்தம் எம்.ஜி.ஆர். நகர் ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதி சுடுகாடு கொண்டசமுத்திரம் ஊராட்சிக்கு சொந்தமாகும். மேற்படி சுடுகாட்டினை நகராட்சி வசம் ஒப்படைக்க கொண்டசமுத்திரம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் 404, நாள் 19-02-2008-ல் நிறைவேற்றப்பட்டது. குடியாத்தம் நகராட்சியிலும் மேற்படி சுடுகாட்டினை தன்வசம் எடுத்துக் கொள்ள நகரமன்ற தீர்மானம் எண் 657, நாள் 30-6-2008-ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், இக்கருத்துரு குடியாத்தம் வட்டாட்சியர் அவர்களுக்கு குடியாத்தம் நகராட்சி ஆணையரால் உரிய மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சுடுகாடு நகராட்சி வசம் ஒப்படைத்த பின் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36—

தெரு விளக்கு

வினா எண் 61480—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கீழப்பிடாவூர் ஊராட்சியில் தெரு விளக்கு வசதி ஏற்படுத்தவும், மின் கம்பிகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கீழப்பிடாவூர் ஊராட்சியில் ஏற்கெனவே தெரு விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இங்கு 38 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 16 தெரு விளக்குகளும், நமது கிராமம் திட்டத்தின்கீழ் 3 தெரு விளக்குகளும், சட்டமன்ற உறுப்பினர் நிதியில் 3 தெரு விளக்குகளும் மின் கம்பிகள்மூலம் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பகுதிக்கு கூடுதல் தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

சொந்தக் கட்டடம்

வினா எண் 62166—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தம் கிராமத்தில் உள்ள மின் வாரிய அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தம் கிராமத்தில் புல எண் 41/2-ல் 0.26 (26 சென்ட்) ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் தமிழ்நாடு மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தமாக உள்ளது. நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

38—

கட்டடம்

வினா எண் 62616—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூரில் மின் வாரிய கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு புதியதாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் வாரியத்தின் தற்போதைய நிதிநிலை காரணமாக இந்த ஆண்டிற்கு, அரூர் மின் வாரிய கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு புதியதாக கட்டடம் கட்டுவது குறித்து எந்த ஒரு கருத்துருவும் இல்லை.

39—

சொந்தக் கட்டடங்கள்

வினா எண் 102261—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, தெக்கலூர், சேயூர், கருவலூர், அன்னூர் வடக்கலூர், பொகளூர் ஆகிய இடங்களிலுள்ள மின்சார வாரிய அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 15

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதிக்குட்பட்ட சேயூர் பகுதியில் சேயூர்/வடக்கு, சேயூர்/தெற்கு, என உள்ள இரு பிரிவு அலுவலகங்களில் சேயூர்/வடக்கு அலுவலகம், சேயூர் துணை மின் நிலையக் கட்டடத்தில் தற்சமயம் இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சேயூர்/தெற்கு அலுவலகத்திற்கு சேயூர் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாக திறன் உயர்த்தும் திட்டம் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளும்பொழுது புதிய அலுவலக கட்டடம் நிர்மாணிக்கப்படும்.

தற்சமயம் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் கருவலூர் பிரிவு அலுவலகத்திற்கு கருவலூர் 110 கி.வோ. துணை மின் நிலைய வளாகத்தில் கட்டடம் நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அன்னூர்/வடக்கு, வடக்கலூர் மற்றும் தெக்கலூர் பிரிவு அலுவலகங்கள் தற்சமயம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவற்றிற்குத் தேவையான நிலம் இல்லாததாலும், வாரிய நிதிநிலை காரணமாகவும் கட்டடம் கட்ட தற்சமயம் உத்தேசம் இல்லை. தலைவர், கிராம ஊராட்சி/பொகளூர் அவர்கள் க.ச.எண் 52/2Bயில் உள்ள 12.5 சென்ட் நிலத்தை பொது நோக்கம் கருதி மின் வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்ய விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து அந்நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்புத் தொகை மற்றும் இடம் ஒதுக்க ஒப்புதல் வழங்க மாவட்ட வருவாய் அலுவலர், கோவை அவர்களிடம் கோரியபொழுது, மேற்கண்ட நிலம் தொடர்பான பதில் கடிதத்தில் சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பு நாள் 12-4-2007-ன்படி வீட்டுமனைப் பிரிவில் பூங்கா, சிறுவர் விளையாடும் இடம் போன்ற பொது உபயோகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

ஆகவே, மின் வாரியத்திற்கு எனத் தனியாக நிலம் ஒதுக்கீடு செய்ய தலைவர், கிராம ஊராட்சி/பொகளூர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது அவ்வாறு நிலம் ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் பொகளூர் மின் வாரிய அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2010 ஏப்ரல் 15]

40—

கட்டடம்

வினா எண் 102586—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, புதூரில் மின்சார வாரிய அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, புதூரில் மின்சார வாரிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு தேவையான மற்றும் தகுதியான நிலத்தை ஊராட்சி மன்றம் மின் வாரியத்திற்கு வழங்குமானால் கட்டடம் கட்டுவதற்கு பரிசீலனை செய்யப்படும்.

41—

வசூல் மையங்கள்

வினா எண் 102587—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, சிவஞானபுரம் மற்றும் பூதலப்புரத்தில் மின் கட்டண வசூல் மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மின் வாரிய அலுவலகங்களில் எந்த பிரிவு அலுவலகங்களின் மூலமும் மின் கட்டணம் கணினிமூலம் செலுத்துவதற்கு பொது மக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, வசூல் மையங்கள் அமைப்பதற்கு சாத்திய கூறுகள் இல்லை.

[2010 ஏப்ரல் 15

42—

கட்டுமான அலுவலகங்கள்

வினா எண் 102964—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டத்தில் புதியதாக கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் திருமானூர், திருமழபாடி, டி. பளூர், சுத்தமல்லி ஆகிய பிரிவு அலுவலகங்களுக்கு தனித்தனியே உதவிப் பொறியாளர்கள் கொண்ட கட்டுமான அலுவலகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டத்தில் ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகம்தான் உள்ளது. அது 31 பிரிவு அலுவலகங்களையும் மற்றும் 816 பணியாளர்கள் பணியிடங்களை மட்டுமே கொண்டு செயல்படுகிறது. எனவே, தற்போது நிலவி வரும் வாரிய நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு தனியாக அரியலூர் மாவட்டத்தில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது தமிழ்நாடு மின் வாரியத்திடம் இல்லை.

மேலும், அரியலூர் கோட்டத்தில் மூன்று கட்டுமானப் பிரிவு அலுவலகங்கள் உள்ளன. கட்டுமானப் பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களை வேலைப் பளுவிற்கேற்பவும், தேவைக்கேற்பவும் அவ்வப்போது தேவைப்படும் இடங்களில் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, திருமானூர், திருமழபாடி, டி. பளூர் மற்றும் சுத்தமல்லி ஆகிய பிரிவு அலுவலகங்களுக்கு தனித்தனியே உதவிப் பொறியாளர்கள் கொண்ட கட்டுமான அலுவலகங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்திடம் இல்லை.

2010 ஏப்ரல் 15]

43—

கட்டடம்

வினா எண் 103936—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை, வீராப்பாண்டி, கண்டாச்சிபுரம், முகையூர் ஆகிய இடங்களிலுள்ள மின் வாரிய அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மணலூர்பேட்டையில் உள்ள மின்சார வாரியப் பிரிவு அலுவலகம் வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

வீராப்பாண்டி, கண்டாச்சிபுரம் மற்றும் முகையூர் ஆகிய இடங்களில் வாரியத்திற்குச் சொந்தமான இடமில்லை. மின் வாரிய பிரிவு அலுவலகம் கட்ட வாரியம் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் நிலம் கையகப்படுத்தி மின்சார வாரிய அலுவலகம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

சாகுபடி

வினா எண் 43757—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை பகுதியில் பீன்ஸ், பாகற்காய், உருளைக் கிழங்கு, கருணைக் கிழங்கு, வெங்காயம், கடலைப் பயறு, கொத்தமல்லி, பாசிப் பயறு, காரட், கத்தரிக்காய், பீட்ரூட், புடலங்காய் மற்றும் முருங்கைக்காய் ஆகியவற்றை சாகுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியில் பாகற்காய், கருணைக் கிழங்கு, வெங்காயம், கொத்தமல்லி, கத்தரிக்காய், புடலங்காய் மற்றும் முருங்கைக்காய் சாகுபடி செய்ய ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம், நீர்வள நிலவளத் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் துல்லிய பண்ணையத்தின்கீழ் மானிய விலையில் தேவையான விதைகள் மற்றும் செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மானாமதுரை தொகுதியில் மண் செம்மண் வகையைச் சார்ந்தது. இங்கு வறண்ட தட்ப வெப்பநிலை காணப்படுகிறது. அக்டோபர் மாதத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதால், அக்டோபர் முதல் பிப்ரவரி மாதம் வரை பகல் மற்றும் இரவு நேரங்களில் மிதமான தட்ப வெப்பம் நிலவுகின்றது. எனவே, இம்மாதங்களில் கொண்டைக் கடலை மற்றும் பீட்ரூட் ஆகிய பயிர்களைப் பயிரிடலாம். மேலும், பாசிப் பயறு ஜூன்-ஜூலை மற்றும் செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் பயிரிடலாம். இதர மாதங்களில் அதிக வெப்பநிலை நிலவுவதால் பீன்ஸ், உருளைக் கிழங்கு, கேரட் போன்ற பயிர்களை மானாமதுரையில் பயிரிட இயலாது. இக்காய்கறிப் பயிர்கள் தமிழகத்தில் நீலகிரி மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் மட்டுமே பயிரிடப்படுகின்றன.

45—

புகையிலை

வினா எண் 47832—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் புகையிலை வளர்ப்பைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புகையிலை ஒரு தடை செய்யப்பட்ட பயிரில்லை என்பதால் புகையிலை பயிரிடுவதைத் தடுக்க இயலாது. கோவை மாவட்டத்தில் 531 எக்டர் பரப்பளவில் புகையிலை பயிரிடப்படுகிறது. எனினும் 2002-2003-ல் தமிழகத்தில் சுமார் 8000 எக்டரில் பயிரிடப்பட்ட புகையிலை தற்பொழுது சுமார் 5900 எக்டரில் மட்டுமே அதாவது ஒரு சதவீதத்திற்குக் குறைவான பரப்பிலேயே பயிரிடப்படுகிறது. புகையிலை பயிரிடப்படுவதை அரசு ஊக்குவிக்காததால் பயிரிடும் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. மேலும், இதன் சாகுபடிக்காக எந்தத் திட்டமும் இல்லை.

46—

கசிவு நீர்க் குட்டைகள்

வினா எண் 48248—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, குண்டலப்பட்டி ஊராட்சி, மோட்டூர் வனப் பகுதியில் 5 இடங்களிலும், குரும்பட்டி மோட்டூர் உத்தண்டி கொட்டாய் அருகில் காரையிலும் கசிவு நீர்க் குட்டைகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, குண்டலப்பட்டி ஊராட்சி, மோட்டூர் வனப் பகுதியில் உள்ள 5 இடங்களும் வனத் துறைக்குச் சொந்தமான ஒதுக்கப்பட்ட காடு என்பதால் அவ்விடங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் கசிவு நீர்க் குட்டை அமைக்கும் பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. மோட்டூர் உத்தண்டி கொட்டாய் அருகில்

காரையில் தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் குட்டை ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

47—

தென்னை பாதுகாப்பு

வினா எண் 76513—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், சென்னிமலைப் பகுதியில் தென்னையைத் தாக்கும் குறுந்தலைப் புழு (ஸ்லக்) ஈரியோபைட் நோயை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஈரியோபைட் என்கின்ற செம்பான் சிலந்தி தென்னையை தாக்கும் பூச்சியில் மிகவும் முக்கியானதாகும். இச்சிலந்தியால் தாக்கப்படும் மரங்களில் 30% முதல் 40% வரை மகசூல் இழப்பு ஏற்படும். ஈரோடு மாவட்டம் சென்னிமலை வட்டாரத்தில ஈரியோபைட் சிலந்தியைக் கட்டுப்படுத்திட 269.5 லிட்டர் அளவு அசாடிராக்டின் 1% மருந்து வேளாண்மைத் துறையால் கொள்முதல் செய்யப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு 98 தென்னை விவசாயிகளுக்கு ரூ.93,857/- மதிப்பிலான மானியத்தில் 8,983 தென்னை மரங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

48—

காளான் உற்பத்தி

வினா எண் 77181—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பகுதியில் காளான் உற்பத்தி செய்ய சிறப்புப் பயிற்சியும், பயிற்சி பெற்றவர்களுக்கு மானியத்துடன் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பகுதியில் உணவுக் காளான் உற்பத்தி செய்ய தோட்டக் கலைத் துறை விரிவாக்க அலுவலர்கள்மூலம் தொழில்நுட்ப ஆலோசனைகள் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், சிறப்புப் பயிற்சிகள் அளிக்கவும், பயிற்சி பெற்றவர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கவும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

இடமாற்றம்

.வினா எண் 90735—திரு. ஞா. ஜாண் ஜோசப்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி மையத்தை இடமாற்றம் செய்வதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி மையத்தில், அப்பகுதி விவசாயிகளுக்குப் பயன்படும் ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாவில் பருவமில்லாப் பருவத்தில் காய்ப்பது குறித்த ஆராய்ச்சியும், மர நறுமணப் பயிர்கள் குறித்த ஆராய்ச்சியும் புதிய திட்டங்களாக நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகின்றன. எனவே, பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி மையத்தை இடமாற்றம் செய்யும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2010 ஏப்ரல் 15

50—

விற்பனைக் கூடம்

வினா எண் 104512—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, களம்பூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) களம்பூரிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் ஆரணி ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 14 கி.மீ. தூரத்தில் போளூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 20 கி.மீ. தூரத்தில் கண்ணமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் இயங்கி வருகின்றன. மேலும், களம்பூர் பகுதி விவசாயிகள் அருகில் உள்ள ஆரணி, போளூர் மற்றும் கண்ணமங்கலம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், திருவண்ணாமலை விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டில் தற்போது 16 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் 2 துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட காரணங்களால் போளூர் தொகுதி, களம்பூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

51—

கரும்பு வெட்டும் இயந்திரம்

வினா எண் 107493—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு விவசாயிகள் நலன் கருதி கரும்பு வெட்டும் இயந்திரம் குறைந்த வாடகையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குத் தலா இரண்டு இயந்திரங்கள் வீதம் 34 இயந்திரங்கள் முதற்கட்டமாகக் கொள்முதல் செய்யவும் அதற்கான நிதி ஆதாரத்தைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்ட பின்னர் குறைந்த வாடகையில் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52—

புதிய கட்டடம்

வினா எண் 104786—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

காங்கேயத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான அறிவிப்பு 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின் போது மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களால் வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 830, உள் (நீதிமன்றம்-3) துறை, நாள் 25-09-2009-ல் ரூ. 2,88,90,000-ம் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

53—

சொந்தக் கட்டடம்

வினா எண் 105833—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 15

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம் (மேட்டூர்) மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குத் தகுந்த நிலம் வழங்குமாறு வருவாய்த் துறையிடம் வேண்டப்பட்டுள்ளது. தகுந்த நிலம் ஒதுக்கப்பட்டவுடன் இவ்வலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

54—

மருத்துவ அட்டை

வினா எண் 44973—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலையோரங்களில் குடியிருப்போர் அனைவருக்கும் கட்டாய எய்ட்ஸ் பரிசோதனை செய்து மருத்துவ அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

எய்ட்ஸ் பரிசோதனை என்பது ஒருவரது ஒப்புதலோடு செய்யப்படும் செயலாகும். கட்டாயப் பரிசோதனை செய்ய இயலாது. ஒருவர் தானாக முன்வந்து, பரிசோதனை செய்து எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளவராகக் கண்டுபிடிக்கப்பட்டால், அன்னாருக்கு மருத்துவ அட்டை வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

55—

கண் பரிசோதனை முகாம்

வினா எண் 51319—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென் சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, அங்கலக் குறிச்சி, ஜல்லிப்பட்டி, கரியாஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னப்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் வரும் நிதி ஆண்டில் கண் பரிசோதனை முகாம் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிகளில் குறிப்பிட்ட ஊர்களில் கோவை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் மூலமாக அரசு சார்பிலும் தனியார் துறையினராலும் பிரதி மாதந்தோறும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இம்முகாம்களில் குறைபாடுகள் காணப்படுவோர்க்கு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

56—

கண் தானம்

வினா எண் 86347—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கண்தானம் கொடுக்க விரும்பும் பொது மக்களுக்கு உரிய வழிகாட்டுதல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கண் தானம் கொடுக்க விரும்பும் பொது மக்களின் நலன் கருதி அரசு மருத்துவமனை மற்றும் தனியார் அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளில் இதற்கென பிரத்தியேக விளம்பரப் பலகை உள்ளது. கண் தானம் கொடுக்க விரும்புவோர், பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய படிவம், இலவசமாக வழங்கப்படுவதுடன், தேவையான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இது குறித்து வருடந்தோறும் ஆகஸ்ட் 25ஆம் தேதி முதல் செப்டம்பர் 8ஆம் தேதி வரை கண் தான இருவார விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது கண் தானம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதன் பயன்பாட்டை அறியும் வகையிலும் பிரசுரங்கள் வழங்குவதுடன் மக்களிடையே பிரச்சாரமும் செய்யப்படுகிறது.

57—

இலவச மருந்துகள்

வினா எண் 102180—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் மாணவ, மாணவிகளை மாதம் ஒரு முறை அந்தந்தப் பள்ளிக்கே சென்று அரசு மருத்துவர்கள் பரிசோதித்து இலவச மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மாநிலம் முழுவதும் உள்ள அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணவ, மாணவியருக்குப் பள்ளி மாணவர்

2010 ஏப்ரல் 15]

நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் அந்தந்த ஆரம்ப சுகாதார நிலைய செயல் திட்டத்தின்படி வியாழக்கிழமை மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு தேவைப்படும் மாணவ, மாணவியருக்கு இலவச மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மாதம் ஒரு முறை அந்தந்த பள்ளிக்கே சென்று மருத்துவப் பரிசோதனை செய்ய தற்பொழுதுள்ள நிலையில் சாத்தியக்கூறுகள் இல்லை.

58—

பாத்திரத் தொழிற்சாலை

வினா எண் 38079—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் எவர்சில்வர் பாத்திரத் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் எவர்சில்வர் பாத்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசின் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

59—

தைலத் தொழிற்சாலை

வினா எண் 51785—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறையில் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

60—

செங்கல் தொழிற்சாலை

வினா எண் 70344—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் செங்கல் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் வட்டாரத்தில், செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்கெனவே அதிக அளவில் இயங்கி வருவதால், அரசு, செங்கல் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

61—

வாசனைத் திரவிய தொழிற்கூடம்

வினா எண் 78044—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் வாசனைத் திரவிய தொழிற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் வாசனைத் திரவிய தொழிற்சாலை அமைக்கத் தேவையான மூலப் பொருட்களான வாசனை மலர்கள் போதிய அளவில் பயிரிடப்படவில்லை. எனவே, மானாமதுரை பகுதியில் வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

கூட்டுறவுத் தொழிற்பேட்டை

வினா எண் 93411—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் கூட்டுறவு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகர் பகுதியில் கூட்டுறவு தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

63—

நவீனமயமாக்குதல்

வினா எண் 106033—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(அ) கைவினைஞர்களுக்குத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கல் தொடர்பான பயிற்சியை வழங்க பூம்புகார் நிறுவனம் முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 2006-07 ஆண்டில் அரசு நிதியுதவியுடன் தஞ்சை மாவட்டத்தில் நெட்டி வேலை மற்றும் தஞ்சாவூர் பொம்மைத் தொழிலிலும், மதுரை மாவட்டத்தில் காகிதக் கூழ் கைத்திறத் தொழிலிலும், திருநெல்வேலியில் மரக்கடைசல் கைத்திறத் தொழிலிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தி முடித்துள்ளது. தற்போது, திருநெல்வேலியில் பாய் நெசவு கைத்திறத் தொழிலிலும், திண்டுக்கல்லில் சுட்டக் களிமண் பொம்மை கைத்திறத் தொழிலிலும் பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2007-08ஆம் ஆண்டில் கன்னியாகுமரியில் தேங்காய் ஓடு கைத்திறத் தொழிலிலும், கிருஷ்ணகிரியில் இலகுமர செதுக்கு வேலை கைத்திறத் தொழிலிலும், கன்னியாகுமரியில் கடற்சிப்பி கைத்திறத் தொழிலிலும், திருச்சி மற்றும் சென்னையில் மரத்திலான மணிமாலைகள் கைத்திறத் தொழிலிலும் பயிற்சி வகுப்புகள் துவங்கப்படவுள்ளன.

(ஆ) நடப்பு ஆண்டில் மாமல்லபுரத்தில் கருங்கல் சிற்பத் தொழிலிலும், நாச்சியார்கோயிலில் பித்தளை விளக்குகள் தயாரிக்கும் தொழிலிலும் விரைவில் பயிற்சி வகுப்புகள் துவங்கப்படவுள்ளன. மேலும், தஞ்சாவூரில் கலைத்தட்டு தயாரித்தல், ஓவியங்கள் ஆகிய கைத்திறத் தொழில்களிலும், கள்ளக்குறிச்சியில் மரசிற்பத் தொழிலிலும் பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

64—

நாய்கள் பாதுகாப்பு

வினா எண் 106653—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 ஏப்ரல் 15]

(அ) அழிந்து வரும் ராஜபாளையம் நாய் இனத்தைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அழிந்துவரும் ராஜபாளையம் நாய் இனத்தைப் பாதுகாக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நாட்டு இன நாய்களை பாதுகாக்கும் பொருட்டு, அவற்றை இனவிருத்தி செய்து பொது மக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கில், நாய் வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு சைதாப்பேட்டை, உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை கட்டுப்பாட்டின்கீழ் 1981 முதல் இயங்கி வருகிறது. இப்பிரிவில், நாட்டு இன நாய்களான ராஜபாளையம் மற்றும் சிப்பிப்பாறை போன்ற இனங்கள் பராமரிக்கப்படுகின்றன. இதுவரை 177 எண்ணிக்கை ராஜபாளையம் நாய்க்குட்டிகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

65—

ஆடு ஆராய்ச்சி மைய மேம்பாடு

வினா எண் 108643—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரியிலுள்ள ஆடு ஆராய்ச்சி மையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மேச்சேரியிலுள்ள ஆடு ஆராய்ச்சி மையத்தின்மூலம் தரம் உயர்த்தப்பட்ட உயர்தர செம்மறி மற்றும் வெள்ளாடுகளின் கிடாய்

மற்றும் பெட்டை ஆடுகள், குட்டிகள் விவசாயிகளின் பண்ணைகளை மேம்படுத்துவதற்காகவும், புதிய தொழில் முனைவோருக்கு ஆடு வளர்ப்பு சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவதுடன், தொழில் ஆரம்பிப்போருக்கு இனவிருத்திக்காக செம்மறி மற்றும் வெள்ளாட்டுக் கிடாய்கள் வழங்கப்பட்டும், வேலையில்லா பட்டதாரிகள், புதிய தொழில்முனைவோர், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியோருக்கு அவர்களின் தேவையை அறிந்து தொழில்நுட்பப் பயற்சி மற்றும் கருத்துப்பட்டறைகள் நடத்தி, நவீன யுக்திகளைச் செயல்முறைப்படுத்தி, கால்நடை வளர்ப்பில் ஈடுபட ஆலோசனை வழங்கப்பட்டும், மற்ற ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டும், ஆடு வளர்ப்போர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்காக ஆராய்ச்சித் திட்டங்கள் தீட்டி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஆராய்ச்சிகளின் முடிவுகள், விவசாயிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டும் வருகிறது. எனவே, கால்நடை மருத்துவ இளங்கலை மாணவர்களுக்குப் பயிற்சியும், முதுகலை மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சி செய்யும் மையமாகவும் செயல்பட்டு இம்மையத்தை அரசு மேம்படுத்தி வருகிறது.

(ஆ) எதிர் காலத்தில் மேற்கூறிய ஆய்வுத் திட்டங்கள் மற்றும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப் பெறப்படும் நிதியைக் கொண்டு படிப்படியாக பதினோராம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

66—

சுனாமி ஆய்வகங்கள்

வினா எண் 106527—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கடல்களில் அடிக்கடி சீற்றங்கள், கொந்தளிப்புகள், சுனாமிகள் வருவதைக் கண்டறிய ஆய்வகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) கடல்களில் சீற்றங்கள், கொந்தளிப்புகள், சுனாமி வருவதை முன்கூட்டியே கண்டறிய தகவல் அளிக்கும் மையம் ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் மைய அரசால் 15-10-2007 அன்று Indian National Centre of Ocean Information services (INCOIS) அமைக்கப்பட்டுள்ளது. ஐதராபாத்தில் அமைந்துள்ள இந்நிறுவனம், சுனாமி குறித்து தகவல்களை முன்கூட்டியே மற்ற மாநிலங்களுக்கு வழங்கிவருகிறது.

(ஆ) இந்த நிறுவனத்தைத் தமிழ்நாட்டில் அமைப்பது என்பது மத்திய அரசின் கொள்கை ரீதியான ஒரு முடிவு ஆகும்.

67—

சுற்றுலா தகவல் மையம்

வினா எண் 69487—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் சுற்றுலா தகவல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் சுற்றுலா தகவல் மையம் அமைத்தல் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

சார் பதிவாளர் அலுவலகம்

வினா எண் 92558—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 15

(அ) பெரணமல்லூர் தொகுதி, தேசூரில் மூடப்பட்ட சார்-பதிவாளர் அலுவலகம் மீண்டும் திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2003 ஆம் ஆண்டில் மூடப்பட்ட 40 சார்-பதிவகங்களையும் மீளத் திறக்க அரசு முடிவு செய்து, அதன்படி படிப்படியாக அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தேசூரில் மீண்டும் சார்-பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டால் அங்கு பதியப்படும் ஆவணங்கள், ஈட்டப்படும் வருவாய் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு புதிய அலுவலகம் திறப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

69—

பத்திரப் பதிவு அலுவலகம்

வினா எண் 98254—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளியில் பத்திரப் பதிவு அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி பதிவு மாவட்டம் தருமபுரி (மேற்கு) சார்-பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்டு நல்லம்பள்ளி கிராமம் உள்ளது. தருமபுரி கிராமத்திலிருந்து 11 கி.மீ. தூரத்திலுள்ள நல்லம்பள்ளி கிராமம் வளர்ச்சி அடையாத கிராமமாகும். கிராம மக்கள் எல்லா பணிகளுக்கும் தருமபுரி டவுனுக்கு வருகிறார்கள். மேலும், தருமபுரி (மேற்கு) சார்பதிவாளர் அலுவலகம் தருமபுரி டவுனில் உள்ளதால், நல்லம்பள்ளி கிராம மக்களுக்கும், அருகில் உள்ள மற்ற கிராம மக்களுக்கும் அதுவே வசதியாக உள்ளது.

2010 ஏப்ரல் 15]

நல்லம்பள்ளி கிராமம் இன்னும் வளர்ச்சியடையாத கிராமமாக இருப்பதால் பணப் புழக்கமுள்ள சார்-பதிவாளர் அலுவலகம் நல்லம்பள்ளியில் அமைவது பாதுகாப்பானதல்ல.

நல்லம்பள்ளி கிராமத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய் விவரம் பின்வருமாறு உள்ளது:—

ஆண்டு	*ஆவணங்கள்*	*வருவாய் (ரூ. இலட்சத்தில்)*
2006—07	112	7.14
2007—08	132	9.88
2008—09	192	14.73

நல்லம்பள்ளியில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறப்பதால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு தொடரும் செலவு ரூ. 8 இலட்சமும், தொடரா செலவு ரூ. 33 இலட்சமும் ஆகும். எனவே, நல்லம்பள்ளி கிராமத்தில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறப்பதால் வருவாயைவிட செலவே அதிகமாக உள்ளதாலும், நல்லம்பள்ளி கிராமம் தற்போதைய நிலையில் வளர்ச்சியடையாத கிராமமாக உள்ளதாலும், இக்கிராமத்தில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கான அவசியம் எழவில்லை.

70—

படகு சவாரி

வினா எண் 106240—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, திருமயம் தாமரைக் கண்மாயில் படகு சவாரி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, திருமயம் தாமரைக் கண்மாயில் படகு சவாரி ஏற்படுத்தும் திட்டம் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2010 ஏப்ரல் 15

71—

வீடு கட்டும் திட்டம்

வினா எண் 103733—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டியில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடு கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டியில் குடிசை மாற்று வாரியத்தால் குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் தற்போது ஏதும் இல்லை. மைய அரசின் பதின்மூன்றாவது நிதிக் குழுவிடம் தமிழகத்தின் நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கச் சிறப்பு நிதி கோரப்பட்டுள்ளது. இந்நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றபின் குடிசை மாற்று வாரியத்தின் கொள்கைகளின்படியும் அரசு நிலம் கிடைக்கப்பெறும் பட்சத்திலும் அப்பகுதி ம்க்களின் தேவைகளின்படியும் மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டியில் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு 2010—2015-ல் வீடுகள் அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

72—

நில ஆக்கிரமிப்பு

வினா எண் 65975—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, திருவதிகை சிவன் கோயில் பின்புறம் மற்றும் சுற்றிலும் உள்ள கோயில் நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருவதிகை, அருள்மிகு வீராட்டானேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நன்செய் நிலங்கள் 1.97 ஏக்கரும் புன்செய் நிலங்கள் 27.00 ஏக்கரும் உள்ளன. இந்நிலங்கள் அனைத்தும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எனவே, மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை. திருக்கோயில் பின்புறமோ அல்லது சுற்றுப்புறமோ, திருக்கோயில் நிலத்திலும் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

73—

தங்கும் விடுதிகள்

வினா எண் 106609—திரு. கே.எஸ். விஜயகுமார்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையத்திலுள்ள ஸ்ரீபவானி அம்மன் திருக்கோயிலில் தங்கும் விடுதி, இதர வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் ஸ்ரீ பவானியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். திருக்கோயிலைச் சுற்றி தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் ஏதும் போதிய அளவிற்கு இல்லை. திருக்கோயிலைச் சுற்றியுள்ள எல்லபுரம் பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான காலி நிலங்கள் இத்திருக்கோயிலுக்கு, கிரயமாகவோ அல்லது நீண்ட கால குத்தகைக்கோ கிடைக்கும் பட்சத்தில் மட்டுமே அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகளை இத்திருக்கோயில் நிர்வாகம்மூலம் கட்ட வாய்ப்புள்ளது.

74—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 111603—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அறநிலையத் துறையின்மூலம் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழகத்தில் அறநிலையத் துறையின்மூலம் மருத்துவக் கல்லூரி துவக்கும் திட்டம் ஏதும் இல்லை.

75—

நவீன திருமண மண்டபம்

வினா எண் 61340—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி நகராட்சி, ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தை பழுது நீக்கம் செய்து, நவீன திருமண மண்டபமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய

2010 ஏப்ரல் 15]

அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான அருள்மிகு மங்கலநாயகி திருமண மண்டபம் திருக்கோயிலை ஒட்டி அமைந்துள்ளது. இத்திருமண மண்டபத்தில் திருக்கோயில் வருமானத்தைக் கொண்டு அவ்வப்போது மராமத்து வேலைகள் செய்யப்பட்டு தற்போதைய சமுதாய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட தேவையான வசதிகள் செய்யப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. அனைத்து வசதிகளும் தரைத்தளத்திலே அமையப் பெற்றுள்ளன. இத்திருமண மண்டபத்திற்கு நாளொன்றுக்கு ரூ.5,000 மட்டுமே வாடகை பெறப்படுகிறது. இத்திருமண மண்டபத்தினை மேலும் விரிவுபடுத்தி அதிநவீன வசதிகள் செய்திட திருக்கோயிலில் நிதி வசதி இல்லை. திருக்கோயிலின் நிதிநிலை மேம்பட்டவுடன் திருமண மண்டபத்திற்கான வசதிகள் செய்து தர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

76—

குடிநீர் வசதி

வினா எண்: 64927—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தாட்டித்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த தாட்டித்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடங்கப் பள்ளிக்கு 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் மேல்நிலைத் தொட்டி மற்றும் குழாய் இணைப்புடன் தேவையான குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

77—

சுற்றுச் சுவர்

வினா எண் 69514—திரு அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி உயர் துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர், மின் இணைப்பு, நாற்காலி மற்றும் நீள் இருக்கைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி உயர் துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், மின் இணைப்பு நாற்காலி மற்றும் நீள் இருக்கைகள் இப்பள்ளிக்கு போதுமான அளவு உள்ளன.

78—

தரம் உயர்த்துதல்

வினா எண் 92849—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் வட்டம், பொம்மிக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வி, நாள் 15-6-2009-ல், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பொம்மிக்குப்பம், அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

79—

தொடக்கப் பள்ளிகள்

வினா எண் 101773—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், தரைக்காடு, திவான் மசூதி, காயிதே மில்லத் நகர், ஹார்சத்கான் மசூதி ஆகிய இடங்களில் புதிய உருதுவழி தொடக்கப் பள்ளிகள் துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், தரைக்காடு திவான் மசூதி, காயிதே மில்லத் நகர், ஹார்சத்கான் மசூதி ஆகிய இடங்களில் புதிய உருதுவழி தொடக்கப் பள்ளிகள் துவங்க இக்கல்வியாண்டில் வாய்ப்பு இல்லை.

80—

கிளை அலுவலகம்

வினா எண் 52295—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் வணிக வரித் துறையின் கிளை அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் வணிக வரித் துறையின் கிளை அலுவலகம் துவக்குவது குறித்து சாத்தியக்கூறுகள் ஆய்வு

செய்யப்பட்டன. மானாமதுரை சிவகங்கை வரிவிதிப்பு வட்டத்தில் உள்ளது. மானாமதுரையில் உள்ள *452* வணிகர்கள்மூலம் ஆண்டுக்கு சராசரியாக ரூ. *195.75* இலட்சம் மட்டுமே அரசுக்கு வரி வருவாய் கிடைக்கிறது. அங்கு வணிக வரித் துறை கிளை அலுவலகம் துவங்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

81—

கிளை அலுவலகம்

வினா எண் 68926—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் வணிக வரி துணை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில் வணிக வரி கிளை அலுவலகம் துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் பின்வருமாறு ஆய்வு செய்யப்பட்டன:—

எடப்பாடியில் உள்ள மொத்த வணிகர்கள்:	454
வரி செலுத்தும் வணிகர்கள்:	107
வரியில்லா வணிகம் செய்பவர்கள்	347

மேற்குறிப்பிட்டுள்ள வணிக வரி செலுத்தும் *107* வணிகர்கள் மூலம், *2008-2009* ஆம் ஆண்டில், ரூ. *61* இலட்சம் மட்டுமே வரியாகப் பெறப்பட்டுள்ளது. எடப்பாடி தொகுதியில் வரி செலுத்தக்கூடிய வணிகர்கள் அதிக அளவில் இல்லாததால் அங்கு புதியதாக வணிக வரி கிளை அலுவலகம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

2010 ஏப்ரல் 15]

82—

சொந்தக் கட்டடம்

வினா எண் 68933—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர், பேரூரில் தனியார் கட்டடத்தில் உள்ள வணிக வரி அலுவலகத்திற்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர், பேரூரில் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) வினா எழாது.

83—

சொந்தக் கட்டடம்

வினா எண்: 68934—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, செஞ்சியில் வணிக வரி அலுவலகம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) வேலூர் கோட்டம், செஞ்சியில் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

84—

தைல மர உற்பத்தி

வினா எண் 107837—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி வனச் சரகத்தில் நீலகிரி தைல மரங்களை அதிக அளவில் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வனத் துறைமூலம் தைல மரம் உற்பத்தி செய்யும் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே அரசால் கைவிடப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் தைல மரத் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

85—

வன உயிரியல் பூங்கா

வினா எண் 110837—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் கந்தாஸ்ரம வளாகத்தில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சேலம் வனக் கோட்டத்தில் குரும்பப்பட்டியில் வன உயிரியல் பூங்கா ஏற்கெனவே அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதால் அதனையே மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, சேலம் மாவட்டத்தில் கந்தாஸ்ரம வளாகத்தில் புதிதாக வன உயிரினப் பூங்கா அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

2010 ஏப்ரல் 15]

86—

மீன் உற்பத்தி

வினா எண் 111652—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார் வளைகுடாவில் மீன் உற்பத்தியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசிய காப்பகம்மூலம் தேசிய பூங்கா பகுதிகளில் மீன்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படுகின்றன. தேசியப் பூங்கா பகுதியில் உள்ள பவள உயிரிகளைச் சுற்றி 250 வகையான மீன்கள் வாழ்கின்றன. இவை பாதுகாக்கப்படுவதன்மூலம் மீன் இனம் பெருகுகிறது. வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1972-ன்படி தடை செய்யப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பதன்மூலம் மீன்களின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பவளப் பாறைகள் நிறைந்த தீவுப் பகுதிகளைப் பாதுகாப்பதன்மூலம் மீன்களின் முட்டைகள் பாதுகாக்கப்பட்டு மீன் உற்பத்தி அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய பூங்கா பகுதிகளில் கடற்பாசிகள், கடல் புற்கள் சேகரிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதால், இவை மீன்களுக்கு உணவாகவும், வாழ்வாதாரங்களாகவும் இருப்பதால் மீன் உற்பத்தி அதிகரிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. தேசிய பூங்கா பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

87—

கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 111653—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 15

(அ) மன்னார் வளைகுடாவில் கடல்வாழ் உயிரினங்களை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார் வளைகுடா பகுதியில் கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசிய கோட்டம், வன உயிரினக் காப்பாளர் கட்டுப்பாட்டில் தூத்துக்குடி, மண்டபம், கீழக்கரை, இராமநாதபுரம் ஆகிய நான்கு சரகங்களில், பாதுகாப்புப் பணியாளர்கள்—வனச்சரகர் 4, வனவர் 11, வனக்காப்பாளர் 22 ஆகியோர் பாதுகாப்புப் பணிகளைக் கவனித்து வருகின்றனர். 50 வேட்டைத் தடுப்புக் காவலர்கள், பணியமர்த்தப்பட்டு தேசிய பூங்கா உள்ள தீவுகளையும் பாதுகாப்பதுடன் தடை செய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்கள் பிடிப்பதையும், கடத்துவதையும் தடுத்து நிறுத்தி வருகின்றனர். பாதுகாப்புப் பணிகளுக்காக உதவி வனப் பாதுகாவலர் தலைமையில் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன பாதுகாப்புப் பணிகளை வன உயிரினக் காப்பாளர் மற்றும் உதவி வனப் பாதுகாவலர் மேற்பார்வை செய்து வருகின்றனர். வேட்டைத் தடுப்பு காவலர்கள் தீவுகளில் தங்குவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. புதியதாக மூன்று விரைவு விசைப் படகுகள் மன்னார் வளைகுடா உயிர்கோள அறக்கட்டளைமூலம் வழங்கப்பட்டு ரோந்துப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மொத்தம் 9 படகுகள் தேசிய காப்பகத்தில் இருப்பதால் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்ப்ட்டு வருகின்றன. மேலும் பிற துறைகளுடன், கூட்டுத் தணிக்கையும் செய்யப்பட்டு வருகிறது. 5 ஈப்புமூலம் சென்று வ்ாகனங்களை நிறுத்தி திடீர் சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காவல் துறையும் கடலோரக் காவல் துறையும் கண்டுபிடித்துத் தரும் குற்றங்களுக்கு மேல் நடவடிக்கை சீரிய முறையில் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இதுவரை கீழ்க்காணும் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் 15]

சரகம்	மொத்த குற்றம்	அட்டவணை 1 குற்றம்	குற்றவாளிகள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள எண்ணிக்கை	வாகனம் பறிமுதல்
மண்டபம்	20	13	6	51
கீழக்கரை	23	5		
இராமநாதபுரம்	4	4		
தூத்துக்குடி	33	17		
	80	39		

இந்த ஆண்டு மட்டும் இரண்டு படகுகள் மற்றும் நான்கு வாகனங்கள் கடல்வாழ் உயிரினங்கள் கடத்தலுக்குப் பயன்படுத்தியமைக்காக பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டு, நாடகங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர, மீனவர்களுக்கும் பொதுமக்களுக்கும் மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பக அறக்கட்டளைமூலம் மாற்றுத் தொழில் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

88—

பறவையினங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 111654—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார் வளைகுடா பகுதிக்கு வரும் வெளி நாட்டு மற்றும் அரிய வகை பறவையினங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 15

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசிய காப்பகத்தில் வன உயிரினக் காப்பாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் தூத்துக்குடி, மண்டபம், கீழக்கரை, இராமநாதபுரம் ஆகிய நான்கு சரகங்களில் நான்கு வனச் சரகர்கள், 11 வனவர்கள், 22 வனக் காப்பாளர்கள் ஆகியோர்மூலம் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடுதலாக உதவி வனப் பாதுகாவலர் மற்றும் 4 வனவர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 50 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பகுதிகளுக்கு வரும் அரிய வகைப் பறவைகளும் தேசியப் பூங்காவில் உள்ள தீவுப் பகுதிகளும், ஏற்றுமதிக்குத் தடை செய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்களும் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வன உயிரின பாதுகாப்புச் சட்டம் 1972-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மாங்குரோவ் பகுதிகளைப் பாதுகாக்க 2 காவலர்களையும், மேலச்செல்வனூர்—கீழச்செல்வனூர், காஞ்சிரங்குளம், சித்திரங்குடி பறவைகள் சரணாலயங்களில் பறவைகளைப் பாதுகாக்க பாதுகாப்புப் பணியாளர்களையும் பயன்படுத்தி வெளிநாட்டு மற்றும் அரிய வகைப் பறவையினங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்சரணாலயங்களில் பறவைகளுக்குத் தீவனங்களை அதிகப்படுத்தும் வகையில் மீன் குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டுள்ளன. நீர்க்குழிகள் தேவையான அளவு அமைக்கப்பட்டுள்ளன. ஏரிகளும் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. முட்புதர்கள், வேலிக்கருவேல் அப்புறப்படுத்தப்பட்டு வருவதுடன் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. பறவைகளைக் கண்காணிக்க கண்காணிப்புக் கோபுரம் அனைத்துச் சரணாலயப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இரவு பகலாக பறவைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கிராம மக்கள் குழு அமைத்து அவர்கள் மூலமும் பறவைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. விளம்பரப் பலகைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டுப் பறவைகளின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

2010 ஏப்ரல் 15]

89—

புறவழிச் சாலை

வினா எண் 73352—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமேஸ்வரம்—மதுரை தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றும்போது இராமேஸ்வரம், பரமக்குடி, உச்சிப்புளி, சத்திரக்குடி பகுதிகளில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம்—மதுரை தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றும்போது இராமேஸ்வரம் முதல் பரமக்குடி வரையில் புறவழிச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால், உச்சிப்புளி, சத்திரக்குடி பகுதிகளில் புறவழிச் சாலை அமைக்க உத்தேசிக்கப்படவில்லை. தேசிய நெடுஞ்சாலை 49-ல் அமைந்துள்ள மதுரை—இராமேஸ்வரம்—தனுஷ்கோடி சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெறும்போது, இராமேஸ்வரம் முதல் பரமக்குடி வரையிலான புறவழிச் சாலை அமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டம் (N.H.D.P.) தொகுதி—IIIB-ன்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும், இப்பணி 2010-2011-ல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் காரைக்குடி திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

90—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 108396—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 ஏப்ரல் 15

(அ) தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய பெரிய நகரங்களில் ஹைடெக் சாப்ட்வேர் சிட்டி புதியதாகத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, ஒசூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய மாவட்டங்களில் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அனைத்துத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களும் சர்வதேசத் தரத்திற்கு இணையாக அமைக்கப்படும்.

91—

சத்துணவுக் கூடம்

வினா எண் 50227—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, அருணாசலம்புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி அருணாசலம்புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தற்போது 102 மாணவர்களும், 93 மாணவிகளும் சத்துணவு சாப்பிட்டு வருகிறார்கள். அப்பள்ளிக்கு சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தில் புதியதாக ரூ. 9.30 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடங்கள் கட்டியபொழுது சமைப்பதற்கு சமையல் கூடமும் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

2010 ஏப்ரல் 15]

92—

சுய தொழில் பயிற்சி

வினா எண் 16465—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், உள்ள ஆதி திராவிட பெண்களுக்கு சுய தொழில் செய்ய பயிற்சி மற்றும் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில் உள்ள ஆதி திராவிட பெண்கள், கோயம்புத்தூர் மாவட்ட தாட்கோ மேலாளரை அணுகி சுய தொழில் செய்ய எந்த விதமான பயிற்சி மற்றும் கடன் தேவை என்பதற்கு முறையான விண்ணப்பம் இலவசமாகப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

மேலும், 2005-2006 முதல் ஆண்டு வாரியாக ஆதி திராவிட பெண்களுக்கு சுய தொழில் செய்ய பயிற்சி மற்றும் கடன் வழங்கப்பட்ட விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

பயிற்சிகள்	பயனாளிகள் எண்ணிக்கை	தாட்கோ மானியம்
1. 2005-06		
தனி நபர் கடன் பயிற்சி	2 நபர்கள் 4 நபர்களுக்கு வழங்கப்பட்டது.	ரூ. 40,000
2. 2006-07		
விவசாயம் சார்ந்த தொழில்	13 நபர்கள்	ரூ. 1,10,500
தனி நபர் கடன்	6 நபர்கள்	ரூ. 51,000
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி	117 நபர்கள்	ரூ. 11,70,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மகளிர் சுய உதவிக்	2 நபர்கள்	ரூ. 2,00,000
குழுக்களுக்கு பொருளாதார	17 நபர்கள்	ரூ. 2,97,600
கடன் உதவி, பயிற்சிகள்		

3. 2007-08

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சிகள்	660 நபர்கள்	ரூ. 2,65,000

தாட்கோ மானியம்

தனி நபர் கடன்	1 நபர்	ரூ. 15,000
மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி	18 நபர்கள்	ரூ. 1,80,000

93—

மகளிர் விடுதி

வினா எண் 49954—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாட்கோமூலம் பயிற்சி பெறும் மகளிருக்கு விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாட்கோமூலம் பயிற்சி பெறும் மகளிருக்கு விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

கட்டட சீரமைப்பு

வினா எண் 62983—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஆதி திராவிடர் நலத் துறை தனி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஆதி திராவிடர் நலத் துறை தனி வட்டாட்சியர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, இதனைச் சீரமைத்துத் தருவதற்குக் கட்டட உரிமையாளர் காலதாமதம் செய்து வருவதால், தனி வட்டாட்சியர் (ஆதிந) அலுவலகம், 22-12-2008 முதல் நாங்குநேரி ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்கு மாறுதல் செய்யப்பட்டு இயங்கி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

95—

மீன் வளர்த்தல்

வினா எண் 102882—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, துட்டம்பட்டி ஊராட்சி, துட்டம்பட்டி ஏரியில் மீன்வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மீன்பாசிக் குத்தகை ஏலம் விடுவது தொடர்பாக துட்டம்பட்டி ஊராட்சி தலைவர், ஓமலூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு ஓ.எஸ்.எண் 361/2008) தொடுத்துள்ள காரணத்தால், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான துட்டம்பட்டி ஏரியில் மீன் வளர்க்க சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) எழாது.

[2010 ஏப்ரல் 15

96—

மீன் பதனிடும் தொழிற்கூடம்

வினா எண் 104431—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளாத்திகுளம் தொகுதி, தருவைக்குளம், வேம்பார், பெரியசாமிபுரம், சிப்பிகுளம், கீழவைப்பாறில் மீன் பதனிடும் தொழிற்கூடம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளம், வேம்பார், பெரியசாமிபுரம், சிப்பிகுளம், கீழவைப்பாறு ஆகிய மீனவ கிராமங்களில் மீன்வளத் துறையின்மூலம் மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

97—

நவினப்படுத்துதல்

வினா எண் 107724—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு நன்னீர் இறால் வளர்ப்பு நிலையத்தினை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு நன்னீர் இறால் வளர்ப்புப் பண்ணையில் ஒவ்வொரு பருவ காலத்திலும் நன்னீர் இறால்கள் வளர்ப்பில்

2010 ஏப்ரல் 15]

ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இப்பண்ணையினை நவீனப்படுத்துதல் சம்பந்தமான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

98—

மீன் வளர்த்தல்

வினா எண் 108671—திரு. ஜி.கே மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் காவேரி ஆற்றில் கட்லா, ரோகு, கண்ணாடிக்கெண்டை, கெளுத்தி போன்ற உயர்வகை மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து, ஆற்றில் விட்டு வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் அணை நீர்த்தேக்கத்தில் மீன் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு கடந்த பல வருடங்களாக உயர்வகை பெருரக கெண்டை இனங்களான கட்லா, ரோகு, மிர்கால் 25,00,000 மீன் விரலிகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது தமிழக அரசும், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியமும் இணைந்து நடப்பாண்டில் 92,08,000 அளவில் நன்கு வளர்ந்த மீன் விரலிகளை இருப்பு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுநாள்வரை 25,71,300 நன்கு வளர்ந்த மீன் விரலிகள் (8-10 செ.மீ.) இருப்பு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) பெருரக மீன் இனங்களான கட்லா, ரோகு மற்றும் மிர்கால் ஆகியவை இத்துறை உற்பத்தி நிலையங்களில் தமிழகம் முழுவதும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மீன் இனங்கள் இயற்கை நீர்நிலைகளிலும், நீர்த்தேக்கங்களிலும் இருப்பு செய்யப்படுகின்றன. தமிழக அரசும், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியமும் இணைந்து நடப்பாண்டிலேயே மேட்டூர் அணை நீர்த்தேக்கத்தில் மீன்வளத்தை மேம்படுத்திட உரிய

நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. மேட்டூர் நீர்த்தேக்கம் மிகவும் ஆழமாக இருப்பதால் அறிவியல் தொழில்நுட்ப ரீதியின் அடிப்படையில் நீர்மட்டத்தின் அடிப்பகுதியில் வாழக்கூடிய சாதாக்கெண்டை மீன் இனம் இருப்பு செய்யப்படுவது இல்லை. கெளுத்தி வகை மீன் இனம், கட்லா, ரோகு, மிர்கால் ஆகிய பெருரக கெண்டை இன மீன்களோடு ஒப்பிடுகையில் குறைவான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாலும் இயற்கையாகவே இனப்பெருக்கம் செய்யும் திறன் கொண்டது என்பதாலும் மீன் பண்ணையிலிருந்து உற்பத்தி செய்து இருப்பு செய்ய வேண்டிய நிலை ஏற்படவில்லை.

99—

பட்டா வழங்கும் திட்டம்

வினா எண் 109526—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் தொகுதி, 18-வது வட்டத்தில் உள்ள வெங்கடேசன் தெரு மற்றும் கார்ப்பரேஷன் லைனில் வசிக்கும் மீனவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

தமிழக அரசு மீன்வளத் துறைமூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மீனவர்களுக்கு, "மீனவர் இலவச வீடு கட்டி வழங்கும்" திட்டத்தின்கீழ் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அலகுத் தொகை மற்றும் பரப்பு அடிப்படையில் இலவசமாக வீடுகள், மீனவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன. தவிர இராயபுரம் தொகுதி, 18-வது வட்டத்தில் உள்ள வெங்கடேசன் தெரு மற்றும் கார்ப்பரேஷன் லைனில் வசிக்கும் மீனவர்களுக்குப் பட்டா வழங்கும் திட்டம் மீன்வளத் துறையில் மேற்கொள்ள சாத்தியக் கூறுகள் இல்லை. இது குறித்து வருவாய்த் துறைதான் முடிவு செய்ய இயலும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

100—

நவீனப்படுத்துதல்

வினா எண் 106065—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் துணியின் தரத்தை மேம்படுத்த கதர் கிராமத் தொழில் வாரியம், தறிகளை நவீனப்படுத்த ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) கதர் இரகங்களை அனைவரும் வாங்க ஊக்குவிக்கும் வகையில், வாரியம், கதர் நெசவாளர்களுக்கு அச்சு மற்றும் விழுதுகள் வழங்கி நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அனைத்து மண்டலங்களிலும் உள்ள நெசவாளர்களுக்கும் தொடர்ந்து வேலை வாய்ப்பை நல்கி, தரமானதாகவும், நியாயமான விலையிலும் கதர் துணிகளை உற்பத்தி செய்திட வாரியத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், வெளிச்சந்தையில் போட்டியிடும் வகையில் பட்டு நெசவாளர்களுக்கு ஜக்காடு பெட்டி வழங்கியும் கணினிமூலம் வடிவமைக்கப்பட்ட டிசைன் அட்டைகள் தயாரித்து வழங்கியும், பட்டுப் புடவைகள் ரூ.2,000/- முதல் ரூ. 10,000/- வரையில், மக்கள் விரும்பும் வண்ணம், அழகிய வேலைப்பாடுகளுடன் உற்பத்தி செய்யப்படுகின்றன. துணியின் தரத்தினை மேலும், மேம்படுத்தும் வகையில், 2007-2008 ஆம் ஆண்டின் தமிழக அரசின் பகுதி-2 திட்டத்தின்கீழ் அச்சு மற்றும் விழுதுகள் கொள்முதல் செய்திட அரசிடமிருந்து ரூ.4.00 இலட்சம் மானியமாகப் பெற்று, நெசவாளர்களுக்கு அச்சு மற்றும் விழுதுகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 2009-2010 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 5.00 இலட்சம் மானியமாகப் பெற்று நெசவாளர்கள் பயனடையும் வகையில் அச்சு மற்றும் விழுதுகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2010 ஏப்ரல் 15

பட்டியல் 2

1—

ஓய்வூதியம்

வினா எண் 102082—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புறக் கலைஞர்களுக்கும், நாதஸ்வரக் கலைஞர்களுக்கும் மற்றும் தெருக் கூத்துக் கலைஞர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழ்நாட்டிலுள்ள நாதஸ்வரக் கலைஞர்கள், தெருக் கூத்துக் கலைஞர்கள் உள்ளிட்ட அனைத்துக் கலைஞர்களுக்கும் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர்களின் கையொப்பத்துடன் கூடிய அடையாள அட்டைகள் மாவட்டக் கலை மன்றங்கள்மூலம் மண்டல உதவி இயக்குநர்களால் வழங்கப்படுகின்றன.

நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்நல வாரியத்தில், இக்கலைஞர்களுக்கு உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின்மூலம் 58 வயது முடித்த கலைஞர்களுக்கு குறிப்பாக நாட்டுப்புறக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், தெருக் கூத்துக் கலைஞர்கள் உள்ளிட்ட அனைத்துக் கலைஞர்களை உள்ளடக்கி, ஆண்டுதோறும் 500 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது. ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை 1-04-2006 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 6,000/-ல் இருந்து ரூ. 12,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் 15]

2—

அரசு சம்பளம் வழங்குதல்

வினா எண் 108440—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை காந்தி அருங்காட்சியக ஊழியர்களுக்கு அரசு ஊழியர் சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை காந்தி அருங்காட்சியகம் அரசு நிறுவனமாக இல்லாமல் ஒரு சங்கமாகச் செயல்படுவதால் அரசு சம்பளம் வழங்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

3—

கழிவுநீர்க் கால்வாய்

வினா எண் 31051—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி திருவள்ளுவர் நகரில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி திருவள்ளுவர் நகரில் கழிவுநீர்க் கால்வாய் ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

4—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 34520—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், சிந்தலவாடி ஊராட்சியில் உள்ள குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேலும், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

5—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 61361—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், ஸ்ரீராமபுரம் ஊராட்சி, ஸ்ரீராமபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஒன்றியம், ஸ்ரீராமபுரம் ஊராட்சியைச் சார்ந்த ஸ்ரீராமபுரம் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர்

2010 ஏப்ரல் 15]

கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, ஆகஸ்ட் 2009-ல் பொதுமக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

6—

மின் இணைப்பு

வினா எண் 61019—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, விசாரெட்டியூர் அன்பு நிலையம் அருந்ததியர் காலனிக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, விசாரெட்டியூர் அன்பு நிலையம் அருந்ததியர் காலனிக்கு ஏற்கெனவே மின் இணைப்பு உள்ளது. (மின் இணைப்பு எண் 990, 992, 457) மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 69802—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆலிவலம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், பூசலாங்குடி ஊராட்சிக்குட்பட்ட ஆலிவலம் கிராமத்தில் ஒரு 63 கே.வி.ஏ. மின்மாற்றி உள்ளது. இங்கு 200 மின் இணைப்புகள் உள்ளன. இவற்றில் சுமார் 100 வீடுகள் குடிசை மின் இணைப்புகள் ஆகும். மேலும், இங்கு விவசாயம் மற்றும் தொழிலக மின் இணைப்பு ஏதும் இல்லை. மேல்நிலை குடிநீர்த் தொட்டி மின் இணைப்பு (3 எச்.பி.) ஒன்று உள்ளது. இங்கு சீரான மின்னழுத்தம் நிலவுவதால் ஆலிவலம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அவசியம் எழவில்லை.

8—

மின்சார உற்பத்தி

வினா எண் 103197—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் காவிரியின் குறுக்கே ஜேடர்பாளையம் பெட் ரெகுலேட்டருக்குக்கீழ் ஒரு தடுப்பணையும், திருமணிமுத்தாறு காவிரியில் கலக்கும் இடத்திற்குக் கீழாக கூடுதுறை என்ற இடத்தில் ஒரு தடுப்பணையும் கட்டி, மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். காவிரியின் குறுக்கே ஜேடர்பாளையம் பெட் ரெகுலேட்டருக்கு அருகில் 2 X 5 மெகா வாட் மின் திறன் கொண்ட கதவணை மின் திட்டம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. சாத்தியக் கூறுகள் இருப்பின், இத்திட்டம் காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மைய அரசிதழில் வெளியான பிறகு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2010 ஏப்ரல் 15]

திருமணிமுத்தாறு காவிரியில் கலக்கும் இடத்திற்கு கீழே கதவணை தடுப்பு மின் நிலையம் அமைப்பது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பொருளாதார ரீதியில் சாத்தியக் கூறுகள் இருப்பின் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

9—

துணை மின் நிலையம்

வினா எண் 103721—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், சங்கரமலைப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சங்கரமலைப்பட்டியில் ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10—

மின்சாரம்

வினா எண் 106654—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 5-வது வார்டில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 5-வது வார்டிற்கு தினமும் 22 மணி நேரம் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 2 மணி நேரம் மட்டும் மின் தடை செய்யப்படுகிறது. மின் தடை செய்யப்படும் நேரம் நாளிதழ்களில் முன்கூட்டியே அறிவிப்பு செய்யப்படுகிறது.

11—

மின் வசதி

வினா எண் 24866—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பிரமனூர் ஊராட்சி, வயல்சேரி நியாய விலைக் கடையில் மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பிரமனூர் ஊராட்சியில் உள்ள வயல்சேரி நியாய விலைக் கடைக்கு 24-6-2008-ல் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது.

12—

பகுதிநேர நியாய விலைக்கடை

வினா எண் 41774—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, திப்பிரெட்டிஅள்ளி ஊராட்சி, திப்பிரெட்டிஅள்ளி நியாய விலைக் கடையை பிரித்து கரக்காபட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, திப்பிரெட்டிஅள்ளி ஊராட்சி, திப்பிரெட்டி அள்ளி நியாய விலைக் கடையை பிரித்து கரக்காபட்டி கிராமத்தில் புதிய 2-வது பகுதி நேர நியாய விலைக் கடை 3-3-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

13—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 42275—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி வட்டம், கோரணப்பட்டி நியாய விலைக் கடையைப் பிரித்து மோட்டூர் காட்டுவளவு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

எடப்பாடி வட்டம், கோரணப்பட்டி நியாய விலைக் கடையைப் பிரித்து மோட்டூர் காட்டுவளவு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 23-3-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

14—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 42276—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, கோவலன்காடு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் கச்சுப்பள்ளி நியாய விலைக் கடையிலிருந்து 281 குடும்ப அட்டைகளைப் பிரித்து கோவலன்காடு பகுதியில் புதிய பகுதிநேரக் கடை 23-12-2008 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

15—

நியாய விலைக் கடை

வினா எண் 66427—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கொத்தமங்கலம் ஊராட்சி, புலிக்குன்றம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கொத்தமங்கலம் ஊராட்சி, புலிக்குன்றம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு பகுதிநேரக் கடை 196 குடும்ப அட்டைகளுடன் மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் புலிக்குன்றம் கிராமத்தில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 81926—திரு. வை. காவேரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2010 ஏப்ரல் 15]

எடப்பாடி தொகுதி, சங்ககிரி வட்டம், எர்ணாபுரம் ஊராட்சி, கட்டப்புளியங்காட்டில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எர்ணாபுரம் ஊராட்சி, மகுடஞ்சாவடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் கீழ்எர்ணாபுரம் கடை எண் 2 என்ற நியாய விலைக் கடையுடன் கட்டப்புளியங்காடு பகுதியிலுள்ள 53 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் வீடுகள் ஒட்டு மொத்தமாக இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றும் எனத் தனித்தனியாக உள்ளன. சாலை வசதிகளும் ஏதுவாக இல்லை. கீழ்எர்ணாபுரம் கடை எண் 2-க்கும் கட்டப்புளியங்காடு பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1¼ கிலோ மீட்டர் ஆகும். புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கு 150 குடும்ப அட்டைகளும் இரண்டு நியாயவிலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் 1.5 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் இந்நேர்வில் பூர்த்தியாகவில்லை. எனவே கட்டப்புளியங்காடு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

17—

புதிய கட்டடம்

வினா எண் 87985—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு TPSPL 33 எஜமானர் புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எஜமானர் புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் தனது சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், 2009-2010 ஆம் ஆண்டிற்கு ஈரோடு மாவட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இச்சங்கத்திற்கு கூடுதலாக 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

18—

பகுதிநேர பொது விநியோகக் கடை

வினா எண் 88729—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் காளி கவுண்டம்பாளையம் ஊராட்சி, ரங்கமுத்தானூர் பொது விநியோகக் கடையைப் பிரித்து இடையன்காட்டில் பகுதிநேர பொது விநியோகக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம், எடப்பாடி தொகுதி, காளி கவுண்டம்பாளையம் ஊராட்சி, வைகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் காளி கவுண்டம்பாளையம் நியாய விலைக் கடையில் 596 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அதில் இடையன்காடு பகுதியின் 130 குடும்ப அட்டைகள் அடங்கும்; ரங்கமுத்தானூர் என்ற பெயரில் நியாய விலைக் கடை எதுவும் இல்லை. காளி கவுண்டம்பாளையம் நியாய விலைக் கடைக்கும் இடையன்காடு பகுதிக்கும் இடையே உள்ள தூரம் 1¼ கி.மீ. ஆகும்.

2010 ஏப்ரல் 15]

புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கு *150* குடும்ப அட்டைகளும், இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் *1.5* கிலோ மீட்டர் மற்றும் பிரிவினைக்குப் பின்னர் தாய்க்கடையில் *500* குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் இந்நேர்வில் பூர்த்தி ஆகவில்லை. எனவே, இடையன்காடு பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

19—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 93543—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வட்டம், சுருளகோடு ஊராட்சி, பன்றிக்கோட்டில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் வட்டம், சுருளகோடு ஊராட்சி, பன்றிக்கோடு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை *7-11-2008* முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

20—

கட்டடம்

வினா எண் 97107—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயகன்பாளையம் ஊராட்சி, சூரியபாளையம் பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயகன்பாளையம் ஊராட்சி ஆரியபாளையத்தில் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் 26-7-1982-ல் அருகில் இருந்த புத்திரகவுண்டம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இச்சங்கக் கட்டடம் புத்திரகவுண்டம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் உரக் கிடங்காகவும், நியாய விலைக் கடை பொருட்கள் வைக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, ஆரியபாளையத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்டும் சூழ்நிலை எழவில்லை.

21—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 97111—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, திப்பிரெட்டிஅள்ளி ஊராட்சி, காமராஜ் நகர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, திப்பிரெட்டிஅள்ளி ஊராட்சி, காமராஜ் நகர் கிராமத்தைச் சேர்ந்த 145 குடும்ப அட்டைகள் 787 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் திப்பிரெட்டிஅள்ளி தாய் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தாய் நியாய விலைக் கடையிலிருந்து

2010 ஏப்ரல் 15]

ஏற்கெனவே 2 பகுதி நேரக் கடைகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையின்படி இரண்டு பகுதி நேரக் கடைகள் பிரிக்கப்பட்டபிறகு 3-வது பகுதி நேரக் கடையை பிரிக்க இயலாது என்பதால் காமராஜ் நகர் கிராமத்தில் 3-வது பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

22—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 101747—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, குதிரையாறு அணையில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், குதிரையாறு அணைப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 27-7-2009 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

23—

மின்னணுத் தராசு

வினா எண் 102152—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புதூர்நாடு நியாய விலைக் கடைகளில் பொருட்களை மின் எடை இயந்திரம்மூலம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புதூர்நாடு லேம்ப் சங்கத்தில் நான்கு முழுநேர நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. இந்த நான்கு நியாய விலைக் கடைகளிலும் அனைத்து பொருட்களும் மின்னணுத் தராசுமூலம் மட்டுமே எடையிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

24—

கூட்டுறவு வங்கிக் கிளை

வினா எண் 103829—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளையை ஒவ்வொரு ஒன்றிய அளவிலும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, சேலம் மற்றும் நாமக்கல் வருவாய் மாவட்டங்களை விவகார எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது சேலம் மாவட்டத்திலுள்ள 20 ஒன்றியங்களில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 35 கிளைகளும் நாமக்கல் மாவட்டத்திலுள்ள 15 ஒன்றியங்களில் 24 வங்கிக் கிளைகளும் செயல்பட்டு வருகின்றன. அதன்படி சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள 35 ஒன்றியங்களிலும் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 59 கிளைகள் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் அனைத்து ஒன்றியங்கள் அளவிலும் செயல்பட்டு வருகின்றன.

2010 ஏப்ரல் 15]

25—

கட்டடம்

வினா எண் 104120—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர், நவப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதியதாகக் கட்டடம் கட்டவும், கருங்கல்லூரில் இயங்கும் காவேரிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து கோவிந்தப்பாடியில் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நவப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் நவப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே சொந்தக் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. ஆதலால், நவப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

2. காவேரிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க விவகார எல்லையில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 5,580 ஏக்கர் உள்ளது. கோவிந்தப்பாடி பகுதியில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 2,227 ஏக்கர் மட்டுமே உள்ளது.

3. காவேரிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் 4,584 ஆகும். அதில் கோவிந்தப்பாடி பகுதியில் உள்ளவர்கள் 1,300 நபர்களே ஆகும்.

4. 2008-2009 ஆம் ஆண்டில் காவேரிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர்க் கடன் (விவசாய நகைக் கடன் உட்பட) பெற்றவர்கள் எண்ணிக்கை 265 ஆகும். அதில் கோவிந்தப்பாடி பகுதியில் 120 நபர்கள் மட்டுமே பயிர்க் கடன் பெற்றுள்ளனர்.

[2010 ஏப்ரல் 15

5. மேற்கண்ட நிலையில், அரசாணை எண் *376*, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் *3-10-2006*-ன்படி, மொத்த உறுப்பினர்களில் *60* விழுக்காடு கடன் பெறும் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், பயிரிடக்கூடிய நிலப்பரப்பு *4,950* ஏக்கர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே, காவேரிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தை இரண்டாகப் பிரித்து கோவிந்தப்பாடியில் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 104842—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கோழிக்கொட்டாய் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கோழிக்கொட்டாய் கிராமத்தில் *48* குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இவற்றில் *22* குடும்ப அட்டைகள் இப்பகுதியிலிருந்து *2.0* கிலோ மீட்டர் வரையில் செயல்பட்டுவரும் கஞ்சநாயக்கன்பட்டி-*1*, என்ற நியாய விலைக் கடையுடனும் மீதமுள்ள *26* குடும்ப அட்டைகள் *2.0* கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஊமகவுண்டன்பட்டி நியாய விலைக் கடையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. கோழிக்கொட்டாய் கிராமத்திற்கும் நியாய விலைக் கடைகளுக்கும் இடைப்பட்ட தூரம் *1.5* கிலோ மீட்டருக்கு மேல் இருந்தாலும், இப்பகுதியில் *150*-க்கு *(48)* குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதால், அரசு நிபந்தனையின்படி, இப்பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

2010 ஏப்ரல் 15]
27—

மண்புழு உரம்

வினா எண் 53936—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம், கம்பலாபட்டி, அங்கலக்குறிச்சி, கரியஞ்செட்டிபாளையம், ஜல்லிப்பட்டி, அர்த்தநாரிபாளையம் மற்றும் தென்சங்கம்பாளையம் ஊராட்சிகளில் மண்புழு உரம் தயாரிப்பு சுய வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் (மேற்சொன்ன வால்பாறை தொகுதி ஊராட்சிகள் உட்பட) விவசாயிகள் தங்கள் நிலங்களிலேயே மண்புழு உரம் உற்பத்தி செய்து உபயோகிக்கும்வண்ணம் மண்புழு உர உற்பத்தி குறித்த 300 செயல்விளக்கம் மற்றும் பயிற்சிகள் ஆண்டுதோறும் ரூ.11.55 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு ஒவ்வொரு பயிற்சியிலும் 50 விவசாயிகள் வீதம் 15,000 விவசாயிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஜல்லிப்பட்டி கிராமத்தில் இரண்டு மண்புழு உர உற்பத்தி செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டு ரூ.5,000 மானியத்தில் ஜல்லிப்பட்டியைச் சேர்ந்த விவசாயிகளான திரு. பி. முத்துசாமி மற்றும் எஸ். பார்த்திபராஜ் ஆகியோர் பயனடைந்துள்ளனர். வேளாண் கழிவுகளை மண்புழு உரமாக்கும் திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் வால்பாறை தொகுதியைச் சார்ந்த இதர இடங்களான பிலிசின்னம்பாளையம், கம்பலாபட்டி, கரியஞ்செட்டிபாளையம், தென்சங்கம்பாளையம். அர்த்தநாரிபாளையம் மற்றும் அங்கலக்குறிச்சியில் மண்புழு உர உற்பத்தி குறித்த செயல்விளக்கம் மற்றும் பயிற்சி விவசாயிகளுக்கு நடத்தப்படவுள்ளன.

[2010 ஏப்ரல் 15

28—

கசிவுநீர்க் குட்டைகள்

வினா எண் 64340—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் மற்றும் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியங்களில் மழைநீர் அறுவடை மற்றும் உபரி நீர் மேலாண்மைத் திட்டம் மற்றும் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் 7 இடங்களில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் பணிகள் 31-3-2009-க்குள் முடிக்கப்பட்டுள்ளன:—

வ. எண்	ஒன்றியம்	கிராமம்	எண்	பணியின் பெயர்
1	கொளத்தூர்	லக்கம்பட்டி	2	கசிவுநீர்க் குட்டை
2	கொளத்தூர்	காவேரிபுரம்	1	கசிவுநீர்க் குட்டை
3	கொளத்தூர்	கண்ணாமூச்சி	1	கசிவுநீர்க் குட்டை
4	நங்கவள்ளி	வீரக்கல்	1	கசிவுநீர்க் குட்டை
5	நங்கவள்ளி	சூரப்பள்ளி	1	கசிவுநீர்க் குட்டை
6	நங்கவள்ளி	வனவாசி	1	கசிவுநீர்க் குட்டை
		மொத்தம்	7	

2010 ஏப்ரல் 15]

29—

மண்வளம் பற்றிய கருத்தரங்குகள்

வினா எண் 76250—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு மண்வளம் பற்றிய கருத்தரங்குகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட விவசாயிகளிடையே மண்வளம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியையும், சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளின் விளைநிலங்களில் மண்ணை ஆய்வு செய்து, மண் வளத்தைப் பாதுகாக்கும்வண்ணம் தக்க பரிந்துரைகளை அளிக்கும் பணியினையும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள மண் பரிசோதனை நிலையம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. எனவே, சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு மண்வளம் பற்றிய கருத்தரங்குகள் நடத்துவதற்கான திட்டமேதும் அரசிடம் தற்போது இல்லை.

30—

முந்திரிக் கழகம்

வினா எண் 101574—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முந்திரிக் கழகம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முந்திரிக் கழகம் உருவாக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

31—

புதிய குடியிருப்புகள்

வினா எண் 14245—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாவட்ட, முதன்மை நீதிபதிகள், மாஜிஸ்ட்ரேட்டுகள் மற்றும் நீதிபதிகளுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்ட, முதன்மை நீதிபதிகள், மாஜிஸ்ட்ரேட்டுகள் மற்றும் நீதிபதிகளுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

32—

ஆவணங்கள் வைப்பறை

வினா எண் 38037—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை நீதிமன்றத்திற்கு ஆவணங்கள் வைப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை நீதிமன்றத்திற்கு ஆவணங்கள் வைப்பறை கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப, அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

33—

கழிப்பறை வசதி

வினா எண் 39283—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை நீதிமன்றத்தில் ஆண்கள்/பெண்கள் கழிப்பறை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை நீதிமன்றத்தில் ஆண்கள்/பெண்கள் கழிப்பறை அமைப்பதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

34—

கூடுதல் கட்டடம்

வினா எண் 39285—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை நீதிமன்றங்களுக்கு கூடுதல் கட்டடம் ,கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை நீதிமன்றங்களுக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

35—

நீதிமன்றக் கட்டடங்கள்

வினா எண் 41401—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், காங்கேயம் நீதிமன்றம் இயங்கும் பழுதடைந்த சிமென்ட் அட்டை கொட்டகையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

காங்கேயத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான அறிவிப்பு 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களால் வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 830, உள்(நீதிமன்றம்-3) துறை, நாள் 25-9-2009-ல் ரூ.2,88,90,000 செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு, தொடர் பணிகள் நடைபெற்று வருகின்றன.

36—

சொந்தக் கட்டடம்

வினா எண் 43731—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

பள்ளிப்பட்டு நகரில் உரிமையியல் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு நகரில் உரிமையியல் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

37—

நீதிமன்றக் கட்டடங்கள்

வினா எண் 52270—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நீதிமன்றங்களில் உள்ள பழைய கட்டடங்களை அகற்றி புதிய கட்டடங்கள் கட்டவும், காத்திருப்போர் மண்டபம் அமைத்து, கழிவறைகளைச் சுத்தமாகப் பராமரிக்கவும், தளவாடப் பொருள்கள் வழங்கி மின்சாதனங்கள் வசதி செய்திடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான அறிவிப்பு 2007-2008 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களால் வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, அரசாணை (நிலை) எண்.246, உள்(நீதிமன்றம்-3) துறை, நாள்: 13-2-2008-ல் ரூ.2,40,00,000-ம் செலவில், அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு தொடர் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2010 ஏப்ரல் 15

38—

சட்ட ஆலோசனை மையம்

வினா எண் 75350—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியில் பெண்களுக்கு இலவச சட்ட ஆலோசனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தாலுகாவில் எந்த ஒரு நீதிமன்றமும் நிறுவப்படவில்லை. ஆகவே, அங்கு சட்டப் பணிகள் குழு இயங்கவில்லை. ஆயினும், இத்தாலுகா காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வரம்பிற்குள் வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் நீதிமன்ற வளாகத்தில் ஏற்கெனவே முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதியைத் தலைவராகக் கொண்ட மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு இயங்கி வருகிறது. மேலும், திருப்போரூரிலுள்ள வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இருபாலருக்கும் சமரச மையம் இயங்குகிறது.

39—

ஆங்கிலப் பேச்சுத் திறனுக்குத் தனிப் பயிற்சி

வினா எண் 108085—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஆங்கில பேச்சுத் திறனை மேம்படுத்த தனிப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

ஐந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சட்டப் படிப்புகளுக்கான பாடத் திட்டத்தில் ஆங்கிலமும் ஒரு பாடமாக தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்படுவதால், மாணவர்களுக்கு ஆங்கிலப் பேச்சுத் திறனை மேம்படுத்த தனிப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை.

40—

சார்பு நீதிமன்றங்கள்

வினா எண் 109787—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் சார்பு நீதிமன்றங்கள் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும் பட்சத்தில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப, ஓமலூரில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

41—

புதிய கட்டடம்

வினா எண் 110125—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதி நிலைமைக்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

42—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 111946—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூரில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப, ஓமலூரில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

43—

சொந்தக் கட்டடம்

வினா எண் 112759—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதி நிலைமைக்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

44—

தேசிய பல்கலைக்கழகம்

வினா எண் 103966—திரு. வை. காவேரி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராமிய பல்கலைக்கழகத்தை தேசிய பல்கலைக்கழகமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள எந்தவொரு நிகர்நிலைப் பல்கலைக்கழகமும் தமிழக அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதில்லை. நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் மத்திய அரசின் பல்கலைக்கழக மானியக் குழுவின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. எனவே, திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராமிய பல்கலைக்கழகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனை தேசிய பல்கலைக்கழகமாக மாற்றுவது குறித்து மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும். எனவே, இது தொடர்பான எந்த கருத்துருவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

சோதனைச் சாவடி

வினா எண் 105849—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அதிக பாரம் ஏற்றிச் செல்வதைத் தடுக்க தருமபுரி-தொப்பூர் இடையில் பலநோக்கு ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநில எல்லையில் தற்போது இயங்கி வரும் தருமபுரியில் உள்ள ஓசூர் சோதனைச் சாவடியை ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியாக நவீனமயமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, தருமபுரி-தொப்பூர் இடையில் பலநோக்கு ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

சொந்தக் கட்டடம்

வினா எண் 105918—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கிழக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் கிழக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தகுதியான நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

47—

பேருந்து வசதி

வினா எண் 106923—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

(அ) சேலத்திலிருந்து ஓமலூர் வழியாக தாரமங்கலம், அமரகுந்தி, தொளசம்பட்டி, மானத்தாள், குட்டப்பட்டி, விருதாசம்பட்டி வழியாக மேட்டூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம், சேலம்-மேட்டூர் (வழி) தாரமங்கலம், அமரகுந்தி, குட்டப்பட்டி, மேச்சேரி வழித்தடத்தில் அரசு புறநகர்ப் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 4 நடைகளும், சேலம் நகரப் பேருந்து நிலையம் - தாரமங்கலம் (வழி) ஓமலூர் வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் 3 தடம் எண் 76 தினசரி 40 நடைகளும், ஓமலூர் - விருதாசம்பட்டி (வழி) தாரமங்கலம், அமரகுந்தி, தொளசம்பட்டி, குட்டப்பட்டி, வழித்தடத்தில் தடம் எண் ஓ11 தினசரி 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், நகரப் பேருந்து தடம் எண் 16 தாரமங்கலம் - மேட்டூர் ஆர்.எஸ். (வழி) குட்டப்பட்டி, தொளசம்பட்டி, குஞ்சாண்டியூர் வழித்தடத்தில் தினசரி 12 நடைகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றது. இதுவே, அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

48—

மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 68974—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வைகுந்தம் ஊராட்சியில் மாம்பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) எடப்பாடி தொகுதி வைகுந்தம் ஊராட்சியில் அரசால் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

49—

முந்திரிப் ½பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 68979—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதியில் முந்திரிப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பண்ருட்டி தொகுதியில் முந்திரிப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசின் திட்டங்கள் ஏதுமில்லை. எனினும் தொழில் முனைவோர் எவரேனும் இத்தொழிலை ஆரம்பிக்க முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்ட தொழில் மையம் செய்து தரும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

50—

தக்காளி பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் 68986—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 ஏப்ரல் 15]

(அ) தருமபுரி தொகுதியில் தக்காளி பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டத்தில் தக்காளி பதப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசிடமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

51—

மணிலா தொழிற்சாலை

வினா எண் 70345—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் மணிலா தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் வட்டாரத்தில், மணிலா சாகுபடி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

52—

மாம்பழக்கூழ் தொழிற்சாலை

வினா எண் 76790—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் மாம்பழக்கூழ் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 40,000 ஹெக்டேர் பரப்பளவில் அல்போன்சா, தோத்தாபுரி, நீலம் ரக மாம்பழங்கள் ஆண்டுக்கு சுமார் 3.25 இலட்சம் டன் அளவில் விளைவிக்கப்படுகின்றன. இவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு இப்பகுதியில் ஏற்கெனவே 25-க்கும் மேற்பட்ட தனியார் துறை மாம்பழக்கூழ் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. எனவே, இப்பகுதியில் மாம்பழக்கூழ் தொழிற்சாலை துவக்க அரசிடம் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

53—

வாசனைத் திரவியத் தொழிற்சாலை

வினா எண் 81983—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பூசாரிப்பட்டியை மையமாக வைத்து வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் மல்லிகைப் பூக்கள் 3,550 மெட்ரிக் டன் விளைகின்றபோதிலும் வீட்டு உபயோகத்திற்கும் மற்றும் பிற பகுதிகளில் விற்பனை செய்வதற்குமே போதுமானதாக உள்ளன. இருப்பினும் ஆர்வம் உள்ள தனியார் தொழில் முனைவோர் இப்பகுதியில் அத்தொழிற்சாலை அமைக்க முன்வரும்பட்சத்தில் மாவட்ட தொழில் மையம் தேவையான அனைத்து வழிகாட்டுதல்களை வழங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

54—

பழரசத் தொழிற்சாலை

வினா எண் 87877—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வைகுந்தம் பகுதியில் பழரசத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) எடப்பாடி தொகுதி, வைகுந்தம் பகுதியில் பழரசத் தொழிற்சாலை துவங்க திட்டங்கள் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

55—

ஜவ்வரிசித் தொழிற்சாலை

வினா எண் 111905—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழில் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2010 ஏப்ரல் 15

56—

விற்பனை நிலையம்

வினா எண் 106164—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் அரசுக்கு சொந்தமான பூம்புகார் விற்பனை நிலையத்தைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம் மகாபலிபுரத்தில் பூம்புகார் விற்பனை நிலையம் ஏற்கெனவே உள்ளதால், செங்கல்பட்டு நகரில் விற்பனை நிலையம் துவக்கும் எண்ணம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

57—

கயிறு தொழிற்கூடம்

வினா எண் 106567—திரு. ஞா. ஜாண் ஜோசப்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தாலுகா, கலிங்கராஜபுரம் ஆதி திராவிடர் கயிறு தொழிற்கூடத்தை மீண்டும் செயல்பட வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) விளவங்கோடு தாலுகா, கலிங்கராஜபுரத்தில் ஆதி திராவிடர் கயிறு தொழில் கூட்டுறவு சங்கம் முதலில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. பின்னர் ஏழுதேசம் ஆதி திராவிடர் கயிறு தொழிற்கூட்டுறவு சங்கமும் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்துள்ளது. தற்சமயம் இரண்டு கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் இணைக்கப்பட்டு, ஏழுதேசம் ஆதி திராவிடர் கயிறு தொழிற்கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழாது.

58—

சுற்றுலா மையமாக அறிவித்தல்

வினா எண் 66470—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சியை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகளை மட்டுமே செய்து தருகிறது.

மொடக்குறிச்சியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2010 ஏப்ரல் 15

59—

சுற்றுலா மையமாக மேம்படுத்துதல்

வினா எண் 72643—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, வத்தல்மலை பகுதியில் புதியதாக சுற்றுலா மையம் துவக்கவும், தொப்பையாறு நீர்த்தேக்க சுற்றுலா மையத்தை மேம்படுத்தவும், அதியமான்கோட்டை ஊராட்சி, அதியமான்கோட்டையிலுள்ள பெருமாள் கோயிலை சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், வத்தல்மலையில் புதியதாக சுற்றுலா மையம் ஏற்படுத்தவோ, தொப்பையாறு நீர்த்தேக்க சுற்றுலா மையத்தை மேம்படுத்தவோ, அதியமான் கோட்டையிலுள்ள பெருமாள் கோயிலை மேம்படுத்தவோ செய்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

சுற்றுலாத் தலமாக அறிவித்தல்

வினா எண் 76537—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரலாற்று தொல்பொருள் ஆய்வு கிராமமான ஈரோடு சென்னிமலையிலுள்ள கொடுமணல் கிராமத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு அடிப்படை வசதிகளை மட்டுமே செய்து தருகிறது. ஈரோடு சென்னிமலையிலுள்ள கொடுமணல் கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்துதரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

61—

கலை நிகழ்ச்சிகள்

வினா எண் 80221—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறைக்கு சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் அதிகமாக வருவதால் சுற்றுலாத் துறைமூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வால்பாறையில் சுற்றுலாத் துறைமூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

62—

சுற்றுலா நட்பு வாகனம்

வினா எண் 80269—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2010 ஏப்ரல் 15

தமிழக சுற்றுலாத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டோ டிரைவர்கள் என்ற தரச் சான்றிதழ் வழங்கி புதுமையான குளிர் சாதனப்படுத்தப்பட்ட ஆட்டோக்களை டூரிஸ்ட் ஆட்டோக்களாக அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறையின் சார்பில் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் தற்போது சுற்றுலா நட்பு வாகனம் (Tourist-friendly Auto) என்ற திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. சுற்றுலாத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டோ டிரைவர்கள் என்ற சான்றிதழ் வழங்கி புதுமையான குளிர் சாதனப்படுத்தப்பட்ட ஆட்டோக்களை டூரிஸ்ட் ஆட்டோக்களாக அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

63—

மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்

வினா எண் 104100—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் கூட்டுறவுத் துறைமூலம் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதிக்குட்பட்ட மேட்டூர் நகராட்சி பகுதியில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க போதிய இட வசதியும், நிதி வசதியும் இல்லாததாலும், இத்தொகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகளை ஒருங்கிணைத்து மண்ணெண்ணெய்

2010 ஏப்ரல் 15]

வழங்கு நிலையம் அமைக்கக்கூடிய தொலைவில் நியாயவிலைக் கடைகள் இல்லாமல், பரவலாக நியாயவிலைக் கடைகள் உள்ளதாலும் மேட்டூர் தொகுதியில் கூட்டுறவுத் துறைமூலம் புதிதாக மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

64—

மாணவர் சேர்க்கை

வினா எண் 6044—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவரில்லங்களில் அதிக மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லங்களில் அதிக மாணவர்களைச் சேர்க்கும் நோக்கத்துடன் ஏற்கெனவே 4,185 கூடுதல் இடங்களைத் தற்காலிக அடிப்படையில் வழங்க பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 2,000 இடங்களைக் கூடுதலாகத் தேவைப்படும் விடுதிகளுக்கு நிரந்தரமாக வழங்க ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டு (2009-2010) கூடுதலாக 4,000 இடங்களை நிரந்தரமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

65—

மாணவர் எண்ணிக்கை

வினா எண் 48623—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 15

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி அரசு கள்ளர் மாணவர் விடுதியில், ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை 1,010-லிருந்து 1,200 ஆக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி அரசு கள்ளர் மாணவர் விடுதியில், ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையான 1,010-ல் நடப்பாண்டில் 5 இடங்களுக்கு மாணவர்கள் சேர்க்கைக்கு கோரிக்கை பெறப்படாமல் காலியாக உள்ள நிலையில் மொத்த மாணவர் எண்ணிக்கையை 1,200 ஆக உயர்த்தும் அவசியம் எழவில்லை.

66—

மாவு அரைக்கும் இயந்திரம்

வினா எண் 63090—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் உணவு விடுதிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியிலுள்ள 7 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 2 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

2010 ஏப்ரல் 15]

67—

மாணவ, மாணவியர் விடுதி அமைத்தல்

வினா எண் 67168—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் மற்றும் நல்லூர் நத்தம் பாளையத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் நல்லூர் நத்தம் பாளையம் என்ற பெயரில் கிராமம் ஏதுமில்லை. கபிலர்மலை தொகுதியில் நல்லூர் நத்தம்பாளையம் என்ற கிராமம் மட்டுமே உள்ளது. இவ்விடத்திலும், வேலூரிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

68—

புதிய விடுதிக் கட்டடம்

வினா எண் 69409—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரத்தில் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை நவீன வசதிகளுடன் புதியதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. எனினும் அங்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அது பழைய கட்டடத்தில் இயங்கி வருவதால் அந்தக் கட்டடத்திற்குப் பதில் அங்கு புதிய விடுதிக் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டதையடுத்து விடுதி தற்காலிகமாக வேறு கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. தற்போது பொதுப் பணித் துறையால் கட்டுமானப் பணி துவங்கப்பட்டுள்ளது.

69—

புதிய கட்டடம்

வினா எண் 106661—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை வெள்ளோட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை வெள்ளோட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு ரூ.31.50 இலட்சத்தில் கட்டடம் கட்ட ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டு, தற்போதுள்ள விலைவாசிக்கேற்ப கட்டடம் கட்ட ஏதுவாக திருத்திய மதிப்பீடாக ரூ.48.41 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி விரைவில் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

2010 ஏப்ரல் 15]

70—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 108107—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் மகளிருக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டத்தில் மேட்டூர் தொகுதியில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 272 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இருக்கைகளில் 30% பெண்களுக்கென ஒதுக்கீடு உள்ளது. எனவே, இத்தொகுதியின் தேவையினை பூர்த்தி செய்வதற்கு இது போதுமானதாக உள்ளதால், மேட்டூரில் பெண்களுக்கென அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்க தற்போது அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

71—

தரம் உயர்த்துதல்

வினா எண் 96904—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி நகராட்சியிலுள்ள ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளி, அரசாணை எண் 76, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 16-02-2009-ன்படி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

72—

நிரந்தர அங்கீகாரம்

வினா எண் 101770—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி இஸ்லாமிய மேல்நிலைப் பள்ளிக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தனியார் பள்ளி தீ விபத்து சம்பவத்திற்குப் பிறகு பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை. தகுதியான பள்ளிகளுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டு, பின்னர் தகுதியின் அடிப்படையில் அங்கீகாரம் புதுப்பிக்கும் நடைமுறையே தற்போது உள்ளது.

73—

சாலை அமைத்தல்

வினா எண் 106582—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

(அ) முகையூர் தொகுதி, அடுக்கம் முதல் தண்டரை வரையிலுள்ள இணைப்புச் சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தை சாலை அமைத்து ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, அடுக்கம் முதல் தண்டரை வரையிலுள்ள இணைப்புச் சாலையில், சாலையமைக்க கோரும் பகுதி அடுக்கம் காப்புக்காட்டினுள் அமைந்துள்ளது. இங்கு தண்டரை முதல் அடுக்கம் கிராமங்களுக்கு செல்ல நடைபாதை ஒன்று உள்ளது. இந்த நடைபாதையின் நீளம் 2.40 கி.மீ. அகலம் 1.00 மீட்டர் ஆகும். அடுக்கம் காப்புக்காட்டினுள் வனச் சட்டம், 1882 பிரிவு 16-ன்கீழ் காப்புக்காடாக அறிவிக்கை செய்யப்பட்ட அறிவிக்கையில் இந்த நடைபாதைக்கு அனுமதி உரிமை ஏதும் வழங்கப்படவில்லை. இப்பகுதியில் சாலையமைக்கப்பட வேண்டுமானால் வனப் பாதுகாப்பு சட்டம், 1980-ன் விதிமுறைப்படி, மைய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே பயனீட்டாளர் துறையான ஊரக வளர்ச்சித் துறை / நெடுஞ்சாலைத் துறையினரிடமிருந்து வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி உரிய கருத்துரு கிடைக்கப்பெறின் மைய அரசின் முன் அனுமதி பெற தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சாலை வனத் துறையின் பயன்பாட்டிற்கு தேவையில்லையாதலால் வனத் துறைமூலம் சாலையமைக்கும் திட்டம் ஏதுமில்லை. பொதுமக்கள், பயன்பாட்டிற்கென வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் ஊரக வளர்ச்சித் துறை / நெடுஞ்சாலைத் துறைகள் முன்வரும்பட்சத்தில் அதற்கான அனுமதியை வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்கீழ் மத்திய அரசிடமிருந்து பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 ஏப்ரல் 15

74—

கணவாய் மீன்களின் பாதுகாப்பு

வினா எண் 111683—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம், மன்னார் வளைகுடா பகுதியில் கணவாய் மீன்களை அதிக அளவில் இனவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம், மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசியப் பூங்கா பகுதிகளில் பவளப் பாறைகள் அதிகம் உள்ளன. இந்த பவளப் பாறைகளைச் சார்ந்து வாழும் கணவாய் மீன்கள் அதிகளவு உள்ளன. பவளப் பாறைகளை சேதப்படுத்துவது, சேகரம் செய்வது முற்றிலும் தடை செய்யப்பட்டு மேலும் இப்பகுதி பாதுகாக்கப்படுவதால் கணவாய் மீன்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு அதன் இனவிருத்தி அதிகமாகி வருகிறது.

75—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 52406—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், கடவூர்-அய்யலூர் சாலையில் வலையபட்டி அருகே ஓடையின்மீது பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட முக்கியச் சாலையான கி.மீ. 0/0-16/0 56 வரையுள்ள கோட்டப் பொறியாளர் (நெ.) கரூர் அவர்களின் பராமரிப்பில் உள்ள பாலவிடுதி, கடவூர்-அய்யலூர் சாலையில் கி.மீ. 12/6-ல் காட்டாறு குறுக்கிடுகிறது. அவ்விடத்தில் சுமார் 140 மீ. நீளத்திற்கு தரைப்பாலம் ஒன்று உள்ளது. இப்பாலம் தற்போது நல்ல நிலையில் உள்ளது. இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் கட்ட ரூ.500 இலட்சம் தேவைப்படும். இப்பணி தற்போது எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை.

76—

தரம் உயர்த்துதல்

வினா எண் 68618—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி முதல் சேலம் வரையிலான சாலையை நான்கு வழிச்சாலையாக உடன் மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி முதல் சேலம் வரையிலான சாலையினை நான்கு வழிச்சாலையாக மாற்ற கோரப்பட்டுள்ள சாலையின் பெயர் சேலம்-திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலை என்ற கி.மீ. 0/0-125/0 வரையுள்ள மாநிலச் சாலையாகும். இதில் கி.மீ. 0/0-79/0, 79/4-93/6, 93/6-104/6 மற்றும் 106/4-125/0 வரையுள்ள பகுதிகள் இருவழித்தடமாகவும்

எஞ்சிய பகுதிகள் பலவழித்தடமாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும் போது அல்லது தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தும்போது நான்கு வழிச்சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

77—

ஏரிக்கரை சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 92573—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, பெலாசூர் ஏரிக்கரை சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதியைச் சார்ந்த பெலாசூர் ஏரிக்கரை சாலையை அகலப்படுத்த கோரப்பட்டுள்ள சாலைப் பகுதியானது திருவண்ணாமலை (நெ.) கோட்டப் பராமரிப்பில் உள்ள "போளூர் - பிளாசூர் - பாடகம் - மன்சூராபாத் சாலை கி.மீ. 0/0-17/7" எனும் 17.70 கி.மீ. நீளமுடைய மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையானது கி.மீ. 0/0-0/6 வரை இருவழித்தடமாகவும், கி.மீ. 0/6-17/7 வரை ஒருவழித்தடமாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் கி.மீ. 5/8-6/5 வரை உள்ள பகுதியானது ஏரிக்கரைப் பகுதியாகும். இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு குறைவாகவே உள்ளதால் வரும் ஆண்டுகளில் போக்குவரத்துச் செறிவு உயரும்போது அரசின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு இடைவழித்தடமாக அகலப்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2010 ஏப்ரல் 15]

78—

நிழற்கூடம்

வினா எண் 92854—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி நகராட்சி, கிருஷ்ணகிரி-திருவண்ணாமலை புறவழிச்சாலையில் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி-திருவண்ணாமலை சாலை என்பது பாண்டிச்சேரி-கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை எண் 66-ன் ஒரு பகுதியாகும். இதில் தற்போது புறவழிச்சாலை ஏதும் இல்லை. திண்டிவனம் - கிருஷ்ணகிரி சாலையை கடின புருவங்களுடன் கூடிய இரு வழிச்சாலையாக மாற்றிட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யப்பட்டு வருகிறது. இப்பணி முடிவடைந்தவுடன் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று திண்டிவனம்-கிருஷ்ணகிரி சாலைக்கான திட்டப் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் எடுத்துக்கொள்ளப்படும். மேலும், சாலைப் பணிகள் நிறைவு பெற்றதும், தேவைப்படும் இடங்களில் நிழற்கூடம் அமைக்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் விழுப்புரம் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

79—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 93393—திரு. வை. காவேரி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட நெருப்பூர் - சேலம் மாவட்ட கொளத்தூர் பகுதியை இணைக்க ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நெருப்பூர் - சேலம் மாவட்ட கொளத்தூர் பகுதியை இணைக்க காவேரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட கோரியுள்ள பகுதி இரு பரிசல் துறைகளுக்கு இடையே உள்ள பகுதியாகும். இப்பாலத்தை புதிதாக நிர்மாணிக்க வேண்டும். இப்பாலத்திற்கான அணுகு சாலை அமைப்பதற்குத் தனியார் நிலங்களை கையகப்படுத்தினால் மட்டுமே இப்பாலம் கட்ட சாத்தியக் கூறு உள்ளதால் இப்பாலத்தினை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை

80—

அடிப்படை வசதிகள்

வினா எண் 52690—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம் குழந்தைகள் நல மையம் மற்றும் ஊட்டச்சத்து மையத்திற்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆனைமலை வட்டாரம், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் கீழ்காளியாபுரம் என்ற கிராமத்தில் குழந்தைகள் நல மையம் மற்றும் ஊட்டச் சத்து மையம் 01-07-1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மையத்திற்கு அடிப்படை வசதிகளான இடவசதி, குடிநீர் வசதி, சமையலறை வசதி, கழிப்பிட வசதி ஆகிய அனைத்து வசதிகளும் போதுமான

2010 ஏப்ரல் 15]

அளவில் உள்ளன. மையத்தில் கதவு, சிமென்ட் ஓடு, மேற்கூரை ஆகியவை பழுதடைந்த நிலையில் இருந்தன. அப்பழுதுகளை சரி செய்திடக் கோரி காளியாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரிடம் ஆனைமலை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரால் நேரில் கூறப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது மையத்தில் உள்ள அனைத்து பழுதுகளும் சரி செய்யப்பட்டு மையம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகின்றது.

81—

அடிப்படை வசதிகள்

வினா எண் 52694—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துரை ஊராட்சியில் உள்ள பால்வாடி பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சோமந்துரை ஊராட்சியில் 08-03-2003 முதல் மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் 50 குழந்தைகள் பயனடைந்து வருகின்றார்கள். இம்மையத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டப்பட்டு செப்டம்பர் 2009 முதல் செயல்பட்டு வருகின்றது. மையத்திற்குத் தேவையான இடவசதி, குடிநீர் வசதி மற்றும் சமையலறை வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் இம்மையத்தில் உள்ளன. புதியதாக கட்டப்பட்டு செயல்படும் இம்மையம் சோமந்துரை கிழக்கு மையம் என்றழைக்கப்படுகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

82—

மின் விசிறி

வினா எண் 56737—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு மின் விசிறி வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குழந்தைகள் மையத்தில் ஆரம்பத்தில் பணி நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை என நிர்ணயிக்கப்பட்ட கால கட்டத்தில் (தற்போது காலை 8 மணி முதல் மாலை 3½ வரை என மாற்றி அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது). மின் இணைப்பு வழங்கப்படாததால் மின் விளக்கோ, மின் விசிறியோ அமைத்துத் தரவில்லை. ஆனால், தற்போது அரசு அனுமதித்து வரும் மையங்களில் மின் இணைப்பு உள்ளது.

அரசுமூலம் மின் விசிறி அமைத்திட தற்போது இயலாது என அறியப்பட்டதால், நன்கொடைமூலம் பெற ஆவன செய்யப்பட்டு வருகிறது. சமுதாய பங்கேற்புமூலம் இவ்வசதிகளை மையங்களுக்கு ஏற்படுத்த மையப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

83—

சத்துணவுக் கூடம்

வினா எண் 64986—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 ஏப்ரல் 15]

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கை பேரூர், அன்னை தெரசா மேல்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு பள்ளிகளுக்கு மட்டுமே அரசால் சத்துணவுக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசால் சத்துணவுக் கூடம் கட்டித் தரப்படுவதில்லை. எனவே, அரசு உதவி பெறும் பள்ளி நிர்வாகமே சத்துணவுக் கூடம் கட்டிக்கொள்ள வேண்டும்.

84—

சத்துணவு மையம்

வினா எண் 69522—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், மாங்குப்பை ஊராட்சி, காமராஜ் நகர் காலனி பகுதியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், மாங்குப்பை ஊராட்சியில் காமராஜ் நகர் காலனி அமைந்துள்ளது. ஏற்கெனவே அவ்வூராட்சியிலுள்ள மாங்குப்பை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு மையத்தின் மூலமாக 100 மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பள்ளி அமைவிடத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் காமராஜ் நகர் காலனி அமைந்துள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த மாணவ, மாணவிகளும் மாங்குப்பை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் கல்வி பயின்றுகொண்டு சத்துணவு சாப்பிட்டு வருகிறார்கள். வருங்காலங்களில் காமராஜ் நகர் காலனியில் துவக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டால், அப்பள்ளியில் சத்துணவு மையம் அமைத்துத் தரப்படும்.

[2010 ஏப்ரல் 15

85—

அரசினர் சிறப்பு இல்லம்

வினா எண் 106177—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலம் தவறு இழைத்ததாகக் கருதப்படும் சிறார், சிறுமியர்களுக்கான சிறப்பு இல்லத்தைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியில், தமிழக இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலம் தீர்ப்பு வழங்கப்படும் குற்றம் இழைத்த சிறுவர்களுக்கான அரசினர் சிறப்பு இல்லம் ஒன்றும், சிறுமியர்களுக்கான அரசினர் சிறப்பு இல்லம் ஒன்று சென்னையிலும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில் செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் சிறார்களுக்கான அரசினர் சிறப்பு இல்லம் துவங்கும் அவசியம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

86—

உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 71795—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி 2008-2009 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் அரசாணை எண் 70, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-6-2008-ன்படி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

87—

விற்பனை நிலையம்

வினா எண் 69603—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் பால் பொருட்கள் விற்பனை நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேருந்து நிலையத்தில், மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சிக்குச் சொந்தமான கடைகள் ஏதும் காலியாக இல்லாததால், ஆவின் பால் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

88—

சொந்தக் கட்டடம்

வினா எண் 69960—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 ஏப்ரல் 15

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், ஈங்கூர் பால் கூட்டுறவுச் சங்கம் மற்றும் முத்துக்காளிவலசு கிராமத்தில் உள்ள ஈ.டி. 184 சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், ஈங்கூர் (ஈ.டி. 1811) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காலிமனை ஏதுமில்லாததாலும், போதுமான நிதி வசதி இல்லாததாலும் சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை. முத்துக்காளிவலசு (ஈ.டி. 1653) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3.15 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

89—

தொழிற்சாலை துவங்குதல்

வினா எண் 98297—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம் பேரூராட்சிகளில் பால் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, திருப்புவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு 2,000 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இதே போன்று, மானாமதுரை

2010 ஏப்ரல் 15] .

சங்கங்களிலிருந்தும் நாளொன்றுக்கு 2,100 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இவை முறையே 29 கிலோ மீட்டர் மற்றும் 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிவகங்கை பால் குளிரூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு குளிர்விக்கப்படுகின்றன. 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறனுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில், 7,500 லிட்டர் பால் மட்டுமே கையாளப்பட்டு வருவதாலும், பால் உணவுப் பொருட்கள் தயாரிக்கத் தேவையான பால் உற்பத்தி இல்லாததாலும், மானாமதுரை மற்றும் திருப்புவனத்தில் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

90—

பால் பதனிடும் தொழிற்சாலைகள்

வினா எண் 102268—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி, அன்னூர் ஆகிய ஒன்றியங்களில் பால் பதனிடும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம் வீரபாண்டி பிரிவில் ஒரு பால் குளிர்வு நிலையம் அமைக்கப்பட்டு, திருப்பூர் பகுதிக்குட்பட்ட 68 கிராமங்களிலிருந்து நாளொன்றுக்கு சராசரியாக 22,000 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு, பால் குளிர்விக்கப்படுகிறது.

மேலும், அவினாசி பகுதிக்குட்பட்ட அன்னூரில் உள்ள அல்லிகாராம்பாளையம் கிராமத்தில், 20,000 லிட்டர் திறனுள்ள பால் குளிர்வு மையம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருவதாலும், பால் பதனிடும் ஆலைகள் நிறுவுவதற்கு குறைந்தபட்சம் 1 இலட்சம் லிட்டருக்கும் அதிகமாகப் பால்

கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்பதாலும், தற்போதுள்ள சூழ்நிலையில், திருப்பூர் மாவட்டம், அவினாசி, அன்னூர் ஆகிய ஒன்றியங்களில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

91—

நவீனப்படுத்துதல்

வினா எண் 106339—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் திறனுள்ள பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. சிவகங்கை மற்றும் திருப்புவனம் பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு 6,500 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, சிவகங்கை பால் குளிரூட்டும் நிலையத்தில் குளிர்விக்கப்படுகிறது. மேலும் காளையார்கோவில் ஒன்றியம், பருத்தி கண்மாயில் 5,000 லிட்டர் பால் கொள்ளளவுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பானும், சிவகங்கை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 5,000 லிட்டர் பால் கொள்ளளவுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பானும், அலவாக்கோட்டையில் 2,000 லிட்டர் பால் கொள்ளளவுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பானும் செயல்பட்டு வருகின்றன.

எனவே, நாளொன்றுக்கு 12,000 லிட்டர் பால் குளிர்விக்க ஏதுவாக, மேற்காணும் மூன்று தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் செயல்பட்டு வருவதால், சிவகங்கையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்தவோ, தரம் உயர்த்தவோ தற்போது வாய்ப்பில்லை.

2010 ஏப்ரல் 15]

92—

சொந்தக் கட்டடம்

வினா எண் 106618—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், ஈங்கூர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், ஈ.டி. 1811, ஈங்கூர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான காலிமனை ஏதுமில்லாததாலும், பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டடம் கட்டுவதற்கான திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லாததாலும், ஈங்கூர் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டத் தற்போது வாய்ப்பில்லை.

93—

கட்டடம்

வினா எண் 107559—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில், 62 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவற்றில் செம்மாண்டப்பட்டி,

ஒண்டிமாமரத்துப்பட்டி, நச்சுவாயனூர் மற்றும் பெரிய கவுண்டனூர் ஆகிய 4 சங்கங்களுக்கு மட்டும் சொந்தமாக அடிமனை உள்ளது. இவற்றில், செம்மாண்டப்பட்டி மற்றும் நச்சுவாயனூர் ஆகிய இரண்டு சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமாயின், கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒண்டிமாமரத்துப்பட்டி மற்றும் பெரிய கவுண்டனூர் சங்கங்களுக்கு நிதியாதாரம் இல்லாததாலும், ஏனைய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடிமனையும், நிதியாதாரமும் இல்லாததாலும் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

94—

மாட்டுத் தீவனங்கள்

வினா எண் 107560—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு மானிய விலையில் மாட்டுத் தீவனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியக் கட்டுப்பாட்டில் இயங்கும், மாட்டுத் தீவனத் தொழிற்சாலைகளிலிருந்து தீவனம் வாங்கி, அனைத்து சங்கங்களுக்கும் இலாப/நட்டமின்றி கொள்முதல் விலைக்கு விநியோகம் செய்யப்படுவதால், ஓமலூர் தொகுதியில் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு தற்போது மானிய விலையில் மாட்டுத் தீவனங்கள் வழங்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

95—

கறவை மாடுகள்

வினா எண் 107716—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள ஊராட்சிகளுக்கு கால்நடை பால் உற்பத்தியாளர்கள்மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு உயர் ரக கலப்பின கறவை மாடுகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள ஊராட்சிகளுக்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு, உயர் ரக கலப்பின கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

96—

கட்டடங்கள்

வினா எண் 108655—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் சொந்தக் கட்டடம் இல்லாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் மொத்தம் 89 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 12 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தக் கட்டடத்திலும், 77 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. சின்னதண்டா மற்றும் கண்ணாமூச்சி ஆகிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் சொந்த அடிமனை உள்ளது. இருப்பினும், போதிய நிதியாதாரம் இல்லாததாலும், பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு திட்டம் ஏதும் இல்லாததாலும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பில்லை.

[2010 ஏப்ரல் 15

97—

பால் விற்பனை நிலையங்கள்

வினா எண் 108656—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் புதிதாக ஆவின் பால் விற்பனை நிலையங்கள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமானது 2 (இரண்டு) பாலகங்களை, மேட்டூர் பேருந்து நிலையம் மற்றும் மால்கோ தொழிற்சாலை வாயிலில் அமைத்து பால் பொருட்களை விற்பனை செய்து வருகிறது. மேலும், தனியார் ஒருவருக்கு மேட்டூர் தெர்மல் நான்கு வழிச்சாலையில் பாலகம் நடத்த உரிமம் வழங்கப்பட்டு, பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எனவே, தற்போதைய நிலையில், மேட்டூர் தொகுதியில் புதிதாக, பால் விற்பனை நிலையங்கள் துவக்க வாய்ப்பில்லை. இருப்பினும், தனியார் எவரேனும் பால் விற்பனை நிலையம் துவக்க விண்ணப்பித்தால், பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

98—

கல்வித் தொகையை உயர்த்துதல்

வினா எண் 106030—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக நெசவாளர்களின் சிறார்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர கல்வித் தொகையை ரூ.1,300/-லிருந்து ரூ.2,000/- ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) "காதி காரிகார் ஜனஸ்ரீபீமா யோஜனா" எனும் குழு காப்பீட்டு திட்டப்படி, மத்திய அரசின் கதராணைக் குழுவின்மூலம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் தொகை பெறப்பட்டு, கதர் நெசவாளர்கள் மற்றும் நூற்பாளர்களின் தகுதியுள்ள சிறார்களுக்கு கல்வித் தொகையாக வருடத்திற்கு ரூ.1,200/- வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் விவரம் வருமாறு:

வ. எண் (1)	விவரம் (2)	தொகை (3)
1	நெசவாளர்களின் பங்குத் தொகை (வாரியமே செலுத்தி வருகிறது)	ரூ.25.00
2	வாரியத்தின் பங்குத் தொகை,	ரூ.50.00
3	கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் பங்குத் தொகை	ரூ.25.00
4	சமூக நலப் பாதுகாப்பு நல நிதியிலிருந்து ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினரால் செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகை	ரூ.100.00
	மொத்தம்	ரூ. 200.00

மேற்குறிப்பிட்ட வ. எண் 1 மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள தொகை வாரியத்திலிருந்து சென்னை கதராணைக் குழு அலுவலகத்திற்கு செலுத்தப்படும். பின்னர் வ. எண் 3-ல் குறிப்பிட்டுள்ள கதராணைக் குழுவின் பங்குத் தொகையினையும் சேர்த்து, கதராணைக் குழுமூலம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்தப்பட்டு, அந்நிறுவனத்திடமிருந்து வருடாந்திர கல்வித் தொகையாக ரூ.1,200/-ஐ பெற்று வாரியத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. வாரியம் அதனை தகுதியுள்ள பயனாளிகளுக்கு வழங்கி வருகிறது. இத்தொகையினை மேலும் உயர்த்திட மத்திய அரசின் கதராணைக் குழுவின் இசைவு அவசியம். வாரியம் தன்னிச்சையாக உயர்த்தி வழங்கிட இயலாது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2010 ஏப்ரல் 15

99—

மண் பாண்ட உற்பத்தி நிலையம்

வினா எண் 106162—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நகரில் கதர் கிராமத் தொழில் வாரிய மண் பாண்ட உற்பத்தி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நகரில் கதர் கிராமத் தொழில் வாரிய மண் பாண்ட உற்பத்தி நிலையம் துவங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

100—

தொலைக்காட்சிகளில் விளம்பரம்

வினா எண் 107816—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் கதர் கிராம தொழில்மூலம் உற்பத்தி செய்யும் பொருட்களை பற்றிய விளம்பரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தீபாவளி சிறப்பு விற்பனை நடைபெறும் சமயம் மற்றும் கொலு பொம்மை கண்காட்சி நடைபெறும் சமயங்களில், நாளிதழ்கள், வானொலி மற்றும் பேனர்கள்மூலம் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

2010 ஏப்ரல் 15]

பட்டியல் 3

1—

சாலை அமைத்தல்

வினா எண் 8051—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பகுதியில் கொடுமணல் முதல் காசிபாளையம் வரை மண் சாலை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை பகுதியில் கொடுமணல் முதல் காசிபாளையம் வரையுள்ள சாலை சுமார் 1 கி.மீ. தூரம் கொண்டது. இதனை மண் சாலையாக மாற்ற சுமார் ரூ. 1 இலட்சம் உத்தேச மதிப்பீடு ஆகும். வரும் நிதியாண்டில் (2010-2011-ல்) ஊரகக் கட்டமைப்புத் திட்டத்தில் பணியினைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2—

தார்ச் சாலை

வினா எண் 8052—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பகுதியில் வள்ளிபுரத்தான்பாளையம் முதல் ராசாப்பாளையம் வரை தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி, வள்ளிபுரத்தான் பாளையம் முதல் ராசாப்பாளையம் வரை நபார்டு RIDF XIII *திட்டத்தின்கீழ ரூ. 18,41,000 மதிப்பீட்டில் தார்ச் சாலைப் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.*

3—

தார்ச் சாலை

வினா எண் 8053—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பகுதியில், சென்னிமலை முதல் சின்னபிடாரியூர் வரை தார்ச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிபிடாரியூர் ஊராட்சி, சென்னிமலை முதல் சின்னபிடாரியூர் வரை ஏற்கெனவே தார்ச் சாலை அமைக்கப்பட்டு பேருந்துப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

4—

தார்ச் சாலை

வினா எண் 8054—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பகுதியில் பனியம்பள்ளி முதல் வெள்ளியம்பாளையம் வரை தார்ச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், பனியம்பள்ளி ஊராட்சி, பனியம்பள்ளி முதல் வெள்ளியம்பாளையம் வரை தார்ச் சாலை அமைக்கும் பணி நபார்டு RIDF XIII திட்டத்தின்கீழ் ரூ.24,56,000 மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

5—

சாலை அமைத்தல்

வினா எண் 8055—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பகுதியில் முகாசிப்புலவன்பாளையம் முதல் குட்டப்பாளையம் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்புலவன்பாளையம் ஊராட்சி வரும் நிதியாண்டில் (2010-2011) அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தேர்வு செய்யப்பட உள்ளது. அச்சமயம் மேற்கண்ட ஊராட்சியில் நபார்டு சாலைத் திட்டப் பணிகள் திட்டத்தில் இச்சாலைப் பணி முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து முடிக்கப்படும்.

6—

சாலை வசதி

வினா எண் 21142—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 15

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, புதூர் மயானத்திற்குச் சாலை வசதி, சுற்றுச் சுவர், மின் விளக்கு, அடிகுழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி, புதூர் மயானத்திற்கு அடிகுழாய் மற்றும் தெரு விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம், 2010-2011-ன்கீழ் சாலை வசதி, சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் கூடுதல் அடிகுழாய், தெரு விளக்கு வசதி ஆகிய பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

7—

சுற்றுச் சுவர்

வினா எண் 35503—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, தின்னப்பட்டி துவக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்கவும், எம். ஒட்டப்பட்டி உயர்நிலைப் பள்ளி அருகில் நிழற்கூடம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மூக்கனூர் ஊராட்சியைச் சேர்ந்த தின்னப்பட்டி ஊராட்சி துவக்கப் பள்ளி ஊர் அருகே பாதுகாப்பான சூழ்நிலையில் அமைந்துள்ளதாலும், மிகக் குறைவான எண்ணிக்கையில் மாணவர்கள் பயிலுவதாலும், இப்பள்ளிக்குச் சுற்றுச் சுவர் தற்போது அமைக்க அவசியம் எழவில்லை. மேலும், எம். ஒட்டப்பட்டி ஊராட்சியில், ஊர் நடுவில்

2010 ஏப்ரல் 15]

பேருந்து நிறுத்துமிடத்தில் ஏற்கெனவே ஒரு நிழற்கூடம் உள்ளதால் புதிய நிழற்கூடம் கட்ட அவசியம் எழவில்லை.

8—

நூலகங்கள் அமைத்தல்

வினா எண் 110259—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள அனைத்துச் சமத்துவபுரங்களிலும் நூலகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

2006-2007 ஆம் ஆண்டு முதல் *2010-2011* ஆம் ஆண்டு முடிய *5* ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள *12,618* ஊராட்சிகளிலும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நூலகக் கட்டடம் கட்டவும், புத்தகங்கள் கொள்முதல் செய்யவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இந்நூலகங்களை அனைத்துச் சமத்துவபுரங்களில் உள்ள பொது மக்களும் பயன்படுத்தலாம்.

9—

கதவணை கட்டுதல்

வினா எண் 44820—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, காவிரியின் குறுக்கே கண்டிப்பாளையம், கொந்தளம், குன்னிப்பாளையம் ஆகிய இடங்களில் கதவணை கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

காவிரி ஆற்றின் குறுக்கே கண்டிப்பாளையம், கொந்தளம், குன்னிப்பாளையம் ஆகிய இடங்களில் மின் உற்பத்தி செய்வதற்காகக் கதவணை கட்டுவது குறித்து காவிரி நடுவர்

மன்ற ஆணையத்தின் இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியான பிறகே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும், தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதியில் சாத்தியக் கூறுகளைப் பொறுத்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

சூரிய ஒளி மின் விளக்கு

வினா எண் 71766—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கல்லுப்பள்ளி மற்றும் சின்னக்கல்லுப்பள்ளி மலை கிராம மக்களின் குடியிருப்புகளுக்கு சூரிய ஒளி மின் விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். பெரிய கல்லுப்பள்ளியில் மத்திய அரசின் கிராம எரிசக்தி பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 5 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுவிட்டன. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களிடமிருந்து பெறப்படும் கருத்துரு, ஊரக மின்சக்திமயமாக்கல் நிறுவனம் (REC) பரிந்துரைத்தால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அனுமதி பெற்று, தமிழக அரசின் பங்களிப்புடன் திட்டம் நிறைவேற ஆவன செய்யப்படும்.

11—

துணை மின் நிலையம்

வினா எண் 102963—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, பொய்யூரில் 230/110 கி.வோ. துணை மின் நிலையமும், ஏலாக்குறிச்சியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, பொய்யூரில் ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஏலாக்குறிச்சி பகுதியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

12—

தரம் உயர்த்துதல்

வினா எண் 103719—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம் சிந்தாமணிப்பட்டியிலுள்ள 33 கே.வி. மின் நிலையத்தை 110 கே.வி திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தாமணிப்பட்டியில் தற்போது 33/11 கி.வோ. துணை மின் நிலையம் பயன்பாட்டில் உள்ளது. இத்துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்படும் கடைக் கோடி பகுதிகளில் நிலவி வரும் குறைந்த மின்னழுத்த நிலையைச் சரிசெய்யும் பொருட்டு சிந்தாமணிப்பட்டியிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ள காணியாளம்பட்டியிலும், 10 கி.மீ. தொலைவில் உள்ள கோசூரிலும், புதிய துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்கு வரும்போது இப்பகுதியில் தரமான மின்சாரம் வழங்கப்படும். மேலும், சிந்தாமணிப்பட்டி பகுதியில் உள்ள மின் பளு தேவையை நிறைவு செய்ய இப்பொழுது இருக்கும் 33/11 கி.வோ. துணை மின் நிலையமே போதுமானது. எனவே,

சிந்தாமணிப்பட்டியில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் அவசியம் தற்போது எழவில்லை.

13—

மின்சார உற்பத்தி

வினா எண் 105551—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் அனல் மின்சாரம், நீர் மின்சாரம், காற்றாலைகள் ஆகியவற்றின்மூலம் தயாரிக்கப்படும் மின்சார உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) (i) தமிழகத்தில் அனல் மின்சாரத்தின்மூலம் தயாரிக்கப்படும் மின்சார உற்பத்தியைப் பெருக்க அரசு கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	திட்டம் செயல்பாட்டுக்கு வரும் நாள்
1	வடசென்னை அனல் மின் திட்டம் கட்டம்-II (2 X 600 மெகாவாட்)	அலகு-I 18-02-2011 அலகு-II 15-08-2011
2	மேட்டூர் அனல் மின் திட்டம் கட்டம்-III (1 X 600 மெகாவாட்)	25-06-2011
3	வடசென்னை-என்.டி.ஈ.சி.எல். (3 X 500 மெகாவாட்) (தமிழ்நாடு மின்சார வாரியமும் என்.டி.பி.சி.-யும் இணைந்து செயல்படுத்தும் கூட்டுத் திட்டம்)	அலகு-I அக்டோபர் 2010 அலகு-II மார்ச் 2011 அலகு-III செப்டம்பர் 2011

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

4	தூத்துக்குடி- என்.டி.பி.எல். (2 x 500 மெகாவாட்) (தமிழ்நாடு மின்சார வாரியமும் என்.எல்.சி. யும் இணைந்து செயல்படுத்தும் கூட்டுத் திட்டம்)	அலகு-I மார்ச் 2012 அலகு-II ஆகஸ்டு 2012
5	உடன்குடி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் 2 x 800 மெகாவாட் (தமிழ்நாடு மின்சார வாரியமும் பி.எச்.இ.எல்.-ம் இணைந்து செயல்படுத்தும் கூட்டுத் திட்டம்)	அலகு-I மார்ச் 2013 அலகு-II செப்டம்பர் 2013

(ii) தமிழகத்தில் நீர் மின்சாரத்தின்மூலம் தயாரிக்கப்படும் மின்சார உற்பத்தியைப் பெருக்க அரசு கீழ்க்கண்ட திட்டங்களைக் செயல்படுத்தி வருகிறது:

தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழகத்தில் பெரும்பான்மையான நீர் மின்சக்தித் திறனைப் பயன்படுத்தி மொத்தம் 2184 மெகா வாட் நிறுவுதிறன் கொண்ட பல்வேறு நீர் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவியுள்ளது.

மீதமுள்ள நீர் மின்சக்தித் திறனைப் பயன்படுத்திச் சிறு புனல் மின் திட்டங்களை நிறுவுவதற்கும் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு காவிரி புனல் மின் திட்டம் மற்றும் பாண்டியாறு-புன்னம்புழா புனல் மின் திட்டம் நிறுவுவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மின்சார வாரியம் செய்து வருகின்றது.

தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம், ஏற்கெனவே இருக்கும் உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி குந்தா நீரேற்றுப் புனல் மின் திட்டம் போன்ற நீரேற்றுப் புனல் மின் திட்டத்தை, மின் கட்டமைப்பின் உச்ச மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும், தரமான தடையில்லா மின்சாரம் வழங்கி தமிழ்நாட்டின் தொடர் வளர்ச்சிக்காகவும் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(iii) தமிழகத்தில் காற்றாலையின்மூலம் தயாரிக்கப்படும் மின்சார உற்பத்தியைப் பெருக்க அரசு கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது :

[2010 ஏப்ரல் 15

மின் உற்பத்தியைப் பெருக்க, தனியார் நிறுவனங்கள் தமிழகத்தில் காற்றாலை நிறுவ முன்வந்தால், அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதில் உற்பத்தியாகும் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பெற்றுக்கொள்ளப்படும்.

14—

பயிற்சி வகுப்புகள்

வினா எண் 107391–திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி வகுப்புகளை நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை —

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கான அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வுக்குப் பயிற்சி அளிக்கும் இரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து “அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்” சென்னை அண்ணா நகரில் தொடங்கப்பட்டது. அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வுக்குச் செல்லும் ஆதி திராவிடர், அருந்ததியர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், பயிற்சியின் தரத்தினை உயர்த்தி அத்தேர்வில் வெற்றிபெறும் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும் இப்பயிற்சி மையத்தின் நோக்கமாகும். 2000 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரையில் அகில இந்திய குடிமைப் பணிகளுக்குத் தமிழக அரசால் சென்னை அண்ணா நகரில் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையத்தின் மூலமாக 239 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணித் தேர்வில், இப்பயிற்சி மையத்தில் முதன்மைத் தேர்வுக்கும்/மாதிரி நேர்காணலுக்கும் பயிற்சி அளிக்கப்பட்ட 46 நபர்கள் அகில

2010 ஏப்ரல் 15]

இந்தியக் குடிமைப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்குச் சென்னையில் மட்டும் அளித்துவரும் பயிற்சியை மதுரை மற்றும் கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில் நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் செங்கல்பட்டு நகரில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கான கருத்துரு தற்போது ஏதுமில்லை.

15—

பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 47631—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், ஆவடத்தூர் ஊராட்சி, கட்டிநாயக்கன்பட்டி நியாய விலைக் கடையைப் பிரித்து சவுரியூர், அண்ணா நகர் பகுதியில் புதிய நியாய விலைக் கடையும், நங்கவள்ளி பேரூராட்சிக் கடையைப் பிரித்துக் காட்டுப்பட்டியில் புதிய கடையும், கோனூர் ஊராட்சி, சமத்துவபுரம் நியாய விலைக் கடையைப் பிரித்துக் கந்தனூருக்குப் புதிய கடையும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், ஆவடத்தூர் ஊராட்சி, கரட்டான்டிப்பட்டி மற்றும் கட்டிநாயக்கன்பட்டி நியாய விலைக் கடைகளிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து 262 குடும்ப அட்டைகளுடன் புதிய பகுதிநேரக் கடை சவுரியூர், அண்ணா நகர் பகுதியில் 24-12-2008 முதலும், நங்கவள்ளி பேரூராட்சிக் கடையிலிருந்து 303 குடும்ப அட்டைகளைப் பிரித்துப் புதிய பகுதிநேரக் கடை காட்டுப்பட்டி பகுதியில் 31-05-2008 முதலும் செயல்பட்டு வருகின்றன. கோனூர் ஊராட்சி சமத்துவபுரம் நியாய விலைக் கடைக்கும் கந்தனூர் பகுதிநேரக் கடைக்கும் இடையே 1.5 கி.மீ. இருக்க வேண்டும் என்ற அரசு நிபந்தனை பூர்த்தியாகாததால் கந்தனூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை.

[2010 ஏப்ரல் 15

16—

நியாய விலைக் கடை

வினா எண் 57520—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, பூதப்பாடி நியாய விலைக் கடையைப் பிரித்துப் புதுவேலிமங்கலத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேட்டூர் வட்டம், கொளத்தூர் வட்டாரம், பூதப்பாடி நியாய விலைக் கடையில் புதுவேலிமங்கலம், தானமூர்த்திகாடு, வெள்ளகாட்டூர், குட்டியகவுண்டனூர் மற்றும் சேவப்பன்காடு பகுதிகளைச் சேர்ந்த *709* குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. பூதப்பாடி நியாய விலைக் கடை *13-06-2008* முதல் புதுவேலிமங்கலத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசுக் கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருவதால் புதுவேலிமங்கலத்திற்குப் புதிதாக நியாய விலைக் கடை அமைக்கத் தேவையில்லை.

17—

பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 61286—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்குழுக்குன்றம் வட்டம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சட்ராஸ் மீனவர் பகுதியில் பகுதி நேரக் கூட்டுறவு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், சட்ராஸ் மீனவர் பகுதியில் 319 குடும்ப அட்டைதாரர்கள் இப்பகுதியிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் செயல்பட்டுவரும் சதுரங்கப்பட்டினம் முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். சதுரங்கப்பட்டினம் நியாய விலைக் கடைக்கும் சட்ராஸ் மீனவர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளதால் அரசு விதிகளின்படி சட்ராஸ் மீனவர் பகுதியில் பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

18—

நியாய விலைக் கடை

வினா எண் 74711—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி பேரூர், 3-வது வார்டு, ஆண்டிக்கொட்டாய் பகுதியில் நியாய விலைக் கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி பேரூர், 3-வது வார்டு, சக்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கீழ் பொம்மியம்பட்டி தெற்கு நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள 658 குடும்ப அட்டைகளில் ஆண்டிக்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த 180 குடும்ப அட்டைகளும் அடங்கும். தாய்க் கடையிலிருந்து ஆண்டிக்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டைகளைப் பிரித்து புதிய பகுதி நேரக் கடை அமைக்கும்பட்சத்தில் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருக்கும். எனவே, தற்போது நடை

முறையிலுள்ள அரசு நிபந்தனைகள் பூர்த்தியாகாத காரணத்தினால் ஆண்டிக்கொட்டாய் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. ஆண்டிக்கொட்டாய் பகுதியில் நியாய விலைக் கடை ஏதுமில்லாத நிலையில் புதிய கட்டடம் கட்ட வேண்டிய கேள்வி எழவில்லை.

19—

புதிய கட்டடம்

வினா எண் 88232–திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, மழையூரில் உள்ள எம்.எம். 577 வெள்ளாளவிடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, மழையூரில் உள்ள எம்.எம். 577 வெள்ளாள விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு மழையூரில் 50 சென்ட் இடம் உள்ளது. இவ்விடத்தில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் சங்கம் தற்போது இயங்கி வருகிறது. கடந்த 7 ஆண்டு காலமாக இச்சங்கத்தின் நிதி நிலைமை நலிவடைந்துள்ளது என்பதால் புதிதாகக் கட்டடம் கட்டப் போதுமான நிதி ஆதாரம் இல்லை. மேலும், இச்சங்கத்தின் செயல்பாடுகள் மேம்பட்டு இலாபகரமாக இயங்கும் நிலை ஏற்படும்பட்சத்தில் புதிய கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

20—

கசிவுநீர்க் குட்டை

வினா எண் 84506–திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில், மண் அரிப்பைத் தடுக்க விவசாய நிலங்களில் கசிவுநீர்க் குட்டை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த நிதியாண்டில் ஓமலூர் ஒன்றியம், பல்பாக்கி கிராமம், ச.எண். 24,25-இல் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிலும், மூங்கில்பாடி கிராமம் ச.எண். 65-இல் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டுதல் திட்டத்தின்கீழ் கசிவுநீர்க் குட்டை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21—

தக்காளி குளிர் பதனக் கிடங்கு

வினா எண் 90792—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில், தக்காளி குளிர் பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேச்சேரியில் தக்காளிக்கென குளிர்பதனக் கிடங்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, ஓமலூர் தொகுதியில் உள்ள தக்காளி சாகுபடியாளர்களும் இதனைப் பயன்படுத்திக் கொண்டு பயனடையலாம் என்பதால் சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் தக்காளி குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

22—

வேளாண்மை விற்பனை முனையம்

வினா எண் 104466–திரு. வை. காவேரி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூரில் வேளாண்மை விற்பனை முனையம் (பேரங்காடி) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்மிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூரில் வேளாண்மை விற்பனை முனையம் (பேரங்காடி) அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மதுரை, கோவை, சென்னை மாவட்டங்களில் விற்பனை முனையங்கள் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

23—

நீதிமன்ற வளாகம்

வினா எண் 3545–திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி நகரில் இயங்கி வரும் நீதிமன்றங்களை ஒரே வளாகத்தின்கீழ் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி நகரில் இயங்கி வரும் நீதிமன்றங்களை ஒரே வளாகத்தின்கீழ் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில் நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

2010 ஏப்ரல் 15]

24—

புதிய கட்டடம்

வினா எண் 30940—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவியில் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவியில் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

25—

புதிய கட்டடம்

வினா எண் 31990—திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூர் நகரில் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூர் நகரில் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீட்டிற்கிணங்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

26—

கூடுதல் கட்டடம்

வினா எண் 34169—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நீதிமன்றத்தைச் சீரமைத்துக் கூடுதல் கட்டடம் கட்டவும், குடிநீர் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நீதிமன்றத்தைச் சீரமைத்துக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

27—

கட்டடம்

வினா எண் 36381—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பார் அசோசியேஷன் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பார் அசோசியேஷன் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை

2010 ஏப்ரல் 15]

உயர்நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

28—

சொந்தக் கட்டடம்

வினா எண் 36383—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

29—

வழக்கறிஞர்கள் ஓய்வறை

வினா எண் 39281—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஓய்வறை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஓய்வறை கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

30—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 54568—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* குளித்தலையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான அறிவிப்பு 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களால் வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 953, உள் (நீதிமன்றம்-3) துறை, நாள் 09-11-2009-ல் ரூ. 410.54 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

31—

மோட்டார் வாகனப் பயிற்சி மையம்

வினா எண் 98296—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

(அ) மானாமதுரை தொகுதியில் மோட்டார் வாகனப் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் மோட்டார் வாகனப் பயிற்சி மையம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

கட்டடம்

வினா எண் 102985—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டிலுள்ள வாணியம்பாடி பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ. 51.96 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறையினரால் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

33—

புதிய பேருந்து வசதி

வினா எண் 103792—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 15

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் இருந்து செம்மாண்டப்பட்டி, சின்ன திருப்பதி, பூசாரிப்பட்டி வழியாக காடையாம்பட்டிக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் ஓமலூர் - செம்மாண்டப்பட்டி (வழி) சின்ன திருப்பதி தடத்தில் தினசரி 62 நடைகளும், ஓமலூர் - சின்ன திருப்பதி (வழி) பூசாரிப்பட்டி வழித்தடத்தில் தினசரி 26 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஓமலூர் - சின்ன திருப்பதி - காடையாம்பட்டி வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் 102, 103-ன் மூலம் முறையே 2, 10 நடைகளும், அது தவிர புறநகர்ப் பேருந்துகள் ஓமலூர், பூசாரிப்பட்டி, காடையாம்பட்டி வழித்தடங்கள் வழியாக தினசரி 40 நடைகளும், அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன.

34—

பேருந்து வசதி

வினா எண் 104006—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, பாபிசெட்டிப்பட்டி வழியாக ஓ15 பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் ஓ14 ஓமலூரிலிருந்து பாபிசெட்டிப்பட்டி, சின்ன திருப்பதி வழியாக மூக்கனூர் வழித்தடத்தில் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், ஓ15 கஞ்சநாயக்கன்பட்டி செல்லும் பேருந்தை பாபிசெட்டிப்பட்டி வழியாக இயக்கினால் தற்போது பேருந்து

2010 ஏப்ரல் 15]

வசதி பெற்று வரும் பயனாளிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். மேலும், பாபிசெட்டிப்பட்டி கிராம மக்களுக்குத் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

35—

பேருந்து வசதி

வினா எண் 104008—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து ஓமலூர், சின்ன நடுப்பட்டி, குருவிரெட்டியூர், தும்பிப்பாடி, நாகலூர் வழியாக தின்னப்பட்டிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் - தின்னப்பட்டி (வழி) பன்னப்பட்டி வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் 6, தடம் எண் 80, தினசரி 68 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழித்தடத்தில் சிக்கனம்பட்டி பேருந்து நிறுத்தத்திலிருந்து 1.0 கி.மீ. தொலைவிலேயே சின்ன நடுப்பட்டி உள்ளது. மேலும், தடம் எண் ஓ10 சேலம் - மாட்டுக்காரன்புதூர், நாச்சினம்பட்டி (வழி) குருவரெட்டியூர், தும்பிப்பாடி, நாகலூர் வழித்தடத்தில் 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இவ்வழித்தடத்தில் குருவரெட்டியூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து சின்ன நடுப்பட்டி என்ற இடம் 1.0 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. அரசு வழிகாட்டுதலின்படி 1.0 கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றவையாகக் கருதப்படும். எனவே, தற்போதுள்ள பகுதிவாரியான பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

36—

தொடர் பேருந்துகள்

வினா எண் 104078—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 15

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் தொடர் பேருந்துகளை புதிதாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடர் பேருந்துகள், பயணிகள் அதிகம் உள்ள வழித்தடங்களில் இயக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. மேட்டூர் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் இயக்கப்படும் வழித்தடப் பேருந்துகளில் சராசரியாக 35% மட்டுமே பயணிகளின் அடர்வு உள்ளது. மேலும், சாலைகளும் தொடர் பேருந்து இலக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. மேட்டூர் வட்டத்திற்குட்பட்ட சாலைகள் குறுகியதாகவும், சிறு, சிறு வளைவுகளுடனும், மலைப்பாங்கான பாதையாகவும் இருப்பதால் தொடர் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

37—

புதிய பேருந்து இயக்கம்

வினா எண் 104106—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி—சென்னம்பட்டி—கொளத்தூர் மாதேஸ்வரன் மலைக்கும் மற்றும் எடப்பாடி—பவானி—பெருந்துறை வழியாக கோவைக்கும் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி—சென்னம்பட்டி—கொளத்தூர் மாதேஸ்வரன் மலை வழித்தடம் ஒரு புறமாநில வழித்தடமாகும். தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கிடையே உள்ள ஒப்பந்தம் கடந்த ஜனவரி 2008 அன்றே முடிவுற்றது. எனவே,

2010 ஏப்ரல் 15]

புதியதாக இரு மாநிலங்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படும்போது இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும் மற்றும் எடப்பாடி—பவானி—பெருந்துறை வழியாக கோயம்புத்தூர் வழித்தடத்தில் உள்ள பகுதிவாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:—

		அரசுப் பேருந்து நடைகள்	தனியார் பேருந்து நடைகள்
1.	எடப்பாடி—சங்ககிரி (வழி) சுண்ணாம்புக்குட்டை	130	34
2.	எடப்பாடி—சங்ககிரி (வழி) கொங்கணாபுரம்	26	48
3.	எடப்பாடி—கொமாரபாளையம்	54	74
4.	சேலம்—கோயம்புத்தூர் (வழி) சங்ககிரி, கொமாரபாளையம் பிரிவு, பவானி, பெருந்துறை	268	-

38—

பேருந்து வசதி

வினா எண் 104166—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராசிபுரம், சீலநாயக்கன்பட்டி, உடையாப்பட்டி மற்றும் வாழப்பாடி, உடையாப்பட்டி—சீலநாயக்கன்பட்டி இவற்றிற்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராசிபுரத்திலிருந்து சீலநாயக்கன்பட்டி வழியாக சேலம் நகரப் பேருந்து நிலையம் வரை ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில் நகரப் பேருந்து வசதியுள்ளது. மற்றும் சேலம் நகரப் பேருந்து நிலையம்—உடையாப்பட்டி தடத்தில் 10

நிமிட இடைவெளியில் நகரப் பேருந்து வசதி உள்ளது. இதே போன்று, வாழப்பாடியிலிருந்து உடையாப்பட்டி வழியாக சேலம் நகரப் பேருந்து நிலையம் வரையிலும், சேலம் நகரப் பேருந்து நிலையம்—சீலநாயக்கன்பட்டி தடத்திலும் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் நகரப் பேருந்து வசதியுள்ளது. சேலம் நகரப் பேருந்து நிலையத்தை மையமாகக் கொண்டு ராசிபுரம் மற்றும் வாழப்பாடி ஆகிய பகுதிகளுக்கு மேற்கண்டவாறு போதிய பேருந்து வசதி செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றது.

39—

பேருந்து வசதி

வினா எண் 104168—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எளம்பிள்ளை—நீலநாயக்கன்பட்டிக்கு (பழைய பேருந்து நிலையம் செல்லாமல்) புறவழிச்சாலை வழியாக பேருந்து வசதி அல்லது வழித்தடம் நீட்டிப்புச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எளம்பிள்ளையிலிருந்து கொண்டலாம்பட்டி புறவழிச்சாலை வழியாக சேலம் பழைய பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், நாமக்கல் மார்க்கமாக இயக்கப்படுகின்ற புறநகர்ப் பேருந்துகள் அனைத்தும் சேலம் புறநகர்ப் பேருந்து நிலையத்திலிருந்து கொண்டலாம்பட்டி புறவழிச்சாலை சீலநாயக்கன்பட்டி வழியாகவே இயக்கப்படுகின்றன. எனவே, தற்போது எளம்பிள்ளையிலிருந்து கொண்டலாம்பட்டி புறவழிச்சாலை வரை நகரப் பேருந்திலும் கொண்டலாம்பட்டி புறவழிச்சாலை நிறுத்தத்திலிருந்து சீலநாயக்கன்பட்டி வரை புறநகர்ப் பேருந்திலும் பயணம் செய்து பயணிகள் தங்களது போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள்.

2010 ஏப்ரல் 15]

40—

பேருந்து வசதி

வினா எண் 104170—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழப்பாடி—அம்மாபேட்டை மற்றும் ஓமலூர்—அஸ்தம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து கன்னங்குறிச்சி அடிவாரத்திற்கு (பழைய பேருந்து நிலையம் செல்லாமல்) வழித்தட நீட்டிப்புச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வாழப்பாடியிலிருந்து அம்மாபேட்டை வழியாக சேலம் நகரப் பேருந்து நிலையம் வரையிலும், சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து அஸ்தம்பட்டி வழியாக கன்னங்குறிச்சி மற்றும் ஏற்காடு அடிவாரத்திற்கும், ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. அதே போன்று, ஓமலூரிலிருந்து ஐந்து ரோடு வழித்தடத்திலும் மற்றும் ஐந்து ரோடு—அஸ்தம்பட்டி வழித்தடத்திலும் 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றது.

41—

புதிய பேருந்து

வினா எண் 104173—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு—கொங்கணாபுரம்—சமுத்திரம்—ஜலகண்டாபுரம்—மேச்சேரி வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 15

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு—கொங்கணாபுரம்—சமுத்திரம்—ஜலகண்டாபுரம்—மேச்சேரி வழித்தடம் புதிய வழித்தடமாகும். அவ்வழித்தடத்தில் தற்போது கீழ்க்கண்டவாறு பகுதிவாரியாகப் பேருந்து வசதியுள்ளது :—

	அரசுப் பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
	நகர்	புறநகர்	நகர்	புறநகர்
1. திருச்செங்கோடு—கொங்கணாபுரம் (வழி) சங்ககிரி	30	14	-	12
2. கொங்கணாபுரம்—ஜலகண்டாபுரம் (வழி) சமுத்திரம்	6	-	-	-
3. ஜலகண்டாபுரம்—மேச்சேரி (வழி) நங்கவள்ளி	5	6	-	12

மேற்படி பகுதிவாரியான பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாக உள்ளதால், தனிப் பேருந்து வசதி ஏற்படுத்திடும் அவசியம் எழவில்லை.

42—

புதிய பேருந்து

வினா எண் 104370—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரிலிருந்து செம்மாண்டப்பட்டி, சின்ன திருப்பதி, பாபிசெட்டிப்பட்டி, பூசாரிப்பட்டி வழியாக தொப்பூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண் ஓ15 ஓமலூர்—தொப்பூர் (வழி) செம்மாண்டப்பட்டி, சின்ன திருப்பதி வழித்தடத்தில் 2 நடைகளும், ஓமலூர்-தொப்பூர் (வழி) கஞ்சநாயக்கன்பட்டி, சந்தனூர், சின்ன திருப்பதி வழித்தடத்தில் 4 நடைகளும், தடம் எண் ஓ1, ஓ9, ஓமலூர்—தொப்பூர் (வழி) பூசாரிப்பட்டி, சின்ன திருப்பதி வழித்தடத்தில் 14 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி வழித்தடங்களில் சந்தனூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து 0.5 கி.மீ. தொலைவில் பாபிசெட்டிப்பட்டி என்ற இடம் உள்ளது. எனினும், ஓ14 பேருந்து ஓமலூர்-மூக்கனூர் வழித்தடத்தில் இயக்கப்படும்போது 3 நடைகள் பாபிசெட்டிப்பட்டி வழியாக இயக்கப்பட்டு வருகின்றது.

43—

பேருந்து வசதி

வினா எண் 104442—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி முதல் சூரமங்கலம் உழவர் சந்தை வரை தினசரி அதிகாலை 3.10 மணிக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக, சேலம் மண்டலம் புறநகர்ப் பேருந்து மேட்டூரில் 3.00, 3.15 மணிக்கு புறப்பட்டு காலை 3.45 மற்றும் 4 மணி அளவில் மேச்சேரி, காமனேரி, 5-வது மைல், 5 ரோடு வழியாக சேலம் வரை இயக்கப்பட்டு வருகின்றது. 5 ரோடு பேருந்து நிறுத்தத்திலிருந்து சூரமங்கலம் உழவர் சந்தைக்கு ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் இரவு நேர நகரப் பேருந்து தற்போது இயக்கப்பட்டு வருகின்றது.

[2010 ஏப்ரல் 15

44—

பேருந்து வசதி

வினா எண் 104443—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி, காமனேரி, 5-வது மைல் மற்றும் தாரமங்கலத்திலிருந்து சூரமங்கலம் உழவர் சந்தை வரை காலை 3 மற்றும் 4 மணிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக புறநகர்ப் பேருந்து மேட்டூரில் 3.00, 3.15 மணிக்குப் புறப்பட்டு காலை 3.45 மற்றும் 4 மணி அளவில் மேச்சேரி, காமனேரி, 5-வது மைல் 5 ரோடு வழியாக சேலம் வரை இயக்கப்பட்டு வருகின்றது. 5 ரோடு பேருந்து நிறுத்தத்திலிருந்து சூரமங்கலம் உழவர் சந்தைக்கு ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் இரவு நேர நகரப் பேருந்து தற்போது இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலப் பேருந்துகள் காலை 4.00, 4.20, 4.30 மணியளவில் தாரமங்கலம்—சேலம் வழி சூரமங்கலம் உழவர் சந்தை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய பேருந்து வசதிகளே அப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் உள்ளன.

45—

கூடுதல் பேருந்து

வினா எண் 104887—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து சென்னைக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையன்றும் கூடுதல் பேருந்துகள் (மிதவைப் பேருந்து) இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலப் பேருந்துகள் சேலம்—சென்னை வழித்தடத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும் பொது மக்களின் போக்குவரத்து நெரிசலுக்கு ஏற்ப சாதாரண கூடுதல் பேருந்துகளும், விரைவுப் பேருந்துகளும் மற்றும் மிதவைப் பேருந்துகளும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.

46—

ஓட்டுநர் உரிமம்

வினா எண் 105825—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி மாணவ, மாணவியருக்குக் கல்லூரியிலேயே ஓட்டுநர் பயிற்சி அளித்து உரிமம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது கல்லூரிகளில் பழகுநர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளிக்க கல்லூரிகள் முன்வந்தால் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி உரிமம், மத்திய மோட்டார் வாகனச் சட்டத்திற்குட்பட்டு வழங்கலாம்.

47—

புதிய நகரப் பேருந்து

வினா எண் 108279—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூர்—கொளத்தூர், மேட்டுபளையூர், தெலுங்கானூர், காவேரிபுரம், சத்தியா நகர், கோவிந்தபாடி மற்றும் செட்டிப்பட்டி வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக சேலம் மண்டல நகரப் பேருந்துகள்மூலம் கீழ்க்கண்டவாறு கோரிக்கை வழித்தடத்தில் உள்ள மக்களுக்குப் பயன்படும் வகையில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:

தடம் எண் 6—மேட்டூர்—செட்டிப்பட்டி (வழி) காவேரிபுரம், சத்தியா நகர், கோவிந்தபாடி—14 நடைகள்.

6ஏ—மேட்டூர்—காரைக்காடு (வழி) காவேரிபுரம், சத்தியா நகர், கோவிந்தபாடி—12 நடைகள்

18—மேட்டூர்—செட்டிப்பட்டி (வழி) கோவிந்தபாடி—14 நடைகள்

மேட்டூர்—கிழக்கு காவேரிபுரம் (வழி) தெலுங்கானூர்—2 நடைகள்

35. மேட்டூர்—கோட்டையூர் (வழி) தெலுங்கானூர்—4 நடைகள்

இதுவே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது.

48—

நகரப் பேருந்து வசதி

வினா எண் 108280—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 ஏப்ரல் 15]

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர்—கொளத்தூர், அய்யம்புதூர், தார்க்காடு, கத்திரிப்பட்டி, கோரப்பள்ளம், கோவிந்தபாடி, செட்டிப்பட்டி வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம்மூலம் இயக்கப்படும் நகரப் பேருந்துகள் விவரம் பின்வருமாறு :

தடம் எண் 7	மேட்டூர்—நீதிபுரம் (வழி) அய்யம்புதூர், தார்க்காடு	14 நடைகள்
தடம் எண் 7பி	மேட்டூர்—நீதிபுரம் (வழி) கொளத்தூர், தார்க்காடு, அய்யம்புதூர்	12 நடைகள்
தடம் எண் 18	மேட்டூர்—செட்டிப்பட்டி (வழி) தார்க்காடு, கத்திரிப்பட்டி, கோவிந்தபாடி	10 நடைகள்

இதுவே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது.

49—

பேருந்து வசதி

வினா எண் 108960—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து கன்னங்குறிச்சி வரை பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 5சி பேருந்து, சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து கன்னங்குறிச்சி (வழி) 5 ரோடு, அஸ்தம்பட்டி என தினசரி 30 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் வகையில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

50—

சிறப்புக் கட்டண வார்டுகள்

வினா எண் 101350—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்புக் கட்டண வார்டுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 500 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகச் செயல்படுகிறது. அங்கு சிறப்புக் கட்டண வார்டுகள் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

இரத்தப் பரிசோதனைக் கூடம்

வினா எண் 110821—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டட வளாகத்தில் இரத்த வங்கி, இரத்த பரிசோதனைக் கூடம் மற்றும் சுருள்படம் எடுக்கும் மையம் ஆகியவற்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் தீவிர அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டட வளாகத்தில் இரத்த வங்கி, இரத்த பரிசோதனைக் கூடம் மற்றும் சுருள்படம் எடுக்கும் மையம் ஆகியவற்றிற்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

52—

ஆலைகள் அமைக்கும் திட்டம்

வினா எண் 40135—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் உணவு பதப்படுத்தும் ஆலை, வாழைப்பழ பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் உணவு பதப்படுத்தும் ஆலை, வாழைப்பழ பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, மேற்படி ஆலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

53—

எத்தனால் தயாரிக்கும் தொழில்

வினா எண் 40137—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 ஏப்ரல் 15

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சர்க்கரைச் சோளத் தட்டையிலிருந்து எத்தனால் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சர்க்கரைச் சோளத் தட்டையிலிருந்து எத்தனால் தயாரிக்கும் தொழில் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

54—

மாம்பழச் சாறு பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் 68967—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் மாம்பழம் உற்பத்தியாவதால், பழச் சாறு எடுத்து பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் மாம்பழச் சாறு எடுத்து பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2010 ஏப்ரல் 15]

55—

மெத்தைத் தொழிற்சாலை

வினா எண் 71241—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் கழிவுப் பஞ்சுகளால் மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் கழிவுப் பஞ்சுகளால் மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, இப்பகுதியில் மேற்படி தொழிற்சாலை துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

56—

செங்கல் சூளை

வினா எண் 71335—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் செங்கல் சூளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் செங்கல் சூளை தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, செங்கல் சூளை தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

57—

வாசனைத் திரவிய தொழிற்கூடம்

வினா எண் 79381—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை பகுதியில் வாசனைத் திரவிய தொழிற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை பகுதியில் வாசனைத் திரவிய தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

58—

வாசனைத் திரவிய தொழிற்சாலை

வினா எண் 87824—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மல்லிகைப்பூ வாசனைத் திரவிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயிரிடப்படும் மல்லிகை மலர்கள் பெருமளவு உள்ளூர்ப் பயன்பாடு மற்றும் வெளி மாவட்ட/மாநில விற்பனைக்கும் செல்வதால் இம்மாவட்டத்தில் வாசனைத் திரவிய தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, மல்லிகைப் பூ வாசனைத் திரவிய தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

59—

எண்ணெய் அரைவை ஆலை

வினா எண் 92585—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் சூரியகாந்தி எண்ணெய் அரைவை ஆலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் எண்ணெய் அரைவைக்குத் தேவையான அளவு சூரியகாந்தி அதிகம் பயிரிடப்படுவது இல்லை. ஆகவே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் சூரியகாந்தி எண்ணெய் அரைவை ஆலை அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2010 ஏப்ரல் 15

60—

தொழிற்சாலை

வினா எண் 97655—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, திருவரங்கத்தில் ஊரகத் தொழில் துறை சார்பில் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் வட்டாரத்தில் அரசு சார்பில் தொழிற்சாலை துவங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

61—

தக்காளி பழரசத் தொழிற்சாலை

வினா எண் 98250—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் மாம்பழக்கூழ் மற்றும் தக்காளிப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதியில் மாம்பழக்கூழ் மற்றும் தக்காளிப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள்

2010 ஏப்ரல் 15]

இல்லை. எனவே, மேற்படி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

62—

தொழில் முனைவோர் ஊக்க மையம்

வினா எண் 98303—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் தொழில் முனைவோர் ஊக்க மையம் மற்றும் தொழில் தகவல் மையம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் தொழில் முனைவோர் ஊக்க மையம் மற்றும் தொழில் தகவல் மையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, மையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

63—

கடனுதவி

வினா எண் 98304—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் நல்லெண்ணெய் தயாரிக்கும் தொழில் துவக்க அரசு கடனுதவி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில், நல்லெண்ணெய் தயாரிக்கும் தொழில் துவக்கக் கடனுதவி வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

64—

செயற்கை வைரக் கல் தொழிற்சாலை

வினா எண் 98305—திரு. ம குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் செயற்கை வைரக் கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா—

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத்தில் செயற்கை வைரக் கல் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதில்லை. மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் செயற்கை வைரக் கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

65—

முந்திரிப் பழச் சாறு தொழிற்சாலை

வினா எண் 98306—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

(அ) சிவகங்கை மாவட்டத்தில் முந்திரிப் பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத்தில் முந்திரிப் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, அங்கு முந்திரிப் பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

66—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 103699—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி அல்லது தூத்துக்குடியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் தென் மாவட்டங்களில் ஒன்றான திருநெல்வேலி மாவட்டத்தில், ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டு மாநிலத் திட்டக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆதலால், மேலும் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரியைத் தூத்துக்குடியில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்சமயம் எதுவுமில்லை.

[2010 ஏப்ரல் 15

67—

பட்டயப் பயிற்சித் திட்டம்

வினா எண் 104149—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புரத்தில் கால்நடை அறிவியல் பற்றிய பயிற்சி அளிக்க பட்டய அளவில் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமப்புரத்தில் கால்நடை அறிவியல் பற்றிய பயிற்சி அளிக்கும் பட்டய அளவிலான பயிற்சித் திட்டங்கள் எதுவும் தற்போது தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் அளிக்கப்படவில்லை.

68—

தண்ணீர்த் தீர்வை

வினா எண் 57180—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டத்தில் திருமூர்த்தி மற்றும் அமராவதி பாசன விவசாயிகளின் தண்ணீர்த் தீர்வையினை மறுசீரமைப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 223, வருவாய் [வ.நி.1(1)], துறை நாள் 07-07-2009-ன்படி நில வரி வசூல் செய்யும் முறை எளிமைப்படுத்துதல் மற்றும் நில வரியைத் திருத்தி அமைத்தல் தொடர்பாக, நில வரி சீர்த்திருத்தக் குழு அமைத்து, ஆணைகள்

2010 ஏப்ரல் 15]

வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆணையில் முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் தலைவராகவும், நில நிருவாக ஆணையர்-சென்னை(1), சென்னை நில வரித் திட்ட அலுவலர், நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறை (2), இணை ஆணையர், (நிவாரணம் (ம) மறுவாழ்வு), வருவாய் நிருவாகத் துறை, சென்னை (3) ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு குழு அமைத்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட குழுவினர் தற்போதுள்ள நிலவரி வசூல் முறையை எளிமைப்படுத்துதல், இதில் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் தல வரி, தல மேல் வரி, தண்ணீர்த் தீர்வை, மேம்பாட்டு வரி மற்றும் நில வரி ஆகியவைமீது ஆராய்ந்து அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட குழுவின் அறிக்கை பெறப்பட்ட பின்னர் அமராவதி மற்றும் திருமூர்த்தி பாசன விவசாயிகள் தண்ணீர்த் தீர்வையினை மறு சீரமைப்பு செய்யலாம்.

69—

சார் பதிவாளர் அலுவலகம்

வினா எண் 98349—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, வீரகனூரை மையமாக வைத்து துணை சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீரகனூர் கிராமம் கெங்கவல்லியிலிருந்து 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. மேற்படி வீரகனூர் கிராமம் முக்கிய வணிகப் பகுதியாகவும், எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சியடையும் பகுதியாக இருப்பினும் தற்போது வீரகனூரின் அருகிலுள்ள 11 கிராமங்களிலிருந்து ஆண்டுக்கு சராசரியாக, 846 ஆவணங்கள் மட்டுமே பதிவாகின்றன. ஆண்டு சராசரி

வருவாய் ரூ. 28.27 இலட்சமாக உள்ளது. ஆனால், ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்க ஆண்டுக்குத் தொடரும் செலவு ரூ. 14.00 இலட்சமும், தொடராச் செலவு ரூ. 11.00 இலட்சமும் ஆகும். எனவே, ஆவணப் பதிவுகள் மற்றும் வருவாய் குறைவாக உள்ளதால், தற்போது வீரகனூரில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

70—

படகுத் துறை அமைத்தல்

வினா எண் 106223—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம், சமளாபுரம் மற்றும் கண்ணம்பாக்கம் பகுதிகளில் படகுத் துறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம், சமளாபுரம் மற்றும் கண்ணம்பாக்கம் பகுதிகளில் படகுத் துறை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

71—

பத்திரப் பதிவுத் துறை பணியிடங்கள்

வினா எண் 108190—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பத்திரப் பதிவுத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பதிவுத் துறையில் காலியாக உள்ள அனைத்துக் காலியிடப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுப் பெரும் அளவில் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சிய பணியிடங்களையும் விரைவாக நிரப்புவதற்கு ஏதுவாக துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

72—

விசைத்தறிப் பூங்கா

வினா எண் 88601—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் விசைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

விசைத்தறி வளாகம்

வினா எண் 108935—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் மற்றும் பனப்பாக்கம் பகுதிகளில் விசைத்தறி வளாகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் மற்றும் பனப்பாக்கம் பகுதியில் விசைத்தறி வளாகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

74—

தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகம்

வினா எண் 103046—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் தொழிலாளர் நலத் துறை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை தொழிலாளர் உதவி ஆய்வரின் ஆட்சி எல்லையினுள் அமைந்துள்ள மானாமதுரை தாலுகாவில், மிகக் குறைந்த அளவே நிறுவனங்கள் உள்ளதால் மானாமதுரைக்கு என தனியாக ஒரு தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகம் அமைக்கத் தேவையில்லை.

(ஆ) எழாது.

75—

மாத நிவாரணத் தொகை

வினா எண் 107921—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

(அ) வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக வேலை கிடைக்காத பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் பட்டதாரி பார்வையற்றவர்களுக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்பற்றோர் மாத நிவாரணத் தொகையை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) அரசாணை நிலை எண் 734, சமூக நலத் துறை, நாள் 25-09-1981 வாயிலாக வேலைவாய்ப்பற்றோருக்காக நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் கண் பார்வை இழந்தவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டபோது, பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 200/-ம் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 250/-ம் மற்றும் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 300/-ம் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன. கடந்த 6-4-2005 அன்று முதல் இந்த உதவித்தொகை 50 சதவீதம் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

(ஆ) அரசாணை நிலை எண் 51, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 6-4-2005 வாயிலாக, கண் பார்வையற்றவர்களில் பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கும் குறைவாக கல்வித் தகுதியுடையவர்களுக்கு மாதம் ரூ. 300/-ம் புதுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு/பட்டப்படிப்புக்கு கீழாகத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 375/-ம் மற்றும் பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 450/-ம் வழங்க ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு, உயர்த்தப்பட்ட விகிதத்தில் கடந்த 4 ஆண்டுகளாக உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

76—

சொந்தக் கட்டடம்

வினா எண் 108124—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக இத்துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குக் கட்டடம் ஏதும் கட்டும் உத்தேசம் இல்லை. வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அளவில் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அல்லது அரசுக்குச் சொந்தமான காலி இடங்களில் இட ஒதுக்கீடு செய்வது குறித்து பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பதில் அளிக்கும் நிலை எழவில்லை.

77—

விரிவுபடுத்துதல்

வினா எண் 47185—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் சிறுபான்மையினருக்காக நடத்தப்படும் பள்ளியை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி கல்வி மாவட்டம், வால்பாறையில் சிறுபான்மையினருக்காக தூய

2010 ஏப்ரல் 15]

இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 6-10 வகுப்புகள் நிதியுதவியுடனும், 11-12 வகுப்புகள் சுயநிதி அடிப்படையிலும் செயல்பட்டு வருகின்றன தற்போது, மேற்படி பள்ளியின் மேல்நிலைப் பிரிவுகளை நிதி உதவிபெறும் பிரிவுகளாக மாற்றக் கோருகின்றனர். சுயநிதிப் பிரிவுகள் துவங்கும்பொழுது இதற்கென அரசிடமிருந்து எந்தவிதமான நிதி உதவி, கூடுதல் பணியிடம் எதுவும் கோரமாட்டோம் என்ற உறுதிமொழி அளிக்கப்பட்டதன் அடிப்படையிலே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1973 பிரிவு 14A-ல் 1991-92-ம் ஆண்டிற்குப் பிறகு துவக்கப்படும்/தரமுயர்த்தப்படும் பள்ளிகள்/ பாடப் பிரிவுகளுக்கு எவ்வித மானியமும் வழங்கப்படமாட்டாது என கொள்கை முடிவு எடுக்கப்பட்டு உரிய சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

78—

தரம் உயர்த்துதல்

வினா எண் 88651—திரு. வை. காவேரி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி உயர்நிலைப் பள்ளிக்கான பொதுமக்கள் பங்குத் தொகை ரூ. 2.00 இலட்சம் செலுத்தப்படவில்லை. மேலும் இப்பள்ளிக்கு அருகிலேயே 8 கி.மீ. தூரத்திற்குள் அரசு மேல்நிலைப் பள்ளி, எடப்பாடி (ஆண்கள் & பெண்கள்) (5 கி.மீ.) அரசு மேல்நிலைப்பள்ளி, கோனேரிப்பட்டி (3 கி.மீ) மற்றும் அரசு

மேல்நிலைப் பள்ளி சித்தூர் (6 கி.மீ) ஆகிய 4 மேல்நிலைப் பள்ளிகள் உள்ள நிலையிலும் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவது தொடர்பாக வகுக்கப்பட்ட நெறிமுறைகள் நிறைவேற்றப்படாத நிலையிலும், இக்கோரிக்கையை இக்கல்வியாண்டில் (2010-2011) அரசு பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

79—

வேளாண்மை பாடத் திட்ட வகுப்புகள்

வினா எண் 107277—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, வளத்தூர், பரதராமி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண்மை பாடத் திட்ட வகுப்புகள் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

80—

பொது நூலகம்

வினா எண் 108419—திரு. பெ. மோகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, பசுவந்தணை கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, பசுவந்தனை கிராமத்தில் 23-02-1997 முதல் ஊர்ப்புர நூலகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

81—

முழு வரி விலக்கு

வினா எண் 108083—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு முழு வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிநா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

தற்போது இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 23560—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் ஊராட்சி, காட்டு பங்களா சாலை, ஜவ்வாது மலை வழியாக சத்திரம் வரை செல்லும் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வனக் கோட்டத்தைச் சார்ந்ததாகும். இச்சாலையானது ஆண்டியப்பனூர் முதல் காவலூர் வரை வசந்தாபுரம் வழியாகச் செல்லும் சாலையாகும். இச்சாலை பூங்குளம் காப்புக்காட்டில் அமைந்துள்ளது. இச்சாலை சுமார் 20 கி.மீ. நீளமும் 5.40 மீட்டர் அகலமும் கொண்டதாகும். இதில் காவலூரிலிருந்து வசந்தாபுரம் வரை செல்லும் 6.20 கி.மீ. நீளமுள்ள சாலை 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.77 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. வசந்தாபுரத்திலிருந்து கம்புக்குடி வரை செல்லும் சாலையின் இடைப்பட்ட பகுதியிலிருந்து ஆண்டியப்பனூர் வரை செல்லும் சாலையில் 11 கி.மீ. நீளத்திற்கு சாலை பராமரிக்கப்பட வேண்டும். இதில் 7.50 கி.மீ. சாலை 2008-2009 ஆம் வருடம் ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ரூ.89.95 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 3.50 கி.மீட்டரில், 3 கி.மீ. தூர சாலைக்கு மேம்பாட்டு வேலை செய்ய பாரத் நிர்மான் திட்டத்தின் கீழ் ரூ.99.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு, 7-10-2009 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டு. அதில் குறைந்த விலை விகிதம் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி, 26-11-2009 அன்று முதன்மை தலைமை வனப் பாதுகாவலரால் அனுமதிக்கப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2009-2010 ஆம் நிதியாண்டில், இப்பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

33—

ஊதிய உயர்வு

வினா எண் 29436—திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு ரப்பர் கழகத்தின் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, பஞ்சப் படி, மிகை ஊதியம் ஆகியவற்றை விரைந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?"

2010 ஏப்ரல் 15]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

அரசு ரப்பர் கழக பணியாளர்களுக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2009-ன் அடிப்படையில் 1-1-2006 முதல் (நிதிப் பயன் 1-1-2007 முதல்) சம்பளம் மற்றும் அகவிலைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

84—

மரம் வளர்த்தல்

வினா எண் 86529—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கோட்ட மேட்டுப்பட்டி, பூலாவரி ஏரியின் உபரி நீர் செல்லும் இருபுறங்களிலும் மரம் வளர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கோட்ட மேட்டுப்பட்டி, பூலாவரி ஏரியின் உபரி நீர் செல்லும் இருபுறங்களிலும் போதிய இடம் இல்லாததால் மரம் வளர்க்க இயலவில்லை.

85—

மரம் வளர்த்தல்

வினா எண் 102565—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வைப்பார் ஊராட்சி, பெரியசாமிபுரம் ஊராட்சி, பட்டினமருதூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் கடலோரத்தில் வனத் துறைமூலம் மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, வைப்பார் ஊராட்சியில் 15.40 எக்டேர் பரப்பளவில் 47,437 மரக்கன்றுகளும் மற்றும் பெரியசாமிபுரம் ஊராட்சியில் 15.00 எக்டேர் பரப்பளவில் 46,205 மரக்கன்றுகளும் கொண்ட கடலோர சவுக்குத் தோட்டம் 2005-2006 ஆம் நிதியாண்டில் சுனாமி மறு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடவு செய்யப்பட்டுள்ளன. பட்டினமருதூர் ஊராட்சி பகுதியிலுள்ள கடலோரப் பகுதிகளில் தற்போது மரங்கள் வளர்க்க/நடவு செய்ய தகுதியான நிலங்கள் ஏதும் இல்லை. எனவே அப்பகுதிகளில் வனத் துறைமூலம் மரம் வளர்க்க தற்போது வாய்ப்பில்லை.

86—

மின் வேலி அமைத்தல்

வினா எண் 105629—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, அரகடவு, சீள்குழி, மேல்பாலியூர், மொட்டியூர், பில்லூர் ஆகிய பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கடவு பள்ளி பகலில் மட்டுமே இயங்கும் பள்ளியாகும். உறைவிடப் பள்ளி அல்ல. இங்கு மொத்தமாக 15 மாணவர்கள் மட்டுமே கல்வி கற்கின்றனர். குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள இப்பள்ளிகளுக்கு மின் வேலி அமைக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

சீங்குழி பள்ளி, வனப் பகுதிக்கு வெளியே, பகலில் மட்டும் இயங்கும் பள்ளியாகும். இப்பள்ளியானது குடியிருப்புகளுக்கு

2010 ஏப்ரல் 15]

அருகில் உள்ளதால் வன உயிரினங்களால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை. இருபுறமும் குடியிருப்புகளும் ஒருபுறம் பள்ளியின் சுற்றுச் சுவரும், ஒருபுறம் தனியார் விவசாய நிலத்தின் வேலி அமைந்துள்ள பகுதியாகும். மேலும் ஊராட்சி மூலமாக சுற்றுச் சுவர் கட்டப்பட உள்ளது. எனவே இங்கு மின் வேலி அமைக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

மேல்பாலியூர் பள்ளியானது அடிக்கடி வாகனப் போக்குவரத்துள்ள தோலாம்பாளயம் பட்டிச் சாலையின் ஓரத்தில் அமைந்துள்ளது. பள்ளிக்கு முன்புறம் மேற்படி சாலையும் பள்ளிக்கு பின்புறம் யானை போன்ற வன உயிரினங்கள் ஏறி வராத அளவுக்கு பள்ளமும் மற்ற இருபுறமும் திறந்த வெளியாகவும் உள்ளது. இப்பள்ளிக்கு ஊராட்சி மூலமாகவோ, கல்வித் துறை மூலமாகவோ, சுற்றுச் சுவர் கட்ட அத்துறைகளின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இப்பள்ளியின் மாணவர்கள் தங்கும் விடுதி, ஊரின் குடியிருப்புகளுக்கு நடுவே அமைந்துள்ளதால் அதனைச் சுற்றி மின் வேலி அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை.

மொட்டியூரில் பால்வாடிக் கூடம் மட்டும் இயங்குகின்றது. இப்பள்ளியும் இவ்வூர் குடியிருப்புகளின் நடுவே அமைந்துள்ளதால் பாதுகாப்புக்காக மின் வேலி அமைக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

பொதுவாக சிறு குழந்தைகள் தங்கி கல்வி பயின்று வரும் இப்பள்ளிகளைச் சுற்றி அதிக மின்சாரத் திறனுடைய சூரிய ஒளி மின் வேலி அமைப்பது குழந்தைகளின் பாதுகாப்புக்கு இடையூறாக அமைய வாய்ப்புள்ளது. அவ்வாறான பள்ளிகளில் பள்ளிக் கட்டடத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் அப்பள்ளிகளை நடத்தும் துறைகளின் மூலமாகக் கட்டப்படுவதே ஏற்புடையதாகும்.

பில்லூரில் உள்ள பள்ளியானது அணைக்கட்டுக்கு அருகில் குடியிருப்பு, காவலர் நிலையம் மற்றும் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட வன நிலத்தில் பாதுகாப்பாக இயங்கி வருகிறது. யானை மற்றும் பிற வன உயிரினங்களால் இப்பள்ளிக்கு எவ்வித இடையூறும் இதுகாறும் ஏற்படவில்லை. எனவே இப்பள்ளியைச் சுற்றி சூரிய ஒளியில் இயங்கும் மின் வேலி அமைக்கத் தேவையில்லை.

[2010 ஏப்ரல் 15

87—

புதிய சாலை

வினா எண் 110160—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து கிழவன்கோவில் வழியாக வருசநாடு கம்பத்து மொட்டை கொடிக்குளம் வரையுள்ள வனப் பகுதியில் புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து கிழவன்கோவில் வழியாக வருசநாடு கம்பத்து மொட்டை கொடிக்குளம் வரையுள்ள சாலையானது ராஜபாளையம் முதல் ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, கொடிக்குளம் குடிசை மற்றும் வருசநாடு வழியாக தேனி சென்றடையும் சாலையாகும். இதில் ராஜபாளையம் முதல் வத்திராயிருப்பு வரையிலும், கொடிக்குளம் குடிசை முதல் வருசநாடு வழியாக தேனி வரையிலும் செல்லும் சாலை வனமல்லாத பகுதியில் வருகிறது. இப்பகுதியில் ஏற்கெனவே சாலை வசதி உள்ளது. வத்திராயிருப்பு மலையடிவாரத்திலிருந்து கொடிக்குளம் குடிசை வரை உள்ள பாதை காப்புக்காட்டில் வருகிறது. இதன் மொத்த நீளம் 8.30 கி.மீ. ஆகும். இதில் 7 கி.மீ. தூரம் ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில்கள் சரணாலயத்திலும் 1.30 கி.மீ. தூரம் தேனி வனக் கோட்டப் பகுதியிலும் வருகிறது. மேற்படி 8.3 கி.மீ. தூரம் உள்ள சாலை காப்புக் காட்டில் புதிதாக அமைக்கப்பட வேண்டிய சாலையாகும். காப்புக் காடு அறிவிக்கையில் இச்சாலைக்கு அனுமதிக்கப்பட்ட பாதை உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை.

2. காப்புக் காட்டில் புதிதாக சாலை அமைக்கப்படவேண்டும் என்றால் வனப் (பாதுகாப்புச்) சட்டம் 1980-ன்படி மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். இச்சாலை சரணாலயப் பகுதியில் வருவதால் மத்திய வன உயிரின வாரியத்தின் பரிந்துரை பெற்று உச்ச நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற வேண்டும். மேலும் சாலை அமைக்கப்பட இருக்கும் பகுதியில் மரங்கள் வெட்டி

2010 ஏப்ரல் 15]

அப்புறப்படுத்தப்பட வேண்டுமானால் "மத்திய அதிகாரக் குழுவின்" மூலம் உச்ச நீதிமன்றத்தில், வாதுரை தாக்கல் செய்து முன் அனுமதி பெற வேண்டும்.

3. மேற்படி சாலை அமைக்க, மத்திய அரசு மற்றும் உச்ச நீதி மன்றத்தின் அனுமதி பெற, முதலில் மத்திய வன உயிரின வாரியத்தின் முன், மேற்கண்ட கருத்துரு வைக்கப்பட்டது. அவ்வாரியம் மேற்படி சாலையை 6 மீ. அகலத்திற்கு மிகாமல் அமைக்க மத்திய அரசு கடித எண் F.N.6-49/2007-WL-1, நாள் 04-07-2008-ல் பரிந்துரை செய்துள்ளது. சாலை அமையவுள்ள சரணாலயப் பகுதியில் சுமார் 620 எண்ணிக்கை கொண்ட இயற்கையாக வளர்ந்துள்ள மரங்களை அப்புறப்படுத்த மத்திய அதிகாரக் குழுவின் மூலமாக உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற வாதுரை தயார் செய்து மத்திய அதிகாரக் குழுவிடம் வைக்கப்பட்டுள்ளது. மத்திய அதிகாரக் குழு இது தொடர்பாக புதுடெல்லியில் 26-11-2008-ல் கூட்டம் நடத்தியுள்ளது. இக்கூட்டத்தில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் மற்றும் தலைமை வனப் பாதுகாவலர் (வன உயிரினம்) ஆகியோர் கலந்து கொண்டு இச்சாலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ளனர். இது குறித்து மத்திய அதிகாரக் குழுவினால் மேற்கொண்டு கோரப்பட்டுள்ள விவரங்கள் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் எண் டி.எஸ்.1/4786/2004, நாள் 05-08-2009-ல் மத்திய அதிகாரக் குழு புது டெல்லிக்கு அனுப்பப்பட்டு, குழுவின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது. குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்நேர்வில் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

88—

சூரிய மின் வேலி

வினா எண் 110170—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனப் பகுதிகளில் வாழும் மக்களின் நலன் கருதி வனப் பகுதிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் சூரிய மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வனப் பகுதிகளில் வாழும் மக்களின் நலன் கருதி வனப் பகுதிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் ஆண்டுதோறும் சூரிய மின் வேலி அமைக்கப்பட்டு வருகிறது. 2006-2007ஆம் ஆண்டில் ரூ.424 இலட்சம் செலவில் 262.50 கி.மீ. தூரத்திற்கும் 2007-2008ஆம் ஆண்டில் ரூ.505.20 இலட்சம் செலவில் 315.75 கி.மீ. தூரத்திற்கும், 2008-2009ஆம் ஆண்டில் ரூ.529 இலட்சம் செலவில் 331.25 கி.மீ. தூரத்திற்கும் சூரிய மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.319.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 198 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கும் பணி நடைபெற்று வ நகிறது.

89—

மான்கள் சரணாலயம்

வினா எண் 113181—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் கவருமலை பகுதியில் மான்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம் கவருமலை பகுதியில் மான்கள் சரணாலயம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

தென்னை மரங்களை ஏலம் விடுதல்

வினா எண் 113662—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

(அ) ஈரோடு மாவட்டம் சென்னிமலை வெள்ளோடு பறவைகள் சரணாலயம் பகுதியிலுள்ள தென்னை மரங்களை ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு, வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில் மொத்தம் 15 தென்னை மரங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலும் காய்ப்பு அதிகமில்லை. மேலும் இவற்றை ஏலம் விடும்பட்சத்தில் வெளியாட்கள் நடமாட்டம் அதிகரிக்கக் கூடும். அது பறவைகளுக்கு இடையூறாக அமையும் என்பதால் இவற்றை வர்த்தக ரீதியாக ஏலமிடும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

91—

மீன்களை ஏலம் விடுதல்

வினா எண் 113663—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை, வெள்ளோடு பறவைகள் சரணாலயம் குளத்திலுள்ள மீன்களை ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு, வெள்ளோடு பறவைகள் சரணாலயம் பகுதியிலுள்ள குளத்தில் உள்ள மீன்கள் பறவைகளுக்கு உணவாக பயன்பட்டு வருவதால் மீன்களை ஏலம் விடும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[2010 ஏப்ரல் 15

92—

கூடுதல் ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 107661—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்தில் தொழில் ஆசிரியர்களை கூடுதலாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டில் தற்போது சிறுவருக்கான அரசினர் சிறப்பு இல்லம் செயல்பட்டு வருகிறது. அவ்வில்லத்திற்கு கூடுதலாக தொழில் ஆசிரியர்களை நியமனம் செய்யும் உத்தேசம் தற்போது அரசிடம் ஏதுமில்லை.

93—

கட்டடம்

வினா எண் 3396—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, மாதானம் ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்கான நிலம் கையகப்படுத்துவதில் ஏற்படும் காலதாமதத்தினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவது குறித்து அரசு அறியுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நாகை மாவட்டம் மாதானம் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் தாட்கோவால் கட்டிமுடிக்கப்பட்டு 9-6-2008-ல் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டு அந்நாள் முதல் பள்ளிப் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு பள்ளி மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

2010 ஏப்ரல் 15]

94—

மின் விளக்கு வசதி

வினா எண் 40070—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவிகள் விடுதியில் கூடுதலாக மின் விளக்கு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை மாணவியர் விடுதியில் இருந்து குண்டு பல்புகள் நீக்கம் செய்யப்பட்டு, டியூப் லைட்டுகள் போடப்பட்டுள்ளது. மேற்கண்ட விடுதியில் மாணவிகள் தங்கும் அறை வராண்டா, மாடிப் படி ஆகிய எல்லா இடங்களிலும் 38 டியூப் லைட்டுகளும், 5 குண்டு பல்புகளும் 2 'U' வடிவ பல்புகளும் தற்போது போடப்பட்டுள்ளன.

95—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 55084—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், சோமந்துரை, தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், [illegible]த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, அங்கலக்குறிச்சி, ஜல்லிப்பட்டி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாட்கோமூலம் தொழிற்பயிற்சி வழங்க மட்டுமே அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கென தேர்ந்த பயிற்சி மையம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி மையங்கள் உருவாக்கி அதில் பயிற்சி வழங்கும் நடைமுறை தற்போது செயலாக்கத்தில் இல்லை.

96—

சுற்றுச் சுவர்

வினா எண் 62318—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையிலுள்ள அரசினர் மாணவியர் விடுதிகளை பழுதுபார்த்து சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளித்தலை மாணவியர் விடுதிக்கு ஏற்கெனவே சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. விடுதியில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், வருடாந்திர பழுதுபார்ப்புப் பணிகள்மூலம் அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து சீர் செய்யப்பட்டு வருகிறது.

97—

கடனுதவி

வினா எண் 107562—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 15]

சேலம் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும், சிறு, குறு விவசாயிகள் மீன் தொட்டிகள் அமைத்து, மீன் வளர்க்க மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

1. விவசாயிகள் மீன் தொட்டிகள் (மீன் வளர்ப்புக் குளங்கள்) அமைத்து மீன் வளர்ப்பு மேற்கொண்டால் ஒரு ஹெக்டேருக்கு ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) மானியமாக வழங்கப்படும்.

2. சேலம் மாவட்டத்தில், அனைத்து ஊராட்சிகளிலும், சிறு, குறு விவசாயிகள் மீன் தொட்டிகள் அமைத்து மீன்வளர்க்க மானியத்துடன் கடன் பெறும் பொருட்டு, மேட்டூர் அணை (உள்நாட்டு மீன்வளம்), மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தினை அணுகி விவரம் பெற்றுக்கொள்ளலாம்.

3. விவசாயிகள், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மீன் வளர்ப்போராக தம்மைப் பதிவு செய்து கொண்டு, அரசால் வழங்கப்படும் ஒரு ஹெக்டேருக்கு அதிகபட்சமாக ரூ.60,000/- வரை மானியத் தொகையினைப் பெற்றுப் பயனடையலாம்.

98—

மீன்வள மேம்பாடு

வினா எண் 108666—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன் வளத்தைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணை நீர்த்தேக்கத்தில் மீன்வளத்தை மேம்படுத்தும் பொருட்டு கடந்த பல வருடங்களாக உயர்வகை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பெருரக கெண்டை இனங்களான கட்லா, ரோகு, மிர்கால் மீன் விரலிகள் 25,00,000 அளவில் இருப்பு செய்யப்பட்டுள்ளன. தமிழக அரசும், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியமும் இணைந்து நடப்பாண்டில் 92,08,000 அளவில் நன்கு வளர்ந்த மீன் விரலிகளை (8-10 செ.மீ. நீளம் வளர்ந்தவை) இருப்பு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 10-12-2009 வரை 25,71,300 நன்கு வளர்ந்த மீன்விரலிகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. தமிழக அரசும், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியமும் இணைந்து நடப்பாண்டிலேயே மேட்டூர் அணை நீர்த்தேக்கத்தில் மீன் வளத்தை மேம்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், அழிந்துவரும் மீன் இனங்களான கல்பாசு, சேல்கெண்டை மற்றும் வெண்கெண்டை மீன் இனங்களின் வளம் குன்றாமல் பாதுகாக்கும்பொருட்டு அவற்றின் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு காவிரி ஆற்றுப் பகுதிகளில் தொடர்ந்து இருப்பு செய்யப்படும்.

99—

ஓலைப்பாய் தயாரித்தல்

வினா எண் 87228—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பகுதியில் பனை ஓலையின்மூலம் ஓலைப்பாய் தயாரிக்கும் தொழில் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில், மானாமதுரை பகுதியில் பனை ஓலைமூலம் ஓலைப்பாய் தயாரிக்கும் தொழில்கள் துவங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 ஏப்ரல் 15]
100—

உற்பத்தி நிலையம்

வினா எண் 106167—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தோல் பொருட்கள் உற்பத்தி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு நகரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தோல் பொருட்கள் உற்பத்தி நிலையம் துவக்க தற்போது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த மாண்புமிகு துணை முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் அறிக்கையை அளித்து முடித்துவிடட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கையை அளித்து முடித்துவிடட்டும்,

2010 ஏப்ரல் 15]

100—

உற்பத்தி நிலையம்

வினா எண் 106167—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தோல் பொருட்கள் உற்பத்தி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு நகரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தோல் பொருட்கள் உற்பத்தி நிலையம் துவக்க தற்போது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த மாண்புமிகு துணை முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் அறிக்கையை அளித்து முடித்துவிடட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கையை அளித்து முடித்துவிடட்டும்,

[பேரவைத் தலைவர்] [2010 ஏப்ரல் 15

உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கை அளித்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன் இல்லையா? உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கையை எப்போது வேண்டுமானாலும் அளிக்கலாம், உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைப் படித்தளிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை இயல்பான மழை அளவான 990.1 மி.மீ. மழைக்குப் பதிலாக சராசரியாக இரண்டு சதவிகிதம் அதிகமாக—அதாவது 1010.4 மி.மீ. மழை பெய்துள்ளது. இருப்பினும், ஒருசில மாவட்டங்களில் பெய்த மழையின் அளவு குறைவாக உள்ளது. 2010 ஆம் ஆண்டிலும் ஜனவரி முதல் இதுவரை தமிழ்நாட்டில் பெய்ய வேண்டிய மழை, இயல்பான மழை அளவைவிடக் குறைவாகவே பெய்துள்ளது. கடுமையான கோடை வெயில் காரணமாக ஒருசில மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, அதுபற்றி ஆய்வு செய்வதற்காக 14-4-2010 அன்று காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நானும், தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளக்கூடிய வகையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும்பொருட்டு, பின்வரும் எட்டு மாவட்டங்களுக்கு முதற்கட்டமாக மொத்தம் ரூபாய் 14 கோடி நிதியை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; திருவள்ளூர் மாவட்டம் - ஒரு கோடி ரூபாய்; தருமபுரி மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; சேலம் மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; விழுப்புரம் மாவட்டம் - ஒரு கோடி ரூபாய்; கிருஷ்ணகிரி மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; வேலூர் மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்.

2010 ஏப்ரல் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

முற்பகல் 10-45

இந்த நிதியைக் கொண்டு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், தூர் வாரி கிணறுகளை ஆழப்படுத்துதல், பம்பு செட்டுகளைப் பழுதுபார்த்தல் முதலிய பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இது தவிர, திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் தலா இரண்டு கோடி ரூபாய் வீதம், மொத்தம் நான்கு கோடி ரூபாய் நிதி 12-04-2010 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனையும் சேர்த்து 10 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 18 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குடிநீர்த் தட்டுப்பாடு தொடர்பாக பிற மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-04-2010 அன்று நம்முடைய சட்டப் பேரவையில் சட்டத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்களை மிகவும் அவதூறாகவும், கொச்சைப்படுத்துகின்ற வகையிலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் காலையில்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

முற்பகல் 10-45

இந்த நிதியைக் கொண்டு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், தூர் வாரி கிணறுகளை ஆழப்படுத்துதல், பம்பு செட்டுகளைப் பழுதுபார்த்தல் முதலிய பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இது தவிர, திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் தலா இரண்டு கோடி ரூபாய் வீதம், மொத்தம் நான்கு கோடி ரூபாய் நிதி 12-04-2010 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனையும் சேர்த்து 10 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 18 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குடிநீர்த் தட்டுப்பாடு தொடர்பாக பிற மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-04-2010 அன்று நம்முடைய சட்டப் பேரவையில் சட்டத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்களை மிகவும் அவதூறாகவும், கொச்சைப்படுத்துகின்ற வகையிலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் காலையில்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதைப்பற்றி சொல்லிக்கொள்கிறேன்; represent செய்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் ரெக்கார்டு ஆகிக்கொண்டிருக்கிறதே? நீங்கள் சொன்னது அவ்வளவும் ரெக்கார்டு ஆகின்றது. பிறகு நீங்கள் "சொல்லிக்கொள்கிறேன், சொல்லிக்கொள்கிறேன்" என்றால் என்ன அர்த்தம்? அதாவது, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதைப் பற்றி மீண்டும் பேசினீர்கள் என்றால் என்ன அர்த்தம்? என்னிடம் கேட்டிருக்கலாம். இன்றைக்கு எடுத்துக்கொள்ளமுடியுமா என்று கேட்டுக்கொண்டு எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுதே தாங்கள் ஒரு தீர்ப்பையும் வழங்கியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்களும், அதேபோல மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் பேசிய அந்த வார்த்தைகள் ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன் (குறுக்கீடுகள்)

(உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் தமது இருக்கையை விட்டு வந்து மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரை நோக்கி கையை நீட்டிப் பேசினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. கலைராஜன். (குறுக்கீடுகள்) திரு. வி.பி. கலைராஜன், இருக்கையைவிட்டு இங்கு வராதீர்கள். திரு. டி. ஜெயக்குமார், திரு. வி.பி. கலைராஜன் அவர்களை அழைத்துக்கொண்டு போங்கள். இருக்கையைவிட்டு வராதீர்கள். இங்கு வருவது நல்லதல்ல.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருப்பது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அது என்னவென்று பார்த்துவிட்டு நான் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியிலிருந்து ஓர் உறுப்பினர் சொல்லியாகிவிட்டது, அவ்வளவுதான். மாண்புமிகு திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

2010 ஏப்ரல் 15]

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் கடுமையான சில வார்த்தைகளைப் பேசியதால் அதனுடைய விளைவாக (குறுக்கீடுகள்) நான் சொல்வதை, சொல்லியதற்குப் பின்னர் நீங்கள் மறுக்கலாம். அந்த வார்த்தைகளுக்குப் பதிலாக மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களும் ஒரு வார்த்தையைச் சொன்னதால், இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து, அவை நீக்கப்பட்டன. இந்த அவையில் இரண்டு பேர் பேசிய வார்த்தைகளும் அன்றைக்கே நீக்கப்பட்டன. அன்றைக்கே நீக்கப்பட்ட காரணத்தால், அதை இன்றையதினம் எடுத்துக் கூறுவதற்கு எந்த நியாயமும் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே? அதைப்பற்றித்தானே? (குறுக்கீடுகள்) சரி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்)

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-4-2010 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கரும்புக்கு மத்திய அரசு நிர்ணயித்த ஆதார விலை 740 ரூபாயைவிட ஒரு பைசாகூட... (குறுக்கீடு)

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரியாமல்தான் கேட்கிறேன்; ஓர் உறுப்பினர் அவருடைய இருக்கையைவிட்டு எழுந்து வந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து கையைக் காட்டி மிரட்டிப் பேசுகிறார். இதைப் பார்த்துக்கொண்டு நீங்கள் சும்மா

இருக்கிறீர்கள் என்றால், எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? இது இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயல். அப்படி நடந்துகொள்கிற அந்த உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விஷயமாக (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். உறுப்பினருடைய நடவடிக்கையைப் பார்த்து நான் எச்சரித்தாகிவிட்டது. இதற்கு மேல் நான் வேறு நடவடிக்கைதான் எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது, அமைச்சர் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: இதில் உங்கள் தீர்ப்பை நான் எதிர்பார்க்கின்றேன். மீண்டும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடரக்கூடாது. எனவே, இறுதியாக இதன்மீது உங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கின்றேன். அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோருகிறேன்.

முற்பகல் 10-50

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லியாகிவிட்டது இல்லையா? (குறுக்கீடு) அதுவும் கரும்பு விலை சம்பந்தப்பட்டதுதானே?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை. பில் எல்லாம் இருக்கிறது என்னிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கரும்பு விலை சம்பந்தப்பட்டதுதானே?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை, ஒரு நிமிடம் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) என்னிடம் காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) 9-15 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு, பிறகு நாங்கள் உரிய நடவடிக்கை எடுப்போம். பொறுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்தவுடனே எடுக்க

2010 ஏப்ரல் 15] [பேரவைத் தலைவர்]

வேண்டும் என்று இல்லை. நானும் அதைப் பார்க்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருப்பது ஆய்வில் இருக்கிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நான் raise பண்ண வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே எழுத்துமூலமாகக் கொடுத்ததற்குப் பிறகு (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: Hon'ble Speaker Sir, நான் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். அந்தப் பிரச்சினையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதுகுறித்து உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன் என்று சொல்லி நான் அமர்ந்திருக்கிறேன். தீர்ப்பு என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், அவர் தனது இருக்கையை விட்டு வந்தார். வந்தவரை நான் எச்சரித்து அனுப்பியிருக்கிறேன். இனி அதுமாதிரி தொடரக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இதை மீறினார் என்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் காலையில் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் raise பண்ணினால் போதும். (குறுக்கீடு) இன்னும் என்ன பதிவு பண்ண வேண்டும்? (குறுக்கீடு) என்னிடம்தான் கொடுத்திருக்கிறீர்கள் இல்லையா? (குறுக்கீடு) என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்தது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இன்று காலை 9-15 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நான் ஆய்வில் இருக்கிறது

2010 ஏப்ரல் 15]

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் கடுமையான சில வார்த்தைகளைப் பேசியதால் அதனுடைய விளைவாக (குறுக்கீடுகள்) நான் சொல்வதை, சொல்லியதற்குப் பின்னர் நீங்கள் மறுக்கலாம். அந்த வார்த்தைகளுக்குப் பதிலாக மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களும் ஒரு வார்த்தையைச் சொன்னதால், இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து, அவை நீக்கப்பட்டன. இந்த அவையில் இரண்டு பேர் பேசிய வார்த்தைகளும் அன்றைக்கே நீக்கப்பட்டன. அன்றைக்கே நீக்கப்பட்ட காரணத்தால், அதை இன்றையதினம் எடுத்துக் கூறுவதற்கு எந்த நியாயமும் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே? அதைப்பற்றித்தானே? (குறுக்கீடுகள்) சரி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்)

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-4-2010 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கரும்புக்கு மத்திய அரசு நிர்ணயித்த ஆதார விலை 740 ரூபாயைவிட ஒரு பைசாகூட... (குறுக்கீடு)

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரியாமல்தான் கேட்கிறேன்; ஓர் உறுப்பினர் அவருடைய இருக்கையைவிட்டு எழுந்து வந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து கையைக் காட்டி மிரட்டிப் பேசுகிறார். இதைப் பார்த்துக்கொண்டு நீங்கள் சும்மா

இருக்கிறீர்கள் என்றால், எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? இது இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயல். அப்படி நடந்துகொள்கிற அந்த உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விஷயமாக (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். உறுப்பினருடைய நடவடிக்கையைப் பார்த்து நான் எச்சரித்தாகிவிட்டது. இதற்கு மேல் நான் வேறு நடவடிக்கைதான் எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது, அமைச்சர் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: இதில் உங்கள் தீர்ப்பை நான் எதிர்பார்க்கின்றேன். மீண்டும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடரக்கூடாது. எனவே, இறுதியாக இதன்மீது உங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கின்றேன். அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோருகிறேன்.

முற்பகல் 10-50

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லியாகிவிட்டது இல்லையா? (குறுக்கீடு) அதுவும் கரும்பு விலை சம்பந்தப்பட்டதுதானே?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை. பில் எல்லாம் இருக்கிறது என்னிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கரும்பு விலை சம்பந்தப்பட்டதுதானே?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை, ஒரு நிமிடம் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) என்னிடம் காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) 9-15 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு, பிறகு நாங்கள் உரிய நடவடிக்கை எடுப்போம். பொறுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்தவுடனே எடுக்க

2010 ஏப்ரல் 15] [பேரவைத் தலைவர்]

வேண்டும் என்று இல்லை. நானும் அதைப் பார்க்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருப்பது ஆய்வில் இருக்கிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *நான்* raise *பண்ண வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஏற்கெனவே எழுத்துமூலமாகக் கொடுத்ததற்குப் பிறகு (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.*

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: Hon'ble Speaker Sir, *நான் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். அந்தப் பிரச்சினையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதுகுறித்து உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன் என்று சொல்லி நான் அமர்ந்திருக்கிறேன். தீர்ப்பு என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், அவர் தனது இருக்கையை விட்டு வந்தார். வந்தவரை நான் எச்சரித்து அனுப்பியிருக்கிறேன். இனி அதுமாதிரி தொடரக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இதை மீறினார் என்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)*

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், நீங்கள் காலையில் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள்* raise *பண்ணினால் போதும். (குறுக்கீடு) இன்னும் என்ன பதிவு பண்ண வேண்டும்? (குறுக்கீடு) என்னிடம்தான் கொடுத்திருக்கிறீர்கள் இல்லையா? (குறுக்கீடு) என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்தது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இன்று காலை 9-15 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நான் ஆய்வில் இருக்கிறது*

என்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும் நீங்கள் சபையில் எழுந்து கேட்டுக் கொண்டிருந்தால் என்ன பண்ணுவது? நான் அனுமதி கொடுத்ததற்குப் பிறகு இது சம்பந்தமாக நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) அடுத்த matter எடுக்க வேண்டும். (குறுக்கீடு) இப்படி எழுந்து நின்றால் நான் எப்படி சபையை நடத்த முடியும்? (குறுக்கீடு) நான் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்ப சொன்னதற்குப் பிறகும், நீங்கள் நின்றீர்கள் என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் ஒரு சந்தேகத்தை இங்கே எழுப்புகிறார். எழுப்புவதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் காலையில்தான் அவர்கள் இதைத் தங்களிடம் எழுதிக் கொடுத்தார் என்றீர்கள். அவர் என்ன எழுதிக் கொடுத்தாரோ அதைப் பற்றி விளக்கம் சொல்வதற்கு அமைச்சருக்கு அவகாசம் வேண்டும். அது அமைச்சருக்குப் போக வேண்டும். அமைச்சரும் அவையில் இல்லை. அவர் எழுதிக் கொடுத்ததை வேளாண்மைத் துறை அமைச்சரிடம் கொடுங்கள். அவகாசம் எடுத்து நாளைக்கு வந்து அவர் பதில் சொல்லட்டும். கேள்வி கேட்கிற உரிமை உங்களுக்கு உண்டு. நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. சந்தேகத்தைக் கேட்பதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடு) நீங்களே சொல்லுங்கள். நீங்கள் அமைச்சராக இருந்தவர். என்ன கேட்கிறார்கள் என்று அமைச்சருக்குத் தெரிய வேண்டாமா? இரண்டாவது, அமைச்சர் இங்கே இல்லை. ஆகையினால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அமைச்சரிடம் அதற்கான விளக்கங்களைக் கேட்டுவிட்டு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ எடுப்போம். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு பின்னர் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

(இ) சென்னை, அஷோக் நகரில் நடைபெற்ற கொலை, கொள்ளைச் சம்பவக் குற்றவாளிகள் கைது

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஷோக் நகரில் முன்னாள் TAMIN Chairman சரவணன் அவர்கள்

2010 ஏப்ரல் 15] [திரு. டி. சுதர்சனம்]

படுகொலை செய்யப்பட்டார்கள். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் படுகொலை செய்யப்பட்டார்கள். 17 மாத காலம் அந்த வழக்கில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. இன்று...

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இதற்கு மட்டும் பதில் ரெடியாக இருக்கிறதா?

திரு. டி. சுதர்சனம்: இன்று அந்த வழக்கில் (குறுக்கீடு) நம்முடைய தமிழகக் காவல் துறை சிறப்பாகப் பணியாற்றி (குறுக்கீடுகள்) உங்களுக்கு என்ன இருக்கிறது இதைப் பற்றி? (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதற்கு இப்போது எழுந்து நிற்கிறீர்கள்? காரணம் இல்லாமல் நீங்கள் ஏன் எழுந்து நின்று சத்தம் போடுகிறீர்கள்? (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் என்ன சப்ஜெக்ட் சொல்லப் போகிறார் என்று நான் இப்போதுதான் கேட்கிறேன். அவர் இதுவரைக்கும் (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன் அவர்கள் கொடுத்திருக்கிற முன்னறிவிப்பு என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அவர் என்ன சொல்ல வருகிறார் என்று கேட்டுவிட்டு மேற்கொண்டு நான் சொல்வேன். அதற்குள்ளே நான் சொல்ல வேண்டியதை எல்லாம் நீங்களே சொல்ல ஆரம்பித்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்)

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பற்றி எந்தத் தவறான செய்தியையும் இங்கே குறிப்பிடவில்லை. (குறுக்கீடு)

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அவர் என்ன சொல்ல வருகிறார் என்று கேட்டுவிட்டு நான் என்னுடைய பதிலைச் சொல்வேன். ஏன் நீங்கள் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 15

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய கொறடா திரு. செங்கோட்டையன் அவர்கள் ஏற்கெனவே எழுப்பப்பட்ட பிரச்சினையினுடைய தொடர்ச்சியாக, இந்த அவையில் அன்று நடந்த பிரச்சினையினுடைய தொடர்ச்சியாக, ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, அது அவைத் தலைவருடைய ஆய்வில் இருக்கிற காரணத்தால், அதை நீங்கள் எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். ஆக அந்த வேண்டுகோள், திரு. செங்கோட்டையன் பேசக்கூடாது என்பதல்ல. (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சினை ஆய்வில் இருக்கிறது. ஆய்வு செய்ததற்குப் பின்னர் பேச அனுமதிக்கப்படுவார் என்பது கருத்து. திரு. சுதர்சனம் சொல்கிறபோது ஒரு புதிய பிரச்சினையை எழுப்புவதாகத் தலைவர் அவர்கள் கருதுகிறார்கள். புதிய பிரச்சினை என்றால், அது ஏற்கெனவே அவருடைய கவனத்திற்கு வராத காரணத்தால் அதைச் சொல்ல அனுமதிக்கிறார். அதுகூட, ஒவ்வொரு கட்சியின் தலைவர் என்ற முறையில் அவர்களுக்கு மட்டும் இப்படிப்பட்ட சில சலுகைகளை அவைத் தலைவர் வழங்குவது வழக்கம். அந்த முறையில் உங்களுக்கிடையே உள்ள மாறுபாட்டை வலியுறுத்தாமல், உடன்பாட்டு அடிப்படையிலே புதிய கருத்தாக இருந்தால் தலைவரிடத்திலே தெரிவிக்கலாம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் கேள்வி நேரம் முடிந்தவுடன் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைக் குறித்து, zero hour-ல் எழுப்பலாம் என்பது நடைமுறை மரபு. அதாவது, நாங்கள் பிரச்சினைகளைச் சொல்ல அனுமதி மறுத்தீர்கள், பரவாயில்லை. ஆனால் அவர் பாராட்டு விழா நடத்துவதற்கு ஆரம்பித்திருக்கிறார். உங்களுக்கே தெரியும் எதற்காக அவர் பாராட்ட முனைகிறார் என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் தலைவரைப் புகழ்ந்து பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அது தவறென்று நாங்கள் சொன்னோமா? (குறுக்கீடுகள்) அவர் சொல்வார். பின்னாலே அவர் சொல்ல வேண்டிய கருத்துகளுக்கு அவர் வருவார். அவர் என்ன சொல்வார் என்று தெரியாமல், நீங்களாகக் கற்பனை செய்து கொண்டால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே அமைச்சர்களாக இருந்தவர்களெல்லாம் இங்கே இருக்கிறீர்கள். பாராட்டு விழா என்பது சாதாரணமாக நடப்பதல்ல. சொல்லி வைத்துக்கொண்டே zero hour-லே வரிசை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை பாராட்டிய காலங்களெல்லாம் உண்டு. அதுபோல உங்களுக்குத் தெரிந்த குறைகளை மட்டுமே சொல்லவேண்டியது என்பது சட்டமன்ற மரபு அல்ல. அவர் நடைபெற்றிருக்கிற நிறைகளைப் பற்றி எடுத்துச் சொல்வதில் என்ன தவறு? அதை அவர் சொல்லட்டும். (குறுக்கீடு)

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் நடத்த வேண்டியிருக்கிறது. கொஞ்சம் அமைதியாக எனக்கு co-operate பண்ணுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மைக் செயல்படுகிறது. பேசுங்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மைக் செயல்படுகிறது. பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பேசுகிறபோது அவர் உங்களிடத்திலே 'mention' செய்வதாகச் சொன்னார். அவையின் மரபுபடி zero hour-ன்போது எங்களுடைய பிரச்சினைகள், தமிழ்நாட்டிலிருக்கிற பிரச்சினைகள், எங்கள் கட்சியின்மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வது அவசியம். கரும்பிற்கு உரிய விலை உங்கள் ஆட்சியிலே கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் சொல்கிறபோது, அதைக்கூட எங்களால் 'mention' பண்ணமுடியவில்லை என்று சொன்னால், எதைத்தான் சட்டமன்றத்திலே எங்களால் 'mention' செய்யமுடியும் என்பதை உங்கள் மூலமாக நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். அதற்கும் வாய்ப்புக் கொடுக்கவில்லையென்றால், எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எழுத்து மூலமாக என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் எந்த சப்ஜெக்டைச் சொல்ல வருகிறீர்கள் என்பது அதில் இருக்கிறது. அது ஆய்விலே இருக்கிறது முடிவை நாளைக்கு பார்த்துக்

கொள்வோம். அவர் சொன்னதற்குப் பிறகு பேசுங்கள் என்று சொல்கிறேன். திரு. சுதர்சனம் அவர்கள் சொல்ல வருவது புதிய விஷயம். அவர் புதியதாக ஒரு விஷயம் சொல்ல வருகிறார். அதைச் சொல்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். என்னுடைய ஆய்வுக்கு முன்னாலேயே நீங்கள் அதைப் பேசி இந்த அவையிலே பதிய வைக்கவேண்டுமென்று நினைப்பது முடியாத காரியம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பேரவைத் தலைவருடைய முடிவுக்கு இந்த அவை கட்டுப்பட்டது. அந்த முடிவுக்கு கட்டுப்பட்ட இந்த அவையில் பேரவைத் தலைவர் "ஒரு பிரச்சினையை ஆய்வில் வைத்திருக்கிறேன்" என்று சொன்னால், எத்தனை நாள் வேண்டுமானாலும் ஆய்வில் வைத்திருக்கலாம். ஆனால் அதன் முடிவைக் கேட்கின்ற உரிமை உங்களுக்கு உண்டு. எப்போது எழுப்பலாம் என்றால், குறிப்பிட்ட நாட்களுக்குப் பின்னால் கேட்கலாமே தவிர, இன்றைக்கே முடிவு என்ன என்று கேட்டால், ஆய்வு நடத்துவதற்கு முன்னர் அந்த முடிவைச் சொல்ல முடியாது. ஆய்வு நடத்தி இந்த அவையில் அவைத் தலைவர் அந்த முடிவை அறிவிப்பார்.

முற்பகல் *11-00*

(இ) சென்னை, அஷோக் நகரில் நடைபெற்ற கொலை, கொள்ளைச் சம்பவக் குற்றவாளிகள் கைது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) நான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கத் தயாராக இல்லை. திரு. டி. சுதர்சனம், பேசுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே எழுந்து நின்று அனுமதி கேட்டேன். நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் சப்ஜெக்டுக்குப் போங்கள், அதை விடுங்கள். (குறுக்கீடு) சப்ஜெக்டுக்குள் போங்கள்.

திரு. டி. சுதர்சனம்: என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு. அதை மறுப்பதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கோ அல்லது எதிர்க்கட்சி கொறடாவிற்கோ,

என்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும் நீங்கள் சபையில் எழுந்து கேட்டுக் கொண்டிருந்தால் என்ன பண்ணுவது? நான் அனுமதி கொடுத்ததற்குப் பிறகு இது சம்பந்தமாக நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) அடுத்த matter எடுக்க வேண்டும். (குறுக்கீடு) இப்படி எழுந்து நின்றால் நான் எப்படி சபையை நடத்த முடியும்? (குறுக்கீடு) நான் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்ப சொன்னதற்குப் பிறகும், நீங்கள் நின்றீர்கள் என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் ஒரு சந்தேகத்தை இங்கே எழுப்புகிறார். எழுப்புவதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் காலையில்தான் அவர்கள் இதைத் தங்களிடம் எழுதிக் கொடுத்தார் என்றீர்கள். அவர் என்ன எழுதிக் கொடுத்தாரோ அதைப் பற்றி விளக்கம் சொல்வதற்கு அமைச்சருக்கு அவகாசம் வேண்டும். அது அமைச்சருக்குப் போக வேண்டும். அமைச்சரும் அவையில் இல்லை. அவர் எழுதிக் கொடுத்ததை வேளாண்மைத் துறை அமைச்சரிடம் கொடுங்கள். அவகாசம் எடுத்து நாளைக்கு வந்து அவர் பதில் சொல்லட்டும். கேள்வி கேட்கிற உரிமை உங்களுக்கு உண்டு. நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. சந்தேகத்தைக் கேட்பதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடு) நீங்களே சொல்லுங்கள். நீங்கள் அமைச்சராக இருந்தவர். என்ன கேட்கிறார்கள் என்று அமைச்சருக்குத் தெரிய வேண்டாமா? இரண்டாவது, அமைச்சர் இங்கே இல்லை. ஆகையினால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அமைச்சரிடம் அதற்கான விளக்கங்களைக் கேட்டுவிட்டு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ எடுப்போம். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு பின்னர் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

(இ) சென்னை, அஷோக் நகரில் நடைபெற்ற கொலை, கொள்ளைச் சம்பவக் குற்றவாளிகள் கைது

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஷோக் நகரில் முன்னாள் TAMIN Chairman சரவணன் அவர்கள்

2010 ஏப்ரல் 15] [திரு. டி. சுதர்சனம்]

படுகொலை செய்யப்பட்டார்கள். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் படுகொலை செய்யப்பட்டார்கள். 17 மாத காலம் அந்த வழக்கில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. இன்று...

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இதற்கு மட்டும் பதில் ரெடியாக இருக்கிறதா?

திரு. டி. சுதர்சனம்: இன்று அந்த வழக்கில் (குறுக்கீடு) நம்முடைய தமிழகக் காவல் துறை சிறப்பாகப் பணியாற்றி (குறுக்கீடுகள்) உங்களுக்கு என்ன இருக்கிறது இதைப் பற்றி? (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதற்கு இப்போது எழுந்து நிற்கிறீர்கள்? காரணம் இல்லாமல் நீங்கள் ஏன் எழுந்து நின்று சத்தம் போடுகிறீர்கள்? (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் என்ன சப்ஜெக்ட் சொல்லப் போகிறார் என்று நான் இப்போதுதான் கேட்கிறேன். அவர் இதுவரைக்கும் (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன் அவர்கள் கொடுத்திருக்கிற முன்னறிவிப்பு என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அவர் என்ன சொல்ல வருகிறார் என்று கேட்டுவிட்டு மேற்கொண்டு நான் சொல்வேன். அதற்குள்ளே நான் சொல்ல வேண்டியதை எல்லாம் நீங்களே சொல்ல ஆரம்பித்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்)

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பற்றி எந்தத் தவறான செய்தியையும் இங்கே குறிப்பிடவில்லை. (குறுக்கீடு)

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அவர் என்ன சொல்ல வருகிறார் என்று கேட்டுவிட்டு நான் என்னுடைய பதிலைச் சொல்வேன். ஏன் நீங்கள் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 15

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள அரசு ரேஷன் கிடங்குகளில் பணிபுரியும் தினக் கூலி சுமைத் தூக்கும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்து சம்பள உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1446, திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மளிகைப் பொருட்கள் அனைத்தையும் நியாய விலைக் கடைகள்மூலம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1463, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துக் கூட்டுறவுக் கடைகளிலும் அளவு மற்றும் பொருட்களின் தரம் காக்க, எல்லாப் பொருட்களையும் பாக்கெட்டுகளில் அடைத்து விநியோகம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1473, திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி பேரூராட்சியில் இயங்கி வரும் கீழ்புவனகிரி 1 ஆம் எண் கடையில் 1550 குடும்ப அட்டைகள் உள்ள நிலையில் நுகர்வோர் உணவுப் பொருட்கள் வாங்கமுடியாமல் சிரமப்படுகின்ற காரணத்தால் பகுதிநேர கடை பிரித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1479, திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து கூட்டுறவுக் கடைகளிலும் மண்ணெண்ணெய் விநியோகத்தில் நடைபெறும் அளவுக் குறைபாட்டைத் தவிர்க்கும் பொருட்டு, ட்ரம்மூலம் வழங்குதலை தவிர்த்து பங்க் அமைத்து விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1502, திரு. கோ. அரி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1819, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது விநியோகப் பொருட்களின் கடத்தலைத் தடுக்க கடுமையான சட்டம் மற்றும் உறுதியான நிர்வாக அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1831, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் நகரத்தில் 1,500 கார்டுகளுக்கும் மேலே உள்ள ரேஷன் கடைகளைப் பிரித்து பகுதிவாரியாகக் கடைகள் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1916, திருமதி இளமதி சுப்பிரமணியன், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2339, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் வேலூர் வட்டம் உட்பட அனைத்து வட்டங்களிலும் வேலைக்கு வெளியூர் போனவர்களின் கார்டுகளையும், உள்ளூரிலேயே பணிக்குச் சென்றவர்களுடைய வீடுகளுக்குச் சோதனைக்குச் சென்றபோது ஆட்கள் இல்லையென ஆயிரக்கணக்கான உண்மையான ரேஷன் கார்டுகளை ரத்து செய்து, ரேஷன் வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2362, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

2010 ஏப்ரல் 15]

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் ரேஷன் கடை ஊழியர்கள் அனைவரையும் தகுதி அடிப்படையில் பணி நிரந்தரம் செய்து, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2402, திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளுக்குப் பொருட்கள் அனுப்புகின்ற தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மின் தராசு அமைத்து பொருள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3183, திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளுக்கு ரேஷன் பொருட்களைக் கூடுதலாக வழங்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3211, திரு. ந. கணபதி.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் உள்ள தைலாபுரம் மதுரா ஈச்சங்காடு கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3879, திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளில் பொருள் வாங்கும் மக்களுக்கு வெயில், மழைக் காலங்களில் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க மேற்கூரை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4428, திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் காய்கறிகளின் விலையேற்றத்தைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4681, திரு. எஸ். ஜெயபால், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4720, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் தரமான அரிசி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5356, திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வெளிச்சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலையேற்றம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதைத் தடுக்கும்பொருட்டு, கூட்டுறவுப் பண்டகசாலைகள்மூலம் குறைந்த விலைக்கு உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6489, திரு. ஞா. செந்தமிழன்.

திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6780, திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ அரிசி முழுமையாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7204, திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் சில தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால், கட்டட உரிமையாளர்கள் கடையைக் காலி செய்யச் சொல்லி வற்புறுத்துவதால், நீண்ட தூரம் உள்ள வேறு இடங்களுக்கு இடம்பெயரும்போது, பொது மக்கள் அவதியுறுகிறார்கள். இதனைப் போக்கிட அனைத்து நியாய விலைக் கடைகளையும் அரசுக் கட்டடத்தில் இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8281, திருமதி ஜி. லதா, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8914, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளுக்கும் குடும்ப அட்டைக்கு ஏற்ப உணவுப் பொருட்கள் ஒதுக்கீடு செய்வது இல்லை. பாதி அளவில்தான் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எனவே, இந்தக் குறையைப் போக்க முழு அளவில் ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8982, திருமதி ஆர். பிரேமா.

திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் புதியதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு உடனடியாக மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9262, திரு. து. ரவிக்குமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9573, திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராயபுரம் தொகுதியில் புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்குக் குடும்ப அட்டை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *10145*, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் முன்பேர வர்த்தகத்தைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *9680*, திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதி, பெருந்துறையில் தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *10213*, திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய குடும்ப அட்டை பெற்றவர்களுக்கு உடனே மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11312, திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட 56-வது டிவிஷன் நியாய விலைக் கடை எண் 6-ல், 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ளதால் பொது மக்களின் நலன் கருதி பிரித்து, புதிய நியாய விலைக் கடை துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10383, திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உணவு விடுதிகளில் நியாயமில்லாது விலைகளைக் கூட்டியுள்ளதைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *10488*, திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு நகராட்சி, எட்டிக் கடைப் பகுதியில் புதிய ரேஷன் கடை ஏற்படுத்துவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11406, திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளில் கோதுமை அதிக அளவில் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11580, திரு. எஸ். ராஜகுமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12636, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையைக் குறைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13550, திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில், 6-வது வார்டில் உள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,957,38,84,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,59,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

@ 401 முதல் 461 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்குரிய விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 25 நிமிடங்கள்.

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையோர்களே, உங்கள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அறியாமை, தெளியாமை, புரியாமை, விளங்காமையில் சிக்கித் தவித்து, சிந்தை சிதறி, கந்தல் நிலையில் பந்துபோல உருட்டி விடப்பட்ட, எந்தையராம், முந்தையராம், நம் மூதாதையர், யார் அடிமை, யாருக்கு அடிமை, ஏன் அடிமை, எதற்கு அடிமை, எத்தனை நாள் அடிமை என்பதுகூடத் தெரியாமல் திண்ணைப் பேச்சிலே விண்ணைப் பிளந்து, மண்ணை வார்த்து, மெய் பொத்தி, கை பொத்தி, வாய் பொத்தி, உண்ண உணவு இல்லாமல், உடுக்க உடை இல்லாமல், இருக்க இடம் இல்லாமல் தவித்துக்கொண்டிருந்த தமிழக மக்களையும், தடுமாறிக் கொண்டிருந்த தமிழகத்தையும் காப்பாற்ற நான் இருக்கிறேன் என்று தோன்றியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி).

@ 462 முதல் 532 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சிறகினை விரிக்காமல் எப்படி பறவையால் பறக்கமுடியாதோ, புல்லாங்குழலுக்குள் காற்று நுழையாமல் எப்படி கீதம் இசைக்க முடியாதோ, துடுப்பினை இயக்காமல் எப்படிப் படகினை இயக்க முடியாதோ, இதயத் துடிப்பு இல்லாமல் எப்படி மனிதன் வாழ முடியாதோ, அதைப்போல புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இல்லாமல் தமிழகம் வாழ முடியாது, வளர முடியாது; தமிழக மக்களைக் காப்பாற்ற முடியாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறியதுபோல, அரசாங்கம் ஒரு வீடு. ஆளுங்கட்சி அதை வாடகைக்கு எடுத்திருக்கிறது. மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம். அதன் கணக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பார்க்கப்படுகிறது. மக்களைப் பார்த்து ஆள்பவர்கள் அஞ்சவேண்டும். ஆள்பவர்களைப் பார்த்து மக்கள் அஞ்சக்கூடாது. ஆனால், இன்றைய நிலையில் ஆள்பவர்களைப் பார்த்து மக்கள் அஞ்சுகிறார்கள். நாடே நடுங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவும், ஆற்றலும், திறமும், தெளிவும், வரலாற்று நுண்ணறிவும், பொருளாதாரப் புரிதலும், பொதுமை உணர்வும் கொண்ட ஆட்சியின் தலைமைதான் நாட்டைச் சிறப்பாக அழைத்துச் செல்ல இயலும். ஆளும் இடத்தில் அமர்பவர்களுக்குத் தன்னலம் இருத்தல் கூடாது. பொது நலமே மேலோங்கி இருக்கவேண்டும். இதைத்தான் அன்று முதல் இன்று வரை அரச நீதி என்று சொல்வார்கள். அரசாட்சி செய்பவர்கள் நல்லாட்சி தரவேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி இருக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இதைத்தான் மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, மனித நேயம் மிக்க புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., நிர்வாகத் திறமை மிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகியோர் கடைப்பிடித்தனர். ஆனால், இன்று குடும்ப ஆதிக்கம், அதிகார துஷ்பிரயோகம், அத்துமீறல், (குறுக்கீடுகள்) அமைதி, அமைதி, அமைதி. நான் யார் குடும்பத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. குடும்ப அதிகாரம் என்றுதான் சொல்லியிருக்கிறேன். அத்துமீறல், அமைச்சர்கள் மீதே நீதிமன்றங்களில் வழக்கு, கந்து வட்டி, கட்டப் பஞ்சாயத்து, கஞ்சா, கள்ளச் சாராயம், கொலை, கொள்ளை, (குறுக்கீடுகள்)

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப ஆதிக்கம் என்று சொல்கிறார்கள். எங்களுக்கெல்லாம் குடும்பம் இருக்கிறது.*

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: எங்களுக்கும் குடும்பம் இருக்கிறது. கந்து வட்டி, கட்டப் பஞ்சாயத்து, கஞ்சா, கள்ளச் சாராயம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு எனத் தமிழகமே சீரழிந்து கொண்டிருக்கும் பரிதாப நிலை. சட்டம் ஒழுங்கு சீர்கேடு; ஜனநாயகக் குரல்வளையை நெரிக்கும் சம்பவங்கள்; தீவிரவாதம் தமிழகத்திலே ஆழமாக வேரூன்றியுள்ள சூழ்நிலை; கடுமையான மின் வெட்டின் காரணமாக தமிழகமே இருண்டுள்ள இந்தச் சூழ்நிலையை மாற்றிட, இருண்ட தமிழகத்திற்கு விளக்கேற்ற, வாருங்கள் அம்மா என அழைத்து வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசாங்கம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்று சொன்னால், நிர்வாகத்திலே பல மாறுதல்கள், நிர்வாகத்திலே பல சீர்திருத்தங்கள் தேவை. ஒரு அரசாங்கத்திலே வருமானத்தைப் பெருக்குவதற்கும், பெருக்கப்பட்ட வருமானத்தைச் செலவழிப்பதற்குமான பல நல்லத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சத்துணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டு இப்போது இந்திய அளவிலும், உலகத்திலே இருக்கின்ற அனைத்து ஏழ்மை நாடுகளிலும் அது பின்பற்றப்பட்டு வருகிறது. பல நாடுகள் செயலாக்கம் செய்துகொண்டிருக்கின்றன. அதைப்போல புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு முறை முதலமைச்சராக இருந்தார்கள். 2001-லே முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு—இன்றைக்கு நீங்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குவதாகச் சொல்கின்ற திட்டத்திற்கு ஜீவநாடியாக வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். தமிழகத்திலே மாநில அரசாங்கமே பல ஆயிரம் கோடி ரூபாய் பணத்தைச் செலவு செய்து, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான அரிசியை வெளி மாநிலங்களுக்குச் சென்று தமிழக அரசே நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலமாக கொள்முதல் செய்து விநியோகம் செய்துகொண்டிருந்த நிலையிலே, தமிழகத்திற்கு செலவினம் கூடுதலாக வருகின்றது என்பதை உணர்ந்து நிர்வாகச்

சீர்திருத்தமாக, 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்திய அரசினுடைய F.C.I. உடன் இணைந்து ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டதன் அடிப்படையிலே இப்போது தமிழகத்திற்குத் தேவையான உணவுப்பொருள், அரிசி அனைத்தும் குறைந்த விலையிலே வழங்கப்படுகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002-லே எடுத்த அதிரடியான, மிக முக்கியமான ஒரு நடவடிக்கை அது. இன்றைக்கு ஆட்சியிலே இருப்பவர்கள், இன்றைக்கு எதிர்க்கட்சிகளாக இருக்கின்ற சில கட்சிகள் எல்லாம்கூட அந்த நேரத்திலே அந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள். சட்டமன்றத்திலே நாற்காலியின் மேலேகூட எழுந்து நின்றார்கள். ஆனாலும், அதனையெல்லாம் பொருட்படுத்தாமல் நிர்வாகச் சீர்திருத்தமாக அம்மா அவர்கள் செய்தார்கள். அதனுடைய அடிப்படையிலே இப்போது உணவுப் பொருள் செலவினங்கள் தமிழகத்திலே மிக அதிக அளவிலே குறைந்திருக்கின்றன. இது ஒரு நிர்வாகச் சீர்திருத்தம்.

அதேபோல, 2001-லே அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்றபோது விற்பனை வரியின்மூலம் ரூபாய் 8 ஆயிரம் கோடியாக வருமானம் வந்த நிலையினை மாற்றி 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பைவிட்டு அம்மா அவர்கள் விலகுகின்ற நேரத்திலே ரூபாய் 18 ஆயிரம் கோடி விற்பனை வரிமூலம் தமிழகத்திற்கு வருமானம் ஏற்பட்டது.

முற்பகல் 11-45

அதேபோல முன்பு தனியார்கள் மதுபானக் கடைகளை நடத்தி கொள்ளை கொள்ளையாக, கோடி கோடியாக, கொள்ளையடித்துக் கொண்டிருந்த நிலையிலே டாஸ்மாக்மூலம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைத் தருகிறார். அவர்கள் ஆட்சியை விட்டுச்சென்றபோது, வருவாய் 18,000 கோடி ரூபாய் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: நாங்கள் அரசாங்கப் பொறுப்பில் இல்லை, எதிர்க்கட்சியில் இருக்கிறோம், எங்களுக்குக் கிடைக்கிற தகவல் குறைவு. கிடைக்கின்ற தகவலை வைத்துச்

சொல்கின்றேன். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் எவ்வளவு என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்றபோது எவ்வளவு தெரியுமா? நீங்கள் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்றபோது 16,615 கோடி ரூபாய்தான். இன்றைக்கு 25,000 கோடி ரூபாய்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல தமிழ்நாட்டில் மதுபானக் கடைகளை தனியார்கள் எல்லாம் ஏலம் எடுத்து விற்று பல கோடி ரூபாய்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, மாநிலத்திற்கு வருவாயைப் பெருக்க வேண்டுமென்பதற்காக—இன்றைக்கு எதை எடுத்தாலும் இலவசமாக வழங்குகிறோம், வழங்குகிறோம் என்று சொல்கிறீர்களே—அதற்கு ஜீவநதியாக நிதியாதாரம் திரட்டுவதற்காக—தனக்கு எதிர்காலத்திலே மக்களுடைய, வாக்காளர்களுடைய ஆதரவு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றிச்சிந்திக்காமல் நாட்டுக்கு எதிர்காலத்திலே நல்ல பணிகள் நடைபெற வேண்டுமென்பதற்காக, வருவாயைப் பெருக்க வேண்டுமென்பதற்காக—தனியார் வைத்துக்கொண்டு கொள்ளையடித்துக் கொண்டிருந்த மதுபானக் கடைகளையெல்லாம் டாஸ்மாக் நிறுவனத்தின்கீழ் கொண்டுவந்து, டாஸ்மாக் நிறுவனம் அவற்றை நடத்த வேண்டுமென்று ஆணையிட்டது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதையெல்லம் நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக நான் சொல்ல வருகிறேன்.

அதேபோல, மணல் குவாரிகளையெல்லாம் தனியார் நடத்திக்கொண்டிருந்த நிலையை மாற்றி 30 கோடி ரூபாய் வருமானம் என்பதை 300 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தி மணல் குவாரிகளை எல்லாம் பொதுவுடைமையாக்கி அரசாங்கம் மூலம் நடத்தச் செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுகூட இன்றைக்கு பல வகைகளில் உங்களுக்கு சௌகரியமாக இருக்கிறது—அதன்மூலம் வருமானம் 300 கோடி ரூபாயாகப் பெருகியது.

அதைப்போல, லாட்டரி சீட்டு ஒழிப்பு. ஒரு தொழிலாளி வார முடிவில் 1,000 ரூபாய் 1,500 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு

வீட்டுக்குப் போகும்போது அந்தப் பணம் வீட்டுக்குப் போய்ச் சேருமா என்றால், கிடையாது. பூராவும் போகிறவழியிலே லாட்டரி சீட்டுக் கடையில் செலவழிந்துபோய்விடும். தொழிலாளியினுடைய வயிறும், குடலும் எரிந்து காய்ந்துகொண்டிருந்த நிலையை உணர்ந்த எங்கள் தாய், அம்மா அவர்கள் லாட்டரி ஒழிப்பை மிகத் திறமையாகச் செய்தார்கள். இவையெல்லாம் அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே செய்யப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கு நான் எடுத்துக்காட்டுகின்ற உதாரணங்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது பத்திரிகையாளர்கள் அண்ணா அவர்களைப் பார்த்து, பணக்காரர்களுக்கு நல்லது செய்வீர்களா அல்லது ஏழைகளுக்கு நல்லது செய்வீர்களா என்று கேட்டார்கள். அதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பதில் அளிக்கையிலே 'மாடியிலே வாழுகிற மாடசாமி சாப்பிடுகிற காபிக்கு சர்க்கரையும் தேவை, குடிசையிலே வாழுகிற குப்பன் குடிக்கின்ற கூழுக்கு உப்பும் தேவை. இவை இரண்டையும் நான்தான் கொடுக்க வேண்டும். யாருக்கு எதை முதலில் கொடுப்பது என்பது எனக்குத் தெரியும், ஏழை மக்களுக்கு எதைச் செய்ய வேண்டும் என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும்' என்று சொன்னார்கள்.

நீங்கள் விலைவாசி உயரக்கூடாது என்பதற்காக ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தருகிறேன் என்று சொல்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு நாட்டு நடப்பு என்னவாக இருக்கிறது என்பதையெல்லாம் நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்வதற்கு முன்பாக நம்முடைய தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளை நான்காகப் பிரித்தால் நான்கிலே ஒரு பகுதி விவசாயிகள் நெல் பயிர் செய்கிறார்கள்; மற்றொரு நான்கில் ஒரு பகுதி விவசாயிகள் கரும்பு பயிர் செய்கிறார்கள்; இன்னொரு நான்கில் ஒரு பகுதி விவசாயிகள் தென்னை விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். இன்றைக்கு தேங்காய் என்ன விலைக்கு விற்கிறது என்று சொன்னால், எப்போதெல்லாம் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் தேங்காய் விலை அதளபாதாளத்திற்குப் போய்விடுகிறது. நான் 1972 லே 11 ஆம் வகுப்பு படிக்கின்றபோது ஒரு தேங்காய் நான்கு ரூபாய்க்கு விற்றது; இன்றைக்கும் தேங்காய் நான்கு ரூபாய்க்குத்தான் விற்கின்றது. ஆனால், ஒரு கொய்யாக்காய் இரண்டு ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. தென்னை விவசாயிகள் தமிழகத்திலே நான்கில் ஒரு பகுதி இருக்கிறார்கள்.

நெல் விவசாயிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அதே அளவுக்குத் தென்னை விவசாயிகள் இருக்கிறார்கள். இங்கே உங்களிடத்திலே நான் பணிவோடு வேண்டுகோள் வைப்பதெல்லாம், கொப்பரைக் கொள்முதல் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. இந்தக் கொப்பரைக் கொள்முதல் செய்வதை மார்ச் மாதம் 16 ஆம் தேதியிலிருந்து பொள்ளாச்சிப் பகுதியிலே நிறுத்திவிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திலே எந்த அளவுக்குத் தேங்காய் விளைகிறதோ, கொப்பரை விளைகிறதோ, அதற்குச் சமமாக பொள்ளாச்சிப் பகுதியிலே கொப்பரைத் தேங்காய் விளைகிறது. அங்கே இருக்கின்ற ஒரே விவசாயம் தென்னை விவசாயம்தான். இன்றைக்கு அங்கே கொப்பரைக் கொள்முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. இன்றைக்கு வெளி மார்க்கெட்டில் தேங்காய் விலை ரூபாய் 3-50-க்கு வந்துவிட்டது. விவசாயிகள் எப்படி வாழ முடியும்?

முற்பகல் 11-50

எங்களுடைய அம்மா அவர்கள் ஆணையின்படி, எங்களுடைய பொள்ளாச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் இதுகுறித்து பாராளுமன்றத்திலே பேசி, பாராளுமன்றத்திலேயே மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அறிவித்து தமிழ்நாடு அரசினுடைய TANFED நிறுவனத்திற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். 10-3-2010 அன்றும், 12-3-2010 அன்றுமாக, இரண்டு நாட்களிலே ஆணை பிறப்பிக்கப்பட்டு, தமிழகத்திலே ஒரு கிலோ தேங்காயை 12 ரூபாய்க்கு, தமிழக அரசின் TANFED நிறுவனம் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்று அறிவித்து ஒரு மாத காலத்திற்கு மேலாகிறது. விவசாயிகளின் நலனில் அக்கறையுள்ள இந்த அரசு, விவசாயிகளுடைய வேதனையைப் புரிந்துகொண்டு, அதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று கேட்டால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துயரத்தோடு சொல்கிறேன்; மிகுந்த வேதனையோடு சொல்கிறேன்; அங்கே இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான விவசாயிகளுடைய கண்ணீர்க் கதையாக நான் சொல்கிறேன், இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்காக மத்திய அரசாங்கம் தமிழக அரசுக்கு அனுப்பிய கடிதத்தின் நகலைத் தங்களுக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கான ஏற்பாட்டினை உடனடியாகச் செய்து, தமிழகத்திலே

இருக்கின்ற பெரும்பகுதி தென்னை விவசாயிகளுக்கு மத்திய அரசு காட்டிய வழிமுறைகளின்படி, அவர்களுக்கு வழிவகை செய்யவில்லையென்று சொன்னால், தமிழகத்திலே இருக்கக்கூடிய தென்னை விவசாயிகள் அனைவரும் ஒன்று திரண்டு, போராடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். வயிறு பசிப்பதற்கு முன்னால் சோறுபோடவில்லையென்றாலும், பசித்து வந்ததற்குப் பிறகாவது சாப்பாடு போடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவில்லையென்றாலும், கூழாவது, கஞ்சியாவது ஊற்றுங்கள் என்று உங்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள் தவறான தகவலை இந்த சபைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் TANFED மூலமாக கடந்த 15 நாட்களாக தேங்காய்க் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தேங்காயாவது அங்கே கொள்முதல் செய்யப்பட்டிருந்தால் நான் அதைச் சவாலாக ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். கொப்பரைக் கொள்முதல் மார்ச் 16 ஆம் தேதியோடு நிறுத்தப்பட்டுவிட்டது. பொள்ளாச்சியில் கடைசியாக, மார்ச் மாதம் 16 ஆம் தேதியோடு கொப்பரைக் கொள்முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. நான் இங்கு வருகிறபொழுது இன்றைக்குக்கூட கேட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறேன். நீங்களும் ஒரு விவசாயி. எனவே தயவுசெய்து, விவசாயிகள் பிரச்சினையில் அரசியலைக் கலக்காமல். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வது தவறு. இப்பொழுதும் வாங்கப்பட்டு வருகிறது. அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நாங்கள் கொள்முதல் செய்துகொண்டுதான் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துவிட்டேன். உண்மை நடப்பை, நாட்டு நடப்பை, வெள்ளிடைமலையாக நான் விளக்கிச் சொல்லிவிட்டேன்.

அடுத்தபடியாக, கடந்த 2001 ஆம் ஆணடு ஆட்சிக்கு முன்பாக, தமிழகத்திலே கொப்பரைக் கொள்முதல் செய்யப்பட்டது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டதிலே பல கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்று, இன்றைய முதலமைச்சர், அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருந்தபோது, உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி V.&.A.C. மூலம் விசாரணைக்கு ஆணையிட்டு, விசாரணை நடைபெற்று, தமிழகம் முழுவதும் 57 கொள்முதல் நிலையங்களிலே வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அதிலே ஐந்து கொள்முதல் நிலையங்களிலே குற்றச்சாட்டு நிரூபணமாகாதச் சூழ்நிலையிலே வழக்கு கைவிடப்பட்டு, 52 வழக்குகளில் 47 வழக்குகள் உறுதியாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகியுள்ளன என்கின்ற நிலையில் குற்றப் பத்திரிகையெல்லாம் தயார் செய்யப்பட்டதற்குப் பிறகு, 100 கோடி ரூபாய்க்கு மேலாக ஊழல் நடந்ததாகச் சொல்லி, உயர் நீதிமன்றம் வரை சென்று வந்த ஒரு வழக்கை, எவ்வகையான காரணமுமின்றி அந்த வழக்கு கைவிடப்பட்டதாக நான் சமீபத்திலே பத்திரிகையிலே பார்த்தேன். நீதிதேவன் உறங்கப் போய்விட்டானா அல்லது நீதிதேவன் இனி உயிர்பெற்று எழவே மாட்டானா என்ற கேள்வியை நான் இங்கே கேட்க விரும்புகிறேன். எந்தக் காரணத்தினால் இந்த வழக்கு மூட்டை கட்டப்பட்டது? அதையடுத்து நான் அமைச்சராக இருந்தவன் என்ற முறையிலே, சம்பந்தப்பட்ட கோப்புகளிலே கையொப்பமிட்டிருக்கிறேன். அந்தக் கோப்புகளைத் தெளிவாகப் பார்த்திருக்கிறேன். இன்றைக்கும் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். ஐ.பி.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், ஆளுங்கட்சிக்கென்றால் ஒரு நிலை, எதிர்க்கட்சிக்கென்றால் ஒரு

நிலை. இதுதான் ஆட்சியாளர்களுடைய நிலையா என்பது என்னுடைய கேள்வி.

அடுத்து, 7,000 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாக, நான்காண்டு காலமாக ஒவ்வோர் ஆண்டு மானியக் கோரிக்கையிலும், ஒவ்வோர் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் நாம் பெருமையோடு சொல்லிக்கொள்கிறோம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியெல்லாம், 2006-2007 ஆம் ஆண்டு ரூ.1,674.04 கோடியும், 2007-2008 ஆம் ஆண்டு ரூ.1,630.22 கோடியும், 2008-2009 ஆம் ஆண்டு ரூ.1,198 கோடியும், 2009-2010 ஆம் ஆண்டு ரூ.1,075.48 கோடியும் கடன் தள்ளுபடிக்காக இதுவரை மாநில அரசு கூட்டுறவு வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தியிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.7,000 கோடி. இந்தத் தொகை ஐந்து தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படும் என்று 2006 ஆம் ஆண்டிலிருந்து, இந்த ஆண்டிற்கான கூட்டுறவுத் துறைக்கான மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பு வரை சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாம் ஆண்டிலே இறுதியாக 7 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அந்த 7 ஆயிரம் கோடி ரூபாயினுடைய வட்டித் தொகையையும் சேர்த்து 8 ஆயிரம் கோடி ரூபாய் என்றால் இதுவரை 5,577.74 கோடி ரூபாய்தான் தள்ளுபடி செய்யப்பட்ட தொகைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த ஆண்டு மீதித் தொகை அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பது என்னுடைய கேள்வி.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி ஏற்பட்டவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள், 7,000 கோடி ரூபாய் அளவுக்கு அன்றைக்கு இருந்த விவசாயிகள் வாங்கியிருந்த மொத்த கடன் தொகையும், அந்த முழுக் கடன் தொகையும் அரசாங்கத்தால் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அந்தக் கடன் தொகையை வழங்கிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்கள்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அறிவித்த அந்தப் புள்ளிவிவரப்படி அந்த 7,000 கோடி ரூபாய் கடனும், அந்த விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

கூட்டுறவுச் சங்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலேயுள்ள பண வரவு-செலவு பற்றிய கணக்கை அவர் சொல்கிறார். கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் அந்தப் பணத்தை எந்தெந்த ஆண்டு, விவசாயிகள் எவ்வளவு தொகை செலுத்த வேண்டுமோ, அந்தப் பணத்தை அரசு செலுத்தி வந்திருக்கிறது. மிச்சப் பணமும் உரிய நேரத்தில் செலுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8 சதவீதம் வட்டியுடன் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. கூட்டுறவு வங்கிகள் ஏற்றுக்கொண்ட தொகை 428 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 4 ஆண்டுத் தவணையாக மொத்தம் ரூ.5,577 கோடியே 74 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த அவைக்கு தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: இதைத்தான் நான் சொல்கிறேன், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கேட்பது என்னவென்றால், தள்ளுபடி செய்யப்பட்ட தொகை 7,000 கோடி ரூபாயா, அல்லது 5,500 கோடி ரூபாயா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் தள்ளுபடி என்பது விவசாயிகளுக்கு. அரசாங்கம் தருகிற நிதி, நேரடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு. தள்ளுபடி செய்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ஈட்டுத் தொகை கொடுப்பதற்காக அந்தத் தொகை எந்தெந்த தேதியிலே கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவேண்டுமோ அந்தக் காலக்கட்டபடி ஆண்டுதோறும் அரசு கொடுத்து வருகிறது. எவ்வளவு தொகை தர வேண்டியிருந்தாலும் அரசு தரும்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. நான் சொல்வது, 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து 5 தவணைகளில் திருப்பிச் செலுத்திவிடுவோம் என்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள். 4 தவணை முடிந்துவிட்டது. இது கடைசித் தவணை, இந்த ஆட்சியினுடைய கடைசித் தவணை. இந்தத் தவணையிலே நீங்கள் எல்லாவற்றையும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான நோக்கத்தில் தொடர்ந்து பேசக்கூடாது. அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரவேண்டிய அந்தத் தொகையைக் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்படாத வகையில், கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் எவ்வளவு தொகை விவசாயிகட்கு கடன் வழங்கவேண்டுமோ அவ்வளவும் வழங்கக்கூடிய அளவிற்கு அரசாங்கம் நிதி தருகிறது. அரசாங்கம் தர வேண்டிய நிதிக்கு வட்டி தரவேண்டும் என்ற கருத்தில், ஆயிரம் கோடி ரூபாய் வட்டி என்று கணக்கு சொன்னார். விவசாயிகளுக்கே வட்டி தள்ளுபடி செய்கிற இந்த அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி தரவேண்டிய அவசியம் என்றைக்கும் ஏற்படாது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே வட்டியோடு திரும்பத் தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அடுத்த சப்ஜெக்டுக்குப் போகிறேன். இப்போது தமிழ்நாடு முழுவதும் தொடக்க வேளாண்மை வங்கிகளிலேயெல்லாம் வைப்பீடு வாங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே நீங்கள் கூட்டுறவு மானியத்திலே ரூ.192.50 கோடிதான் வைப்பீட்டுத் தொகையை இதுவரைக்கும் நீங்கள் திருப்பிக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலும் பாதித் தொகை மக்களிடையே வைப்புத்தொகை உத்தரவாத நிதியிலிருந்து வட்டியில்லாத கடனாக வாங்கி திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் உள்ள ஏழையெளிய மக்கள் ஆடு வளர்த்து, கோழி வளர்த்து, மாடு வளர்த்து கஷ்டப்பட்டு பல்வேறு தொழில்களைச் செய்து

தங்களுடைய குழந்தைகளுக்கும், வாரிசுகளுக்கும் எதிர்காலத்தில் பயன்படும் என்று அரசை நம்பி கூட்டுறவு வங்கிகளில் வைப்பீடு செய்கிறார்கள். ஆனால், நீங்கள் ஏழை எளிய மக்களுக்குக் கடன் தள்ளுபடி என்று அறிவித்துவிட்டு, அந்தத் தொகையை இன்றைக்கு முழுமையாகச் செலுத்தாததனால் அவர்களுடைய வைப்பீட்டுத் தொகை திரும்ப செலுத்தப்படாமல் இருக்கிறது என்பதை நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுதான் என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளவாறு, எந்தெந்த கூட்டுறவுச் சங்கங்கள், அந்த மாதிரி இடர்ப்பாடுகளுக்கு ஆளாகி, deposit தொகை திருப்பித் தர முடியாத நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றன என்று பாதிக்கப்பட்டவர்கள் யாராவது விண்ணப்பித்து இருக்கிறார்களா? அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்களா? அரசு அதற்குப் பதில் அளிக்கவில்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் அன்று 170 கோடியே 62 இலட்சம் ரூபாய் அளவிற்கு முதிர்வடைந்த வைப்புத் தொகைகள் திருப்பி வழங்கப்பட்டு, நிலுவையிலிருந்தவை, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் எடுத்த தீவிர நடவடிக்கைகள் காரணமாக 30-6-2008-க்குள் இத்தொகைகள் முழுவதும் வைப்புதாரர்களுக்குத் திருப்பி வழங்கப்பட்டுவிட்டன. 2009-2010 ஆம் ஆண்டில் மட்டும் 31 கோடியே 81 இலட்சம் ரூபாய் முதிர்வடைந்த வைப்புத் தொகை உரிய வைப்புதாரர்களுக்குத் திருப்பி வழங்கப்பட்டது. தற்போது 7 கோடி, 43 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட வேண்டும். இத்தொகையையும் வைப்புத்தொகையோடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக வழங்கிவிடுவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மொத்தத்திலே நான் சொல்ல வந்தது மக்களுக்குண்டான வைப்புத் தொகைப் பணம் திரும்பப் போய்ச் சேரவில்லை. அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். உங்கள் சப்ஜெக்ட்டுக்கு நான் வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: இல்லை, இல்லை. ஒரு செய்தி. (குறுக்கீடு) மேலும் ஒரு செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: உங்கள் சப்ஜெக்டுக்கு வருகிறேன், பொறுமையாக இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் இருக்கின்ற இந்த அவையிலே நான் சொல்லப் போகின்ற முக்கியமான விஷயம் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின்மூலம் குறைந்த விலைக்கு வாங்கிய நிலங்கள், விலை ஏற்றத்திற்குப் பிறகு வாங்கிய விலைக்கே விற்கப்பட்டதாக நாடு முழுவதும் பேசிக்கொள்கிறார்கள். அதை தக்க முறையிலே விசாரித்து அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்த விலையில் இருந்தபோது வாங்கிப் போட்ட நிலங்களையெல்லாம் தற்பொழுது real estate விலை கூடியபோது கூடிய விலைக்கு விற்றிருக்கிறார்கள். இது மிக முக்கியமான ஒரு குற்றச்சாட்டு.

மிக முக்கியமான ஒரு கேள்வி, மத்திய அரசு 29-2-2008 அன்று கடன் தள்ளுபடியைக் கொண்டு வந்துள்ளது. அந்த வகையிலே, சிறு, குறு விவசாயிகள் வாங்கிய அனைத்துக் கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற விவசாயிகள் வாங்கிய கடன்கள் 75 சதவீதம் கடனைத் திருப்பிச் செலுத்தினால், 25 சதவீதம் மானியம் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயிகள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்த வகையில் ரூ.125 கோடிதான் திரும்பக் கிடைத்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் மீதித் தொகை எப்பொழுது வரும்,

எவ்வளவுத் தொகை வரும் என்பதைக் கணக்கிட்டு அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. மக்களுக்கு நன்மையான ஒரு விஷயம். (குறுக்கீடு) அமைச்சர், நீங்கள் உட்காருங்கள் அண்ணே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அ.தி.மு.க. ஆட்சியிலேதான் அது வழங்கப்பட்டது. இப்பொழுது நாங்கள் வந்துதான் அதை அடைத்துக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அடைத்து விடுவோம். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. முழுமையாக அடைக்கக்கூடிய சூழ்நிலையிலே நாங்கள் இப்பொழுது இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒரு வேண்டுகோள். கூட்டுறவு வங்கிகளில் இந்த ஆண்டு 2,500 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்குகிறீர்கள். விசாரணைக் கமிஷன் வேண்டுமானாலும் போட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள், அதிலே 2,000 கோடி ரூபாய் நகைக் கடனாகத்தான் இருக்கும். நிச்சயமாக நகையின்மீதுதான் கடன் வாங்கியிருப்பார்கள். அதைக்கூட, வேறு வியாபாரிகள் தங்கள் தேவைக்காக வட்டியில்லா பணம் கிடைக்கிறது என்று விவசாயிகளுடைய கையிலே கொடுத்து, நகைக் கடனை வாங்கி வைத்துக்கொள்வார்கள். உண்மையிலேயே விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் அக்கறையோடு கடன் வழங்க வேண்டுமென்று சொன்னால், அந்த விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையில், நகைக் கடன் வழங்குவதைத் தனியாக லேவாதேவி முறையிலே வைத்துக்கொண்டு, விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்க வேண்டுமென்று உங்களையெல்லாம் இந்த அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: ஏன்? 10 நிமிடங்கள்தான் ஆகியுள்ளன. இனிமேல்தான் முக்கியமான விவகாரமே இருக்கிறது. எனக்கு 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மாதிரி ஏன், எதற்கு என்றெல்லாம் Chairperson-ஐப் பார்த்துக் கேட்கக்கூடாது. இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: நான் ஒன்றும் கேட்கவில்லை. ஒரு நிமிடமா? தமிழ்நாட்டிலே, அம்மா ஆட்சியிலே 2005-2006 ஆம் ஆண்டு 1,600 கோடி ரூபாய் உணவு மானியத்திற்காகச் செலவு செய்தார்கள். அந்த ஆண்டு 32 இலட்சம் டன் அரிசியை நாட்டு மக்கள் சாப்பிட்டார்கள். இன்றைக்கு ரூ.4,000 கோடி செலவு செய்கிறீர்கள். 36 இலட்சம் டன் அரிசிதான் நாட்டு மக்களுக்குப் போய் சேருகிறது. அதிலே பாதிக்கு மேற்பட்ட அரிசி நாடு முழுவதும் கடத்தப்படுகிறது. அது ஒரு கைத்தொழிலாகவே மாறிவிட்டது. அதுவும், தூத்துக்குடி அரிசி கடத்தலுக்கு கேந்திரமாக, Headquarter ஆகவே மாறிவிட்டது. எல்லையோரத்திலே தூத்துக்குடி, அடுத்தது பொள்ளாச்சி. இதைப் பிடித்துக்கொடுங்கள் என்று கேட்டால் நாங்கள் அதைச் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று அரசாங்கம் எங்களைக் கேட்டால் நாங்கள் அதைச் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இதைப்பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தால்தான் நாங்கள் தெளிவாகப் பேச முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 88 சதவீதம் நுகர்வு இருந்தது. ஆனால் இன்றைக்கு 15 இலட்சம் கார்டுகள் கொடுக்கப்பட்டும் நுகர்வு அளவு என்பது 82 சதவீதம் தான் இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற ஒரு கோடியே 87 இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி போகிறது. கூடுதலான அட்டைகள் கொடுக்கப்பட்டும் 82 சதவீதம் அளவிலே இருக்கிறபொழுது முன்பு 88 சதவீதம் இருந்தது என்றால் உங்களுடைய ஆட்சிக்காலத்தில்தான் அரிசி கடத்தப்பட்டதோடு, அப்பொழுது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால்தான் அரிசியினுடைய நுகர்வு அதிகமாக இருந்ததேயொழிய, நீங்கள் சொல்வது தவறான செய்தி.

பிற்பகல் 12-05

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தருகிறோம் என்று சொல்லுகின்ற இந்த ஆட்சியிலே, கிராமப்புறங்களில் இரண்டு இட்லி 10 ரூபாய்; நகர்ப்புறங்களில் இரண்டு இட்லி 15 ரூபாய்; சென்னையில் சாதாரண ஓட்டலில் 2 இட்லி 20 ரூபாய்; இன்னும் நட்சத்திர ஓட்டல்களில் அதிக விலை, அதற்கு நான் போகவில்லை. இட்லிக்கு சட்னி உண்டு, பருப்பு இல்லாத சாம்பார். பருப்பு போடமாட்டார்கள். சட்னிக்கு பருப்பு நிறுத்தப்பட்டுவிட்டது. ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று சொல்லும் உங்களுடைய ஆட்சியில் ஒரு தோசையினுடைய விலை கிராமத்தில் ரூ.12/-, நகர்ப்புறங்களில் ரூ.20/-, சென்னையில் ரூ.25/-. இன்னும் நட்சத்திர ஓட்டல்களில் கூடுதல் விலை. ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று சொல்லும் உங்களுடைய ஆட்சியில், சாப்பாடு பொள்ளாச்சியில் ரூ. 35/-, கோயம்புத்தூரில் ரூ.45/-, சென்னையிலே சாதாரண ஓட்டலில் ரூ.60/-. (மணியடிக்கப்பெற்றது) அம்மா அவர்களுடைய ஆட்சியிலே... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப்படி 15 நிமிடங்கள்தான் ஆகியிருக்கிறது. நீங்கள் எனக்குக் கொடுத்த நேரம் 25 நிமிடங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, நீங்கள் உரையை 11-38-ல் ஆரம்பித்தீர்கள். மணி 12-05 ஆகிறது. 27 நிமிடங்கள் நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் ஆட்சியிலே தேநீர் ரூ.2/-, தற்போது சாதாரண ரோட்டோரக் கடைகளில் தேநீரின் விலை ரூ.5/-. காபி அம்மா அவர்கள் ஆட்சியில் ரூ.4/-, தற்போதைய ஆட்சியில் ஓட்டலில் சாதாரண காப்பி ரூ.10/-. பால் விலை உயர்வு காரணமாக பச்சிளங்குழந்தைகள் பால் கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள். பாலுக்கு சர்க்கரை போடக் கஷ்டமாக இருக்கிறது.

நான் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு முக்கியமான விலைப்புள்ளியை தருகிறேன். இந்த bill, Civil Supplies Corporation-ஆல் 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த bill-ஐ அவர் வைத்துக் கொள்ளலாம். இந்த Bill-ஐ பேரவைத்

துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் ஏதாவது மாறுதல் இருந்தால் அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டே இரண்டு நிமிடங்களில், விலைவாசி உயர்வைப் பற்றி மட்டும் சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். ஏழு கோடி மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை. "ஏழை அழுகின்ற கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம்." என்னுடைய பேச்சை தயவுசெய்து துணைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்வது, Civil Supplies Corporation-உடைய bill என்னுடைய கையில் இருக்கிறது. அந்த bill-ல் உள்ள விலைப்புள்ளிக்கு நான் உத்தரவாதம் எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு வெளியில் நடப்பதை அவரே கேட்டுக்கொள்ளலாம். 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அம்மா அவர்களின் ஆட்சியில், 6-4-2006-ல் பொன்னி புழுங்கல் அரிசி ரூ.21/-, இன்றைக்கு பொன்னி புழுங்கல் அரிசி ரூ.40/-லிருந்து ரூ.42/-. புழுங்கல் அரிசி சன்ன ரகம் அம்மா அவர்களின் ஆட்சியில் ரூ.15.50, இன்றைக்கு ரூ.38/-. புழுங்கல் அரிசி சாதா ரகம் அம்மா அவர்களின் ஆட்சியில் ரூ.13/-, இன்றைக்கு ரூ.24/-. பொன்னி பச்சரிசி அம்மா அவர்களின் ஆட்சியில் ரூ.20/-, இன்றைக்கு ரூ.34/-. பச்சரிசி சன்ன ரகம் அம்மா அவர்களின் ஆட்சியில் ரூ.15/-, இன்றைக்கு ரூ.39/-. பச்சரிசி சாதாரண ரகம் அம்மா ஆட்சியில் ரூ.12/-, இன்றைக்கு ரூ.26/-. துவரம் பருப்பு அம்மா ஆட்சியில் ரூ.34/-, இன்றைக்கு ரூ.78/-. கடலைப் பருப்பு அம்மா ஆட்சியில் ரூ.30/-, இன்றைக்கு ரூ.70/-. உளுத்தம் பருப்பு அம்மா ஆட்சியில் ரூ.52/-, இன்றைக்கு ரூ.76/-. பாசிப் பயறு அம்மா ஆட்சியில் ரூ.43/-, இன்றைக்கு ரூ.93/-. கொள்ளு அம்மா ஆட்சியிலே ரூ.10/-. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒட்டுமொத்தமாக விலைவாசி ஏறிவிட்டது என்ற வார்த்தையைச் சொல்லாமல், இப்படி ஒவ்வொன்றாகப் படித்துக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து அவர் இதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். அன்றைக்கு அரசாங்கம் நெல் கொள்முதல்

செய்த விலை எவ்வளவு? கலைஞர் அவர்கள் விவசாயிகளுடைய குறையைத் தீர்ப்பதற்காக ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,000/- என்று ஏற்றினார். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வெறும் ரூ.600/-. ரூ.600/-க்கு கொள்முதல் செய்தபோது ரூ.20/-க்கு கிடைக்கிறது. ரூ.1,000/-க்கு கொள்முதல் செய்கிறபொழுது ரூ.40/- வருகிறது என்று சொன்னால், அத்தனை விலைகளும் நீங்கள் அதிகபட்சம் என்ன விலை விற்கிறதோ அந்த விலையைச் சொல்கிறீர்கள். உங்களுக்கு என்ன குறைவான விலைக்கு வேண்டுமானாலும் அரிசி இப்போது மார்க்கெட்டில் கிடைக்கிறது. ரூ.22/-க்கு அருமையான அரிசி கிடைக்கிறது. பொன்னி அரிசி ரூ.42/- என்று சொல்கிறார்கள். வெள்ளைப் பொன்னி அரிசி ரூ.32/-க்கு எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். வேண்டுமென்றே அந்த ஆட்சி, இந்த ஆட்சி என்று தவறான புள்ளிவிவரங்களைத் தொடர்ந்து தந்துகொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. செங்கோட்டையன், நன்றாகப் பாருங்கள், 30 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். இல்லை, இல்லை, இதற்குமேலே அதிகபட்ச ஜனநாயகத்தை வேறு எந்த நாட்டிலும் எதிர்பார்க்க முடியாது. திரு. குத்தாலம் க. அன்பழகன். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது, ஒரு second கூட தர மாட்டேன். திரு. குத்தாலம் க. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசியவர்கள் எத்தனை நிமிடங்கள் பேசினார்கள் என்பது முக்கியமல்ல. பேசுகிறவர்களுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். மனசாட்சியுள்ளவர்கள் யார், யார் பேசுகிறார்கள், அவர்களுக்கு என்ன மனசாட்சி இருக்கிறது என்பதைத் தெரிந்து, அதன்படி நடந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுபவ முத்திரையோடு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குத்தாலம் க. அன்பழகன், ஒரு நிமிடம் பொறுங்கள். திரு. கே.ஏ. செங்கோட்டையன், இதையொட்டியா கேட்கப் போகிறீர்கள்?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். எத்தனை மையங்களிலே கொள்முதல் செய்யப்படுகிறது? எத்தனை விவசாயிகளிடத்திலே அது கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது? எத்தனை கோடிக்கு அது கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது? மத்திய அரசு இதற்கு எவ்வளவு தொகை வழங்கியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குத்தாலம் க. அன்பழகன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையில் நிச்சயமாக அவை இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குத்தாலம் க. அன்பழகன்.

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுபவ முத்திரையோடு, நிதி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களின் கண் துஞ்சா உழைப்பால் அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த 2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலையும், கலாச்சாரமும் எந்த நாட்டுக்கும், எந்தக் காலத்திற்கும் பலம் என்று சொல்வார்கள். ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த

2010 ஏப்ரல் 15] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

காலத்தில், எங்கெல்லாம் அவர்கள் ஆட்சி செய்தார்களோ, அங்கேயெல்லாம் அவர்களுடைய கலையை, கலாச்சாரத்தைப் போற்றுகின்ற வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்கள் இருப்பது வரலாற்று நிகழ்வு. லண்டனிலே உள்ள Piccadilly Circus-ஐப் போன்ற ஒரு அமைப்பை ஊட்டியிலே பார்க்கலாம். லண்டனில் உள்ள விக்டோரியா இரயில்வே நிலையத்தைப்போல சென்னை சென்ட்ரல் இரயில்வே நிலையத்தைப் பார்க்கலாம். அதைப்போலதான் கரிகாலப் பெருவளச் சோழன், ஓடுகின்ற நீரைத் தேக்கிவைத்து தேவைப்படுகின்றபோது பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அந்த நூற்றாண்டிலே அணை கட்டிய காலத்தில், உலகத்தில் எந்த வரலாற்றிலும், அப்படி ஒரு நிகழ்வு இல்லை, அப்படி ஒரு பொறியியல் ஞானத்தை பெற்றிருந்த அந்த மாபெரும் தமிழனைப்போல, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தை உருவாக்கி இருக்கிறவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நிகழ் காலம் என்பது கடந்த காலத்தின் பலன் என்று சொல்வார்கள். அதுவே எதிர்காலத்தின் விதை என்பார்கள். கடந்த காலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரின் உழைப்பால் உருவான, எதிர்கால தலைமுறையினருக்குக் கிடைத்திட்ட அற்புதமான ஜனநாயகம் காக்கும் இந்த உலகத் தரம் வாய்ந்த மன்றத்தில் பேசுகிற வாய்ப்புக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்று சொல்வார்கள். அந்தத் தாரக மந்திரத்தினை தன்னகத்தே கொண்டு, தமிழ்நாட்டின் கூட்டுறவுத் துறை இந்திய நாட்டுக்கே எடுத்துக்காட்டாக விளங்கும் துறையாக, வழிகாட்டும் துறையாக, "One for all, and all for one" என்று சொல்வார்களே அதைப்போல நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு காலத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவராக இருந்தபோது, இந்தியாவிலே மிகச் சிறந்த மத்திய கூட்டுறவு வங்கி கும்பகோணம் வங்கி என்று பெயரைப் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் அவர். புண்ணுக்கு புனுகு போட்டு வந்ததை மாற்றி, புண்ணுக்கு மருந்து போட்டு, கூட்டுறவு வங்கிகளை முன்னுக்குக் கொண்டுவந்ததாகச் சொல்வார்கள்.

கூட்டுறவுத் துறை நலிவுற்று, மெலிவுற்று, செயலற்று இருந்ததாகச் சொல்லி முன்பு 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைக் கலைத்துவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், பேராசிரியர் வைத்தியநாதன் குழுவினுடைய புனரமைப்பு நிதி 114 கோடி ரூபாயைக் கொடுத்து மீண்டும் அந்தச் சங்கங்களை புதுப் பொலிவுக்குக் கொண்டு வந்தார் என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாய் உள்ளத்தோடு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, பொதுவுடைமை இயக்கங்கள், மற்ற இயக்கங்கள் ஆளக்கூடிய மற்ற மாநிலங்களிலேகூட இல்லாத அளவுக்கு விவசாயிகளுடைய ரூபாய் 7 ஆயிரம் கோடி கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். தள்ளுபடி செய்தது மட்டுமல்ல, அந்தக் கடனை எப்படி அடைக்கப்போகிறீர்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் கேட்டுவிட்டு வெளியே சென்றிருக்கிறார்கள். அதற்கான பதிலை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். கடனைத் தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்ல—உங்கள் காலத்தில் சங்கங்கள் கலைக்கப்பட்டன என்பது மட்டுமல்ல—இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடிச் செய்த பிறகு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை மூடவேண்டிய நிலை வரும் என்று சிலர் மனக்கோட்டை கட்டி இருந்தார்கள். அதற்கு மாறாக, 2006 முதல் 2010 வரை மீண்டும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாக 6,194 கோடி ரூபாய் வழங்கிய அரசு தலைவர் கலைஞருடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட ரூபாய் 2,013 கோடியை இந்த ஆண்டு ரூபாய் 2,500 கோடியாக உயர்த்தி வழங்கி இருக்கிறது நம்முடைய தலைவர் அவர்களுடைய ஆட்சி. டெல்டா மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்த்தை இந்த மன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். வட்டியினுடைய விகிதம் படிப்படியாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து குறைக்கப்பட்டு, இன்றைக்கு காலத்தோடு, உரிய காலத்தில் கடனைக் கட்டக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வட்டியே இல்லாத விவசாயக் கடன் வழங்கி இருக்கிற ஆட்சி மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

"சாலை ஓரத்தில் வேலையற்றதுகள். வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள். வேந்தே! அதுதான் காலக் குறி" என்றார் பேரறிஞர் அண்ணா. இங்கே பேசிச் சென்றிருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள்—இந்த ஒரு கிலோ அரிசியைக் கொடுப்பதற்கும், விவசாயிகளினுடைய கடனை மீண்டும் கொடுப்பதற்கும், திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அடிப்படை எங்கள் அம்மா அவர்கள் டாஸ்மாக்கை துவங்கி வைத்ததன் காரணமாகத்தான் என்று சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், டாஸ்மாக்கிலேதான் வருமானம் வந்ததே, ஏன் வேலை நியமனத் தடைச் சட்டம் இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே திண்டுக்கல் பூட்டு 5 ஆண்டு காலம் பூட்டித் தொங்கவிடப்பட்டதே, எதற்காக என்பதையும் அவர் இங்கே தெரிவிக்க வேண்டிய நிலை இருக்கிறது.

கூட்டுறவுத் துறையில் எதிர்காலம் கேள்விக்குறியாகப் பணியாற்றி வந்த 27,510 பணியாளர்களை மனித நேயத்துடன் நிரந்தரமாகப் பணியமர்த்திய முதல்வர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.1,350/- முதல் ரூ.4,150/- வரை கூடுதலாகச் சம்பள உயர்வு அளித்து, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றிய முதல்வர் நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்குக் கடன் வழங்குவது மட்டும் அல்ல, தள்ளுபடி மட்டும் அல்ல, மீண்டும் பயிர்க் கடன் வழங்குவது மட்டும் அல்ல, இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுவருகிற பயிர்க் காப்பீட்டையும் பார்க்கவேண்டும். 2005-2006-ல் ஒரு இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றார்கள். 2009-2010-ல் 7 இலட்சம் விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதுவரை நான்கு ஆண்டுகளில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கியது 891 கோடி ரூபாய். இந்த நிதி ஆண்டில் மட்டும் காப்பீட்டுத் தொகையாக அரசு ஒதுக்கியிருப்பது மானியத்தோடு சேர்த்து ரூ.240 கோடி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கலைக்கப்பட்ட சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டியதோடு, நவீன கட்டடங்களை அந்தக் கடன் சங்கங்கள் கட்டிக் கொள்வதற்கு, விவசாயிகளுக்கு நிரந்தரமாகக் கடன் வழங்கி ஒரு சுழற்சி முறை ஏற்படுத்துவதற்கு 14 கட்டடங்கள் மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலே கட்ட இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தினுடைய நிறைவு நாளன்று மாண்புமிகு எதிர்க்கட்சினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு சில கருத்துகளைச் சொன்னார்கள். வார்த்தை ஜாலங்களால், வரிகளால் இந்த நிதிநிலை அறிக்கை அலங்கரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது, சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்றதன் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்று, பதவி ஏற்பு விழா மேடையிலேயே பல இலட்சம் மக்களின் முன்பாக பொது விநியோகத் திட்டத்தின்மூலம் ஒரு கிலோ அரிசி ரூ.2/-க்கு வழங்கப்படும் என்று கோப்பிலே கையெழுத்திட்டவர் எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

அதுமட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் பசிப் பிணி போக்கும் புரட்சிகரமானத் திட்டத்தை அறிவித்தவர். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்தத் திட்டம் இல்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் காரணமாக, உலக நாடுகளில் விலைவாசி ஏற்றம் காரணமாக, பொருளாதாரம் மிகப் பெரிய வீழ்ச்சியைக் கண்டாலும், மலை குலைந்தாலும் நிலை குலையாத பொருளாதார மேதை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் நிலையான பொருளாதாரக் கொள்கையினால் இந்தியா காப்பாற்றப்பட்டாலும், விலைவாசி ஏற்றம் தவிர்க்க இயலாததாகிவிட்டது.

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் குறிப்பிட்டு, பலவற்றைச் சொல்லிவிட்டுச் சென்றார்கள்; “எங்கள் காலத்திலே அதைச் செய்தோம், இதைச் செய்தோம்” என்று. 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற நம்முடைய முதல்வர் அவர்கள் ஆண்டபோது 1999 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை கூட்டுறவுக் கடன் வங்கிகள்மூலம் பெண்களுக்கு எரிவாயு அடுப்பு

2010 ஏப்ரல் 15] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

வழங்கப்பட்டது. மீண்டும் 2001-லே பொறுப்பேற்று ஒரு பெண் முதலமைச்சரே அவற்றையெல்லாம் ஜப்தி நடவடிக்கைக்கு ஆளாக்கி, அந்தக் கடன்களை வசூலிக்க உத்தரவிட்டது உங்களுடைய ஆட்சியில். மீண்டும் 2006-லே கலைஞர் பொறுப்பேற்று, அந்தக் கடன்களையும் தள்ளுபடிச் செய்து, அனைவருக்கும் இலவச எரிவாயு அடுப்பை வழங்கிய தலைவர் எங்கள் தலைவர் என்பதை நாங்கள் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, பசி, பட்டினி என்று ஆராய்ச்சி செய்து, நோபல் பரிசு பெற்ற திரு. அமர்த்தியாசென் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, "பொருள் பற்றாக்குறையால் பஞ்சம் ஏற்படுவதில்லை; பொருட்களை வாங்கும் சக்தி மக்களுக்கு இல்லாததால்தான் பஞ்சமும், பட்டினியும் உருவாகிறது" என்று ஆய்ந்தறிந்து நோபல் பரிசு பெற்றிருக்கிறார்கள். மக்களது வாங்கும் சக்தியைப் பெருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தின் தாக்கம் தமிழக மக்களைத் தாக்காமல் இருக்க பத்து பொருட்கள் 50 ரூபாய்க்கு என்று பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நம்முடைய கூட்டுறவு பண்டகசாலைகள் மூலம் வழங்கியிருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

இங்கே பேசுகிறபோது சிலர் ஆதங்கத்தோடு குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டு 4,000 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 3,750 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 2009-2010 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையிலே இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2,500 கோடி ரூபாய். ஆனால், கூடுதலான செலவு தேவைப்படுகிறது என்கிறபோது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கிய தொகை ரூ.1,200 கோடி. இந்த ஆண்டு ரூ.3,750 கோடி ஒதுக்கியிருந்தாலும், தேவைப்படும் என்று சொன்னால், ஒதுக்குவதற்குத் தாய் உள்ளம் கொண்ட எங்கள் முதல்வர் இருக்கிறார் என்பதனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே அதைக் குறிப்பிட்டிருக்கிறோம்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு மிகப் பெரிய பொது விநியோகத் திட்டம், Universal Public Distribution System. நாடு தழுவிய பொது விநியோகம் இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லை. அனைவரும்

உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற மாநிலத்தில் Targeted PDS என்று சொல்வார்கள். குறிப்பிட்ட குறியீட்டு இலக்கினை நோக்கி விநியோகிக்கக்கூடிய முறை. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடித்தட்டு மக்களுடைய பிரச்சினையைக் கருத்தில் கொண்டும், இந்தத் திட்டத்திலேகூட சமூக நீதி தேவை என்பதற்காக ஒரு மாவட்டத்தில் எந்தச் சாமானியனும் குடும்ப அட்டையை எடுத்துச் சென்று அரிசியைப் பெற்றுக்கொள்ளலாம், மாவட்ட ஆட்சியரும் அரிசியைப் பெற்றுக்கொள்ளலாம் என்கின்ற நிலையை உருவாக்கி விநியோகிக்கின்றவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். முந்தைய காலத்தில் இருந்த 'H' முத்திரைகள் நீக்கப்பட்டன. *3* ரூபாய்க்கு பத்து கிலோ அரிசி, மூன்றரை ரூபாய்க்கு பத்து கிலோ அரிசி என்றிருந்த நிலையெல்லாம் மாற்றியமைக்கப்பட்டன. ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குகிறோம் என்பதோடு அது இன்னும் இலகுவாக மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்கிற எண்ணத்தில் குடும்ப அட்டை விண்ணப்பிப்பதில் இருக்கக்கூடிய சிரமத்தைக் குறைக்கின்ற வகையில், மாவட்ட ஆட்சியருடைய அலுவலகத்திலேயே அந்தக் குடும்ப அட்டைகள் அச்சடித்துத் தரப்படும் என்கின்ற திட்டத்தை உருவாக்கியவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதை முன்னின்று நடைமுறைப்படுத்துபவர் நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *12-20*

போலி குடும்ப அட்டைகளை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டுமென்பதற்காகக் குடும்ப அட்டை கேட்டு ஒருவர் விண்ணப்பித்தவுடன், அவருக்கு அந்தக் குடும்ப அட்டை தயாரானவுடன், அது கம்ப்யூட்டரிலேயிருந்து வெளியே வந்தவுடன் குடும்ப அட்டை வேண்டி, விண்ணப்பித்தவருக்கு, 'உங்கள் குடும்ப அட்டை தயாராகிவிட்டது' என்கிற செய்தியை அனுப்பக்கூடிய குறுந்தகவல் செய்திப் பதிவு செய்யப்படுகின்ற அந்தத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். இப்படி மாவட்ட ஆட்சியர்களுடைய அலுவலகத்திலேயே குடும்ப அட்டைகள் அச்சிடப்படுகின்ற காரணத்தினால் *15* இலட்சத்து *38* ஆயிரத்து *841* புதிய குடும்ப அட்டைகள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 15] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

ஒரு கடையில் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்பதைப் பொது மக்களே தெரிந்துகொள்ளக்கூடிய வகையில், transparent administration என்று சொல்வார்களே, அவ்வாறு தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு திட்டத்தையும் நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள், ஏன் தன் குடும்பத்தார்கூட இடறிப் பார்க்காதவர்கள் அரவாணிகள், திருநங்கைகள்; அத்தகையோர் இந்தியாவில் 60 இலட்சம் பேர் வாழ்கிறார்கள் என்கிற நிலையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுக்கும் குடும்ப அட்டை வழங்கக்கூடிய ஒரு புரட்சிகரமானத் திட்டத்தை உருவாக்குகிறபோது, (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். Sex என்ற Column-ல் Female, Male என்று இருக்கிறதே இவர்களுக்கு எதை போட்டுக்கொள்வது, எந்த வகையிலே இவர்களை இடம் பெறச் செய்வது என்று அதிகாரிகள் கேட்டபோது, இது தலைவர் கலைஞரின் காலம், ஆகையினால் Transexual—Third Gender—என்று இடம் பெற வைத்த சமூக நீதியும் இந்தத் திட்டத்திலே உள்ளடங்கியிருக்கிறது.

இன்னும் ஜனநாயகத்திலே அரசு கொண்டுவரும் சட்டங்கள், திட்டங்களில் மக்களுக்குப் பயன்தரக்கூடிய பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு இந்தத் துறையிலே நடைமுறைப்படுத்தி இருக்கிறது. ஒரேயொரு நிமிடம்; ஒரு செய்தியை மட்டும் நான் பதிவு செய்கிறேன். நம்முடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியில் விநியோகிக்கப்படுகின்ற ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தைப் பற்றி பத்திரிகையிலே வர்ணிக்கிறபோது சொல்கிறார்கள்—இந்து பத்திரிகையில் "The Chief Minister, Kalaignar is riding the crest of the wave of popularity", என்று எழுதப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் "மக்கள் செல்வாக்கு அலையின் உச்ச உயர்முகத்திலே வீற்றிருக்கிறார்" என்று அப்பத்திரிகை சொல்லியுள்ளது. அதுமட்டுமல்ல, சில தினங்களுக்கு முன்னால் ஒரு வாரப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. ஒரு மூதாட்டி அந்தப் பத்திரிகைக்கு பேட்டி கொடுக்கிறார்; பெண்ணாகரம் தொகுதியைச் சேர்ந்தவர். "ஐயா, நாங்கள் மலை அடிவார மக்கள். கரடுகளுக்கு நடுவே வாழ்பவர்கள். மழையோ குறைவு; மழை பெய்தால் கேழ்வரகு விதைப்போம், விளைந்தால் வீடு வந்து சேரும். அந்தக் கேழ்வரகு எங்களுக்கு களியாகவும்,

கூழாகவும் ஒரு வருடத்திற்குக் கை கொடுக்கும். தீபாவளி, பொங்கலுக்குத்தான் எங்கள் குழந்தைகள் அரிசிச் சோற்றையே பார்ப்பார்கள். ஆனால், மகராசன் கலைஞர் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டம் கொண்டு வந்தார்; இப்போது நாங்கள் அரிசிச் சோற்றைச் சாப்பிடுகிறோம்" என்று சொல்கிறார். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய திட்டங்கள் மக்களின் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கின்றன என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில தினங்களுக்கு முன்னால் மத்திய அரசால் நடத்தப்பட்ட முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், இந்தத் துறையை மேலும் பொலிவுபடுத்த வேண்டும், இன்னும் இந்தத் திட்டத்தை நவீனமயப்படுத்த வேண்டும், இன்னும் இதற்கான சேமிப்புக் கிடங்குகள் வைப்பதற்கு 50 சதவிகிதம் மத்திய அரசாங்கம் மானியம் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏன், அவர் வகிக்கின்ற உள்ளாட்சித் துறையில் முன்பு நீதிமன்றத்தினுடைய கண்டனங்களுக்கு ஆளான பலர் இந்த நாட்டிலே இருக்கிறபோது, 'தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தை இவ்வரசு சிறப்பான வகையிலே செயல்படுத்தி வருகிறது; தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் நல்ல பலன்களைத் தந்து கொண்டிருக்கிறது, இந்தத் திட்டத்தைத் செயல்படுத்துவதில் தமிழகம், மேகாலயா ஆகிய மாநிலங்கள் வரையறை செய்துள்ள வழிகாட்டு முறைகளை இந்தியாவில் உள்ள இதர மாநிலங்களும் பின்பற்றலாம்' என்று உச்ச நீதிமன்றம் யோசனைகளைக் கூறியிருக்கிறது. அத்தகைய துறை நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற உள்ளாட்சித் துறை என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கோரிக்கையைச் சொல்லிவிடுகிறேன். மயிலாடுதுறையில் ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வருடைய பரிந்துரையோடு என்னுடைய குத்தாலம் தொகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வருவாய்

வட்டத்தைச் சென்ற ஆண்டு, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தோற்றுவித்தார்கள். அந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது; இடம் இருக்கிறது. அதற்கு நீங்கள் இந்த ஆண்டு புதிய கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை ஒன்று உள்ளது. நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, 1996 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் ஒரு பேருந்து நிலையம் வேண்டுமென்று கேட்டோம். ஒரு full fledged bus stand என்று சொல்வார்களே, அதைப்போல. அப்போது அதற்கான இடத்தைத் தேர்வு செய்ய முடியாமலும், நகராட்சியால் பணம் செலுத்த இயலாமலும் அந்தத் திட்டம் அன்றைக்குக் கைவிடப்பட்டது. அதற்குப் பின்னால், 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவர்கள் அதற்கு அடிக்கல் நாட்டினார்கள், அடிக்கல்லையே இன்றைக்குக் காணோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மயிலாடுதுறையை நன்கு அறிந்தவர்கள். மயிலாடுதுறை என்பது மற்ற பேருந்து நிலையங்களைப்போல் இல்லாமல், அதுவொரு ஜங்ஷன் பகுதியாக உள்ளது; சந்திக்கக்கூடிய பகுதி. திருவாரூர், தஞ்சாவூர், சிதம்பரம் போன்ற பகுதி மக்கள் வந்து இறங்கிச் செல்லக்கூடிய அந்தப் பகுதியில் இன்றைக்கு நகராட்சி, அருள்மிகு பரிமள ரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தை வாங்க இருப்பதால், ஒரு புதிய பேருந்து நிலையத்தை அங்கு அமைத்துத் தருவது பற்றி உள்ளாட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிப்புச் செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

கூனன் நிமிர்ந்தான், குருடன் கண் பெற்றான், ஊமை பேசினான், முடவன் நடந்தான், செவிடன் கேட்டான், நேற்றுவரை ஊனமுற்றவன் இன்றுமுதல் மாற்றுத் திறனாளி; பெயர் மாற்றம் மட்டுமல்ல, அவன் தலையெழுத்தையே மாற்றம் செய்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மரத்திலிருந்து ஆப்பிள் விழுவது இயற்கை. அதை எடுத்து பசியாற்றிக்கொண்டனர் பலர். ஆப்பிள் ஏன் மேலே செல்லவில்லையென்று சிந்தித்தான் நியூட்டன். புவி ஈர்ப்புவிசை விதி கிடைத்தது. நம்முடைய சமுதாயத்திலே உள்ளவர்கள்

ஏற்றத்தாழ்வுகளையும், பிரச்சினைகளையும், நிகழ்வுகளையும் பார்த்துக்கொண்டுதான் சென்றார்கள். ஆனால் ஏற்றத்தாழ்வுகளைச் சமதளப்படுத்தி, அறியாமை இருள் அகற்றி, தீண்டாமைக் கொடுமையை ஒழித்து, சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் மனித நேயத்துடன் செயல்பட்டு வரும் ஒரு சமூக விஞ்ஞானி இந்தியத் திருநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒருவர்தான் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார். அதற்கு முன்பாக திரு. வே. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்கள் பேசும்போது குடும்ப அட்டைகள் விண்ணப்பித்தவர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஆய்வு செய்து அதனை அச்சடித்து வழங்குகிறார்கள் என்று சொன்னார்கள். எனது கரூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் குடும்ப அட்டை விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை சுமார் 4000 ஆகும். ஆனால், கடந்த ஓராண்டில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டவை 136. கரூர் மாவட்டத்தில் எனது கரூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை அது ஏற்றுமதி நகரமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. Visa போன்றவற்றைப் பெறுவதற்கும் அந்தக் குடும்ப அட்டைகள் தேவை. ஓராண்டுக்காலமாக பரிசீலனை செய்து, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தக் குடும்ப அட்டைகள் உண்மையான குடும்ப அட்டைகள்தானா என்று ஆய்வு நடத்திய பிறகும் ஓராண்டுக்காலமாக இதுவரை வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றன என்பதை அவையின் கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில் தவறான அட்டைகளைப் பிடிக்க வேண்டும் என்ற காரணத்தினால் அந்த அலுவல் காரணமாக இடையிலே இரண்டு மாத காலம் புதிய அட்டைகள் வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து குடும்ப அட்டைகள் வழங்க வேண்டும் என்று

சொல்லி, இப்போது மார்ச் மாதத்திலிருந்து கடந்த மூன்று மாதங்களில் எடுத்துக்கொண்டாலும்கூட சுமார் 85,000 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கரூரிலும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதுகுறித்து எனது பதிலுரையில் எவ்வளவு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

***திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு, கூட்டுறவு நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கைகள் எண் 12, 13-ல் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த இந்த அவைக்கும், தங்கத் தலைவி, தியாகத் தலைவி, இரண்டாவது காந்தி, இரண்டாவது இரும்பு மங்கை, உலகம் போற்றும் உத்தமத் தலைவி, நல்ல சட்டங்கள் நாளும் அறிவிக்கும், நான் வணங்கும் அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய மக்களின் இதயத் துடிப்பாய், இளைஞர்களின் எழுஞாயிறாம், ஏழைகளின் இதய வேந்தனாம், தலித் வீட்டில் சப்பளாங்கால் போட்டு ச்ப்பாத்தியும், சாலை ஓரக் கடைகளில் சம்சாவும் சாப்பிடும் சாமானிய மக்கள் தலைவர் ராகுல் காந்தி அவர்களையும் வணங்கி, அன்புத் தலைவர் நைனா, அக்கா யசோதா, அண்ணன் பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சக சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் தலைவர் சிகப்பு ரோஜா கிருஷ்ணசாமி, தன்மானத் தலைவர் E.V.K.S., மக்கள் தலைவர் ஐயா வாசன் அவர்களையும், பொருளாதார மேதை, நடமாடும் கம்ப்யூட்டர், உள் துறை அமைச்சர் மரியாதைக்குரிய ப. சிதம்பரம் ஐயா அவர்களையும் வணங்கி, நல்லதை நினைப்பார், நினைத்ததை முடிப்பார், முடித்த பின் களிப்பார், கலைஞரைப் போன்றோர்.

இளமைத் துடிப்புள்ளவர்களை வழி நடத்தும் அனுபவத் துடிப்புள்ள தலைவர்களால்தான் நாட்டை, மொழியை, கலாச்சாரத்தை, பண்பாட்டை, நாகரிகத்தை, கட்டமைப்புகளை, கலை நயத்தை, சரித்திரச் சான்றுகளை, காலத்தை வெல்லும் திட்டங்களை, குரளோவியத்தை, வள்ளுவர் கோட்டத்தை, குமரிக் கடலில் அய்யன் திருவள்ளுவர் சிலையை, பார்ப்போர் எல்லாம் வியக்கும் தமிழக சட்டமன்றக் கட்டடத்தை, தமிழகத்தின்

வெள்ளை மாளிகையைச் சாதிக்க முடியும். இன்று செம்மொழி மாநாட்டின் countdown துவங்கிவிட்டது. இன்றிலிருந்து 70-வது நாள் மாநாடு. தஞ்சைக் கோயிலும், தமிழும் தந்தான் இராஜராஜன், இராஜேந்திரசோழன் கங்கைகொண்டான், கடாரம் வென்றான், கடல் கடந்தான். சுமத்திரா, பர்மா, இலங்கை வென்றான். இன்முகம் காட்டி அனைவரின் இதயத்தையும் கொள்ளைகொள்ளும் சாதனை புரிந்து சரித்திரம் படைக்கும் சென்னை முன்னாள் மேயர் மேம்பாலங்களின் மன்னன், சென்னையை சிங்கப்பூராக மாற்றியமைத்த தளபதியே, ஓய்வுக்கே ஓய்வு கொடுத்து பம்பரம்போல் சுற்றிச் செயல்படும் துணை முதல்வரே, எல்லாம் நீயே என்று எல்லோரும் ஏற்கும் வல்லமை படைத்த தளபதியே, நான்கு மணி நேரம் நின்றுகொண்டே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிதி வழங்கும் உங்களுக்கு வணக்கம் வேந்தே!

பிற்பகல் 12-30

ஆணவத்தால் அழிந்தவர்கள் ஆயிரம் கோடி. அழிந்த பின்னும் திருந்தாதார் அறிவில்லாதாரடி. அனைவரும் நம்புவதைப்போல, அவர்கள் மனதை ஆழமாகப் படி. ஆய்வில் தேடியவர்களை ஆருயிர் நண்பர்களாகப் பிடி. அப்படிப் பிடித்தவர்களை எந்நாளும் பிரியாதே. இது மதி. மத்திய அரசும், மாநில அரசும் இப்படித்தான் இன்று நடந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் போடும் எந்தச் சட்டமும் அல்லது ஆணையும் சமுதாயத்தினுடைய அடித்தட்டு ஏழை மக்களுக்கு ஏதாவது பலனைத் தரவேண்டும்; இல்லையென்று சொன்னால், அந்தச் சட்டத்தால் எந்தப் பலனும் இல்லையென்று சொன்ன மகாத்மா காந்தியடிகளின் சொல்லுக்கேற்ப, இன்றைக்கு நல்ல நிதிநிலை அறிக்கையை, அடித்தட்டு மக்களுக்குத் தந்திருக்கின்ற நல்லவர், அமைதியானவர், ஆற்றல் மிக்கவர், பேராசிரியர், பொருளாதாரப் பேராசிரியராக விளங்கிக் கொண்டிருக்கும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் போன்றோரின் அதே பள்ளியில் படித்திருக்கின்ற இனமானத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சாப்பாடு என்பது சாதம், சாம்பார், ரசம் என்று எப்படி ஒன்றையொன்று பிரிக்க முடியாததோ அதைப்போல, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஒன்றோடொன்று பிரிக்க முடியாதது. பணக்காரர்களுக்கு, சமுதாயத்தின்

2010 ஏப்ரல் 15] [திரு. பெ.சு. விஜய்குமார்]

உயர்மட்டத்தில் இருப்பவர்களுக்கு தேசிய வங்கி. ஏழைத் தொழிலாளர், விவசாயி, விவசாயத் தொழிலாளர், சிறு விவசாயி இப்படிப்பட்ட அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் ஏற்றத்தையும், மாற்றத்தையும் செய்வது கூட்டுறவு வங்கி, கூட்டுறவுத் துறை. இட்லி கடை, பங்க் கடை, சலவைக் கடை, சவரத் தொழிலாளர் கடை வைக்கவும், தச்சர், கருமார் போன்றோருக்கும் கடன் தரும் துறை. அரசாங்கம் அறிவிக்கும் அத்துணைத் திட்டங்களையும் செயல்படுத்தும் துறை. பேன்ட், சர்ட் போட்டவர்க்கு தேசிய வங்கி. சட்டைகூட போடாத, துண்டு போட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு வங்கி. நகர்ப்புற வங்கி, கூட்டுறவு மைய வங்கி, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் இவை அனைத்தும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கப்பட்டவை. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு ஆகியவை தமிழக ஏழை மக்களுக்குக் கிடைக்கும் வரை எனக்கு எந்த சுகமும் வேண்டாமென்று வாழ்ந்தாரே, பெருந்தலைவர் காமராசர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களால் உருவாக்கப்பட்ட கூட்டுறவுத் துறை இன்று கலைஞர் அவர்களின் ஆட்சியில் சிறப்பாகச் செயல்படுகின்றது.

அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், பாமாயில், 50 ரூபாய்க்கு 10 வகை மளிகைப் பொருட்கள், கோதுமை, மைதா, உரம், விதை, இரும்பு, சிமெண்ட் என இப்படி ஏழை மக்கள், அடித்தட்டு மக்கள் பயன்படுத்தும் பொருட்களை நியாயமான விலையில் வழங்குகின்ற துறையாகவும் இன்றைக்கு கூட்டுறவுத் துறை விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்தத் துறையிலே உழைத்த ஊழியர்களுக்கு ஓய்வூதியம் தருவதாக இத்துறையினுடைய முன்னாள் அமைச்சர், வெள்ளை ரோஜா போன்ற மலர்ந்த சிரிப்புக்குச் சொந்தக்காரர், மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்கள் 3-5-2000 அன்று அவையிலே அறிவித்தார்கள். ஆனால், இன்று வரை அது நடைபெறவில்லை. இப்போது அது நடக்குமா என்று இந்த அவையிலே நான் கேட்க விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையிலே ஓய்வு பெற்றவர்கள், 70 வயதைக் கடந்தவர்கள் 5 ஆயிரம் பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கருணைத் தொகையாக மாதம் மூவாயிரம் ரூபாயைத் தரவேண்டுமென்று மாண்புமிகு கருணையுள்ளம் கொண்ட கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2006 தேர்தல் அறிக்கையிலே கூட்டுறவுக் கடன் வாங்கிய நபர் இறந்துவிட்டார் என்று சொன்னால், அந்தக் கடன் இரத்து செய்யப்படும் என்று தெரிவித்த கலைஞர் அவர்கள் இன்றைக்கு அதை அறிவித்து, சட்டமாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரிசிக் கடத்தலைத் தடுக்கும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு விடியற்காலையில் கடத்தலை வேட்டையாடிய செய்தியை நாம் பார்த்திருக்கிறோம். தினம், தினம் கடத்தலைத் தடுக்கும் செய்தியைப் பார்க்கிறோம். திருவண்ணாமலை மாவட்டத்தில், அண்ணாமலையார் தீபத்திற்கு அருகில் கல்வி தீபத்தை ஏற்றிய அமைச்சர், கொடை வள்ளல், உழைப்பால் உயர்ந்தவர், ஓயாமல் உழைப்பவர், கலைஞரின் கைவேல், தளபதியின் நம்பிக்கையாளர், பதுங்கும் வேல், பாயும் வேல், துறையைச் சொன்னாலே பெயர் தெரியும். உணவுத் துறை என்றாலே வேலு என்கின்ற நிலைமையை உருவாக்கியவரே! ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; மலைவாழ் மக்களுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய்; 400 குடும்பக் கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை; 150 கார்டுகளுக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை என இப்படியெல்லாம் தந்து, கடந்த ஆண்டு 4 ஆயிரம் கோடி மானியத்தை இந்த ஆண்டு 3,750 கோடி ரூபாயாகக் குறைத்து, விலைவாசியைக் குறைத்திருக்கின்ற அமைச்சருக்கு என்னுடைய வணக்கம்.

பிற்பகல் 12-35

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், கூட்டுப் பொறுப்புக் குழு சிறப்பான திட்டமாகும். உணவுத் துறையிலே மாவட்டங்களிலேயே குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்திலும் வழங்கப்படுகின்றன. அரவாணிகளுக்கும் குடும்ப அட்டைகள்; போலி குடும்ப அட்டை வைத்துள்ள நியாய விலைக் கடை விற்பனையாளர்மீது தக்க நடவடிக்கை; போலி குடும்ப அட்டை குறித்த தகவல் அளிப்பவர்களுக்குத் தக்க சன்மானம்; கோவை மற்றும் ஈரோடு மலைப் பகுதிகளில் மட்டுமல்ல, ஜவ்வாது மலையிலும், என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய ஜமுனாமரத்தூர் மலையிலும் வாழும் மலைவாழ் மக்களுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் கொடுத்த வள்ளலே வாழ்க! முந்தைய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 39 இலட்சம் குடும்ப அட்டைகள்,

இந்த அரசால் வழங்கப்பட்ட 15 இலட்சம் குடும்ப அட்டைகள், மொத்தம் 54 இலட்சம் கார்டுகளுக்கும் கொடுத்து வந்த ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை முதலில் 3 லிட்டர் ஆக்கி இன்றைக்கு 5 லிட்டராக அறிவித்து இருக்கிற தங்களுடைய சாதனையைப் பாராட்டுகிறேன்.

நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் கிராமக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்கள் பெற்றுள்ள பண்ணை சாரா கடன் ரூபாய் 2 இலட்சம் வரை முழுவதுமாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வீடு கட்டும் சங்கத்திலே கடன் பெற்றவர்களுக்கு நிலுவையிலே இருக்கின்ற வட்டி, அபராத வட்டியை முழுமையாகத் தள்ளுபடிச் செய்யவேண்டும். ஜப்தி நடவடிக்கையை உடனடியாக நிறுத்தவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது வீடுகள் எல்லாம் மிக வேகமாக ஏலம் போடப்படுகின்றன. அதை நிறுத்தி, கடனைக் கட்ட கால அவகாசம் தர வேண்டுமென்று இந்த அரசைக் கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இலாபத்தில் செயல்படும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று இந்த அவையிலே அளித்திருக்கிற புத்தகத்திலே 5 ஆம் பக்கம், 6 ஆம் பக்கம், 7 ஆம் பக்கம், 8 ஆம் பக்கம், 9 ஆம் பக்கம், 10 ஆம் பக்கம், 11 ஆம் பக்கங்களிலே இந்தத் துறையிலே இலாபம் வந்ததைத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். எனவே, இலாபம் வருகிற இந்தத் துறையிலே ஏழை விவசாயிகளுக்குப் பலன் அளிக்கின்ற இந்த அரசாங்கம், இதையெல்லாம் செயல்படுத்துகின்ற அந்தத் துறை ஊழியர்களுக்கும் நீங்கள் அதன் பயனைத் தரவேண்டும். அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டு, பேராசிரியர் திரு. வைத்தியநாதன் கமிட்டியினுடைய பரிந்துரையை ஏற்றுக்கொண்ட காரணத்தினாலே இந்த அரசுக்கு, கடந்த ஆண்டு 1008 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) மானியமாக வழங்கி கூட்டுறவுத் துறையை வாழ வைத்துள்ளது திரு. மன்மோகன் சிங் அரசு, அன்னை சோனியா காந்தியினுடைய அரசு.

மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள கூட்டுறவு விசைத் தறிக் கூடத்திலே தொழிலாளர்களுக்குச் சம்பளமாக தினமும் ரூபாய் 114 கொடுக்கப்படுகின்றது. அதை ரூபாய் 300 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்?" காந்தி, நேரு, காமராஜ், அந்த வரிசையிலே இன்றைக்குக் கலைஞர் நிற்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 1940-களில் பஞ்சம் வந்தபோது பிண்ணாக்கு, கீரை மட்டுமே மனிதனுக்கு உணவாகக் கிடைத்தன என்று பெரியவர்கள் சொல்லிக் கேட்டு இருக்கிறேன். இன்றைக்கு ரேஷன் அரிசி மாடுகளுக்குக்கூட கூழாகப் போகின்ற அளவிற்கு, தவிடைவிட, உப்பைவிட குறைவான விலையிலே இன்றைக்கு அரிசி வழங்கப்படுகின்ற காரணத்தினால்தான் மனிதனும் வயிறார உண்கிறான், மாக்களும் வயிறார உண்ணுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் வேலைப் பளு அதிகம் என்பதால் மேலும் ஒரு ஊழியர் நியமிக்கப்படவேண்டும். 1-4-2008-ல் வழங்கப்பட்ட அடிப்படை ஊதியத்திலே 10 சதவிகிதம் உயர்வையளித்து அதிலே 7.5 சதவிகிதம் தரப்பட்டது. மீதமுள்ள 2.5 சதவிகிதத்தை உடனடியாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகளில் காய்கறிகளும் நியாய விலையில் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கூட்டுறவுப் பண்டகச் சாலைப் பணியாளர்கள், தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் சட்டமன்றத் தொகுதியிலே விவசாயிகள் 100 சதவிகிதம் உள்ளனர். அங்கு தொழிற்பேட்டையும், தொழிற்சாலையினுடைய ஒரு பிரிவும் ஏற்படுத்தித் தர வேண்டும். விவசாய ஆராய்ச்சி மையம், இன்ஜினியரிங் காலேஜ், பாலிடெக்னிக், பலதுறை அரசுக் கல்லூரி, அரசுக் கலைக் கல்லூரி, டைடல் பார்க் இத்தனையும் கேட்கவில்லை; இதிலே ஏதாவது ஒன்றை, கேளூரிலே இருக்கக்கூடிய அரசுக்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலத்திலே ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கேளூர், களம்பூர் ஆகிய இரண்டு ஊர்களிலும் மின்சாரத் துறைக்கு நிலம் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே இரண்டு sub-stations அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை, போளூர், ஜமுனாமரத்தூர் வழியாக பெங்களூருக்கு ஒரு பஸ் விட வேண்டுமென்று நீண்ட நாட்களாகக்

கேட்டுக்கொண்டு இருக்கிறேன். தருகிறேன், தருகிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கட்டாயம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போளூரிலே நெல் கொள்முதல் மையம் ஒன்றைப் புதியதாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்திமூர் முதல் அமிர்தி வரை மின் வேலி அமைத்து யானைகளுடைய அட்டகாசத்திலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

வேலூர் நாராயணி பீடம், அமிர்தி வனவிலங்குப் பூங்கா, படவேடு செண்பகத்தோப்பு அணைக்கட்டு, திருவண்ணாமலை-சாத்தனூர் அணை ஆகிய இந்த இடங்களை இணைத்து சுற்றுலாத் தலமாக அறிவித்து 40 அடி சாலை அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். செண்பகத்தோப்பு அணைக்கட்டை விரைவிலே திறப்பதற்கும், அதை மையமாக வைத்து 20 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று ஆய்விலே இருக்கிறது, அதையும் செயல்படுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

களம்பூரிலே உள்ள சுகாதார நிலையத்திலே நாளொன்றுக்கு 700-க்கும் மேற்பட்ட நோயாளிகள் வருகிறார்கள். அங்கு 30 படுக்கைகள் கொண்ட கட்டட வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

களம்பூரிலே 30 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1994-ல் அனுப்பப்பட்ட மதிப்பீடு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விஜயகுமார், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. பெ.சு. விஜயகுமார்: அமிர்தி அணைக்கட்டு கட்டி திறக்கப்பட்டால் வேலூர் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை தீரும். அடுக்கம்பாறை மருத்துவமனைக்குத் தண்ணீர் கொடுக்கின்ற சோழவரம், அரசம்பட்டு, நஞ்சுகொண்டாபுரம் ஏரிகளை ஆழப்படுத்தி, சுத்தப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற 6 ஆயிரம் பேருக்கும் நிரந்தர ஊதியமும், நிரந்தரப் பணியும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாஸ்மாக் கடையிலே பணிபுரிகின்ற ஏழைகளுக்கு ஊதிய உயர்வு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா மாளிகையிலே 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுகின்ற தற்காலிகப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வும் நிரந்தர பதவியும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

108 எண் சேவை ஆம்புலன்ஸ் வேன் டிரைவர்களுக்கு அடிப்படைச் சம்பளமும், வேலை நேரமும் நிர்ணயித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையில் பள்ளிகளுக்குப் போதுமான நாற்காலி, மேசை, பெஞ்ச் எல்லாம் தருவேன் என்று கடந்த ஆண்டே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் வந்து சேரவில்லை. அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிகள், மருத்துவமனைகள், கூட்டுறவுச் சங்கங்கள்....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விஜயகுமார், உரையாற்றியது போதும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள். (குறுக்கீடு) திரு. விஜயகுமார், மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) விரைவாக உரையை முடியுங்கள்.

திரு. பெ.சு. விஜயகுமார்: தெருவிலே பிச்சை எடுத்தால் சிறைத் தண்டனை என்ற சட்டத்தை ஆந்திர அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது. தமிழக அரசும் அவ்வாறு சட்டத்தை அறிமுகப்படுத்துமா என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்வோர் வாணிபக் கழக ஊழியர்களுக்கும், தினக் கூலித் தொழிலாளர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தி, கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்த்தி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டிலே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சிறந்த ஆட்சியையும், நல்லாட்சியையும் வழங்கிக் கொண்டிருக்கின்ற கலைஞர் அவர்களை வாழ்த்தி, வணங்கி, அதற்கு உறுதுணையாக இருக்கின்ற மத்திய அரசினுடைய மாண்புமிகு பிரதம அமைச்சர் திரு. மன்மோகன் சிங் அவர்களுக்கும், அன்னை சோனியா காந்தி

அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010. . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம், உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல எண்ணத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதியதாக சட்டப் பேரவையைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பிறகு எனது அறைக்கு வாருங்கள். பேசிக்கொள்ளலாம்.

திரு. கி. ஆறுமுகம்: இல்லை, இல்லை, இது ஒரு தகவல்தான். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவையில் பேசவேண்டிய வார்த்தையா? திருமதி கமலாம்பாள், நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழினப் போராளி தமிழினக் குடிதாங்கி இனமானக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, கூட்டுறவே நாட்டுயர்வு என்பது முதுமொழியாகும். கூடித் தொழில் செய்தால் கோடிப் பணம் கிடைக்கும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திருமதி பெ. கமலாம்பாள்: சிறுகச் சிறுக முதலீடு செய்து உழைத்து உழைத்துப் பெருகிடு என்ற முதுமொழிக்கிணங்க செயல்படுவதே கூட்டுறவாகும்.

காஞ்சிபுரம் நகரில், காமராஜர் வீதியில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சுரங்கப் பாதை அமைத்தது; காஞ்சிபுரம் பொன்னேரிக்கரையில் நான்கு வழிப் பாதை அமைத்தது; காஞ்சிபுரத்திற்கு வெளியே புறவழிச்சாலை அமைத்தது; காஞ்சிபுரம் அரசுத் தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் அமைத்தது; மருத்துவமனையை சீரமைப்புச் செய்தது; செவிலியர், மருத்துவர்களை நியமனம் செய்தது; மருத்துவர் சின்னய்யா அவர்கள் அண்ணா புற்று நோய் மருத்துவமனைக்கு மருத்துவமனைக் கட்டடம் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்கியது; விளையாட்டு அரங்கத்திற்கு மேற்கூரை சீரமைத்தது; நீச்சல் குளம் கட்டியது; டென்னிஸ் உள் அரங்கம் கட்டியது; போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகம் கட்ட நிதி ஒதுக்கியது; மாவட்ட நீதிமன்றத்தை இரண்டாகப் பிரித்து காஞ்சிபுரத்திற்கு மாற்றியது; அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெசவாளர்களுக்குப் பட்டுப் பூங்கா அமைத்துக் கொடுத்தது; பொறியியல் கல்லூரி ஏற்படுத்திக் கொடுத்தது; ஒக்கப்புரந்தான் குளம், சர்வதீர்த்த குளம், ரங்கசாமி குளம் ஆகிய குளங்களைச் சீரமைத்தது; ஏகாம்பரநாதர் கோயில், காமாட்சியம்மன் கோயில், பெருமாள் கோயில் நடைபாதைகளில் மின் விளக்குகள் அமைக்கத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்தது என மூன்று ஆண்டுகளாக நான் கேட்ட பல கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 12-45

கூட்டுறவு வங்கிகளில் வீடுகளை அடமானம் வைத்துக் கடன் பெற்றவர்களின் தொழில் பாதிக்கப்பட்டதால் கடனைச் செலுத்த இயலவில்லை. கடன் பெற்றவர்களின் வீடுகளை ஏலம் விட தற்போது அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஏல நடவடிக்கையை அவசிய, அவசரம் கருதி அரசு உடனடியாக

நிறுத்த வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ரூபாய் 2 இலட்சம் வரை கடன் பெற்றவர்களுக்குக் கடனை முழுவதுமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். ரூபாய் 3 இலட்சத்திற்கு மேல் கடன் பெற்றவர்களுக்கு வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து ஏற்கெனவே செலுத்தியுள்ள தொகையை அசலுக்குக் கணக்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

காஞ்சிபுரம் கூட்டுறவு நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. திட்டத்தில் இல்லாத அனைத்து நெசவாளர்களுக்கும் முதியோர் ஓய்வூதியம் வழங்க வேண்டும். கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்யும்போது அதற்குண்டான நஷ்ட ஈட்டை அந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு உடனடியாக வழங்கினால்தான் கூட்டுறவு வங்கிகள் செயல்படும். சில சங்கங்களில் வேலை பார்க்கும் பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்க இயலாத நிலை உள்ளது. ஆகவே, அரசு நஷ்ட ஈட்டை வழங்கி புத்துயிர் அளிக்க வேண்டும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் வேளாண் கடன் வழங்கும் வங்கிகளில் காலந்தாழ்த்தாமல் உரிய நேரத்தில் விண்ணப்பித்த விவசாயிகள் அனைவருக்கும் கடன் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தொடக்க வேளாண்மை வங்கியின்கீழ் செயல்பட்டுவரும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணியாற்றி வரும் விற்பனையாளர், எடையாளர் போன்ற பணியாளர்களையும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுபவர்களையும் அரசு ஊழியராக்க வேண்டும். அதேபோல், நியாய விலைக் கடைகளில் பணிபுரிபவர்களை நிருவகிக்க தனித் துறை உருவாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம், சேலம், ஈரோடு, தருமபுரி உள்ளிட்ட பல மாவட்டங்களில் பல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளிட்ட பல கூட்டுறவுச் சங்கங்களும் நலிவடைந்து, மூடப்பட்டு வருகின்றன. அவற்றுக்குக் கூடுதல் நிதி வழங்கி, சிறப்புக் கவனம் செலுத்தி புத்துயிரூட்டி அவை மீண்டும் செயல்பட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் கடன் பெற்று வீடு கட்டியவர்கள் கடன் மற்றும் வட்டியினை செலுத்த முடியாத நிலையில் உள்ளனர். ஆகவே, இவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும். நலிவடைந்த

கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற காசுக் கடன் மற்றும் வட்டியினைத் தள்ளுபடி செய்து புதிய காசுக் கடன் வழங்கி அச்சங்கங்கள் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும்.

பட்டுச் சேலைகளுக்குக் கூடுதலாக 10 சதவீத தள்ளுபடி அளிக்கையில் உச்சவரம்பாக ரூபாய் 2,00 அளவுக்கு மட்டுமே தள்ளுபடி செய்யப்படுகிறது. இதனை உச்சவரம்பு இல்லாமல் பத்து சதவீத தொகை அளவிற்குத் தள்ளுபடி செய்தால் அதிக அளவில் பட்டுச் சேலைகள் விற்பனையாகும். காஞ்சிபுரத்தில் ஜரிகைத் தொழிலினை விரிவாக்கம் செய்து முழுமையாக உற்பத்திச் செய்யும் அளவில் விரிவுபடுத்தி, பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான ஜரிகையினைக் கொள்முதல் செய்யும் அளவிற்கு உற்பத்திச் செய்ய வேண்டும்.

அனைத்துக் கூட்டுறவு வங்கிகளிலும் 30 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து ஓய்வு பெற்று வறுமையில் வாடும் ஊழியர்களுக்கு அவர்களின் வாழ்க்கை வளம் பெற கனிவுடன் கருணை ஓய்வூதியம் ரூ.2,000/- வழங்க கேட்டுக்கொள்கிறேன். அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் 30 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் போலிக் குடும்ப அட்டைகள் ஒழிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அந்நடவடிக்கை எடுக்கப்பட்டதா? தமிழ்நாட்டில் மொத்த குடும்ப அட்டைகள் எத்தனை? அதில் உண்மை அட்டைகள் எத்தனை? போலிக் குடும்ப அட்டைகள் எத்தனை? கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது எத்தனை? எப்போது போலிக் குடும்ப அட்டைகள் முழுவதுமாக ஒழிக்கப்படும்? பல மாவட்டங்களில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் 50 சதவீதம், 60 சதவீதம்தான் என்று கூறப்படுகிறது. அப்படியானால் ஏழைகள் அனைவருக்கும் எப்படிக் கிடைக்கும்? எனவே முழு அளவில் வழங்க வேண்டும்.

பொது விநியோகக் கடைகளில் ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளது. ஒரு ஊழியர் இரண்டு கடைகளைப் பார்க்க வேண்டியுள்ளது. எனவே காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். கூட்டுறவு பண்டகசாலையின்கீழ் இயங்கிய கடைகளை நலிவடைந்த தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு ஒதுக்கியுள்ளார்கள். தொடக்க வேளாண்மை வங்கிகளில் நிதி வசதி

2010 ஏப்ரல் 15] [திருமதி பெ. கமலாம்பாள்]

இல்லாத காரணத்தால் குறித்த காலத்தில் முறையாக விநியோகம் செய்ய முடிவதில்லை. எனவே, கூட்டுறவு பண்டகசாலைகளின்மூலம் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும். அத்தியாவசிய பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களை எடை குறைவின்றி வழங்க, பாக்கெட்டில் அடைத்து வழங்க வேண்டும்.

பிற்பகல் 12-50

கிராமப்புறங்களில் உள்ள ரேஷன் கடைகளுக்கு இடைப்பட்ட தூரம் இரண்டு கிலோ மீட்டர் என உள்ளது. இதனால் கிராம மக்கள் ரேஷன் பொருட்கள் வாங்கச் சிரமப்படுகிறார்கள். ரேஷன் அட்டைகள் அதிகமாக உள்ள கடைகளை இரண்டாகப் பிரித்து, தமிழகம் முழுவதும் 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு கடை வீதம் பிரித்து, பணியாளர்களை நியமனம் செய்து பொருட்களை வழங்க வேண்டும். மேலும், அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் ரேஷன் கடைகளைப் பிரித்து புதிய கடைகளை ஏற்படுத்த வேண்டும்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, அரசு வழங்கும் ஊதியம் மற்றும் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. அரசு நிறுவனங்களான குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்குவதுபோல் இவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 30 சதவிகிதப் பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளன. இப்பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் திருட்புட்குழி, சித்தேரிமேடு ஆகிய ரேஷன் கடைகளையும், காஞ்சிபுரம் நகரில் உள்ள பல்லவர்மேடு ரேஷன் கடையையும் இரண்டாகப் பிரித்து பகுதி நேர ரேஷன் கடை ஏற்படுத்த வேண்டும்.

கூட்டுறவு, பொதுத் துறை சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு சம்பந்தமாக 2008ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தை நடத்த இருந்ததை, 2010 ஆம் ஆண்டாக மாற்றி அரசாணை எண் 122, நாள் 9-10-2009-ல் ஆணை வெளியிடப்பட்டது. இதுவரை ஊதிய உயர்வு பற்றி சர்க்கரைத் துறை ஆணையம் எந்தவித

நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரே நிறுவனத்தில் இரண்டு வகையான முரண்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறது. அதிகாரிகளுக்கு, அரசுக்கு இணையான ஊதியமும், தொழிலாளர்களுக்கு முத்தரப்பு ஒப்பந்தப்படியும் வழங்கப்படுகிறது. ஊதிய உயர்வும், அகவிலைப்படியும் வழங்கப்படாமல் குறைந்த சம்பளத்தில் தொழிலாளர்கள் குடும்பம் நடத்துகிறார்கள். 30 ஆண்டுகளாகப் பதவி உயர்வும், சம்பள உயர்வும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். நமக்கெல்லாம் இனிப்பை வழங்குகின்ற அவர்களுக்கு இனிப்பான செய்தி வழங்கும் வகையில் கூட்டுறவு, பொதுத் துறைத் தொழிலாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதிய உயர்வும் (மணியடிக்கப்பெற்றது) அகவிலைப்படியும் தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவுடன் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்துள்ளதுபோல், இத்தொழிலாளர்களையும் இத்திட்டத்தில் சேர்த்து பயனடையச் செய்ய வேண்டும்.

அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் கறவை மாட்டுக் கடன் வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நீண்ட நாள் கோரிக்கையாக, பாலாற்று குடிநீர் பிரச்சினையைப் பற்றி ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்துள்ளேன். "ஒரு கண்ணில் வெண்ணெய்யும், மறு கண்ணில் சுண்ணாம்பும்" என்ற பழமொழிக்கு ஏற்றபடி காஞ்சிபுரம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. நகரத்தில் பாதி பேருக்கு பாலாற்று குடிநீரும், பாதி பேருக்கு சுகாதாரமற்ற திருப்பாற்கடல் தண்ணீரும் வழங்கப்படுகிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தாம்பரம், பல்லாவரம் வரை பாலாற்றுக் குடிநீர் மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கிறது. எனவே, எங்களுடைய காஞ்சிபுரம் நகரத்தில் அரை மணி நேரமாவது அனைவருக்கும் பாலாற்று நீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

காஞ்சிபுரத்தில் உள்ள பாலாறு குடிநீர்த் திட்டத்தின்மூலம் தற்போது காஞ்சிபுரம் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்ய நீர்வளம் போதிய அளவு இல்லை என்பதால் புதிய திட்டத்தின்மூலம் விநியோகம் செய்ய, காஞ்சிபுரத்தை அடுத்த ஓரிக்கையில் பாலாறுமூலம் கிடைக்கும் குடிநீரையே காஞ்சிபுரம் மக்கள்

2010 ஏப்ரல் 15] [திருமதி பெ. கமலாம்பாள்]

வெகுவாக விரும்புகின்றனர். இதனால் நீர் ஆதாரத்தை மறு ஆய்வு செய்து, ஓரிக்கை அருகில் பாலாற்றில் புதிய குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்தி காஞ்சிபுரம் நகருக்கு முழுமையாக பாலாற்றுக் குடிநீர் வழங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரம் விரிவடைந்த நிலையில், காஞ்சிபுரம் நகர எல்லைகளாக விளங்கும் டோல்கேட் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் புதிய அங்காடிகள் கட்டி பொதுமக்கள் பயன்பெறச் செய்ய வேண்டும்.

காஞ்சிபுரம் நகராட்சியில் மின்சார தகன மேடை அமைக்க என்னுடைய கோரிக்கையை ஏற்றதன்பேரில் காஞ்சிபுரத்தில் ஒரு மின் தகன மேடை, வெள்ளைக்குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல நாகலூத்துமேடு, தாயார்குளம், தேனம்பாக்கம் ஆகிய இடங்களிலும் மின் எரிமேடை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு தினமும் அதிகமான பேருந்துகள் வந்து செல்கின்றன. இதனால் போதுமான இடவசதி இல்லாமல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நகருக்கு வெளியே பொன்னேரிக்கரையில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க பல முறை சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்துள்ளேன். தற்போது பொன்னேரிக்கரையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவசர, அவசியம் கருதி பேருந்து நிலையம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பருவமழை தவறியதாலும், பாலாற்றில் நிலத்தடி நீர் குறைந்ததாலும், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் கிராமங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி அவற்றின்மூலம் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் அவசர, அவசியம் கருதி குடிநீர் வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் தொகுதியில் கூடுதல் பள்ளிக் கட்டடம், குடிநீர் வ்சதி மற்றும் கழிப்பிட வசதி ஆகியவை தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பெ. கமலாம்பாள் நிரம்ப நேரம் ஆகிவிட்டது.

திருமதி பெ. கமலாம்பாள்: பள்ளிக்கூட மாணவ, மாணவிகளுக்குக் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய தொழில், மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் தொழிலாகும். இத்தொழிலில் பணிபுரிபவர்கள் இரவு, பகல் பாராமல் எல்லா சூழ்நிலையிலும் 24 மணி நேரமும் மோட்டார் வாகனம் பழுது ஏற்பட்டால் பணத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் சேவை மனப்பான்மையுடன் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிற்பகல் 12-55

தங்கள் ஆட்சிக் காலத்தில்தான் தையல் கலைஞர்கள், கைவினைஞர்கள், முடிதிருத்துவோர், விஸ்வகர்மா தொழில்புரிபவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், ஓவியக் கலைஞர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், கிராமப் பூசாரிகள், மாற்றுத் திறன் உடையோர், மண்பாண்டம் தொழில் செய்வோர், கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள், நரிக்குறவர்கள், அரவாணிகள், திரைப்படத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு நல வாரியம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்கக் கோரி சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தேன். ஆகவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தை உரித்தாக்கிக் கொண்டு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை முன்வைக்கிறேன்.

கடுமையான விலைவாசி உயர்வு, உணவுப் பொருட்கள் விலையேற்றம் காரணமாக மக்கள் அல்லல்படும் இந்தக்

காலகட்டத்தில், 2010-2011 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பொது விநியோகத்திற்கான ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட ரூ.250 கோடி குறைத்து ஒதுக்கப்பட்டுள்ளது. இது போதுமானது அல்ல என்பது எங்களுடைய கருத்து. அதேபோன்று விலைவாசி உயர்வுக்குக் காரணமான பதுக்கல், ஆன்-லைன் வர்த்தகம் ஆகியவற்றை முற்றிலுமாக இரத்து செய்ய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் இந்த அரசு, மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற ஏழையெளிய, நடுத்தர வர்க்க உழைப்பாளிகளின் பசியைப் போக்க, பொது விநியோக முறையைப் பலப்படுத்த வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கும் இந்தச் சூழலில் மத்திய அரசின் தொகுப்பிலிருந்து போதுமான உணவுப் பொருட்கள் கிடைப்பதை இந்த அரசு உறுதிப்படுத்த வேண்டும். தமிழகத்தில் அரிசியைப் போன்று, உணவுப் பொருளாக கோதுமையும் பயன்படுத்தப்படுகிறது. 1,000 குடும்ப அட்டைகள் இருக்கும் கடைகளுக்கு 250 முதல் 400 கிலோ கிராம் வரை மட்டுமே கோதுமை கிடைக்கப்பெறுகிறது. அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் மாதந்தோறும் கோதுமை கிடைப்பதை இந்த அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

நியாய விலைக் கடைகளில் 100 சதவிகிதம் உணவுப் பொருட்கள் கிடைக்கிறது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரும்பத் திரும்ப இந்த அவையிலே சொல்கிறார்கள். அது உண்மை அல்ல. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழுள்ள கடைகளில் மட்டுமே கிடைக்கிறது. கூட்டுறவுக் கடைகளில் 50 சதவிகிதம் முதல் 75 சதவிகிதம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதனால் மாதத்தின் முதல் வாரத்தில் சென்றால் மட்டுமே பொருட்கள் கிடைக்குமென ரேஷன் கடைகளில் முண்டியடிக்கும் கூட்டத்தால் பல சிரமங்கள் உருவாகின்றன. குடும்ப அட்டைகள் எண்ணிக்கைக்கேற்ப அத்தியாவசியப் பொருட்களான பருப்பு, உளுந்து, பாமாயில், மளிகைப் பொருட்கள் ஆகியவற்றைத் தேவையான அளவுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். என்னுடைய தொகுதியில் அண்மையில் மண்விளை என்ற இடத்திலுள்ள ரேஷன் கடைக்குச் சென்றேன். அங்கு 800 குடும்ப அட்டைகள் உள்ளன. அங்கு மார்ச் மாத ஒதுக்கீடு 400 கிலோ கோதுமை, 200 லிட்டர் பாமாயில், 200 கிலோ கிராம் உளுந்து. இந்த நிலைமைதான்

தமிழ்நாடு முழுவதும் உள்ளது. பகுதிநேரக் கடைகள், புதிய முழுநேரக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எத்தனை ஊழியர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்கள் 50 சதவிகிதம்தான் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் பொருட்கள் ஒதுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அப்படி அல்ல. பாமாயிலைப் பொறுத்த அளவுக்கு போதுமான அளவுக்கு வழங்கப்படுகிறது. அதேபோன்று இவர்கள் கேட்கிற அளவுக்கு 50 ரூபாய் பாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. உளுத்தம் பருப்பும் வழங்கப்படுகிறது. ஆனால், துவரம் பருப்பு மட்டும்தான் கேட்கிற அளவுக்கு இல்லாமல் எந்த அளவுக்கு பொருட்கள் வருகின்றனவோ, அதைப் பொறுத்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் குறிப்பாக சில மாவட்டங்களில் 70 சதவிகிதம், 80 சதவிகிதம் எனக் கொடுக்கப்படுகிறது. எனவே, எந்தக் கடையிலாவது கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், அந்தக் கடைக்குத் தனிக் கவனம் செலுத்தி பொருட்கள் அனுப்பப்படும்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக எத்தனை ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்? 3, 4 கடைகளுக்கு ஒரே ஊழியர் உள்ளதால் மக்கள் சரியாக எல்லா உணவுப் பொருட்களும் வாங்கிக்கொள்ள முடியவில்லை. தேவையான ஊழியர்களை நியமிக்க வேண்டும். 2,000 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ள நியாய விலைக் கடைகள் பிரிக்கப்படும் என்ற நிலையில் இருந்து திருப்பூர் போன்ற மக்கள் அடர்வான பகுதியில் 1,000 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற நிலையை உருவாக்க வேண்டும். திருப்பூர் குடிமைப் பொருள் வட்ட வழங்கல் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து வசதி செய்து தரப்பட வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தின் அறிவுரைகளின்படி வறியவர்களுக்கான அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தில் 35 கிலோ கிராம் அரிசி வழங்கப்படுகிறது. அந்தப் பட்டியலில் விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென உச்ச நீதிமன்ற அறிவுரை உள்ளது. ஆகவே, தகுதியுடையவர்களை

இணைத்து பயனடையச் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போலிக் குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து இரத்து செய்வதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. பல மாவட்டங்களில் போலிக் கார்டுகள் வைத்திருப்பவர்களைச் சுட்டிக் காண்பித்திருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் *54,000* அட்டைகள் போலியானவையாகக் கருதி இரத்து செய்யப்பட்டுள்ளன. அவை எல்லாம் போலிகள் அல்ல. *100* சதவிகிதம் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட குடும்ப அட்டைகள் உட்பட அநேக உண்மையான குடும்ப அட்டைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. எனக்கு நன்றாகத் தெரிந்த பக்கத்து வீட்டு முந்திரி ஆலைத் தொழிலாளி கார்டு இரத்து செய்யப்பட்டு *4* மாதங்களாக அலையோ அலையென்று அலைகிறார். உணவுப் பொருட்கள் கிடைக்கப்பெறவில்லை. இதேபோன்ற பல்லாயிரம் பேர்களின் உண்மையான கார்டுகள் இரத்து செய்யப்பட்டு அலைந்து கொண்டிருக்கிறார்கள். தணிக்கை நேரத்தில் door to door ஆய்வு நடைபெறவில்லை. தேவையான அதிகாரிகளும், ஊழியர்களும் நியமிக்கப்படவில்லை.

பிற்பகல் *1-00*

குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி லதா அவர்களின் குடும்ப அட்டை இரத்து செய்யப்பட்டு, ஒரு மாதம் அலைந்து திரும்ப கிடைக்கப்பெற்று இருக்கின்றது. ஆதாரத்துடன் மனு செய்தால் ஒரு வார காலத்தில் குடும்ப அட்டை பெற வழிவகை செய்ய வேண்டும். தகுதியானவர்களுக்குப் புதிய குடும்ப அட்டை கிடைக்கவில்லை. உரிய ஆவணங்களுடன் பழைய குடும்ப அட்டையிலிருந்து பெயர் நீக்கப்பட்டு காத்திருக்கின்றனர்; புதிய அட்டை கிடைக்கப்பெறவில்லை. விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலகத்தில் மூன்று மாதத்திற்கு முன் வந்த புதிய குடும்ப அட்டைகள் இன்னும் அந்தந்த நகரங்களுக்கு வழங்கப்படவில்லை. இன்னொரு வேடிக்கை என்னவென்றால், குடும்ப அட்டைகள் வந்திருப்பதாகவும், அதை வட்ட வழங்கல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு தபால் மூலமும், எஸ்.எம்.எஸ். மூலமும் மக்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் வட்ட வழங்கல் அலுவலகம் சென்றபோது “உங்களுடைய அட்டையை வேறொருவர் வாங்கிச் சென்றுள்ளார், புதிய அட்டைக்கு நீங்கள்

மனு தாருங்கள்" என்று கேட்கிறார்கள். தகுதியான அனைவருக்கும் புதிய குடும்ப அட்டைகள் துரிதமாக வழங்கப்பட வேண்டும்.

ரேஷன் அரிசி கடத்தப்படுவது தொடருகிறது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். உணவுப் பொருட்களின் எடை குறையாமல் இருக்க பாக்கெட்மூலம் வழங்கப்பட வேண்டும். சுய உதவிக் குழுக்கள்மூலம் மகளிருக்குப் பயிற்சி கொடுத்து அவர்களைப் பயன்படுத்த வேண்டும். நெல் கொள்முதல் நிலையங்கள் கட்ட அரசு வழிவகை செய்ய வேண்டும். விவசாயிகளை நிர்ப்பந்திக்கக் கூடாது. காணாமல் போகிற ரேஷன் கார்டுகளுக்கு F.I.R. கேட்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். நடமாடும் ரேஷன் கடைகளைக் கூடுதலாக மலைக் கிராமங்களில் ஏற்படுத்த வேண்டும். மின்சாரம் இல்லாத மலைக் கிராமங்களில் வாழும் மக்களுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் குளறுபடிகள் சம்பந்தமாக புகார் செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளதுபோன்று மற்ற மாவட்டங்களில் அனைத்து ரேஷன் கடைகளிலும் தொலைபேசி எண்கள் குறிப்பிடப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில் பாகோடு பேரூராட்சி, ஆலமறா மற்றும் அருவிக்கரை, மாத்தூர் தொட்டிப்பாலம் போன்ற பகுதிகளில் பகுதிநேர ரேஷன் கடைகள் தொடங்க ஆவன செய்ய வேண்டும். திற்பரப்பு, பெருஞ்சாணி, மாரிகுளம் போன்ற இடங்களில் MP மற்றும் MLA தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட ரேஷன் கடைகளைத் திறந்து, மக்கள் பயன்பெற ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த வேண்டுமென்று தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். கடந்த நான்கு ஆண்டுக்காலமாக வழக்கைக் காரணமாகச் சொல்லி வருகிறீர்கள். தேர்தல் நடத்தப்படாவிட்டால் நியாயபூர்வமாக, ஜனநாயகபூர்வமாக இந்தத் துறை செயல்படுவதிலே இருக்கும் பலவீனம் நீடிக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கிறோம். ஆகவே, உடனடியாக கூட்டுறவுத் தேர்தலை நடத்துகிற பொறுப்பை இந்த அரசு ஏற்க வேண்டும். அதேநேரத்தில் இந்த மாமன்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறபடி தனித் தேர்தல் ஆணையம் இதற்காக உருவாக்கப்பட வேண்டும்.

கடன் தள்ளுபடி என்ற நம்பிக்கையை மக்களிடையே ஏற்படுத்திய பிறகு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மானியத்

தொகை சென்றடையவில்லை. புதிய கடன் கேட்கும் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப் போதுமான நிதி இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் நிதி ஆதாரமின்றி மூச்சு முட்டியுள்ளன. கூட்டுறவு இயக்கமே முடங்கியுள்ளது. என்னுடைய தொகுதியில் கொள்வேல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் நகைக் கடனைத் தள்ளுபடி செய்து, அதனை புதிய கடனாகக் காட்டி, போலியான கணக்கைக் காட்டி வருகின்றனர். இவ்வாறுதான் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது. நலிவடைந்துள்ள வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு அரசு மானியம் வழங்கி புத்துயிர் ஊட்ட வேண்டும். மலைவாழ் மக்களுக்கானப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும். மதுரையில் மூடப்பட்ட நகரக் கூட்டுறவு வங்கியைச் செயல்படுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும். நலிந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டதில் விளவங்கோடு தொகுதியில் மெதுகும்மல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் செயலாளர்கூட நியமிக்கப்படாத நிலை உள்ளது. உடனடியாக ஊழியர்களை நியமித்து போதிய கடன் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் அத்தாணி நில குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 1,000 ஏக்கர் அனுபோக நிலத்தை விவசாயப் பயன்பாட்டிற்கு பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். திருவட்டாறு தொகுதி, பாகோடு பேரூராட்சியில் பாங்கூர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்திற்கு, விவசாயிகள் பயன்பாட்டிற்கு பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் சாரூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்த இடம் உள்ளது. அங்கு கட்டடம் கட்டித்தரப்பட வேண்டும்.

பண்ணைசாரா கடன்களுக்கான அரசு ஈடு செய்யும் 4 சதவீத வட்டித் தொகைக்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு உள்ளது. அதை அரசு அறிவித்து உத்தரவாக்கி விரைவுபடுத்த வேண்டும்.

கூட்டுறவு ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியம், மருத்துவக் காப்பீடு வழங்கப்பட வேண்டும். குமரி மாவட்டம் உட்பட மீனவர் கூட்டுறவு நடத்தும் நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு அரசாணைப்படி ஊதியம் வழங்கப்பட வேண்டும். கூட்டுறவு ஊழியர்களுக்கு மத்திய 6-வது ஊதியக் குழு பரிந்துரைத்த ஊதியம் வழங்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சட்ட விதிகளில் போனஸ்

சட்டம் திருத்தப்பட வேண்டும். சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் கூட்டுறவு நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு, நுகர்பொருள் வாணிபக் கடை ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கூட்டுறவுத் துறை, கூட்டுறவு நிறுவனங்களில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். இறந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு உடனடி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. கூடுதலாக ஒரு நிமிடம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப அட்டைகளே வழங்கப்படவில்லை என்று பதிவு செய்திருக்கிறார்கள். ஜனவரி மாதத்தைப் பொறுத்த அளவிற்கு 735 கார்டுகள், அதேபோன்று பிப்ரவரியிலே 1,428 கார்டுகள், மார்ச் மாதத்திலே 736 கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுவரை ஒட்டுமொத்தமாக அவருடைய மாவட்டத்திற்கு 5,770 கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய கரூர் மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி அவர்கள் காலையிலே தன்னுடைய கருத்துகளைச் சொல்லுகிறபொழுது தன்னுடைய மாவட்டத்தில் புதிய கார்டுகள் வழங்கப்படவேயில்லை என்று சொன்னார்கள். அது தவறான செய்தி. அங்கே 25,734 கார்டுகள் பரிந்துரை செய்யப்பட்டன. கொடுக்கப்படும் மனுக்களுக்கெல்லாம் கார்டு கொடுக்க முடியாது, எல்லாம் பரிந்துரை செய்யப்படவேண்டும். வீடு, வீடாகச் சென்று தணிக்கை செய்தபொழுது 25,734 கார்டுகள் பரிந்துரை செய்யப்பட்டன. அவற்றில் அச்சடிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டவை 24,967 கார்டுகள். 38 கார்டுகள் மட்டும்தான் நிலுவையிலே இருக்கின்றன. எந்த இடத்திலே கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டு நீங்கள் புகார் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுப்போம். இது அரசாங்கத்தினுடைய கணக்கு. மாவட்டங்களைப் பொறுத்தவரையில் கார்டுகள் வழங்கப்படுகின்றன.

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு, உணவுத் துறை என்பது முக்கியமான துறை. கிராமப்புறங்கள் செழிப்பதற்கு கூட்டுறவு நல்ல முறையில் இயங்க வேண்டும். பொதுவாக கூட்டுறவு நசிந்து கொண்டு வந்தது. இப்போது ஓரளவு புத்துயிர் பெற்று வருகிறது. ஆனால், இன்றைக்குக் கூட்டுறவுகளில் இன்னும் மக்களுடைய தொடர்பு என்பது போதுமானதாக இல்லை. எனவே, நசிந்த நிலையில் இருந்து மீண்டு வந்தாலும் அது செயல்படுவதுபோல மக்களுக்குத் தெரியவில்லை. காரணம், தேர்தல் என்பது இல்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கு இல்லை. அதிகாரிகளை மக்கள் சென்று அணுகுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. அதோடு கூட்டுறவுக் கடன் வழங்குகின்ற முறையில் ஏற்பட்ட மாற்றத்தால் ஏழையெளிய விவசாயிகள் எளிதில் கடன் பெற முடியவில்லை. நகை இருந்தால்தான் கடன் என்ற நிலை இருக்கிறது. நகை இருந்தால் அங்கே ஏன் கடன் வாங்கச் செல்கிறார்கள்? எனவே, பழைய முறையில் 10(1) அடங்கலை வைத்து அதன் மூலமாக கடன் பெறுகின்ற முறையை மீண்டும் கொண்டு வரவேண்டும். விவசாயிகள் அப்போதுதான் கந்து வட்டிக்காரர்களிடம் செல்லாமல் பாதுகாக்கப்படுவார்கள்.

இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அது விவசாயிகளுக்கு ஒரு பக்கம் பயன் அளித்தாலும், அதுமட்டுமே விவசாயிகளை மேம்படுத்திவிட உதவியாக இருக்காது. கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து, விதை இவையெல்லாம் தாராளமாக வழங்கப்படவேண்டும். ஆனால், இன்றைக்கு அப்படி இல்லை, பூராவும் தனியார் கடைகளுக்குப் போய்விட்டது. அதனுடைய விளைவாகத் தரமான விதையும் கிடைக்கவில்லை; காலாவதியான பூச்சி மருந்துதான் கிடைக்கிறது. எனவே, பயிரைத் தாக்கும் பூச்சிகள் சாகமாட்டேன் என்கிறது, போட்ட விதையும் சரியாக

முளைப்பதில்லை. எனவே, கூட்டுறவுத் துறை மூலமாக விதைகள் உற்பத்தி செய்யப்படவேண்டும்.

மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்களுடைய தலைமையில் நாங்கள் பல ரேஷன் கடைகளைப் போய் பார்த்து ஆய்வு செய்தோம். எல்லா ரேஷன் கடைகளிலும் stock correct-ஆக இருக்கிறது. எங்கேயுமே குறைபாடு என்பது இல்லை. ஆனால், அரிசி கடத்தல் என்பது தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இது எப்படி நடக்கிறது என்பது யாருக்குமே தெரியவில்லை. குடோன்களில் இருந்து ஏற்றிக்கொண்டு போகும் lorry ரேஷன் கடை தெரியாமல் துறைமுகத்திற்கும், தனியார் குடோன்களுக்கும் போய்விடுகிறது! இதுவரைக்கும் lorry driver, அதிலே ஏறிப் போகிற load man, lorry owner இவர்கள்தான் கைது செய்யப்பட்டு இருக்கிறார்களே தவிர, ஏற்றிவிட்டது யார், மூலம் எங்கே இருக்கிறது, இதற்கு என்ன காரணம் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

உணவு மானியம் 250 கோடி ரூபாய்க்கு குறைக்கப்பட்டிருக்கிறது. போலி ரேஷன் கார்டு அதிகமான அளவு தமிழ்நாட்டில் இருப்பதாகக் கணக்கு வந்திருக்கிறது. எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் மொத்த கார்டுகள் 5-1/2 இலட்சம், அதில் போலிக் கார்டுகள் 87,000. உண்மையிலேயே குடியிருப்பவர்களுக்குக்கூட, வெளியில் வேலைக்குச் சென்றவர்கள், பிழைப்புக்காக வெளியூர் போனவர்கள், அவர்களுடைய ரேஷன் அட்டைகள் எல்லாம் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. அட்டையைப் புதுப்பிப்பதற்கு திரும்ப மனு கொடுங்கள் என்று சொன்னார்கள். 40,000 பேர்தான் மனு கொடுத்திருக்கிறார்கள். மீதம் 47,000 பேர் மனு கொடுக்கவில்லை. ஆக, ரேஷன் அட்டை கணக்கெடுப்பு முறையை முறைப்படுத்த வேண்டும். உண்மையானவர்களுக்குரிய ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படவேண்டும். 250 கோடி ரூபாய் உணவு மானியத்தைக் குறைக்கும்போது ஏறிய விலைவாசி குறைகிறது என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விலைவாசி குறைகிறதா, குறைந்து கொண்டு வந்திருக்கிறதா என்றால் இல்லை. இம்மாதம் 8 ஆம் தேதி இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி உட்பட, இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து மறியல் நடத்தினோம். நாங்கள் வைத்த கோரிக்கை பொது விநியோகத்தைப் பலப்படுத்த வேண்டும். விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் விலைக்கும், இடைத்தரகர்கள் விற்கும் விலைக்கும் இடைவெளி

அதிகமாக இருக்கிறது, விவசாய உற்பத்தி அதிகப்படுத்த வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்தோம்.

பிற்பகல் 1-10

அதே சமயத்தில் மத்திய அரசு நடத்திய மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில் நமது மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நமது மாநிலத்தின் சார்பாகப் பங்கெடுத்துக் கொண்டார்கள். அவர்களும் அந்தக் கூட்டத்தில் பொது விநியோகத்தைப் பலப்படுத்த வேண்டும், இடைத்தரகர்களுடைய இலாபத்தைக் குறைக்க வேண்டும், விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்ற சீரிய கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கம்யூனிஸ்டுகளுடைய சிந்தனையும், அவரது பெயருக்குத் தகுந்தாற்போல மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய சிந்தனையும் ஒன்றாகத்தான் இருக்கிறது. நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், நாங்கள் சொல்ல வேண்டிய இடத்தில், போராட வேண்டிய இடத்தில் இருக்கிறோம்; அவர்கள் அதை அமல்படுத்த வேண்டிய இடத்தில், செய்து கொடுக்க வேண்டிய இடத்தில் இருக்கிறார்கள். அதுதான் வித்தியாசம்.

விலைவாசி என்பது இன்றைக்கு உச்சத்தில் சென்று கொண்டிருக்கிறது. ஏற்கெனவே நுகர்வில் பல பிரிவுகள் இருக்கின்றன. ஈரோடு மாவட்டம்-60 சதவிகிதம், கோயம்புத்தூர் மாவட்டம்-55 சதவிகிதம், விருதுநகர் மாவட்டம்-85 சதவிகிதம், சிவகங்கை மாவட்டம்-100 சதவிகிதம் என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். குறைக்கப்பட்ட உணவு மானியத்தின் காரணமாக இப்போது மொத்தத்திற்கே சதவிகிதம் குறைந்துவிடுமோ, ரேஷன் கடைக்கு வரவேண்டிய அரிசி நின்றுபோகுமோ என்கிற ஒரு சந்தேகம் என்பது ஏற்பட்டிருக்கிறது.

அது போக, பருப்பு . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு திரு எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் நுகர்வு வித்தியாசப்படுவதற்குக் காரணம், பொதுவாகவே, தருமபுரி மாவட்டம், பக்கத்திலே இருக்கிற திருவண்ணாமலை மாவட்டம்,

திருவாரூர் மாவட்டம் போன்ற மாவட்டங்களிலெல்லாம் 90 விழுக்காட்டிற்குமேல் நுகர்வு இருக்கிறது. ஆனால் நாமக்கல் மாவட்டம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களிலே வசதியானவர்கள், பங்களாவாசிகள் இருக்கிற காரணத்தினாலே அங்கே நுகர்வு கொஞ்சம் குறைவாக இருக்கும். மாவட்டத்திற்கு மாவட்டம் நுகர்வு வித்தியாசப்படுவதற்கு இதுதான் காரணமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

நான்கூட ஒரு ஆய்வுக் கூட்டத்திலே, தஞ்சாவூரில்தானே நெல்லே உற்பத்தியாகிறது. அந்த தஞ்சாவூர் மாவட்டத்திலேயே 96 சதவிகிதம், 94 சதவிகிதம் நுகர்வு இருக்கிறதே என்று கேட்டபோது, விவசாயிகள் சொன்னார்கள், தரமான அரிசி ரேஷன் கடைகளிலே கிடைக்கிறபோது பொது விநியோகக் கடைகளிலே நாங்கள் அரிசியை வாங்குகிறோம். எனவே நேரடிக் கொள்முதல் விலையில் நெல்லை விற்றுவிடுகிறோம், அதனால் இங்கே 96 சதவிகிதம், 94 சதவிகிதம் என்று சொன்னார்கள். இவ்வாறு, மாவட்டத்திற்கு மாவட்டம் நுகர்வு என்பது வித்தியாசப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், தலைவர் கலைஞர் அவர்கள், இப்பொழுது ஒரு கோடியே எண்பத்தேழு இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அனைத்துக் குடும்பங்களுக்கும் இந்த அரசாங்கம் கட்டாயம் கொடுக்கும்.

திரு. தி. இராமசாமி: பருப்பு என்பது மானிய விலையில் வழங்கப்படுகிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்கூட டெல்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டுக் கூட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் பயறு உற்பத்தியை, பருப்பு உற்பத்தியை அதிகரிக்க தனியாக அவ்விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஊடுபயிராகச் செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள், உண்மை. இப்போது கிலோ நாற்பது ரூபாய்க்கு பருப்பு கொடுக்கிறோம். வெளி மார்க்கெட்டில் தொண்ணூறு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில், மானியத்தைக் குறைத்தால் தேவையான பருப்பு பாக்கெட்டுகள் மக்களுக்குக் கிடைக்குமா? மீண்டும் வெளி மார்க்கெட்டில் விலையை அதிகரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துமா, ஏற்படுத்தாதா?

ஏனென்றால், இந்திய அரசு கிலோ பன்னிரண்டரை ரூபாய்க்கு சீனியை வெளியே ஏற்றுமதி செய்துவிட்டு, நாற்பது ரூபாய்க்கு

இங்கே விற்கிறது. சீனியை பன்னிரண்டரை ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால் இந்தியாவிலே நாற்பது ரூபாய்க்கு விற்கிறார்கள். அப்படிப்பட்ட கொள்கை உடைய இந்த நாட்டில் உணவு மானியம் என்பதை மத்திய அரசும் குறைத்திருக்கிறது, மாநில அரசும் குறைத்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இந்த மானியம் குறைக்கப்படக் கூடாது.

கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்கப்படவேண்டும். ரேஷன் கடைகள் மாதம் முப்பது நாளும் திறக்கப்படவேண்டும் என்று சொல்கிறோம். பகுதிநேரக் கடைகள் பல இடங்களில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பகுதிநேரக் கடைகளைப் பிரிக்கும்போது தாய்க் கடையில் ஐநூறு கார்டுகளுக்கும்கீழே குறைந்துவிடக் கூடாது என்ற ஒரு வரைமுறை இருக்கிறது. அது இருக்கக்கூடாது. தூரத்தை அடிப்படையாக வைத்து, அந்தக் கிராமத்தினுடைய தேவையை அடிப்படையாக வைத்து பகுதிநேரக் கடைகள் பிரிக்கப்படவேண்டுமே தவிர, தாய்க் கடைகளிலுள்ள கார்டுகளின் எண்ணிக்கையை வைத்து மதிப்பிடக்கூடாது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

நியாய விலைக் கடைகளில் கூடுதலாக எடையாளர்கள் தேவை. ஒரு ஆள் மட்டும் எல்லா பொருட்களையும் எடை போடமுடியாது. போலியாக ஒரு எடையாளை கூடுதலாக வைத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு அரிசி, பருப்பில் இருக்கக்கூடிய மிச்சத்திலிருந்து சம்பளத்தைக் கொடுக்கிறார்கள். ஆகவே, ஒரு கடைக்கு இரண்டு பேர் வீதம் ஒருவர் sales man, ஒருவர் எடையாளர் என்ற அடிப்படையில் இரண்டு நபர்களை நியமனம் செய்யலாம்.

ஒரு காலத்தில் மதுரையில் பாண்டியன் கூட்டுறவு சிறப்புச் சிற்றங்காடி, சென்னையில் காமதேனு, கோயம்புத்தூரிலே அமுதம், சிந்தாமணி என்று பெயர்பெற்ற சூப்பர் மார்க்கெட்டுகள் இருந்தன. மதுரைக்குள் சென்று என்ன சரக்கு வாங்கவேண்டியிருந்தாலும் பாண்டியன் கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டுக்குப் போகலாம் என்ற நிலையிருந்தது. இப்போது அவையெல்லாம் இல்லை. அவை இருக்கும் இடம் தெரியவில்லை. மீண்டும் புத்துயிர் கொடுத்து அவை மிகவும் சிறப்பான முறையில் செயல்படுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1-15

அந்த சூப்பர் மார்க்கெட்டுக்குச் சொந்தமான சொத்துக்களை விற்று, வரும் பணத்தை வைத்து அந்த சூப்பர் மார்க்கெட்டுகளை மீண்டும் இயக்குவதற்கான ஒரு முயற்சியை அரசு எடுப்பது போன்ற ஒரு தகவலைக் கேள்விப்பட்டேன். அது உண்மையாக இருந்தால், சொத்தை விற்று அவற்றைப் புத்துயிரூட்ட வேண்டியதில்லை. அரசே நிதியை ஒதுக்கி, அதன் மூலமாக அந்தக் கூட்டுறவு அங்காடிகளை நல்ல முறையில் நடத்தலாம்.

பண்ணைசாரா கடனில், விவசாயத் தலைப்பின்கீழ் வாங்கப்பட்ட கடன்கள்கூட தள்ளுபடி செய்யப்படாமல் இருக்கின்றன. பல கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்ட இந்த நிலையில், பண்ணைசாரா கடன் சம்பந்தமாகவும் நாம் இன்றைக்குப் பரிசீலிக்க வேண்டும்.

இப்போது வறட்சி அதிகமாக இருக்கக்கூடிய விருதுநகர் போன்ற மாவட்டங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், எங்களுக்கு அத்தொகை மிகக் குறைவு. மாவட்டம் முழுவதும் கடுமையான பாதிப்பு இருக்கும்போது 2 கோடி ரூபாய் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதிக்குக்கூட போதாது. குறைந்தபட்சம், இருக்கிற 6 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு, ஒரு தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் என்ற அடிப்படையிலாவது நிதியொதுக்க வேண்டும். ஏனென்றால், தண்ணீர் அதிகளவு கீழே போய்விட்டது. ஆழ்துளைக் கிணறு போட்டால்கூட 500 அடி, 600 அடி போட வேண்டியிருக்கிறது. அவ்வாறு கிணறு தோண்டி தண்ணீர் கொடுக்க வேண்டும். வேறு வழியில்லை. அப்படிப்பட்ட நிலையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குடிதண்ணீருக்காக கூடுதலாக நிதியை ஒதுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல்.

திரு. கே. முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர் அவர்களின் கலைவண்ணத்தில் உருவாக்கப்பட்டு, உலகின் முதல் பசுமைப் பேரவையாக விளங்கும் இம்மாமன்றத்தில் பேசுகிற அரிய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15] [திரு. கே. முருகவேல்]

வாய்ப்பினை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர், செம்மொழிக் காவலர், அம்பேத்கர் சுடர் விருது பெற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க, மனிதநேயமிக்க, மகத்தான நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றத்திற்கு அளித்த மாண்புமிகு நிதியமைச்சர், பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அரசின் மக்கள் நலத் திட்டங்கள் போர்க்கால அடிப்படையில் மக்களைச் சென்றடையச் செய்து, தமிழக மக்களின் வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து வரும், உள்ளாட்சியில் நல்லாட்சி படைத்த நாயகன், மாண்புமிகு துணை முதல்வர், அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கனவினை நனவாக்கும் தென் மண்டல அமைப்புச் செயலாளர், ஆற்றல் அரசர், அஞ்சா நெஞ்சர், அண்ணன் மாண்புமிகு மத்திய இரசாயன மற்றும் உரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு குடிசை மாற்று வாரிய அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களின் அரசில், கடந்த நான்கு ஆண்டுகளில் பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு, தலைவர் கலைஞர் அரசுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக கூட்டுறவுத் துறை மற்றும் உணவுத் துறையின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளன என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நியாய விலைக் கடைகளுக்கு மின்னணுத் தராசை வழங்கி, எடைக் குறைவுகளைத் தவிர்க்க முழு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தவறு செய்யும் நியாய விலைக் கடைப் பணியாளர்கள்மீது குற்றவியல் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போலிக் குடும்ப அட்டைகளைக் களைய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நியாய விலைக் கடை விற்பனையாளர்கள், எடையாளர்கள் ஆகியோர் ஆற்ற வேண்டிய பணிகளைப் புத்தகமாக

வெளியிட்டு, ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் அனுப்பியதோடு மட்டுமல்லாமல், 3 மாதங்களுக்கு ஒரு முறை மண்டல இணைப் பதிவாளர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மூலமாகப் பயிற்சி அளிக்க ஆணையிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே நேரடியாக அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களின் பணிகளை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், சென்னையிலும், கோவையிலும் மாறி மாறி ஆய்வுக் கூட்டங்களை நடத்தி ஆய்வு செய்து வருகிறார்கள்.

புகார் தெரிவிக்க தொலைபேசி எண்களை நியாய விலைக் கடைகளில் எழுதி வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே புகார்களை நேரடியாகத் தொலைபேசியில் கேட்டு, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் பொருட்களின் மாதிரிகளைப் பொது மக்கள் பார்க்கும் வண்ணம் காட்சிப்படுத்த வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்யும் அரிசியின் அளவைக் குறைத்தபோதும்கூட, வெளி மாநிலங்களிலிருந்து கூடுதல் விலைக்கு அரிசியைக் கொள்முதல் செய்து, தலைவர் கலைஞரின் திட்டமான ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் திட்டத்தின்கீழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-20

கூட்டுறவு நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை லாரிகளில் ஏற்றிச் செல்லும்போது Movement Clerk உடன் செல்லவேண்டும் என்று ஆணையிடப்பட்டு, லாரியில் அரிசி எடுத்துச்செல்லும்போது அதிலும் குத்தூசிமூலம் அரிசி எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும்போது நிர்ணயிக்கப்பட்ட வழிதடத்தில்தான் லாரிகள் செல்கின்றனவா என்பதைக் கண்காணிக்க Route Chart முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இவைபோன்ற துரித நடவடிக்கைகளால் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் எண்ணங்களை கூட்டுறவுத் துறையும், உணவுத் துறையும் நிறைவேற்றி வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்பார்கள். தமிழக மக்களின் வாழ்வு முன்னேற 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முதல் நடவடிக்கையாக கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கிய விவசாயிகளின் சுமை நீங்கும் வகையில் ஏழாயிரம் கோடி ரூபாய் கடனை முற்றிலுமாக இரத்து செய்தார்கள். ஏழாயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்ததால் கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்துபோய்விடும் என்று எதிர்க்கட்சியினர் கூறியபோது கூட்டுறவு வங்கிகளுக்குத் தேவையான நிதியுதவியை அளித்து கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் தொடர்ந்து பயிர்க் கடன் பெறுவதை உறுதி செய்தவர்தான் நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

மேலும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2005-2006 ஆம் ஆண்டு, ரூபாய் 1,097 கோடி மட்டுமே கூட்டுறவு பயிர்க் கடன் வழங்கப்பட்டது. ஆனால், தலைவர் கலைஞர் பொறுப்பேற்றவுடன், 2006-2007 ஆம் ஆண்டு ரூபாய் 1,250 கோடியும், 2007-2008 ஆம் ஆண்டு ரூபாய் 1,360 கோடியும், 2008-2009 ஆம் ஆண்டு ரூபாய் 1,571 கோடியும், 2009-2010 ஆம் ஆண்டு ரூபாய் 2,000 கோடி அளவுக்குப் பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து, நமது முதல்வர் அவர்கள் வரும் 2010-2011ஆம் நிதியாண்டில் இந்த இலக்கு ரூபாய் 2,500 கோடி உயரும் என அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. கடந்த அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுறவுப் பயிர்க் கடனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த ஆண்டு சுமார் 1,400 கோடி ரூபாய் பயிர்க் கடன் கூடுதலாக வழங்கப்படுகிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பயிர்க் கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் மீதான வட்டியை முற்றிலும் இரத்து செய்யும் புரட்சிகரமான திட்டத்தை 2009-2010 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவிலேயே முதன் முறையாக செயல்படுத்தி வருவது நமது தலைவர் கலைஞர் மட்டும்தான் என்பதைப் பெருமையாகச் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கூட்டுறவுப் பயிர்க் கடன் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த இந்த ஆண்டு ரூபாய் 140 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கூட்டுறவுச் சங்கங்களின் பாதுகாவலராக உள்ளார் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்குப் பயிர் இழப்பீடு வழங்கும் காப்பீட்டுத் திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அரசே வழங்குகிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2004-2005 ஆம் ஆண்டு பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 24 மட்டும்தான். அவர்கள் பெற்ற தொகை ரூபாய் 3,26,000 மட்டுமே.

ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 2006-2007 ஆம் ஆண்டு பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 1,751. அவர்கள் பெற்ற தொகையோ ரூபாய் 41,86,000 ஆகும்.

அதேபோல, 2007-2008 ஆம் ஆண்டு பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 99,177. அவர்கள் பெற்ற தொகையோ ரூபாய் 135 கோடியே 54 இலட்சத்து 38 ஆயிரம் ஆகும். 2008-2009 ஆம் ஆண்டு பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 51,013. அவர்கள் பெற்ற தொகை ரூபாய் 47 கோடியே 95 இலட்சத்து 80 ஆயிரம் ஆகும். தமிழகத்தில் விவசாயிகளுக்குப் பயிர் இழப்பீடு வழங்கும் காப்பீட்டுத் திட்டத்தில் அதிகம் பயன்பெறும் மாவட்டம் எங்கள் இராமநாதபுரம்தான். அந்த அளவிற்கு வறட்சி மாவட்டம். அந்த வறட்சி மாவட்டத்தையும் வளமான மாவட்டமாக்கியது நமது தலைவர் கலைஞர் ஆட்சிதான் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கஞ்சம்பட்டி ஓடையின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டி 20 கிலோ மீட்டர் நீள புதிய கால்வாய் அமைத்து ரூபாய் 18 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 4,200 ஏக்கர் நிலங்கள் பயனடையச் செய்த தமிழினத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிட தொழிலாளர்கள் மட்டும் பணிபுரிவதற்காக முதுகுளத்தூர் தொகுதியில் அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலை தொடங்கப்பட்டது. இந்தக் கூட்டுறவு ஆலை 2003 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டது. மிகவும் வறட்சியான இந்தப் பகுதியில் எந்தவிதத் தொழிற்சாலையும் இல்லை. மாற்று வேலைவாய்ப்பு இல்லாமல் தவித்துவரும் ஆதி திராவிட தொழிலாளர்கள் நலன் கருதி, தற்போது கைத்தறித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறக்க ஆவன செய்திடுமாறு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அண்ணாச்சி அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூருக்கு புதிய காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதுகுளத்தூரில் காவல் துறைக்குச் சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில் புதிய காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு அரசுப் பொறியியல் கல்லூரி அமைக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்படவில்லை. ஆகையால், இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 3,084 பேருக்கு இலவசமாக இரண்டு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இலவச வீட்டுமனைப் பட்டா 16,908 பேருக்கு வருவாய்த்

துறையின்மூலம் வழங்கப்பட்டதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, பரமக்குடி வருவாய்க் கோட்டத்தின்கீழ் பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர் மற்றும் கடலாடி ஆகிய நான்கு வருவாய் வட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. முதுகுளத்தூர் கடலாடி வட்டத்தில் உள்ள பொது மக்கள் நீண்ட தொலைவில் உள்ள பரமக்குடி வருவாய்க் கோட்டத்திற்குச் சென்றுவர சிரமப்படுவதால் முதுகுளத்தூர், கடலாடி வட்டங்களைப் பிரித்து முதுகுளத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் அமைக்க வேண்டுமென மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் கீழமுடிமன்னார் கோட்டை கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 40 கிராமங்களில் ஏறக்குறைய 30,000 மக்கள் வசிப்பதால் பின்தங்கிய அந்தக் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக சிறு வணிகக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் பூ வணிகம், காய்கறிகள், பழங்கள் வணிகம் செய்தல், பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு எவ்வித பிணையுமின்றி கடன் தொகை ரூபாய் 10,000 ஆக உயர்த்தப்பட்டு இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டு ரூபாய் 100 கோடி அளவிற்குச் சிறு வணிகக் கடன் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 2010-2011 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்காக ரூபாய் 400 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக ஆண்டுதோறும் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்கள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சிவகங்கை மாவட்டத்தில் மூடப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.எம். பழனிசாமி, என்ன? (குறுக்கீடு) மைக் சரியாக இருக்கிறது, நீங்கள் பேசுங்கள்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷப் பூச்சி ஒன்று மேசை அடியிலே இருந்தது.

இப்போதுதான் அடித்து கையிலே எடுத்திருக்கிறேன். கொஞ்சம் இது குறித்து பார்க்க உத்தரவிடுங்கள். ஏனென்றால் மிகவும் அவசரமான, அவசியமான விஷயம் இது. (குறுக்கீடுகள்) இது விஷப் பூச்சி. கொஞ்சம் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடவடிக்கை எடுக்கிறேன். விஷப் பூச்சி வெளியிலே இருந்து வந்திருக்கும். உரிய நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முருகவேல், உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. கே. முருகவேல்: அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நமது கலைஞர் ஆட்சியில் இன்று சிறப்பாகச் செயல்படுகிறது என்பது தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். சாமானிய ஏழை மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் நின்று செயல்படும் தலைவர் கலைஞர் அரசு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும்.

திரு. கே. முருகவேல்: 15-9-2008 முதல் அரிசி கிலோ ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டது நமது கலைஞர் அரசில்தான். நமது கலைஞர் அரசு தொலைநோக்குப் பார்வையோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முருகவேல், உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. கே. முருகவேல்: 14-4-2007 அன்று சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை துவக்கி அத்தியாவசியப் பொருட்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமைப் பொருட்கள் போன்றவற்றையும், இவற்றோடு அத்தியாவசியமான 10 மளிகைப் பொருட்கள் அடங்கிய பொட்டலத்தையும் மானிய விலையில் வழங்குவது குறிப்பிடத்தக்கது. ஒரு குடும்ப அட்டைக்குப் பொருள் வழங்க வருடம் ஒன்றுக்கு ரூபாய் 2,856 வரை மானியம் வழங்கும் தலைவர் கலைஞர் அரசுக்கு தமிழ்நாட்டு மக்கள் என்றும்

கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப். (குறுக்கீடு) திரு. ம. குணசேகரன், என்ன point of order? (குறுக்கீடு) மைக்கில் Green light நன்றாக எரிகிறது, பேசுங்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. முருகவேல் அவர்கள் சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நலிவடைந்துள்ளது என்று சொன்னார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நலிவடைந்தபோது அந்த மாவட்டத்தினுடைய நலனைக் கருதி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவுவதற்காக 12 கோடி ரூபாயைக் கொடுத்து அந்த மத்தியக் கூட்டுறவு வங்கியை சிறப்புறச் செயல்படுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் *1-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாறு கி.மு., கி.பி. . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி செயல்படாமல் முடங்கிப்போன நேரத்திலே பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்ட பிறகு, அது நடைபெறாமல், கடைசியாக மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களுடைய நேரடியான தலையீட்டின்பேரில்தான் அந்தக் கூட்டுறவு வங்கி செயல்பட்டதேயொழிய, நண்பர் சொல்கின்ற தகவலைப்போல இல்லை என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அதெல்லாம் முடிந்தது. இரண்டு பேருக்கும் வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது, உட்காருங்கள். திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

***திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாறு கி.பி. என்றும், கி.மு. என்றும் கிறிஸ்தவ மதத்தை மையமாகக் கொண்டிருப்பதைப் போன்று, நாளைய தமிழக வரலாறும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முன்னும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜாண் ஜேக்கப், மைக்கிற்கு சற்றுத் தள்ளி நின்று பேசுங்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: டாக்டர் கலைஞர் அவர்களுக்கு பின்னும் என்று உங்களது பொற்கால ஆட்சியைப் பற்றியும், புதிய சட்டமன்றக் கட்டடம் உருவாக்கியதைப் பற்றியும் சொல்லப்போகிறது என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். காரணம், . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் ஒன்றாக எழுந்து நிற்கிறீர்களே? யாராவது ஒருவர் கேட்டால் பரவாயில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு தவறான கருத்தை இந்த சபைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் இருக்கிறபோது, அவர்தான் அந்த நிதியைக் கொண்டு வந்தார் என்று சொன்னார்கள். அது தவறு. தமிழக அரசின் சார்பாக 12 கோடி ரூபாய் வழங்கி, நலிந்த மத்தியக் கூட்டுறவு வங்கியை இயக்கித் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் சில கூட்டுறவு வங்கிகள் செயலிழந்துபோனதைப் பற்றி பல்வேறு

தரப்பிலேயிருந்து பல்வேறு செய்திகள் வந்திருக்கின்றன. அதற்குப் பிறகு மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், இதில் சிறப்புக் கவனம் எடுத்து, இதற்காக ஒட்டுமொத்தமாக, அனைத்து கூட்டுறவு வங்கிகளின் நிதிநிலைமையைச் சரிசெய்கின்ற வகையிலே முழுமையான நிதி வழங்கிய பிறகுதான் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செயல்பட ஆரம்பித்தது என்பதை இந்த அவையிலே மீண்டும் நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சில கருத்துகளை நம்முடைய. . . (குறுக்கீடுகள்) சற்று அமைதியாக நான் சொல்வதைக் கேளுங்கள். நான் சொன்ன கருத்துகளுக்கு நான் பொறுப்பேற்கிறேன். நான் சொன்ன கருத்துகளை நீங்கள் முழுமையாக உள்வாங்கிக்கொண்டு, அதில் ஏதாவது தவறு இருக்கிறது என்று நீங்கள் சொன்னால், அதில் உண்மையிலேயே தவறு இருந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காகத்தான் இந்த மண்டபம் இருக்கிறது. அதாவது, ஒட்டுமொத்தமாக கூட்டுறவு வங்கிகளுடைய நிதி நிலைமையைச் சரி செய்வதற்காக மத்திய அரசு ஒரு சிறப்பு நிதியத்தையே ஏற்பாடு செய்தது—to re-organise and re-orient the Co-operative Central Banks. அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், சிவகங்கையிலேயே இதைப்பற்றி பத்திரிகைகளுக்குப் பேட்டி தந்திருக்கிறார்கள். அந்தப் பேட்டி பற்றிய செய்திக் குறிப்பை வேண்டுமென்றாலும் நான் தருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிப்பார்களென்று சொன்னால், அது சம்பந்தப்பட்ட அனைத்து news items-ஐயும் நான் நாளை இங்கே கொண்டு வந்து சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேரும் ஆதாரங்களை நாளைக்கு இங்கே கொண்டு வந்து கொடுங்கள். உட்காருங்கள். திரு. எஸ். ஜாண் ஜேக்கப், பேசுங்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புதிய கட்டடத்தில் நின்று கொண்டு, கூட்டுறவு மானியக் கோரிக்கையில் என்னுடைய கோரிக்கைகளையும், என்னுடைய உள்ள உணர்வுகளையும், எனது கிள்ளியூர் தொகுதி மக்களின் ஏக்கங்களையும் அவைக் குறிப்புகளில் பதிவது மட்டுமல்லாது, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும்,

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களுக்கும், நிறைவேற்றுகின்ற திட்டங்களிலேயும் சேர்த்திட வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் இம்மாமன்றத்திலே சமர்ப்பிக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும். 1-30 மணியையும் தாண்டி பேசிக் கொண்டிருக்கிறார். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: இதற்குக் காரணமாக, உறுதுணையாக விளங்குகின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் நன்றியைப் பதிவு செய்கிறேன்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்-இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?"

என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி நமக்குக் கற்றுத் தந்த பாடல் வரிகளுக்கு இலக்கணம் காணும் துறை இந்தக் கூட்டுறவுத் துறை என்றால், அது மிகையில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் மற்றும் திரு. பீட்டர் அல்போன்ஸ் ஆகிய இருவர் சொன்ன கருத்துகளும் அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாளையதினம் இரண்டு உறுப்பினர்களும் உங்களிடம் உள்ள ஆதாரங்களைக் கொண்டு வந்து காட்டுங்கள். அதன் பின்னர் பேசிக்கொள்வோம், உட்காருங்கள். திரு. எஸ். ஜாண் ஜேக்கப், பேசுங்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: இந்த உயரிய சிந்தையில் செயல்படும் கூட்டுறவுத் துறையின் சட்டங்களில் உள்ள சில ஓட்டை உடைசல்களையெல்லாம் பயன்படுத்தி, முந்தைய ஆட்சியில் சில பெருச்சாளிகளே அதை உண்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்கிறபோது, அதை ஒரு பெருங்கவலைக்குரிய விஷயமாகவே கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 950 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்து வந்த நிறுவனமும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜாண் ஜேக்கப், ஒரு நிமிடம் பொறுங்கள். திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

பிற்பகல் 1-35

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, சிவகங்கையிலே பத்திரிகையாளர்களைச் சந்தித்தும், விவசாயிகளைச் சந்தித்தும் கருத்துகள் வெளியிடப்பட்டிருக்கிறதென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்தியிலே இன்றைக்கு இருக்கிற மாண்புமிகு உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், அன்றைக்கு அந்தக் கருத்தைச் சொன்னாரே தவிர, சிவகங்கை மத்திய கூட்டுறவு வங்கிக்கு மத்திய அரசிடமிருந்து ஒரு ரூபாய்கூட நிதி கொடுக்கப்படவில்லை. 12 கோடி ரூபாயும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வழங்கினார்களே தவிர, யாரும் வழங்கவில்லை என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மத்திய கூட்டுறவு வங்கியைப்பற்றி நம்முடைய அருமை நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதுதான் சரி. உங்கள் அம்மா ஆட்சியிலே ஒன்றும் செய்யவில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று மத்திய அரசு ஒரு நிதியை ஒதுக்கியது. அந்த நிதியிலேயிருந்துதான் இந்த 12 கோடி ரூபாயை அன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அவர்கள் வழங்கியதை இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், நிதி எங்கிருந்து வந்ததென்று சொன்னால், மத்திய அரசிடமிருந்துதான் வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் ஆளாளுக்கு எழுந்து நின்றால் அவர் எப்படிப் பேசமுடியும்? நேரம் எங்கே இருக்கிறது? (குறுக்கீடு)

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: எடுத்துக்காட்டாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 950 பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து வந்த நிறுவனமும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் உருவாக்கப்பட்ட நிறுவனமுமான . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், நீங்கள் எதற்கு காங்கிரஸ் பற்றிய பிரச்சினைக்குள் போகிறீர்கள்?

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: ஆரல்வாய்மொழியிலுள்ள கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலை நிறுவனமும் ஒன்று என்பதை. . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜாண் ஜேக்கப், கொஞ்சம் பொறுங்கள். திரு. வை. சிவபுண்ணியம், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையைப்பற்றி விவாதம் நடக்கிற காரணத்தினாலே ஒரு தகவலைச் சொல்ல வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களைப்பற்றி இங்கே கருத்துச் சொன்னார்கள். அவர் பத்திரிகையாளர் சந்திப்பில் சொன்னது என்பது, "விதி 11 (1) a அடிப்படையிலே நலிவடைந்த வங்கிகள் எல்லாமே மூடப்படுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன, சிவகங்கையிலேயும் அப்படி ஏற்படுகிறதே, இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று நிருபர்கள் கேட்கிறபோது, அவர் சொன்னார், "அது என்னுடைய துறைக்குச் சம்பந்தப்பட்டது அல்ல; அது குறித்து ரிசர்வ் வங்கியைத்தான் கேட்க வேண்டும், ரிசர்வ் வங்கி கவர்னரைக் கேட்க வேண்டும்" என்றுதான் சொன்னாரே தவிர, அவர் அதை ஒப்புக்கொண்டு எதையும் சொல்லவில்லை என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தோழர் மாண்புமிகு திரு. சிவபுண்ணியம் அவர்கள் எந்தத் தேதியிலே மாண்புமிகு முன்னாள் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்கிற தகவலை இந்த அவையிலே சொல்ல வேண்டும். அவர்கள் சொல்லியிருக்கின்ற தகவலுக்கு அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு நாங்கள் எங்களிடம் இருக்கின்ற குறிப்புகளைக் கொடுத்துவிட்டு இந்த விவகாரத்தை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். இத்துடன் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைக் இணைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்தைப்பற்றி குமரி மாவட்ட பாணியில் சொல்வதாக இருந்தால், 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக' என்று ஒரு பழங்காலக் கதை சொல்வார்கள். அந்த நிலையில்தான் உள்ளது. அடுத்ததாக, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்வதுபோல நாளையதினம் அதற்கான வாய்ப்பை நீங்கள் அளித்தால், எந்தத் தேதியிலே அவர் இவ்வாறு பேட்டியளித்தார் என்பதை நான் உங்களிடத்தில் ஆதாரத்தோடு காண்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் பொறுங்கள். திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிதி அமைச்சர் அவர்கள், எடுத்தவுடனே தான் நிதியைக் கொடுப்பதாகச் சொல்ல முடியாது. ஏனென்றால், அடக்கத்தின் காரணமாக அப்படி ரிசர்வ் வங்கி கவர்னரைக் கேட்க வேண்டுமென்று சொல்லியிருப்பாரே தவிர. . . (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் கூட்டுறவுச் சங்கங்களில் பல்வேறு முறைகேடுகள் நடந்து, பல்வேறு விசாரணை கமிஷன்கள் அமைக்கப்பட்டு, விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கிடையில், கடலூர், தருமபுரி, சேலம் போன்ற பல்வேறு பகுதிகளில் குறிப்பிட்ட ஒரு அதிகாரி, இணைப் பதிவாளர் என்று நினைக்கிறேன், இதில் கோடிக் கணக்கிலே ஊழல் செய்தவர்களுக்கு உடந்தையாக இருந்து, அதற்கு உடந்தையாக இல்லாத ஒரு சிலரைத் திட்டமிட்டுப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சேலம், தருமபுரி மாவட்டங்களில் 10-க்கும் மேற்பட்ட கூட்டுறவுத் துறையினுடைய செயலாளர்களை சஸ்பெண்டு செய்திருக்கிறார், ஒருவரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார். அப்படிப்பட்ட அந்த இணைப் பதிவாளர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டீர்கள். (குறுக்கீடு) திரு. ஜாண் ஜேக்கப், பேசுங்கள்.

பிற்பகல் 1-40

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: அடுத்ததாக, மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுவரும் திட்டங்களில் ஒன்று பொது விநியோகத் திட்டம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், அண்மையில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம்கூட இதன் அவசியத்தையும் அதன் சிறப்பான செயல்பாட்டையும் வலியுறுத்தியிருக்கிறார்கள். தொழிலாளர்கள், ஆதரவற்றோர், அனாதைகள், முதியோர் பென்ஷன் திட்டங்களின் உதவியால் பல உயிர்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்வதற்கும், நடுத்தர மக்கள், ஏழைகள் திருப்தியாக வாழ்வதற்கும் காரணமான திட்டம்தான் பொது விநியோகத் திட்டம்.

குமரி மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையின்கீழ் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால், சிறப்பாகக் கண்காணிக்கப்பட வேண்டும். 25 நியாய விலைக் கடைகளுக்கு ஒரு கண்காணிப்பு அதிகாரி என்ற அளவிலாவது வைத்துக் கண்காணிக்கப்பட வேண்டும். தற்போது குமரி மாவட்டத்தில் அவற்றைக் கண்காணிக்கும் அதிகாரிகள் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளதால் நிர்வாகம் பாதிக்கப்படும் நிலைமை உள்ளது. எனவே, நான் அரசை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் உடனடியாக முன்பு இருந்ததைப் போன்று தேவையான கண்காணிப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும். கூட்டுறவுத் துறையிலுள்ள பெரிய நிறுவனங்களை நிருவகிக்க நிருவாகக் குழு இல்லாததால் முன்பு இருந்ததைப் போன்றே துணைப் பதிவாளர் அந்தஸ்தில் உள்ள தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும். இதனை நான் ஒரு அவசர, அவசியத் தேவையாகவே கருதுகிறேன்.

குறிப்பாக, கருங்கல் உழவர் கூட்டுறவுச் சங்கம், தணக்கன்குளம், இரணியல் உழவுப் பணியாளர் கூட்டுறவுச் சங்கம், அருமனை தொடக்க வேளாண்மைக் கடன் சங்கம், நாகர்கோவில் நேசமணி நகர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர் கூட்டுறவுச் சிக்கன நாணயச் சங்கம் போன்ற பெரிய நிறுவனங்களை நிருவகிப்பதற்குத் தனியாக தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும். தற்போது இவற்றில் பணியாற்றும் தனி அதிகாரிகள் கூடுதல் பொறுப்புடன் அதிக பணிச் சுமைகளுடன் பணியாற்றுவதால் சிறந்த நிருவாகத்தைத் தர முடியவில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் கூட்டுறவுச் சிக்கன நாணயச் சங்கத்தை கருத்தில் கொள்ளலாம். ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இலாபம் ஈட்டும் இந்த நிறுவனத்தில் உறுப்பினர்கள் கடன் பெற விண்ணப்பித்தால் கடன் கிடைக்க ஒரு ஆண்டுக்கு மேல் ஆகிறது. இதனால் கடனுக்கு விண்ணப்பித்தவர்கள் வேறு வங்கிகளில் கடன் பெற வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகிறது. இதில் வேடிக்கையான விஷயம் என்னவென்றால், கடன் பெற்றவர்களின் பாக்கித் தொகை மாதந்தோறும் அவர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது என்றாலும், இதுபற்றி சங்கத்தில் கேட்டால் போக்குவரத்து நிருவாகம் பிடித்தம் செய்த தொகை எங்களுக்கு இன்னும் தரவில்லை என்று கூறுகிறார்கள். இதனால், உறுப்பினர்கள் சங்கத்தின்மீது நம்பிக்கை இழந்து வருகிறார்கள்.

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவுத் துறையில் குமரி மாவட்ட மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புகளில் ஒன்றான ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்ற (I.C.D.P) கூட்டுறவு அமைப்பை குமரி மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டும். குமரி மாவட்டத்தில் சிவில் சப்ளைஸ் உணவுக் கிட்டங்கிகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு உணவுப் பொருட்களை சப்ளை செய்யும் பணி மிகவும் மந்தமாக உள்ளது. இதற்குக் காரணம் போதிய பணியாளர்கள் இல்லை. எனவே, போதிய பணியாளர்களை நியமித்து கிட்டங்கியிலுள்ள உணவுப் பொருட்களை உரிய காலத்தில் நியாய விலைக் கடைகளுக்கு கொண்டுச் சேர்த்து பொது மக்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவுத் துறை மற்றும் சார்நிலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் குறைந்தபட்சம் ரூ.6,000/- ஊதியம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் குறிப்பாக, கிள்ளியூர் தொகுதியில், சாலைகள் உடைந்து, பழுதடைந்த நிலையிலுள்ளன. பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையாலும், சிதைந்துபோன சாலைகளாலும் மக்கள் மிகுந்த சிரமத்திற்கிடையே பயணிக்க வேண்யுள்ளது. குறிப்பாக, கருங்கலிலிருந்து திங்கள் நகர் செல்லும் சாலையை உடனடியாகச் சீர் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால், குடிநீர்க் குழாய் பதிப்பதற்காகத் தோண்டப்பட்ட சாலைகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளன. இதுபோன்று புதுக்கடையிலிருந்து மேற்கு கடற்கரைச் சாலையில் கணபதியான் கடவிலிருந்து விரிவிளை செல்லும் சாலை மிகவும் அகலம் குறைந்து காணப்படுகிறது. இவற்றையும் உடனடியாகச் சீர் செய்ய வேண்டும்.

கிள்ளியூர் தொகுதியில் அனைத்துப் பிரிவுகளிலுள்ள சாலைகளைச் சீரமைக்க ரூ.25 கோடி நிதி ஒதுக்க வேண்டும். குமரி மாவட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் பின்தங்கிய, கிள்ளியூர் தொகுதியைப் பின்தங்கிய தொகுதியாக அறிவித்து ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கருணைக் கோரிக்கை ஒன்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் கொண்டு வருகிறேன். அண்மையில் சட்டீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்டு தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று பேர் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.5 இலட்சம் வழங்கியமைக்கு நன்றியை சமர்ப்பிக்கின்றேன். அவர்களுடைய குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கினால், அவர்கள் வாழ்நாள் முழுவதும் நன்றியுடன் வணங்குவார்கள். இதில் எனது கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட புதுக்கடை அருகேயுள்ள அனந்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த இறந்து போன மத்திய ரிசர்வ் படை போலீஸ்காரர் விஜயகுமார் அவர்களின் மனைவி திருமதி இராதா, தையல் ஆசிரியைப் பயிற்சிப் பெற்றவர். அவருக்கு அரசுப் பள்ளியில் தையல் ஆசிரியைப் பணி வழங்க வேண்டுகிறேன்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என இயற்கை அன்னையின் வளத்தை ஒட்டுமொத்தக் குத்தகையாகச் சுமந்து நின்ற குமரி மாவட்டம், இன்று வறட்சி மாவட்டமாக உருமாறியுள்ளது. ஆண்டுகள் மாறினாலும் குடிநீர்ப் பஞ்சம் மாறுவதில்லை. குடிநீர்க் கிணறுகள் வறண்டுவிட்டன. ஆழ்குழாய்க் கிணறுகளில் நீர்மட்டம் 400 அடி வரையிலும் சென்றுவிட்டது. இந்நிலை நீடித்தால் நாளை எப்படியோ என இப்போதே மக்கள் முனகத் தொடங்கியுள்ளனர்.

பிற்பகல் 1-45

இம்மாவட்டத்தில் பொதுப் பணித் துறையின்கீழ் 2,040 குளங்களும், உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் சுமார் 1,800 மானாவாரிக் குளங்களும், கோயில்களுக்குச் சொந்தமான ஏராளமான குளங்களும் உள்ளன. அரசுப் பதிவேடுகளில் உள்ள பெரும்பாலான குளங்களைத் தற்போது நிஜத்தில் காணவே முடியவில்லை. அவை கட்டடங்களாகவும், விளை நிலங்களாகவும், உருமாறியுள்ளன. இதுபோல, 10 ஏக்கர் நிலப் பரப்புள்ள குளங்கள் 2 ஏக்கர் அல்லது 3 ஏக்கர் நிலப் பரப்பு உள்ள குளங்களாகச் சுருங்கிவிட்டன. அவையும் மண் மேடுகளாக மாறியுள்ளன. இதனால் குளத்தின் நீர் கொள்ளளவு குறைந்து, நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாகக் குறைந்துவிட்டது. மழைக் காலங்களில் கிடைக்கும் நீர் கடலுக்குச் செல்கிறது. நாளுக்கு நாள் மழையின் அளவும் குறைந்து வருவதால், பூமிக்குள் சென்றுகொண்டிருந்த recharge குறைந்துவிட்டது. இதனால் விரைவில் குமரி மாவட்டம்

ஒரு வறட்சி மாவட்டமாகும் நிலை உள்ளது. எனவே, இப்பிரச்சினையிலிருந்து விடுபட குளங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி சுமார் 15 அடியாவது ஆழப்படுத்தி, அகலப்படுத்த வேண்டும்.

குமரி மாவட்டத்தையும், கேரள மாநிலத்தினையும் நீர் வழியாக இணைக்கின்ற ஏ.வி.எம். சானல் கேரள மாநிலத்தில் ஒழுங்காகப் பராமரிக்கப்படுகின்ற காரணத்தால், அங்கு நிலத்தடி நீர் உப்பாவது தடுக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தில் ஏ.வி.எம். சானல் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள காரணத்தால், ஆங்காங்கே சாக்கடை போன்று தண்ணீர் தேங்கி நிற்கிறது. சில இடங்களில் கொசுக்கள் முட்டையிட்டு கொசு உற்பத்தி நிலையங்களாக உருமாறி உள்ளன. இந்நிலைமையை அகற்றி, கடற்கரை கிராமங்கள் வழியாக கூடங்குளம் வரை இச்சானலைக் கொண்டு செல்லலாம்.

சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு இதைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, புனரமைப்பு செய்ய சுமார் 480 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. தமிழக அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு இதைச் சீர் செய்ய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். இதனால் குமரி மாவட்டத்திலுள்ள அனைத்து கடற்கரை கிராமங்களும் பயன்பெறும். உள் நாட்டில் நிலத்தடி நீர் உப்பாவது தடுக்கப்படும். மேலும் படகுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தலாம். சாலைகளில் நெருக்கடி தீரும். சுற்றுலாத் தலங்களையும், புண்ணியத் தலங்களையும் இணைக்கலாம். கடலில் கலக்கும் ஆறுகளின் தண்ணீரையும் இதில் இணைக்கலாம். இச்சானலிலிருந்து கிளை ஆறுகளை வெட்டி குளங்களுக்குத் தண்ணீர் கொண்டுவரலாம். இதனால் உள் நாட்டு விவசாயம் பெருகும். குடிநீர்க் கிணறுகளுக்குத் தேவையான நீர் கிடைக்கும். குடிநீர்த் தட்டுப்பாடு நிரந்தரமாகத் தீரும். கடலுக்கு வீணாகத் தண்ணீர் செல்வதையும் தடுக்கலாம். இத்திட்டத்தை நிறைவேற்றினால் இக்கால மக்களையும், எதிர்காலச் சந்ததிகளையும் குடிநீர்ப் பற்றாக்குறையிலிருந்து காப்பாற்றலாம்.

அடுத்ததாக, பட்டணம் கால்வாய்ப் பிரச்சினை. கிள்ளியூர், விளவங்கோடு மக்களின் வறுமையினையும், வேலை வாய்ப்பின்மையையும் போக்க பெருந்தலைவர் காமராஜரால் கொண்டுவரப்பட்ட ஒரு உன்னதமான திட்டம் அது.

இந்தச் சானல் பகுதிகள் ஒழுங்காகப் பராமரிக்கப்படாததாலும், தண்ணீர் வராததாலும், கடை வரப்புப் பகுதி மக்கள் விவசாயத்தையே மறந்துவிட்டனர். எனவே, இச்சானலை சீரமைத்து ஒழுங்காகத் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொண்டு விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அடுத்ததாக, விவசாயிகளின் துயரப் பிரச்சினையை இங்கு கூற விரும்புகிறேன். முன்பு எனது தொகுதி மக்களிடம் இரண்டு தொழில்களே இருந்து வந்தன. அதில் முதலிடத்திலே விவசாயம் இருந்தது. இப்போது நெல் விவசாயம் முற்றிலும் அழியும் நிலையில் உள்ளது. இதே நிலை நீடித்தால், இன்னும் 25 ஆண்டுகள் கழித்து பிறக்கும் குழந்தைகள், அரிசி எவ்வாறு தயாரிக்கப்படுகிறது எனக் கேள்வி கேட்கும் நிலையே ஏற்படும். காரணம், நெல் விவசாயம் கட்டுப்படியாகாத நிலையிலே உள்ளது. இலாபம் இல்லாதது விவசாயம் என்ற உணர்வு மக்களுக்கு வந்துவிட்டது. எனவே, நெல் விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து, அறுவடை இயந்திரம் போன்றவற்றை அரசு மிகக் குறைந்த விலையில் வழங்க வேண்டும்.

ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நிலமுள்ள விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். விவசாயத்தின் தேவை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பள்ளி பாடத் திட்டங்களிலேயும் விவசாயத்தை ஒரு பாடமாகச் சேர்க்க வேண்டும்.

கூட்டுறவுத் துறையில் அனைத்து நிலைகளிலும் பதவி உயர்வு மிகவும் தாமதமாகிறது. இதைத் துரிதப்படுத்த வேண்டும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்குவதுபோல மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 2006 ஆம் வருடத்திற்கான முடக்கப்பட்ட நிலுவையை வழங்க வேண்டும்.

கடந்த 3 ஊதியக் குழுக்களில் கூட்டுறவுத் துறை ஊழியர்களின் தர நிலை குறைக்கப்பட்டுள்ளதாக ஊழியர்கள் குற்றச்சாட்டு சொல்கிறார்கள். வேலைப் பளுவையும், பொறுப்புகளையும் கருத்தில் கொண்டு அதனைச் சரி செய்ய வேண்டுகிறேன்.

கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கூட்டுறவுத் தேர்தலை ஆணையம் அமைத்து நடத்த வேண்டும்.

Tamil Nadu Civil Supplies Corporation-ல் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் மட்டும் வழங்கப்படவில்லை. கடந்த 2009 ஆம் ஆண்டில் தமிழக அரசு உணவு மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் பதிலளிக்கும்போது, இந்த அரசு பென்ஷன் வழங்கவில்லை என்றால், எந்த அரசும் வழங்க முடியாது என்று சொன்னார்கள். அதை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜாண் ஜேக்கப், உரையாற்றியது போதும். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் ஆகியோர் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

5. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (16-4-2010) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 16-4-2010, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

Tamil Nadu Civil Supplies Corporation-ல் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் மட்டும் வழங்கப்படவில்லை. கடந்த 2009 ஆம் ஆண்டில் தமிழக அரசு உணவு மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் பதிலளிக்கும்போது, இந்த அரசு பென்ஷன் வழங்கவில்லை என்றால், எந்த அரசும் வழங்க முடியாது என்று சொன்னார்கள். அதை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜாண் ஜேக்கப், உரையாற்றியது போதும். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் ஆகியோர் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

5. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (16-4-2010) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 16-4-2010, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2010 ஏப்ரல் 15

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (16-4-2010) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-4-2010) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

37. மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

39. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

40. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

41. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

42. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

— — — — — —

[பேரவைத் தலைவர்] [2010 ஏப்ரல் 15

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (16-4-2010) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-4-2010) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

37. மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

39. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

40. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

41. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

42. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

— — — — — —

[பேரவைத் தலைவர்] [2010 ஏப்ரல் 15

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (16-4-2010) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-4-2010) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

37. மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

39. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

40. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

41. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

42. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

— — — — — —

இணைப்பு I

(320 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

முன்னுரை

தமிழ்நாட்டில், குறிப்பாக கிராமப்புறங்களில் துரிதமான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டுறவு அமைப்புகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வேளாண் விற்பனைச் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணயச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அச்சகங்கள் ஆகியவை கூட்டுறவுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன. அவை, வேளாண் மற்றும் வேளாண் சாராக் கடன்கள் வழங்குதல், வேளாண் இடுபொருட்களான விதை, உரம், போன்றவற்றை விநியோகித்தல், வேளாண் விளை பொருட்களைச் சந்தையிடல், நுகர்வோர் நலன் கருதி அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்தல் போன்ற பல்வேறு பணிகளை சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஆற்றி வருவதோடு அரசின் பொது விநியோகத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றன.

2. கடந்த காலங்களில், கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புவதற்காக அர்ப்பணிப்பு உணர்வோடு உழைத்த தன்னலமற்ற தலைவர்களின் அயராத தொண்டினால் கூட்டுறவு நிறுவனங்கள் வளமோடு வழிநடத்தப்பட்டன. சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் சமூகப் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் கூட்டுறவு இயக்கம் எல்லாத் துறைகளிலும் ஊடுருவி பரவியிருந்தது. ஆனால், காலப்போக்கில் அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவு நிறுவனங்கள் நிதி நெருக்கடியில் சிக்கி செயலிழந்து இந்த இயக்கமே தொய்வுறத் தொடங்கியது.

3. இந்நிலையில், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இந்தத் தொய்வை நீக்கிட நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் பல்வேறு

சீரமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக நலிவுற்ற கூட்டுறவு அமைப்புகள் சீரடையத் தொடங்கியுள்ளன.

- வேளாண் கடன்கள் தள்ளுபடி, திருப்பித் தரப்படாமல் இருந்த முதிர்வடைந்த வைப்புத் தொகைகளை வைப்புதாரர்களுக்குத் திருப்பியளித்தது, உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தப்படும் பயிர்க் கடனுக்கான வட்டியை அரசே ஏற்று வட்டியில்லா கடனாக அளித்தது, நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு புதிய கடன் திட்டங்களை செயல்படுத்த குறைந்த வட்டி விகிதத்தில் சிறப்புக் காசுக் கடனுதவி வழங்கியது, இச்சங்கங்கள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களைச் சீரமைத்து மாற்றியமைத்தது, கூட்டுறவுச் சங்கங்களின் உள் கட்டமைப்புகளை வலுப்படுத்தியது, திறமையை வளர்க்க நடவடிக்கை, மிகைப் பணியாளர்களை மறு பரவல்மூலம் தேவைப்படும் சங்கங்களில் பணியமர்த்தியது, புதிய பணியாளர்கள் நியமனம் போன்றவற்றின் விளைவாக கடன் கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரிய அளவில் புத்துயிரூட்டப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளன. அதன் பயனாகக் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்கள் அளவு 2.4 மடங்காக உயர்ந்து 28-2-2010 வரையிலான காலத்தில் ரூ.18,232 கோடியளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. ரூபாய் ஒரு கோடியளவிற்கும் அதிகமாக கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 31-3-2006 அன்று 852 ஆக மட்டுமே இருந்தது. இவ்வெண்ணிக்கை 28-2-2010 அன்று 2,886 ஆக உயர்ந்துள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கடன் மட்டுமே வழங்குகின்ற நிறுவனங்களாக இல்லாமல் பன்முகச் சேவையளிக்கும் நிறுவனங்களாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

- அதேபோல், வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டு அவற்றின் வணிகம் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்ததால் அனைத்துச் சங்கங்களும் நடப்பு ஆண்டில் இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளன.

2010 ஏப்ரல் 15]

❖ நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகள் அவற்றின் குவிப்பு நட்டத்தினைக் குறைத்து வணிகத்தைக் கணிசமான அளவிற்கு உயர்த்தியுள்ளன.

❖ கூட்டுறவு அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டு அவற்றின் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

4. இவ்வாறு மாநில அரசால் தொய்வின்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களும் புது வாழ்வு பெற்று அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்தி உறுப்பினர்களுக்குச் சிறந்த சேவை செய்து வருகின்றன. மக்களிடையே ஒருவருக்கொருவர் உதவிடும் கூட்டுறவு உணர்வினை வலுப்படுத்தி, பாதுகாத்து, வளர்ப்பதன் மூலமாக கூட்டுறவு இயக்கத்தை மீளவும் தன்னிகரற்ற நிலைக்கு கொண்டு செல்வதுதான் கூட்டுறவுத் துறையின் தலையாய கொள்கையாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

இயல் – 1

கூட்டுறவுக் கடன் அமைப்பு

இம்மாநிலத்தில், கடன் வழங்குவதில் கூட்டுறவுக் கடன் அமைப்பு தன்னிகரற்ற தனிப்பெரும் அமைப்பாக, அடிப்படைக் கட்டமைப்புகளுடன் மாநிலம் முழுவதும் பரவி விரிந்துள்ளது. மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புற மக்களுக்கு நியாயமான வட்டி விகிதங்களில் கடன் வழங்கி வருவதால், தனியாரிடம் மிக அதிகமான வட்டி விகிதத்திற்குக் கடன் பெற்றுச் சுரண்டலுக்காட்படுத்தப்படும் வேளாண் பெருங்குடி மக்களை நிதி இடர்ப்பாடுகளினின்று மீட்க உதவுகிறது. இக்கூட்டுறவு அமைப்புகள், விவசாயிகளுக்கு நெருக்கமாகவும் அவரவர் குடியிருப்புகளுக்கு மிக, மிக அண்மையிலும் செயல்பட்டு, விவசாயிகள் எளிதில் அணுகிக் கடன் பெறும் அமைப்புகளாகவும் திகழ்கின்றன.

2. தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் குறுகிய காலக் கடன் அமைப்பு, நீண்ட காலக் கடன் அமைப்பு மற்றும் நகரக் கூட்டுறவு கடன் அமைப்பு என மூன்று வகையாக அமைந்துள்ளன. குறுகிய காலக் கடன் அமைப்பு கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. நீண்ட காலக் கடன் அமைப்பு வட்ட/வட்டார அளவில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும் உள்ளடக்கியுள்ளது.

3. குறுகிய காலக் கடன் அமைப்பு மற்றும் நீண்ட காலக் கடன் அமைப்பு கிராமப்புறங்களிலுள்ள பொதுமக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்கிறது. நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகர மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள நடுத்தர மக்களின் கடன் தேவைகளையும் ஏனைய வங்கிச் சேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கியதாகும்.

2010 ஏப்ரல் 15]

அ. குறுகிய காலக் கடன் அமைப்பு

4. தமிழ்நாட்டில் குறுகிய காலக் கடன் அமைப்பு மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியும், மாவட்ட அளவில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், கிராம அளவில் 4,522 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கொண்டதாக உள்ளது.

(i) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை

5. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாகும். இவ்வங்கி, பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் பெறும் மறு நிதி உதவி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகியவற்றின்மூலம் நிதியாதாரங்களைத் திரட்டியும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வேளாண் மற்றும் வேளாண் சாராத் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதிகளை உரியவாறு பயன்படுத்துவதுடன், நிதி மேலாண்மை குறித்து வழிகாட்டுதலையும் அளிக்கிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களுக்கு தகுதி மேம்பாடு தொடர்பான பயிற்சியையும் இவ்வங்கி அளிக்கிறது. மேலும், பொதுமக்களுக்கு நேரடியாக தன்னுடைய 45 கிளைகள்மூலம் வங்கிச் சேவையாற்றி வருகிறது.

6. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ரூ.61.07 கோடி பங்குத் தொகையைக் கொண்டு இயங்குகிறது. இதில் அரசின் பங்குத் தொகை ரூ.0.26 கோடி. இவ்வங்கி ரூ.697 கோடி அளவிற்குக் காப்பு நிதியையும், ரூ.5,211 கோடி அளவிற்கு வைப்பு நிதியையும் கொண்டுள்ளது. 2008-2009 ஆம் நிதியாண்டில் ரூ. 33.74 கோடி நிகர இலாபத்தை ஈட்டியுள்ள இவ்வங்கி, 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.28.84 கோடி இலாபமீட்டுமென எதிர்நோக்கப்படுகிறது. இத்தலைமை வங்கி 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.2,528.28 கோடி அளவிற்கு நிதியுதவி அளித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 44% அதிகமாகும். இவ்வங்கி 2009-2010 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி

வங்கியிடம் ரூ.879.57 கோடி அளவிற்கு மறுநிதி உதவியைப் பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 69% அதிகமாகும்.

7. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் வளர்ச்சியடையச் செய்திட தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றினைச் செய்தது. இதன்படி 2007-2008 முதல் 2011-2012 வரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கான வளர்ச்சிச் செயல் திட்டங்களைத் தயார் செய்து நடைமுறைப்படுத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமும் எட்ட வேண்டிய இலக்கினை நிர்ணயித்து அவற்றை எய்தவும், செலவுகளைக் குறைத்து திறம்படச் செயல்படவும், வளர்ச்சிச் செயல் திட்டம் வகை செய்கிறது. வளர்ச்சிச் செயல் திட்டங்களின் முனைப்பான செயலாக்கத்தினால் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் வரும் காலத்தில் இலாபத்தில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பின் அச்சாணியாகச் செயல்படும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மிகச் சிறப்பாகவும் திறமையாகவும் போட்டிகளை எதிர்கொண்டும் செயல்படவேண்டும். ஆதலால், இத்தலைமை வங்கி மைய வங்கியியல் முறைக்கு மாறவும் (Core Banking), நவீன வங்கியியல் வசதிகளான தானியங்கிப் பணம் வழங்கும் நிலையம் (Automated Teller Machine) அமைத்திடவும், வங்கியின் சேவையை எவ்விடத்திலிருந்தும் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அக்டோபர் 2010-க்குள் இப்பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உடனுக்குடன் பணப் பரிமாற்றம் செய்திட நிகழ்நேர மொத்தத் தீர்வு (Real Time Gross Settlement) மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Funds Transfer) செய்யும் முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் இவ்வங்கியின் வாடிக்கைதாரர்களும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின்

2010 ஏப்ரல் 15]
வாடிக்கைதாரர்களும் இந்தியா முழுவதும் மின்னணு நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியும்.

9. இத்தலைமை வங்கி பராமரிக்கும் பல்வேறு நிதிகளில் "தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி" மற்றும் "வைப்புத் தொகை உத்தரவாத நிதி" ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும். அதில் ''தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதி'' கூட்டுறவு உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. "வைப்புத் தொகை உத்தரவாத நிதி" பொது மக்களின் வைப்பு நிதிகளைத் திருப்பி வழங்க இயலாத நிலையில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வைப்பு நிதிகளைத் திரும்ப வழங்க பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பொதுமக்களிடையே நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

10. மாற்றுத் திறனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் *2005-2006* ஆம் ஆண்டில் *ரூ.63.89* இலட்சம் கடன் வழங்கப்பட்டது. *2009-2010* ஆம் ஆண்டில் *ரூ.545* இலட்சம் கடன் வழங்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்கியமைக்காக தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு, *2008-2009* ஆம் ஆண்டுக்கான 'மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகார பகிர்வளித்த சிறந்த முகமைக்கான தேசிய விருது' மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் *3-12-2009* அன்று வழங்கப்பட்டது. *2010-2011* ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக *ரூ.7* கோடி கடன் வழங்கப்படும்.

(ii) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

11. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் போன்ற இணைப்புச் சங்கங்களின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருவதோடு, பொது மக்களுக்கும் வங்கிச் சேவை ஆற்றி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகைகள் மூலமும் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்தும் நிதியாதாரங்களைப் பெறுகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக்

[2010 ஏப்ரல் 15

கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும், தங்கள் கிளைகள் வாயிலாகவும் கடன்களை வழங்கி வருகின்றன.

12. 28-2-2010 அன்று மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் நிகர வைப்புத் தொகையும், நிகர கடன் நிலுவையும் முறையே 14% மற்றும் 11.7% ஆண்டு வளர்ச்சி விகிதத்தில் உயர்ந்து ரூ.11,786.22 கோடி மற்றும் ரூ.14,030.37 கோடியாக அதிகரித்துள்ளது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், சிறப்பு முயற்சி எடுத்து நுண்ணீர்ப் பாசனம், பசுமைக் குடில் விவசாயம் மற்றும் துல்லியப் பண்ணைச் சாகுபடி போன்ற வேளாண் தொழில்நுட்பச் செயல்பாடுகளுக்கும் கடன் வழங்கி வருகின்றன.

13. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டின் விவரங்கள்:

(ரூ. கோடியில்)

ஆண்டு	வைப்புத் தொகை	வழங்கப் பட்ட கடன்	கடன் நிலுவை
2005-2006	6979.34	2005.33	8739.00
2006-2007	7286.62	2973.02	9077.00
2007-2008	8849.44	3711.17	10989.57
2008-2009	10317.31	4531.65	12560.38
2009-2010*	11786.22	4945.14	14030.37

*28-2-2010 அன்று உள்ளபடி.

14. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வைப்புகளைத் திரட்டுவதிலும் கடன் வழங்குவதிலும் நல்ல முன்னேற்றம் அடைந்தது மட்டுமல்லாமல் இணைப்புச் சங்கங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுகளின் கடன்களைச் சீரமைத்து வட்டிச் சுமையைக் குறைத்து இவற்றின் வணிக வளர்ச்சிக்கு உதவி புரிந்துள்ளன.

15. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மதிப்பைக் கூட்டிடவும் திறனை மேம்படுத்திடவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணியாளர்களின் எண்ணிக்கையினை

2010 ஏப்ரல் 15]

வரைமுறைப்படுத்தி கடன் மதிப்பீடு, நிதி மேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை போன்ற பொருள்களில் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. காலிப் பணியிடங்களை நிரப்பும் வகையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் மிகையாக உள்ள பணியாளர்கள் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் அயற்பணியில் பணியமர்த்தப்பட்டனர். இது தொடக்கச் சங்கங்களுக்கும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் மிகுந்த பயனை அளித்தது.

16. நவீன வங்கிச் சேவையில், வங்கிகளின் திறனை மேம்படுத்த அவற்றைக் கணினிமயமாக்குவது அவசியமாகும். மேலும், கூட்டுறவுகள் வங்கிச் சேவை அளிப்பதில் பிற வங்கிகளின் போட்டியைச் சமாளிக்கும் விதத்தில் செயல்பட வேண்டும். இதனைக் கருத்தில்கொண்டு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் திறமையாகச் செயல்பட பொதுவானதொரு வங்கியியல் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 28-2-2010 அன்றைய நிலவரப்படி 736 கிளைகளில் 619 கிளைகள் கணினிமயமாக்கப்பட்டு, இப்பணிகள் 31-5-2010-க்குள் நிறைவடையும்.

(iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

17. தமிழ்நாட்டில் மொத்தம் 4,522 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளன. கிராமப்புறங்களில் வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா கடன்கள் வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் மற்றும் சிறு விவசாயக் கருவிகளையும் இச்சங்கங்கள் விற்பனை செய்கின்றன. கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் 15,569 பொது விநியோகத் திட்டக் கடைகளையும் இச்சங்கங்கள் நடத்தி வருகின்றன.

பயிர்க் கடன் மற்றும் வட்டி மானியம்:

18. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் கடன்களில் முக்கியமானது பயிர்க் கடன் ஆகும். ஏற்கெனவே கடன் பெறாத விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கிடையே குழுக்கள் அமைத்து அதன்மூலம் பயிர்க் கடன் வழங்குதல் போன்றவற்றால் கடன் பெறும் வாய்ப்பைப் பெறாதவர்களையும் உள்ளடக்கி கடன்

[2010 ஏப்ரல் 15

பெறும் வாய்ப்பை உருவாக்கும் (inclusive credit) முயற்சியில் இவை ஈடுபட்டுள்ளன. இதர வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த நோக்கங்களான விவசாயப் பண்ணை இயந்திரங்கள் வாங்குவது, நுண்ணீர்ப் பாசனம், நில மேம்பாடு மற்றும் பால் பண்ணை போன்றவற்றிற்கு கடன்கள் வழங்குவதுடன் நுகர்வோர் கடன், வீட்டு வசதிக் கடன், சுய உதவிக் குழுக்கள் மற்றும் பண்ணை சாரா கடன்களும் வழங்கப்படுகின்றன.

19. கடந்த 4 ஆண்டுகளில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் பயிர்க் கடன் உள்பட மொத்தமாக வழங்கப்பட்ட கடன் அளவு 100% மேலாக வளர்ச்சியைக் கண்டுள்ளது.

ஆண்டு வாரியாக வழங்கிய கடன்களின் விவரம் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயிர்க் கடன்	இதரக் கடன்கள்
2005-2006	1132.18	2718.69
2006-2007	1250.62	3082.20
2007-2008	1393.97	3641.45
2008-2009	1570.99	5485.50
2009-2010*	2013.55	7266.93

*28-2-2010-ல் உள்ளபடி

20. 2009-2010 ஆம் ஆண்டில் பயிர்க் கடன் ரூ.2,000 கோடி அளவிற்கும், மத்திய காலக் கடன் ரூ.162 கோடி அளவிற்கும் வழங்கத் திட்டமிடப்பட்டது. 28-2-2010 வரை ரூ.2,013.55 கோடி அளவிற்குப் பயிர்க் கடனும், ரூ.104.97 கோடி அளவிற்கு மத்திய காலக் கடனும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனால் 8,36,633 விவசாயிகள் பயிர்க் கடன் பெற்று பயனடைந்துள்ளனர். இதில் கூட்டுறவுகளில் இதுவரை கடன் பெறாத 2,53,373 விவசாயிகளுக்கு ரூ.606.88 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை பயிர்க் கடன் வழங்குதலில்

2010 ஏப்ரல் 15]

28%, பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கையில் 21%, புதிய விவசாயிகளின் எண்ணிக்கையில் 19% அதிகரித்துள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.2,500 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கப்படும்.

21. கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்மூலம் விவசாயக் கடன் வழங்கும் முறை 2008-2009 ஆம் ஆண்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வழக்கமாக அளிக்கப்படும் கடன் வசதிகள் மட்டுமல்லாது ஒவ்வொரு குழுவிற்கும் சுழல் நிதியாக ரூ.10,000 வழங்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில், இதுவரை எந்த நிறுவனங்கள் மூலமும் கடன் பெற இயலாதிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், குத்தகைக்குப் பயிரிடுவோர் மற்றும் வாய்மொழி குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய 22,145 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் இதுவரை கடன்பெறும் வாய்ப்பைப் பெறாதவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டதோடு புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களைக் கையாண்டு அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டு கூட்டு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்வது போன்றவை சாத்தியமாகியுள்ளன. இதனால் சிறு மற்றும் குறு விவசாயிகளின் சிதறுண்டு கிடக்கும் நிலங்களை ஒருங்கிணைத்து இதுவரை உயர் தொழில்நுட்பத்தால் பயன் ஏதும் பெறாத இத்தகைய விவசாயிகள் உற்பத்தியை அதிகரித்து அதன்மூலம் வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

22. 2009-2010 ஆம் ஆண்டில், 28-2-2010 வரை 12,517 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.156.83 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. பால் வளம், விவசாயக் கருவிகள் மற்றும் நுண்ணீர்ப் பாசனம் போன்ற நோக்கங்களுக்காக 1,871 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.8.83 கோடி முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. உழவு இயந்திரம், பூச்சி மருந்து தெளிப்பான் போன்ற கருவிகளை வாங்கவும், விதை மற்றும் உரம் ஆகியவற்றை ஒரு குழுவாக வாங்கி அனைவரும் பயன்படுத்தும் வகையில் இந்தக் குழுக்கள் செயல்படுகின்றன. 2010-2011 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடருவதுடன் மேலும் 10,000 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு ரூ.10 கோடி சுழல் நிதி வழங்கப்படும். மேலும், இத்தகைய

[2010 ஏப்ரல் 15

கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உழவர் மன்றங்களுடன் இணைந்து இயங்கிட நடவடிக்கை எடுக்கப்படும். இது புதிய கருத்துகளையும் தொழில்நுட்பங்களையும் பகிர்ந்துகொள்ள ஒரு தளமாக அமையும். கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் பயனுறுவதை அதிகரிக்க தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் இதர திட்டங்கள் இக்குழுக்களுக்குச் சென்றடைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

23. வேளாண் உற்பத்தி சுழற்சியைத் தொடர்ந்து நிலைநிறுத்திட உரிய நேரத்தில் குறைந்த வட்டியில் கடன் வழங்குவது அவசியம் என்று அரசு கருதுகிறது. அதனால் 2006-2007 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் பயிர்க் கடனுக்கான வட்டியை 9% லிருந்து 7% ஆகக் குறைத்ததுடன் அதனால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்படும் 2% நிதியிழப்பை அரசே ஈடு செய்கிறது. மேலும் மத்திய அரசிடமிருந்தும் வட்டி மானியம் பெறப்படுகிறது. குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்குவது மட்டுமல்லாமல், குறித்த காலத்தில் கடனைச் செலுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் 2%-ம், 2008-2009 ஆம் ஆண்டில் 3%-ம் வட்டியைக் குறைத்து அதை அரசு மானியமாக ஈடு செய்தது. பல முன்னோடித் திட்டங்களை வடிவமைப்பதிலும் செயல்படுத்துவதிலும் முதன்மையாகத் திகழும் தமிழக அரசு, 2009-2010 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுறவு பயிர்க் கடனை உரிய காலத்தில் திரும்பச் செலுத்தும் விவசாயிகளின் கடன்களுக்கு வட்டி வசூலிக்கப்பட மாட்டாது என்ற புரட்சிகரமான திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தின்படி விவசாயிகளால் உரிய காலத்தில் செலுத்தப்படும் பயிர்க் கடன்களுக்கு வட்டி வசூலிக்கப்பட மாட்டாது. கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இதனால் ஏற்படும் வட்டி இழப்புத் தொகையை மாநில அரசு ஈடு செய்கிறது. 2009-2010 ஆம் ஆண்டில் பயிர்க் கடனுக்கான வட்டி மானியம் மற்றும் வட்டி ஊக்கத் தொகையாக ரூ.35.96 கோடியை மாநில அரசு விடுவித்துள்ளது. பயிர்க் கடனை உரிய காலத்திற்குள் திரும்பச் செலுத்துபவர்களுக்கான வட்டியில்லாப் பயிர்க் கடன் வழங்குவது 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடரும். இதற்கென அரசு ரூ.140 கோடியை 2010-2011 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளது.

2010 ஏப்ரல் 15]

இதர திட்டங்கள்

(i) விவசாயக் கடன் அட்டைத் திட்டம்

24. விவசாயிகளுக்கு கடன்களைத் தேவையான நேரங்களில் வழங்கிட விவசாயக் கடன் அட்டைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 28-2-2010 வரை 17.58 இலட்சம் விவசாய உறுப்பினர்களுக்கு கடன் அட்டைகளை வழங்கியுள்ளன.

(ii) நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்

25. நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனில் 30%-க்குக் குறையாமல் வழங்க வேண்டும் என்று நிர்ணயம் செய்துள்ளதற்கும் அதிகமாக வழங்கி 2009-2010 ஆம் ஆண்டில் 51% எட்டியுள்ளது.

(iii) தானிய ஈட்டுக் கடன்

26. சிறு மற்றும் குறு விவசாயிகள் அறுவடைக் காலங்களில் தங்கள் தானியங்களைச் சேமித்து வைத்து, உரிய காலத்தில் நல்ல விலைக்கு விற்க தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய, ரூ.51.54 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ரூ.100 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iv) சிறு வணிகக் கடன்

27. நகர்ப்புறங்களில் உள்ள கடன் தேவைப்படும் சிறு வணிகர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்ய கூட்டுப் பொறுப்புக் குழுமூலம் கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும் இத்தனித்தன்மை வாய்ந்த திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இந்த அரசால் புது

முயற்சியாக தொடங்கப்பட்ட இத்திட்டம் தொடர்ந்து ஆண்டுதோறும் விரிவுபடுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பூ வணிகம், காய்கறிகள், பழங்கள் வணிகம் செய்தல், பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு எவ்விதப் பிணையமுமின்றி ரூ.5,000 கடன் வழங்கப்படுகிறது. இதன்படி 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.69 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு, 28-2-2010 முடிய 1,50,475 நபர்களுக்கு ரூ.75.12 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 14,527 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ.47.35 கோடியும் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டில் தனி நபர் கடன் அளவு ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டு ரூ.100 கோடி அளவிற்கு சிறுவணிகக் கடன் வழங்கப்படும்.

(v) சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி

28. கடந்த 3 ஆண்டுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் 68% உயர்ந்துள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.304.16 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கடன் அமைப்பு, சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களைத் தொடர்ந்து அதிகரித்து வழங்கி அவற்றின் அனைத்துக் கடன் தேவைகளையும் நிறைவு செய்யும். 2010-2011 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.400 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(vi) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

29. மகளிர் தொழில் முனைவோர் சிறு தொழில் தொடங்கவும், சேவை மையங்கள் அமைக்கவும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும் ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கி வருகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய 7,042 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.17.46 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

(vii) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்

30. இத்திட்டத்தின்கீழ், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை கடனாக வழங்குகின்றன.

2010 ஏப்ரல் 15]

இக்கடன்கள் 36 தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய 6,948 மகளிருக்கு ரூ.16.34 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

(viii) அரசு பங்கு மூலதன உதவி

(அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்

31. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக ஆண்டுதோறும் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலுள்ள 8,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.250 வீதம் ரூ.20 இலட்சமும், நகரக் கூட்டுறவு வங்கிகளிலுள்ள 1,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.500 வீதம் ரூ.5 இலட்சமும் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

(ஆ) மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்

32. கிராமப்புறங்களிலுள்ள ஏழ்மையான மகளிரின் நிதி நிலைமையை குறிப்பாக நலிவடைந்த பிரிவைச் சார்ந்த மகளிரின் மோசமான நிதி நிலையைக் கருத்தில்கொண்டு அவர்கள் அதிக அளவில் கடன் பெற ஏதுவாக வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனை அரசு வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் 2,000 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.500 வீதம் ரூ.10 இலட்சம் அளவிற்குப் பங்கு மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளைச் சேர்ந்த 500 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.1,000 வீதம் ரூ.5 இலட்சம் பங்கு மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.500 வீதம் ரூ.5 இலட்சம் பங்கு மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு 2009-2010 ஆம் ஆண்டில் 3,500 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் ஆண்டிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி

[2010 ஏப்ரல் 15

வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் வழங்கப்படும்.

(இ) மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன்

33. மாற்றுத் திறனாளிகளின் கடன் பெறும் தகுதியை அதிகரிக்க *2009-2010* ஆம் ஆண்டில் ரூ.*500* வீதம் *1,000* மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.*5* இலட்சம் அளவிற்கு வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன் வழங்கப்பட்டுள்ளது. *2010-2011* ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பினைப் புத்துயிரூட்டும் திட்டம்:

34. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பினைப் புத்துயிர் ஊட்டுவதற்காக, மாநில அரசு, மத்திய அரசுடனும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடனும் ஒரு புரிந்துணர்வு உடன்பாடு செய்துள்ளது. அதன்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உள்ளிட்ட தகுதியுடைய குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புச் சங்கங்களில் *31-3-2004* அன்றுள்ளபடியான குவிந்த நட்டம், முழுவதுமாக மறுமுதலீடாக வழங்கப்படும். முறையான பயிற்சிகள்மூலம் மனித வளம் மற்றும் பணித் திறமை ஆகியவற்றை மேம்படுத்துவதுடன் தொழில் நுட்பத்தைப் புகுத்தி நிருவாகம் மற்றும் சேவையை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின்படி *1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை மேற்கொண்டும், மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான செயலாற்று நெறிக் குழுக்களை அமைத்தும் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மேற்பார்வையில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை தணிக்கையாளர்கள்மூலம் சிறப்புத் தணிக்கை மேற்கொள்ளவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

35. 31-3-2004 அன்று இருந்த *4,540* தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், தகுதியான *4,337* தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் *31-3-2004* தேதியில்

2010 ஏப்ரல் 15]

இருந்த நட்டம் ரூ.1,949.05 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை 4,296 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு மாநில அரசு மற்றும் மத்திய அரசு முறையே ரூ.230.82 கோடி மற்றும் ரூ.1,008.34 கோடி வழங்கியுள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் 5,084 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் மீதான கண்காணிப்புப் பணியினை மேம்படுத்த, பொதுக் கணக்கு முறை மற்றும் மேலாண்மை தகவல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதே போன்று, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நட்டத்தினைக் கணக்கிடுவதற்கான சிறப்புத் தணிக்கை நடைபெற்று வருகிறது. சிறப்புத் தணிக்கை முடிவுற்றவுடன் மறுமுதலீட்டுத் தொகை பெற்றிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான பிற சிறப்பு நடவடிக்கைகள்:

36. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிதி நிலையை வலுப்படுத்தவும் அவற்றின் தற்காப்புத் தன்மையை மேம்படுத்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(i) நலிவடைந்த சங்கங்களுக்குச் சிறப்புக் காசுக் கடன் திட்டம்

37. நிதியின்மையால் நலிவடைந்த மற்றும் செயலற்ற நிலையில் இருந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குச் சிறப்புக் காசுக் கடனாக ரூ.20 இலட்சம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 3-1-2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 5% சலுகை வட்டியில் சிறப்புக் காசுக் கடன் அளிக்கும். வழக்கமாக வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதத்திற்கும் சலுகை வட்டிக்கும் இடையிலான வித்தியாச வட்டித் தொகை தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதிமூலம் ஈடுகட்டப்படும். 1,398 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 28-2-2010 முடிய ரூ.265.63 கோடி வழங்கப்பட்டது. இதற்கு ரூ.17.30 கோடி வட்டி மானியம் ஆகும். இது சங்கங்களின் வியாபாரத்தை அதிகரிக்கவும், பொதுவான நிர்வாகச் செலவுகளை மேற்கொள்ளும் வகையில் சொந்தமாக கூடுதல் வருவாய் ஈட்டவும் உதவியுள்ளது.

(ii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பலவகை செயல்பாட்டு நிறுவனங்களாக மாற்றுதல்

38. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கடன்கள் மட்டும் வழங்குவதோடு பலவகை செயல்பாட்டு அலகுகளாகச் செயல்பட ஊக்குவிக்கப்படுகின்றன.

(அ) இடுபொருட்கள் விற்பனையை மேம்படுத்துதல்

39. உரம், விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்களின் விற்பனையை மேம்படுத்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. 28-2-2010 வரை ரூ.19.67 கோடி மதிப்பிற்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டு கடந்த ஆண்டைக் காட்டிலும் விதைகள் விற்பனை 196% அதிகரித்துள்ளது. 28-2-2010 வரை ரூ.571.09 கோடி மதிப்பிற்கு உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்வேகம் வரும் ஆண்டிலும் தொடரும்.

(ஆ) பயிர் மருத்துவப் பயன்பாட்டு மையம்

40. 172 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், மண் பரிசோதனை செய்திடவும், விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆலோசனை வழங்கிடவும், பயிர் மருத்துவப் பயன்பாட்டு மையங்களை நிறுவியுள்ளன. ஒவ்வொரு பயிர் மருத்துவப் பயன்பாட்டு மையமும் தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி மற்றும் தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட உதவித் தொகை ரூ.6 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. 28-2-2010 வரை இந்தப் பயிர் மருத்துவப் பயன்பாட்டு மையங்கள் 29,658 மண் பரிசோதனைகளை மேற்கொண்டு, ஏராளமான விவசாயிகளுக்கு ஆலோசனை சேவையும் அளித்துள்ளன.

(இ) பொதுச் சேவை மையங்கள்

41. நான்கு மாவட்டங்களில், 137 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், மின்னஞ்சல், ஒளிநகல் எடுத்தல், நிலவுடைமை ஆவணங்களின் நகல் வழங்குதல், இணையதளம்மூலம் பயணச்சீட்டு பெறுதல் போன்ற பல்வேறு வகையான மின்னணு சேவைகளை உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் அளிப்பதற்கென, பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டன.

2010 ஏப்ரல் 15]

2009-2010 ஆம் ஆண்டில் மேலும் *100* பொதுச் சேவை மையங்கள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இச்சேவை மையங்கள் அமைப்பதற்கு என கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து தலா ரூ.*1.62* இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் *2010-2011* ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், உறுப்பினர்களுக்கு மின்னணு சேவை வழங்க ஏதுவாக இணையதளம்மூலம் இணைக்கப்படும்.

(ஈ) வேளாண் சேவை மையங்கள்

42. கிராமப்புறங்களில் முக்கியமான வேளாண் பணிக் காலங்களில் வேளாண் பணிகள் மேற்கொள்வதற்கான ஆட்கள் பற்றாக்குறை பெருகிவரும் இக்கால கட்டத்தில், வேளாண்மையில் இயந்திரமயமாக்குதலைப் புகுத்துவது என்பது இன்றியமையாததாகிறது. இவ்வியந்திரமயமாக்குதலின் பயன்பாட்டினைப் பெற சிறு மற்றும் குறு விவசாயிகளின் சிறு விளை நிலங்களும், குறைந்த வளமும் சாதகமாக இல்லை. எனவே, விவசாயிகள் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்திக்கொள்ள ஏதுவாக வேளாண் இயந்திரங்கள் மற்றும் பண்ணைக் கருவிகளை நியாயமான வாடகையில் பெறும் வகையில் தெரிவு செய்யப்பட்ட *100* தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், வேளாண் சேவை மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த வேளாண் சேவை மையங்கள், மினி டிராக்டர்கள், இணைப்புகளுடன் கூடிய பவர் டில்லர் மற்றும் நெல் நடவு இயந்திரங்கள் ஆகியவற்றை வாடகைக்கு அளிப்பதால், சிறிய மற்றும் நடுத்தர நில உடமையாளர்களுக்கும் இயந்திரமயமாக்குதலைக் கொண்டு செல்ல உதவியாக உள்ளது. வரும் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் பண்ணை இயந்திரமயமாக்குதலைச் சாதிக்கும் வகையில் வழிநடத்தி அதிகமான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்களை அமைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

(iii) மிகைப் பணியாளர்களை மறுபரவல்மூலம் பணியமர்த்துதல்

43. பல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிதி ஆதாரம், மிகையான பணியாளர்கள் மற்றும்

அதனால் ஏற்பட்ட கூடுதல் நிர்வாகச் செலவுகளால் பாதிப்படைந்திருந்தது. இதனை ஒழுங்குபடுத்திட, பணியாளர்கள் மிகையாக உள்ள சங்கங்களிலிருந்து, பணியாளர்கள் தேவை உள்ள சங்கங்களுக்கு மறுபரவல் முறைமூலம் பணியமர்த்தம் செய்தல் என்னும் முயற்சியை அரசு மேற்கொண்டது. அதனால் மிகைப் பணியாளர்கள் உள்ள சங்கங்களும் பணியாளர்கள் தேவை உள்ள சங்கங்களும் ஒருங்கே பயன் பெற்றன. இதுவரை 930 பேர்கள் மிகைப் பணியாளர்கள் என இனம் காணப்பட்டு மறுபரவல் மூலம், தேவைப்படும் சங்கங்களுக்குப் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். இது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிர்வாகச் செலவினைக் கட்டுப்படுத்தி, அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்த பெரிதும் உதவியாக இருந்தது.

(iv) வைப்புகள் திரும்ப வழங்குதல்

44. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், முதிர்வடைந்த வைப்புத் தொகைகளைத் திரும்ப வழங்காததால், மக்களிடையே உள்ள அவற்றின் நம்பகத் தன்மையில் பெரும் இழப்பினைச் சந்தித்தன. வைப்புத் தொகை உத்தரவாத நிதியிலிருந்து வட்டியில்லாக் கடன் அளிப்பதன் மூலமும், கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தொகையைக் கொண்டும், முதிர்வடைந்த பிறகும் திரும்ப வழங்கப்படாதிருந்த வைப்புத் தொகைகளைத் திரும்ப வழங்க அரசு நடவடிக்கை எடுத்தது. இதனால், இதுவரை ரூ.192.50 கோடி அளவிற்கு வைப்புதாரர்களுக்கு வைப்புத் தொகைகள் திருப்பி அளிக்கப்பட்டதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் மீதான நம்பகத் தன்மை மீளப் பெறப்பட்டுள்ளது.

(v) உள் கட்டமைப்பை வலுப்படுத்துதல்

45. சொந்தக் கட்டடம் இல்லாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 691 உள்ளன. தேவைப்படும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கென தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் 250 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு இரும்புப் பெட்டகங்களும்,

2010 ஏப்ரல் 15]

அபாய மணிகளும் ரூ.2.50 கோடி மதிப்பில் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாகவும் உள் கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன.

(vi) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைக் கணினிமயமாக்குதல்

46. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல்வேறு வகையான சேவைகளை அளிக்க வேண்டியுள்ளதுடன், வணிக வங்கிகளுடன் போட்டியிடவும் வேண்டியுள்ளதால், புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி துரிதமான மற்றும் திறமையான சேவைகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே, பொதுவான கணக்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களைக் கணினிமயமாக்குதல் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு இறுதிக்குள் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் கணினிமயமாக்கப்படும்.

ஆ. நீண்ட காலக் கடன் அமைப்பு

47. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பானது, சென்னையிலுள்ள தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினையும் வட்ட/வட்டார அளவில் செயல்படும் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும். இக்கடன் நிறுவனங்கள், அவற்றின் உறுப்பினர்களுக்கு சிறு பாசனம், தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் மற்றும் இதர வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு முதலீட்டுக் கடன்களை வழங்குகின்றன.

(i) தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சென்னை

48. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மறு நிதி உதவி அளிக்காத காரணத்தால், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. எனினும் 2008-2009 ஆம் ஆண்டிலிருந்து தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சிறு பாசனம் மற்றும் வேளாண்மை சார்ந்த

[2010 ஏப்ரல் 15

தொழில்களுக்கு கடன் வழங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்து கடனுதவி வழங்கி வருகிறது. 28-2-2010-இல் இவ்வங்கியின் பங்கு மூலதனம் ரூ.40.39 கோடியாகவும், வைப்பு நிதிகள் ரூ.38.95 கோடியாகவும் உள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ரூ.66.56 கோடி கடன் வழங்கியுள்ளது. இதில் ரூ.23.21 கோடி முதலீட்டுக் கடன்களாகும். 2009-2010 ஆம் ஆண்டில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் அதிக அளவில் நகைக் கடன் வழங்க ஏதுவாக ரூ.100 கோடி சிறப்புக் காசுக் கடனைத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி பெற்றுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நிதி உதவி வழங்கியதால் உறுப்பினர்களுக்கு ரூ.150.97 கோடி அளவிற்கு நகைக் கடன்களும், ரூ.2.36 கோடி முதலீட்டுக் கடன்கள் வழங்குவதற்கும் வழிவகை ஏற்பட்டது.

(ii) தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

49. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சிறு பாசனம், நில மேம்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் இதர வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு நீண்ட காலக் கடன்களை வழங்கி வந்தன. கிராமப்புற வீட்டு வசதி மற்றும் பண்ணைசாராக் கடன்களையும் வழங்கி வந்தன. மேற்படி கடன்களைத் திருப்பிச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரை ஆகும். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து மறு நிதி உதவி கிடைக்கப்பெறாத காரணத்தால் இந்த வங்கிகள் செயல் இழந்திருந்தன. தவணை தவறிய பண்ணைசாராக் கடன்களை வசூலிப்பதன் மூலமாகவும், விவசாயக் கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தொகை மூலமாகவும் நிதி ஆதாரங்களைத் திரட்டி இவ்வங்கிகளைப் புத்துயிரூட்ட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசு, 31-3-2006 அன்று மேற்படி வங்கிகளில்

2010 ஏப்ரல் 15]

நிலுவையாக இருந்த விவசாயக் கடன்கள் ரூ.1,301.30 கோடியைத் தள்ளுபடி செய்து, அதில் ரூ.907.92 கோடி நீண்ட காலக் கடன் அமைப்பிற்கு வழங்கியது. மேற்படி தொகையைக் கொண்டு சிறப்பு நடவடிக்கைகளின்மூலம் சிறு பாசனம் மற்றும் துல்லியப் பண்ணை (Precision Farming) திட்டத்தின்கீழ் ரூ.100 கோடி கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தொடக்க வங்கிகள்மூலம் ரூ.45.46 கோடி கடன் வழங்க முடிந்தது. 2009-2010 ஆம் ஆண்டில் இந்தத் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் நிதி நிலையை வலுப்படுத்தவதில் கவனம் செலுத்தப்பட்டது. கிடைத்த நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி குறுகிய கால நகைக் கடன் வழங்க இவ்வங்கிகள் ஊக்குவிக்கப்பட்டன. இதன் விளைவாக 2009-2010 ஆம் ஆண்டில், 28-2-2010 வரை அவற்றின் மொத்தக் கடன் நிலுவை ரூ.367.58 கோடி அளவினை எட்டியது. இது மட்டுமல்லாமல் சில தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் மிகையாக உள்ள பணியாளர்கள், இதர கூட்டுறவு நிறுவனங்களில் மறுபரவல்மூலம் பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதன் விளைவாக பல தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் முன்னேற்றம் அடைய ஆரம்பித்துள்ளன. மேலும், ரூ.245.32 கோடி அளவிற்கான தவணை தவறிய பண்ணைசாராக் கடன்களை வசூலிக்க முடுக்கிவிடப்பட்டதில், 28-2-2010 வரை ரூ.34.52 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

50. 2010-2011 ஆம் ஆண்டில் மேற்படி வங்கிகளின் நிதி நிலையை மேலும் வலுவூட்ட ஏதுவாக அதிக அளவு நகைக் கடன்களை வழங்கவும் செயலற்ற சொத்துகளை வசூலிக்கவும் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் கூடுதல் நிதியாதாரங்களைத் திரட்டி வேளாண்மை மற்றும் வேளாண் சாராக் கடன்கள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயர் தொழில்நுட்ப பண்ணைத் திட்டங்கள் மற்றும் வேளாண் சாராக் கடன்கள் வழங்குவது போன்ற புதிய கடன் திட்டங்களைக் கையாள்வதில் வங்கிப் பணியாளர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப்படும்.

[2010 ஏப்ரல் 15

51. மேலும், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவை, காப்பீட்டு நிறுவனங்களின் ஆயுள் காப்பீட்டு மற்றும் இதர காப்பீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் முகவர்களாகச் செயல்படவும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

52. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு இன்னமும் புத்துயிரூட்டப்படக்கூடிய மற்றும் புனரமைக்க வேண்டிய நிலையில் உள்ளதால், நீண்ட கால விவசாயக் கடன் தேவைகள், குறுகிய காலக் கடன் அமைப்புகளான மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாகப் பூர்த்தி செய்யப்படும். தேவையான அளவிற்கு நுண்ணீர்ப் பாசனக் கடன் மற்றும் வேளாண் பணிகளை இயந்திரமயமாக்குதலுக்கு கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (TANHODA), நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM) மற்றும் இதர நிறுவனங்கள் செயல்படுத்தும் திட்டங்களில் கூட்டுறவு வங்கிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு கடன்கள் வழங்கும்.

நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பினைப் புத்துயிரூட்டுதல்

53. நீண்ட காலக் கடன் அமைப்பினை புத்துயிரூட்டும் வாய்ப்பாக பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளைத் தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு மத்திய அரசுக்கு இசைவு தெரிவித்துள்ளது. இந்திய அரசின் வேளாண்மைத் துறையால் நீண்ட காலக் கடன் அமைப்பினைப் புத்துயிரூட்டுவதன் அவசியம் குறித்துப் பரிசீலிக்க ஏற்படுத்தப்பட்ட சிறப்புப் பணிக் குழுவின் *5-1-2010* அன்று நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவது உட்பட புனரமைப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்திட பரிந்துரைத்துள்ளது. இந்தப் புனரமைப்புத் திட்டம், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு மீண்டும் புத்துயிரூட்டி எதிர்காலத்தில் வேளாண்மைக்கு அதிக அளவில் முதலீட்டுக் கடன் அளிக்க உதவிபுரியும். இதுகுறித்து மத்திய அரசின் வழிகாட்டுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

2010 ஏப்ரல் 15]

விவசாயக் கடன் தள்ளுபடி திட்டம்

(i) அரசால் தள்ளுபடி செய்யப்பட்ட விவசாயக் கடன்கள்

54. இவ்வரசு பதவி ஏற்ற முதல் நாளன்றே, *31-3-2006* அன்று நிலுவையிலிருந்த விவசாயிகளின் கூட்டுறவு விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்து ஆணையிட்டது. அனைத்து பயிர்க் கடன்களையும் தள்ளுபடி செய்த இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க அரசின் முடிவால் இலட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைந்து புதிய கடன்கள் பெற வழிவகை ஏற்பட்டது. இவ்விவசாயக் கடன் தள்ளுபடியை ஈடு செய்ய, *2006-2007* ஆம் ஆண்டிலிருந்து *5* ஆண்டு சம தவணைகளில் தள்ளுபடித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

55. கடன் தள்ளுபடித் தொகையினை ஈடு செய்வதற்காக இதுவரை தமிழக அரசால் விடுவிக்கப்பட்ட தொகை பின்வருமாறு:—

(ரூ. கோடியில்)

விவரங்கள்	2006-07	2007-08	2008-09	2009-10
கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட தொகை	1044.63	976.05	891.11	863.11
தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்குச் செலுத்தியது	613.59	645.11	298.53	204.61
இந்திய அரசுக்குச் செலுத்தியது	15.82	9.06	8.36	7.76
கூடுதல்	1674.04	1630.22	1198.00	1075.48

(ii) மத்திய அரசால் தள்ளுபடி செய்யப்பட்ட விவசாயக் கடன்கள்

56. மாநில அரசு அறிவித்த வேளாண் கடன் தள்ளுபடியினைப் பின்பற்றி, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு *31-3-2007* வரையில் வழங்கப்பட்டு, *31-12-2007*ஆம் தேதியில் தவணை தவறியிருந்து *29-2-2008* வரை திரும்பச் செலுத்தாமல் இருந்த விவசாயக் கடன்களை மத்திய அரசு தள்ளுபடி செய்துள்ளது. இதர விவசாயிகளுக்கு, அவர்கள் கடன் தொகையில் *75%* செலுத்தினால் மீதமுள்ள *25%* கடன் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு நிறுவனங்கள் இதுவரை ரூ.*125.45* கோடி பெற்றுள்ளன.

[2010 ஏப்ரல் 15

இ. நகரக் கூட்டுறவு வங்கிகள்

57. நகரக் கூட்டுறவு வங்கிகள் நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவை மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. தற்போது மாநிலத்தில் 120 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவை பொது மக்களிடமிருந்து வைப்பு நிதிகள் பெற்று சிறு வணிகர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் நடுத்தர வருவாய் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் வீடு கட்டுதல், வணிகம், கல்வி, நுகர்வோர் கடன் மற்றும் வேளாண்சாராக் கடன்கள் போன்ற நோக்கங்களுக்கு கடன் வசதிகளை அளிக்கின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை ரூ.3,470.29 கோடி அளவிற்கு இவ்வங்கிகள் கடன்களை வழங்கியுள்ளன. 28-2-2009 அன்று நகரக் கூட்டுறவு வங்கிகளில் இருந்த வைப்புத் தொகை ரூ.2,908.50 கோடியிலிருந்து 28-2-2010 தேதியில் ரூ.3426.58 கோடியாக உயர்ந்துள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் மொத்த கடன்களில் 60% அளவிற்குக் குறையாமல் முன்னுரிமைப் பிரிவினருக்கும், அதில் 25% சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டும்.

58. 2009-2010 ஆம் ஆண்டில், 28-2-2010 வரை நகரக் கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புறங்களில் சிறு வணிகர்களைக் கொண்ட 5,620 கூட்டுப் பொறுப்புக் குழுக்களை (Joint Liability Groups) அமைத்து அவர்களுக்கு ரூ.15.58 கோடி அளவிற்குக் கடன்கள் அளித்துள்ளன. மேலும் 28-2-2010 வரை, சிறு வணிகம் செய்யும் 27,257 தனி நபர்களுக்கு ரூ.13.89 கோடி அளவிற்குக் கடன்கள் அளித்துள்ளன. ஆக மொத்தம் ரூ.29.47 கோடி அளவிற்கு இந்தப் பிரிவினருக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சிறு வணிகர்கள் அதிக வட்டி விகிதத்தில் தனியாரிடமிருந்து கடன் வாங்குவதைத் தவிர்க்க உதவியுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டிலும் இந்த முன் முயற்சி தொடரும்.

59. நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த மாநில அரசு, இந்திய ரிசர்வ் வங்கியுடன் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திட்டுள்ளது. அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளின் தலைமையகங்களையும் கிளைகளையும் கணினிமயமாக்குதல் முன்னேற்றத்தில் இருந்து வருகிறது. நகரக் கூட்டுறவு வங்கிகளின் தலைமையகம் மற்றும் கிளைகள் உள்ளிட்ட 293 அலகுகளில் 28-2-2010 அன்றுள்ளபடி 224 அலகுகள்

2010 ஏப்ரல் 15]

கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இப்பணி 31-5-2010-க்குள் முடிவடையும். இது நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்படும் திறனை அதிகரித்து தேசியமயமாக்கப்பட்ட வணிக வங்கிகளைப் போல் பொது மக்களுக்கு மேம்பட்ட சேவை அளிக்க உதவும்.

பண்ணைசாராக் கடன்களுக்கான சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம்

60. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவற்றில் பண்ணைசாராக் கடன் பெற்ற கடன்தாரர்களின் வட்டிச் சுமையைக் குறைப்பதற்கென அரசு சிறப்புக் கடன் தீர்வுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 31-3-2007 அன்று முழுமையாக தவணை தவறிய பண்ணைசாராக் கடன்களுக்குப் பொருந்தும். இத்திட்டத்தின்படி, கடனை முழுமையாகச் செலுத்தும் கடன்தாரர்கள், தாம் பெற்ற கடனுக்கு, கடன் பெற்ற நாளிலிருந்து ஏற்கெனவே வசூலிக்கப்பட்டுவரும் வட்டிக்குப் பதிலாக 6% வட்டி மட்டுமே அசலுடன் சேர்த்து செலுத்த வேண்டும். எஞ்சியுள்ள வட்டி இழப்பினை, 4% வட்டி அளவிற்கு அரசே கூட்டுறவுகளுக்கு ஈடுசெய்யும். இதற்கென அரசு ரூ.10 கோடியை 2009-2010 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்து நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. முதலில் இத்திட்டம் 31-1-2010 வரை நடைமுறையில் இருந்தது. மேலும் பல கடன்தாரர்கள், இத்திட்டத்தின்கீழ் பயன்பெற ஏதுவாக, இத்திட்டம் 31-3-2010 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,43,107 கடன்தாரர்கள் ரூ.404.19 கோடி செலுத்த வேண்டும். 57,572 கடன்தாரர்கள் ரூ.135.91 கோடி முழுமையாகச் செலுத்திப் பயனடைந்துள்ளனர். மேலும், 33,608 கடன்தாரர்கள் தங்கள் கடன் தொகையில் 25 சதவீதமான ரூ.28.41 கோடி செலுத்தியுள்ளனர்.

[2010 ஏப்ரல் 15

இயல் – 2

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாய உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை ஆதாயமான விலைக்கு விற்க உதவுதல், வேளாண் இடுபொருட்களை வழங்குதல், விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கடன் வழங்குதல், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல், மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்தல் ஆகிய குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அமைப்பு இரண்டடுக்கு அமைப்பாக உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநில அளவிலான தலைமைச் சங்கமாகச் செயல்பட்டு வருகிறது. *110* தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தின் வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல அளவிலான இணையமாகச் செயல்படுகின்றது.

அ. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

2. இந்நிறுவனம் *1959* ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக உர விற்பனையிலும், இடுபொருட்கள் விற்பனையிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் உள்ள பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்திற்குச் சொந்தமான உரக்கலவை ஆலை உள்ளது. மேற்படி கலவை உரம் 'பாமணி' என்ற பெயரிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இவ்விணையத்திற்கு *28,640* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட *38* சொந்தக் கிடங்குகளும், சென்னையில் *3,850* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரு குளிர்பதனக் கிடங்குகளும் உள்ளன. இவ்விணையம், அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையில், அடிப்படை ஆதார விலைத் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராகத் தமிழ்நாட்டில் செயல்பட்டு கொப்பரை மற்றும் மிளகாய் முதலான வேளாண் விளைபொருட்களைக் கொள்முதல் செய்கிறது.

2010 ஏப்ரல் 15]

2009-2010 ஆம் ஆண்டில், 28-2-2010 வரை ரூ.521.51 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்களை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின்மூலம் விற்பனை செய்துள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய தமிழ்நாட்டிலுள்ள விவசாயப் பெருமக்களுக்கு ரூ.248.11 கோடி அளவுக்கு டி.ஏ.பி. உர விற்பனை செய்துள்ளது.

3. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆயிரக்கணக்கான தென்னை வளர்ப்போரின் நலனுக்காக குறைந்தபட்ச ஆதார விலைக்கு 28-2-2010 வரை ரூ.113.49 கோடி மதிப்புள்ள 25,503.360 மெட்ரிக் டன் கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்துள்ளது. கொப்பரைக் கொள்முதல் 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடரும். 2010-2011 ஆம் ஆண்டில் உர வணிகத்தில் தனது பங்கினை உயர்த்த இணையம் பெரும் முயற்சி மேற்கொள்ளும். மேலும் விதை விற்பனை, உயிர் உர விற்பனை ஆகியவற்றைக் கணிசமாக உயர்த்துவதுடன் வேளாண் விளைபொருள் விற்பனையிலும் கவனம் செலுத்தும். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் கோயம்பேடு மற்றும் பேசின் பிரிட்ஜ் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் இரண்டு குளிர்ப்பதனக் கிடங்குகளை இட்காட் அறிக்கையின் அடிப்படையில், ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணி 2010-2011 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

4. கடந்த பத்தாண்டுகளாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பெருத்த நட்டத்தில் இயங்கி வந்துள்ளது. இதன் வருமானத்தைப் பெருக்க அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தை அரசு டை-அம்மோனியம் பாஸ்பேட் (டிஏபி) உர விற்பனைக்கு மாநில அளவில் மொத்த விற்பனையாளராகவும், ஆதார விலைத் திட்டத்தின்கீழ் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராகவும் நியமித்தது. இதன் விளைவாகவும் முழு ஈடுபாட்டுடன் பிற வணிக நடவடிக்கையில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதாலும் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த நிலையிலிருந்து வெளி வந்து இலாபம் ஈட்டத் துவங்கியுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டு ரூ.1.19 கோடி நடப்பு இலாபமும், 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.3.58 கோடி நடப்பு இலாபமும் ஈட்டியுள்ளது. வருவாயினை மேலும் அதிகரித்து,

[2010 ஏப்ரல் 15

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தை ஒரு துடிப்புமிக்க நிறுவனமாக மாற்ற முயற்சிகள் எடுக்கப்படும்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்

5. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்தில், 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைக்கப்பட்டு, காவிரி பாசனப் பகுதியில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. உர விற்பனையை முதன்மையாகச் செய்து வரும் இவ்விணையம், தற்போது தனது செயல் எல்லையில் விதை விற்பனையும் செய்து வருகின்றது. 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய ரூ. 37.63 கோடி அளவு இரசாயன உர விற்பனை செய்துள்ளது.

ஆ. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

6. வேளாண் விளைபொருள் விற்பனை, உரம் மற்றும் வேளாண் இடுபொருட்கள் விற்பனை ஆகியவற்றை முதன்மையான நோக்கங்களாகக் கொண்டு மாநிலம் முழுவதும் 110 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான சங்கங்கள் முதன்மைச் சங்கங்களாக செயல்படுவதுடன் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன. இவற்றுள் நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவை சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

7. நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் தனது உருளைக்கிழங்கு ஏல விற்பனை மையத்தில் ரூ.7 இலட்சம் மதிப்பில் தரம் பிரிக்கும் இயந்திரம் நிறுவியுள்ளது. உறுப்பினர்களின் சேவையை அதிகப்படுத்திட தற்போது மாநில அரசின் நிதியுதவியுடன் ரூ.22.30 இலட்சத்திற்கு தரம் பிரிக்கும் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. சங்கத்தின் மேட்டுப்பாளையம் ஏல விற்பனை மையம்மூலம் மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்கில் 60% விற்பனை செய்யப்படுகிறது. இச்சங்கத்தின் மொத்த விற்பனை அளவு 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.32.37 கோடியாக இருந்தது. 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.59.12 கோடியாக அதிகரித்துள்ளது. உருளைக்கிழங்கு உயர் ரக விதைகள் விற்பனை,

2010 ஏப்ரல் 15]

சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு விவசாயிகளிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. 2009-2010 ஆம் ஆண்டு 28-2-2010 வரை விதை விற்பனை ரூ.85.18 இலட்சம் ஆகும். இது கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்த விற்பனையை விட 449% உயர்வாகும்.

8. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நாமக்கல் மாவட்டத்தில் பருத்தி, எள், நிலக் கடலை ஆகிய வேளாண்மை விளைபொருள்களின் முக்கிய விற்பனைத் தளமாகச் செயல்படுகின்றது. இச்சங்கம் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து விவசாய உபகரணங்கள் மற்றும் நவீன இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்கி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்/வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் விவசாயப் பெரு மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யும் பணியினைத் துவக்கியுள்ளது. இச்சங்கத்தின் மொத்த வணிக அளவு 28-2-2009 அன்று ரூ.174.34 கோடியாக இருந்தது. 28-2-2010 அன்று ரூ.188.21 கோடியாக உயர்ந்து ரூ.13.87 கோடி கூடியுள்ளது.

9. தரமான விதைகள் விற்பனையில் துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவை நிறுவனம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்நிறுவனத்தில் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1.70 கோடியாக இருந்த விதைகள் விற்பனை, 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை ரூ.4.54 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.82.91 கோடியாக இருந்த மொத்த ஆண்டு வணிக அளவு 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை ரூ.148.84 கோடியாக உயர்ந்துள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1.07 கோடி அளவுக்கு இந்நிறுவனம் பெற்ற நிகர லாபம் 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய ரூ.3.05 கோடியாக உயர்ந்துள்ளது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

(i) வேளாண் விளைபொருள் விற்பனை

10. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பின்வரும் இருவகை விற்பனைப் பணிகளை ஆற்றி வருகின்றன.

(அ) வணிகர்கள் மற்றும் விவசாய உறுப்பினர்களின் வணிகத்திற்காக ஏல விற்பனைக் களங்கள், உலர் களங்கள்,

[2010 ஏப்ரல் 15

தானிய ஈட்டுக் கடன் ஆகிய வசதிகளை அளித்து வேளாண் உறுப்பினர்கள் தங்களது விளைபொருட்களை வெளிப்படையான முறையில் ஆதாய விலைக்கு விற்பனை செய்ய உதவி வருகின்றன.

(ஆ) வேளாண் விளைபொருள்களைக் கொள்முதல் செய்தல், பதனிடுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய பணிகளுடன், உறுப்பினர்களின் பொருள்களுக்கு மதிப்பு கூட்டுதல் பணியும் செய்து வருகின்றது. 2008-2009 ஆம் ஆண்டில் 28-2-2009 வரை ரூ.321.88 கோடியாக இருந்த வேளாண் விளைபொருள் விற்பனை 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை ரூ.61.21 கோடி அதிகரித்து ரூ.383.09 கோடியாக உயர்ந்துள்ளது.

(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்

11. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன்தாரர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர் கடன்தாரர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்ய உதவி புரிகின்றன. இம்முயற்சிகளால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன் தொகை வசூலாவதோடு, வேளாண் உறுப்பினர்களின் விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்ய உதவி வருகிறது. இத்திட்டத்தின் பயனாக 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் ரூ.94.31 இலட்சம் கடன் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 28-2-2009 வரை ரூ.70.27 இலட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டது. நடப்பாண்டில் மட்டும் வசூலிக்கப்பட்ட கடன் தொகை சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.24.04 இலட்சம் அதிகமாகும்.

(iii) விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு

12. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைந்து செயல்படுகின்றன. இதனால் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விளைபொருட்களைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விற்பனை செய்வதன்மூலம் பண்டகசாலைகளுக்குத் தரமான

2010 ஏப்ரல் 15]

பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதுடன் விவசாயிகளுக்கும் நியாயமான ஆதாய விலையும் கிடைக்கிறது. 2009-2010 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு 28-2-2010 வரை ரூ.33.78 கோடி அளவிற்குப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. கடந்த ஆண்டு 28-2-2009 வரை விற்பனை ரூ.30.95 கோடி மட்டுமே. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.2.83 கோடி அதிகமாகும்.

(iv) தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்

13. அறுவடைக் காலங்களில் விவசாயிகள் பெரும்பாலும் தங்களது அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளை பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் கட்டாயம் ஏற்படுகிறது. இந்நிலையினைத் தவிர்த்து, விவசாயிகளின் நலன்களைக் காக்கும் பொருட்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கி வருகின்றன. இதன்மூலம் விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களைச் சேமித்து வைத்து சாதகமான சந்தை விலை கிடைக்கும்போது உயர் ஆதாய விலைக்கு விற்க இயலும். 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக் கடனாக வேளாண் உறுப்பினர்களுக்கு ரூ.41.17 கோடி வழங்கியுள்ளன. இது 2008-2009ஆம் ஆண்டு 28-2-2009 வரை வழங்கப்பட்ட ரூ.35.20 கோடியைவிட ரூ.5.98 கோடி அதாவது 17% அதிகமாகும். 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படும்.

(v) பதனிடுதல் மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்

14. சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி அவற்றின் மதிப்பைக் கூட்ட, பதனிடும் அலகுகள் நடத்தி வருகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இவ்வலகுகள்மூலம் நியாயமான விலையில் வேளாண் உறுப்பினர்களின் பொருட்களைப் பதப்படுத்தித் தரும் பணியைச் செய்கின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 முடிய கூட்டுறவு பதனிடும் அலகுகள் மூலமாக 4,444 மெட்ரிக் டன் அளவிற்கு வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன. 2009-2010 ஆம்

[2010 ஏப்ரல் 15

ஆண்டில் ரூ.40 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் தென்காசி, செங்கோட்டை மற்றும் கோபிசெட்டிப்பாளையம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொன்றிலும் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் கிடங்குகள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

(vi) ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் கொப்பரைக் கொள்முதல்

15. தென்னை பயிரிடும் விவசாய உறுப்பினர்களின் நலன்களுக்காக ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண் விற்பனை இணையத்தின் சார்பாக மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள அடிப்படை ஆதார விலையில் கொப்பரைக் கொள்முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, 2009-2010 ஆம் ஆண்டு 28-2-2010 வரை கூட்டுறவுச் சங்கங்களால் 25,503.36 மெட்ரிக் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் கொப்பரையின் அடிப்படை ஆதார விலை கிலோ ஒன்றுக்கு ரூ.36-லிருந்து ரூ.44.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் பந்துக் கொப்பரைக் கொள்முதல் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.47 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(vii) நெல் கொள்முதல்

16. நெல் கொள்முதலை அதிகரிக்கும் நோக்கத்துடனும் காவிரி பாசனப் பகுதி அல்லாத இடங்களில் உள்ள விவசாயிகளின் நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க உதவும் நோக்கத்துடனும் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவைமூலம் 2009-2010 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக, நெல் கொள்முதல் செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்மூலம் விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்முதல் பணியில் ஈடுபட்டு 2009-2010 ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் செய்தன. 2008-2009 ஆம் ஆண்டில் 21,710.293 மெட்ரிக் டன் நெல்லும், 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை 21,523.539

2010 ஏப்ரல் 15]

மெட்ரிக் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுகள்மூலம் காவிரி பாசனப் பகுதி அல்லாத மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்யும் பணி *2010-2011* ஆம் ஆண்டிலும் தொடரும்.

(viii) தரமான விதைகள் விற்பனை

17. தானிய உற்பத்திக்கு விதை இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. மாநிலத்தில் நெல் விதைகளைத் தவிர மற்ற பயிர் விதைகளின் மாற்று விகிதம் மிகவும் குறைவாக உள்ளது. நெல்லைத் தவிர பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தானிய வகைகள் மற்றும் காய்கறி ஆகியவற்றின் தரமான விதைகளை வழங்க கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுகள்மூலம் *2006-2007* ஆம் ஆண்டில் ரூ.*2.03* கோடி அளவிற்குத் தரமான விதைகள் விற்பனை செய்யப்பட்டன. *2009-2010* ஆம் ஆண்டில் *28-2-2010* முடிய ரூ.*19.67* கோடி அளவுக்குத் தரமான விதைகள் விற்பனை செய்யப்பட்டன. இது *2006-2007* ஆம் ஆண்டின் விற்பனையைக் காட்டிலும் *970%* அதிகமாகும். *2010-2011* ஆம் ஆண்டில் ரூ.*25* கோடி அளவிற்கு விதைகள் விற்பனைக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ix) தகவல் மையங்கள் அமைத்தல்

18. வேளாண்மையில் விற்பனை நோக்குடன் கூடிய செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன. விவசாயிகள் விளை பொருட்களின் தேவை மற்றும் விலை விவரங்கள் முன் கூட்டியே அறிந்து அதற்கேற்ப திட்டமிட்டு வேளாண் பொருட்களை விளைவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பலதரப்பட்ட சந்தைகளில் விளைபொருட்களின் வரத்து மற்றும் விற்பனை, சந்தை விலை போன்ற நாளது தேதி வரையிலான தகவல்களை அறிய வேண்டியதன் அவசியம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், சங்க வளாகங்களிலோ விற்பனைத் தளங்களிலோ தகவல் மையங்கள் அமைக்கத் தொடங்கியுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட *10* வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் *11* தகவல் மையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவுக்

[2010 ஏப்ரல் 15

கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்ட நிதியுதவியுடன் 6 தகவல் மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. எஞ்சிய தகவல் மையங்கள் 30-6-2010-க்குள் துவங்கப்படும்.

19. வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் துவங்கப்பட்ட தகவல் மையங்கள்மூலம் வேளாண் பெருமக்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் அளிக்கப்படுகின்றன:—

(1) பலதரப்பட்ட சந்தைகளில் பல்வேறு விளை பொருட்களுக்கு நிலவும் சந்தை விலை விவரங்கள்.

(2) எதிர்காலத்தில் பயிரிட வேண்டிய பயிர் வகைகள் மற்றும் தட்பவெட்ப நிலை குறித்த விவரங்கள்.

(3) பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாய மற்றும் தோட்டக்கலை பொருட்களின் விற்பனை விவரங்கள்.

(4) பயிர் வளர்ப்பு முறைகள் மற்றும் செயல் திட்டங்கள்/சிறந்த நடைமுறைகள் குறித்த விவரங்கள்.

(5) அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த விவரங்கள்.

(6) விற்பனை மற்றும் பண்ணை முறைகள் குறித்த மின்னணு காட்சிப் படம் (Powerpoint presentation).

(x) வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் விற்பனை நடவடிக்கைகளுக்குப் புத்துயிரூட்ட எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

20. மே 2008 திங்களில் அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கான ஒரு சிறப்பு பயிலரங்கம் நடத்தப்பட்டதில், வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், அச்சங்கங்களின் தொழில் திறனை மேம்படுத்தவும் செயல்திட்டம் வகுத்திட அனைவரும் ஊக்குவிக்கப்பட்டனர். இதன் விளைவாக பெரும்பான்மையான கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விற்பனை நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றம் எய்தப்பட்டு நடப்பு இலாபமும் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் விற்பனை நடவடிக்கைகளில் அடைந்துள்ள முன்னேற்றம் வருமாறு:

2010 ஏப்ரல் 15]

(ரூ. கோடியில்)

ஆண்டு	விற்பனை அளவு
2005-2006	*205.27*
2006-2007	*257.74*
2007-2008	*274.62*
2008-2009	*321.88*
*2009-2010**	*383.09*

**28-2-2010* வரை

21. மேலும், பல வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பணிகள் விரிவாக்கப்பட்டு நகைக் கடன் வழங்குதல், நுகர்வோர் பொருள் விற்பனை போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. *2009-2010* ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.*192.29* கோடி நகைக் கடன் வழங்கியுள்ளன. இது *2008-2009* ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நகைக் கடன் ரூ.*128.63* கோடியைவிட ரூ.*63.66* கோடி அதிகமாகும். தற்போது அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் நடப்பு இலாபம் ஈட்டும் நிலையை எட்டியுள்ளன. வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மொத்த குவிந்த நட்டம் *2005-2006* ஆம் ஆண்டு ரூ.*44.23* கோடியாக இருந்தது. *28-2-2010* அன்றைய நிலவரப்படி குவிப்பு நட்டம் ரூ.*34.30* கோடியாகக் குறைந்துள்ளது. *2008-2009* ஆம் ஆண்டு ரூ.*13.09* கோடியாக இருந்த இலாபம் *28-2-2010* முடிய ரூ.*25.87* கோடியாக அதிகரித்துள்ளது. எதிர் வரும் காலங்களிலும் இவ்வளர்ச்சி தொடர நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 ஏப்ரல் 15

இயல் – 3

நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகள்

நுகர்வோர்களுக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதே நுகர்வோர் கூட்டுறவுகளின் முக்கிய நோக்கமாகும். இவை பொதுச் சந்தையில் நுகர்பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

2. தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுகளின் அமைப்பு மூன்றடுக்குகளைக் கொண்டுள்ளது.

(i) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் - மாநில அளவில்

(ii) கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் - மாவட்ட அளவில்

(iii) தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் - அடிப்படை நிலையில்

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

3. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் என்பது தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை நிறுவனமாகும். இணைப்புச் சங்கங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அவற்றின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்குத் துணை புரிவதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை எய்திட இணையம் மொத்தமாகக் கொள்முதல் செய்து இணைப்புச் சங்கங்களுக்கு வழங்கி வருகிறது. இவ்விணையம் 16 ஆண்டுகளாக காகிதம் (Paper) மற்றும் எழுதுப் பொருட்களைக் கொள்முதல் செய்து மாவட்ட மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும், தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும், கூட்டுறவு அச்சகங்களுக்கும் விநியோகம் செய்வதை முக்கிய வணிகமாகச் செய்து வருகிறது. மேலும் இவ்விணையம் விழாக்காலங்களில் பட்டாசுகளை மொத்தமாகக் கொள்முதல் செய்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் இதர நிறுவனங்கள்மூலம் விற்பனை செய்து வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் இந்த இணையத்தின் மொத்த விற்பனை ரூ. 82.61 இலட்சம் ஆகும். இது

2010 ஏப்ரல் 15]

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.*784.73* இலட்சமாக அதிகரித்துள்ளது. இவ்விணையத்தின் ஐந்தாண்டு செயல்திறன் விவரம் வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

ஆண்டு	விற்பனை	இலாபம் ஈட்டியது
2005-2006	*82.61*	*15.61*
2006-2007	*113.39*	*43.96*
2007-2008	*301.39*	*73.14*
2008-2009	*653.82*	*84.26*
2009-2010	*784.73*	*86.27*

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்

4. தமிழ்நாட்டில் தற்போது *34* நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் *11* நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இலாபத்திலும், *22* நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் நடப்பு இலாபத்திலும் செயல்பட்டு வருகின்றன. இவை முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களைத் தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்திடமிருந்து நகர்வு செய்து அவற்றைத் தமது மற்றும் இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்து வருகின்றன. மேலும், இவை உற்பத்தி மையங்கள், தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் விற்பனைச் சங்கங்களிலிருந்து நுகர்பொருட்களை நேரடியாகக் கொள்முதல் செய்து நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்கி வருகின்றன.

5. 2005-2006 ஆம் ஆண்டில் *34* நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் ரூ.*1,163.39* கோடிக்கு கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்துள்ளன. *2009-2010* ஆம் ஆண்டில் *28-2-2010* வரை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை ரூ.*1,393.49* கோடி ஆகும். இது சென்ற ஆண்டு விற்பனையை விட *16%* அதிகமாகும். கடந்த காலங்களில் பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் போதுமான மானியமின்மை, நிர்வாகத் திறமையின்மை மற்றும்

வணிக மேம்பாட்டில் போதிய கவனமின்மை போன்ற காரணங்களால் இச்சங்கங்கள் கடும் நட்டத்தில் இயங்கி வந்தன. கடந்த சில ஆண்டுகளாக பொது விநியோகத் திட்டத்தால் ஏற்படும் இழப்புகளை அரசு முழுமையாக ஈடு செய்து வருவதால் பெரும்பாலான பண்டகசாலைகள் மீண்டும் நல்ல நிலையில் இயங்கத் துவங்கியுள்ளன. பல பண்டகசாலைகளின் மத்திய கூட்டுறவு வங்கி கடன் மற்றும் இதர கடன் சுமைகள் தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளன.

6. பெருமளவில் நட்டத்தில் இயங்கிய சென்னையில் உள்ள திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், பூங்கா நகர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் வியாபார வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் அவற்றின் இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து அவற்றைப் புனரமைக்கத் தேவையான பரிந்துரைகளை வழங்க உயர்நிலைக் குழு ஒன்றினை அரசு அமைத்தது. இக்குழுவின் அறிக்கையின்படி கடன்களை மாற்றி அமைத்து, பண்டகசாலைகளின் கட்டமைப்புகளை முழுமையாகப் பயன்படுத்தி, சில்லறை வியாபார நுணுக்கங்களைத் திறம்பட மேற்கொண்டு பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்து இப்பண்டகசாலைகளைப் புனரமைக்கும் பணிகள் தொடரப்பட்டு வருகின்றன. இப்பண்டகசாலைகள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் சீரமைக்கப்பட்டதால் அவற்றின் கடன் சுமை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

7. 2009-2010 ஆம் ஆண்டில் பண்டகசாலைகள் அளிக்கும் சேவைகளை மேம்படுத்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. பண்டகசாலைகள் நடத்தும் மருந்தகங்களில் மொத்தச் சில்லறை விலையில் 10% தள்ளுபடி செய்து மருந்துகள் விற்கப்படுவதால் பண்டகசாலையின் விற்பனையும் கணிசமாக அதிகரித்ததுடன் பொதுமக்களின் மருத்துவச் செலவினைக் குறைக்கவும் உதவியுள்ளது. அனைத்துப் பண்டகசாலைகளும் பொது மக்களுக்குச் சேவை செய்யும் வகையில் அவற்றின்கீழ் இயங்கும் சுயசேவைப் பிரிவு மற்றும் பலபொருள் அங்காடிகளை நவீனமயமாக்கிப் புதுப்பொலிவூட்டவும், பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் பொருளின் வகைகள் (Range of Products) அதிக அளவில் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பண்டகசாலையின் பொறுப்புகளைத் தீர்வு செய்யவும் வணிகத்தை

2010 ஏப்ரல் 15]

மேம்படுத்தவும் மேற்கொண்ட பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள்மூலம் தற்போது 11 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் நிகர இலாபத்திலும் 22 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் நடப்பு இலாபத்திலும் இயங்கி வருகின்றன.

நிறுவன வளத்தைத் திட்டமிடும் (ERP) மென்பொருள் செயல்முறைப்படுத்துதல்

8. நவீன சந்தைமயமாக்கல் தகவல் தொழில்நுட்ப உதவி இல்லாமல் வெற்றிகரமாகச் செயல்பட இயலாது. இதனை கருத்திற்கொண்டு தற்போது கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் அனைத்து வணிகப் பணிகளை நேரடியாகக் கணினிமூலம் கண்காணிக்க நிறுவன வளத்தைத் திட்டமிடும் (Enterprise Resource Planning) மென்பொருள் உருவாக்கப்பட்டு செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2010 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து பண்டகசாலைகளும் இப்பணியால் ஒருங்கிணைக்கப்படும். இதனால், பொருள்களின் இருப்பைக் கண்காணித்து பராமரிக்கவும், விற்பனை விவரங்களை பகுத்தாய்ந்து, விற்பனையை மேம்படுத்தவும், குறைந்த விலையில் திறம்படக் கொள்முதல் செய்யவும் வழிவகை ஏற்படும்.

தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்

9. தமிழ்நாட்டில் மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகளையும் சேர்த்து தற்போது 3,210 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் இவற்றின் மொத்தச் சில்லறை விற்பனை ரூ.2,391.83 கோடி ஆகும். 2009-2010 ஆம் ஆண்டில், 28-2-2010-ல் இது ரூ.2,996.64 கோடியாக அதிகரித்துள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

இயல் – 4

பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 19 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடியினருக்கு ஒற்றைச் சாளர முறையில் உற்பத்திக் கடன் வழங்குதல், நுகர்வோர் கடன் வழங்குதல், வேளாண் இடுபொருள் விநியோகம், வேளாண் விளைபொருள் விற்பனை, சிறு வனப் பொருள்கள் சேகரிப்பு மற்றும் விற்பனை, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இச்சங்கங்களில் 83,688 பழங்குடியின உறுப்பினர்களும் 8,197 பழங்குடியினரல்லாத உறுப்பினர்களும் உள்ளனர். இச்சங்கங்கள் சாகுபடிக்கென குறுகிய காலப் பயிர்க் கடன்களையும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்காக மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.90 இலட்சம் மானியமாக அரசு ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.

2. பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் புத்துயிரூட்ட அரசு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, உறுதியான செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. இதன் காரணமாக 2009-2010 ஆம் ஆண்டில் கடந்த ஆண்டைவிட 70% கடன் வழங்கல் அதிகரித்துள்ளது. அதுபோலவே வேளாண் இடுபொருட்கள் விநியோகம் மற்றும் நுகர்பொருள் விற்பனை கடந்த ஆண்டைவிட முறையே 39% மற்றும் 21% அளவுக்கு அதிகரித்துள்ளன.

3. மலைவாழ் பழங்குடியினருக்கு அனைத்து நுகர்பொருட்களும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் வகையில் 13 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சிறு பலபொருள் அங்காடி அமைக்க, தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.57.50 இலட்சம் மானியமாகவும், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.68 இலட்சம் வட்டியில்லாக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளன. 28-2-2010 முடிய சிறு பலபொருள் அங்காடிகள்மூலம் ரூ.143.28 இலட்சம் அளவிற்கு நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பவர்காடு, கொல்லிமலை போன்ற பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், ஏற்கெனவே ஜவ்வரிசி ஆலைகளுக்கு மரவள்ளிக்

2010 ஏப்ரல் 15]

கிழங்கை நேரடியாக விற்பனை செய்து வருகின்றன. குறுகிய காலக் கடன் அமைப்பைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ் 16 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றின் நட்டத்தை ஈடுசெய்ய, மறுமுதலீட்டுத் தொகையாக ரூ.938.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அரசு மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக 31-3-2006 அன்று நடப்பு இலாபத்தில் 12 ஆக இருந்த பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை, 28-2-2010 அன்று 16 ஆக உயர்ந்துள்ளது.

4. பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்பாட்டு விவரம் கீழ்வருமாறு:—

(ரூ. இலட்சத்தில்)

ஆண்டு	கடன் வழங்கியது	விவசாய விளைபொருள் கொள்முதல்	சிறு வனப் பொருட்கள் சேகரம், கொள்முதல்	வேளாண் இடுபொருள் விநியோகம்	கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை	மொத்தம்
2005-2006	1331.51	174.51	12.72	141.87	1017.99	2678.60
2006-2007	1399.73	148.38	14.98	142.13	829.59	2534.81
2007-2008	1761.00	212.66	22.72	130.52	853.80	2980.70
2008-2009	3189.08	469.85	12.45	188.42	1046.87	4906.67
2009-2010*	4376.09	213.37	10.11	208.06	1143.99	5951.62

*28-2-2010 முடிய

[2010 ஏப்ரல் 15

இயல் – 5

கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரும் சக்தியாக கூட்டுறவு இயக்கம் விளங்குகிறது. எனவே, கூட்டுறவின் நன்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவது இன்றியமையாதது ஆகும். மேலும் கூட்டுறவுப் பணியாளர்கள் மாறிவரும் காலத்திற்கேற்ப தங்கள் பணித்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 29 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. மேலும் இவை உறுப்பினர் கல்வித் திட்டங்கள், பொருட்காட்சிகள், கூட்டுறவு வார விழாக்களையும் நடத்துகின்றன.

2. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து அதன் நிகர இலாபத்தில் 3% கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், நிகர இலாபத்தில் 2% கூட்டுறவு கல்வி நிதிக்கும், வசூலித்து அதனைப் பராமரித்து வருகிறது. இந்த நிதி கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவுக் கொள்கைகள் பிரச்சாரம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

2009-2010 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட 10 மாவட்டங்களில் ரூ.1 கோடி செலவில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று கூட்டுறவு அலுவலக வளாகங்கள் கட்ட முடிவு எடுக்கப்பட்டது:

(1) திருவண்ணாமலை
(2) சிவகங்கை
(3) பெரம்பலூர்
(4) கன்னியாகுமரி
(5) தஞ்சாவூர்
(6) கோயம்புத்தூர்
(7) காஞ்சிபுரம்
(8) நீலகிரி
(9) ஈரோடு
(10) திருவாரூர்

2010 ஏப்ரல் 15]

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் மேற்கண்ட கட்டுமானப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் எட்டு இடங்களுக்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கட்டடங்கள் கட்ட நிலங்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2010-2011 ஆம் ஆண்டில், திருவள்ளூர், தருமபுரி, கடலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கூட்டுறவு வளாகங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கூட்டுறவுப் பயிற்சி

3. தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு மேலாண்மையில் 36 வாரங்கள் கால அளவு கொண்ட பட்டயப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. நேரடியாகப் பயிற்சி பெற முடியாத பணியாளர்களும், இப்பயிற்சியைப் பெறும் வகையில் அஞ்சல் வழிக் கல்வியும் இந்நிலையங்கள்மூலம் நடத்தப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் நேரடிப் பயிற்சியில் 768 நபர்களும், அஞ்சல் வழிக்கல்வியில் 813 நபர்களும், இப்பயிற்சியினைப் பெற்று வருகின்றனர். இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத் துறைப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் குறுகிய காலப் பயிற்சிகளையும் நடத்துகிறது. 2008-2009 ஆம் ஆண்டில் 502 குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டில் 720 குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. கூட்டுறவு நிறுவனங்களில் நகைக் கடன் வழங்குதல் மிகப் பெரிய அளவில் நடைபெறுவதால் “நகை மதிப்பீடு மற்றும் தொழில்நுட்பம்” பயிற்சி 2004-2005 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டில் 1,860 நபர்கள் இப்பயிற்சியை முடித்துள்ளனர். நாளும் வளர்ந்து வரும் கணினி யுகத்தில், இப்பயிற்சி நிலையங்களில் குறுகிய கால கணினிப் பயிற்சிகளான கணினிப் பயன்பாட்டுப் பட்டயம் மற்றும் டேலி (Tally) 9.0 போன்றவை நடத்தப்படுகின்றன. இப்பயிற்சியினை 2009-2010 ஆம் ஆண்டில் 2,548 நபர்கள் முடித்துள்ளனர். ஒன்பது கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் புதிதாக 2008-2009 ஆம் ஆண்டில் சமையல் கலைக்கான சான்றிதழ் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி

நிலையங்கள், கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 2009-2010 ஆம் ஆண்டில் வணிகவியல் மற்றும் வணிக மேலாண்மையில் பட்டப் படிப்பும், வணிக மேலாண்மை மற்றும் கணினியியலில் முதுநிலைப் பட்டப் படிப்பும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இப்படிப்புகளில் இதுவரை 880 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சி 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடரும்.

கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி

4. புது டெல்லியில் உள்ள தேசிய கூட்டுறவு பயிற்சிக் கழகத்தால், தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரையில் இரண்டு பயிற்சி நிலையங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றின்மூலம் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பல குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சி நிலையங்களில் வணிக மேலாண்மையில் முதுநிலை பட்டப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. இரண்டு பயிற்சி நிலையங்களில் 194 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு படித்து வருகின்றனர்.

தொழிற்கல்வி

5. தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் மூன்று கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனங்களும், திருச்சி மாவட்டம், லால்குடியில் ஒரு கூட்டுறவுப் பலதொழில்நுட்பக் கல்லூரியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் 813 மாணவர்கள் இக்கூட்டுறவு தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பலதொழில்நுட்பக் கல்லூரி மூலமாக தொழில்நுட்பப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

கூட்டுறவு ஆராய்ச்சி

6. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில்

2010 ஏப்ரல் 15]

ஒவ்வொன்றிலும் ரூ.5 இலட்சம் வைப்பீடு செய்து தனி இருக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகைமூலம் கூட்டுறவில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

7. கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் அனைத்தையும் மிகச் சிறந்த நிறுவனங்களாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு பல பயனுள்ள பயிற்சிகள் அளிப்பதன்மூலம் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள், கூட்டுறவு நிறுவனங்களின் நிலைத்தன்மைக்கும், வளர்ச்சிக்கும் மிக முக்கியமான பங்காற்றி வருகிறது. 2010-2011 ஆம் ஆண்டில் இரு கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு ரூ. 1.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

இயல் – 6

தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

(i) பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

மாநிலத்தில் 1,811 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் உறுப்பினர்களது பங்குத் தொகை ரூ.530.50 கோடியாக இருந்தது. இது 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை ரூ.1,327.12 கோடியாக உயர்ந்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.1,357.11 கோடியாக இருந்த உறுப்பினர்களது சிக்கனச் சேமிப்பு 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை ரூ.1,585.20 கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் பிணையக் கடனாகவும், ரூ.2 இலட்சம் கல்விக் கடனாகவும் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் கடன் நிலுவைத் தொகை ரூ. 3,262.43 கோடியாக இருந்தது. 2009-2010 ஆம் ஆண்டில் 28-2-2010 வரை ரூ. 5,398.58 கோடியாக உயர்ந்துள்ளது. பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் உறுப்பினர்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வரும் கடன் வசதிகள் அதிகரித்துள்ளதால் உறுப்பினர்கள், கடனுக்காக தனி நபர்கள் மற்றும் பிற தனியார் நிதி நிறுவனங்களை நாடவேண்டிய அவசியம் வராது.

(ii) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

2. தமிழகத்தில் தற்போது 90 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 31,181 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், ஒப்பந்தப் பணிகள்மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

2010 ஏப்ரல் 15]

இயல் – 7

கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் 26 கூட்டுறவு அச்சகங்கள் 12,645 உறுப்பினர்களுடனும், ரூ.2.09 கோடி பங்குத் தொகையுடனும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு அச்சகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்குதல்

2. அரசு நியமித்த மூன்று நபர்கள் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, ஒரு உயர் தொழில்நுட்பத் திட்டம் ரூ. 6.19 கோடி மதிப்பீட்டில் வகுக்கப்பட்டது. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.3 கோடியும், மீதமுள்ள தொகை ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் மற்றும் பிற உள்ளேற்பாடுகள் மூலமும் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கும் பணிகள் ரூ. 5.08 கோடியில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. நவீனமயமாக்கப்பட்ட பின்னர் அச்சகங்களின் செயல்திறன் மற்றும் பயன்பாட்டுத் திறன் பெரிதும் அதிகரித்துள்ளன. நவீனமயமாக்குதலுடன், கூட்டுறவு அச்சகங்களின் பிரச்சினைகள் கண்டறியப்பட்டு அவற்றிற்கான தீர்வு நடவடிக்கைகளான மிகைப் பணியாளர்களைப் பிற சங்கங்களில் பணியமர்த்தல், மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களை ஒருமுறை தீர்வு திட்டத்தின்கீழ் தீர்வு செய்தல், கூட்டுறவுகளின்மூலம் வணிகப் பெருக்கம் மற்றும் குறைந்த விலையிலான மூலப்பொருட்கள் கொள்முதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

நலிவடைந்த கூட்டுறவு அச்சகங்களுக்கு வட்டியில்லா நடைமுறை மூலதன உதவி

3. புதுக்கோட்டை, வேலூர், காஞ்சிபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தருமபுரி, தூத்துக்குடி, நீலகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 10 கூட்டுறவு அச்சகங்களுக்கு அவற்றின் பொருளாதாரச் செயல்பாட்டினை மேம்படுத்திட நிதியுதவி தேவைப்பட்டது. பொருளாதார ரீதியாக நலிவடைந்த மேற்படி 10 கூட்டுறவு அச்சகங்களை வலுவூட்டிட ரூ.1.10 கோடி வட்டியில்லா

விளிம்புத் தொகை நிதி உதவியாக தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டது. மேற்படி நடவடிக்கைகளால், கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாடுகள் பெருமளவில் முன்னேற்றம் அடைந்துள்ளன. நவீனமயமாக்குதலுக்கு முன்னர் தமிழ்நாட்டிலுள்ள 26 கூட்டுறவு அச்சகங்களின் மொத்த வணிக அளவு 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.20.12 கோடியாக இருந்தது. நவீனமயமாக்கிய பின்னர், மொத்த வணிக அளவு 67% அதிகரித்து 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.33.64 கோடியாக உயர்ந்துள்ளது.

4. இலாபத்தில் செயல்படும் அச்சகங்களின் எண்ணிக்கை 11-லிருந்து 26 ஆக அதிகரித்துள்ளது. இதே காலத்தில் அனைத்து அச்சகங்களாலும் ஈட்டப்பட்ட இலாபம் ரூ.0.47 கோடியிலிருந்து ரூ.4.23 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும் நவீனமயமாக்குவதற்கு முன் ரூ.25.93 கோடியாக இருந்த குவிந்த நட்டம் ரூ.24.62 கோடியாகக் குறைந்துள்ளது. கூட்டுறவு அச்சகங்களை முழுமையாகப் புனரமைத்துப் பாதுகாக்கும் இத்திட்டம் வரும் காலங்களிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அனைத்து அச்சகங்களுக்கும் 2010-2011 ஆம் ஆண்டிற்கான வியாபார இலக்கு ரூ.38 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

இயல் – 8

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் 6,768 பகுதிநேரக் கடைகள் உட்பட 28,898 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. இந்நியாய விலைக் கடைகள் 86 முதன்மைச் சங்கங்கள், 4,540 இணைப்புச் சங்கங்கள் மற்றும் 434 சுய எடுப்புச் சங்கங்கள் உட்பட 5,060 கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் 263 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை தமிழ்நாடு முழுவதும் நடத்துகின்றன.

2. பொது விநியோகத் திட்டத்தினை நடத்துவதால் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதிய வருவாய் கிடைக்காத நிலையில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படும் நட்டத்தினை ஈடுசெய்ய அரசு முன்வந்துள்ளது. அதனடிப்படையில் 2006-2007, 2007-2008, 2008-2009 மற்றும் 2009-2010 ஆம் ஆண்டுகளுக்கு முறையே ரூ.97.05 கோடி, ரூ.106.90 கோடி, ரூ.95.35 கோடி மற்றும் ரூ.93.50 கோடி மானியமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

கையடக்கப் பட்டியல் இயந்திரம்

3. பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில், விற்பனையாளர்கள், விற்பனைப் பட்டியல் மற்றும் கணக்குகளைக் கையினால் எழுதிப் பராமரிப்பதால், தேவையற்ற கால விரயம், மற்றும் மனித ஆற்றல் விரயம் ஏற்படுவதுடன், முறையான அலுவலகப் பராமரிப்பில் கவனம் செலுத்த இயலுவதில்லை. எனவே, கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் கையினால் இயக்கப்படும் பட்டியல் இயந்திரங்கள், கணினி இணைப்புடன் பயன்படுத்தப்படுவதால் கணக்குகள் பராமரிப்பு எளிதாக்கப்படுவதுடன் விற்பனையாளர்கள் அலுவலகப் பராமரிப்பிலும் அதிகக் கவனம் செலுத்த இயலும். மேலும் பட்டியல் இயந்திரங்கள் இணைய தளத்தின்மூலம் ஒருங்கிணைக்கப்படுவதால் இருப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றை முறையாகக் கண்காணிக்கவும், அதன்மூலம் பொருட்கள்

வழங்குவதை முறைப்படுத்தவும் இயலும். எனவே, சென்னை மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் செயல்படும் 969 நியாய விலைக் கடைகளிலும் 53 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களிலும் கையடக்கப் பட்டியல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அனைத்து மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களிலும் பட்டியல் இயந்திரம் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நியாய விலைக் கடைகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்துதல்

4. கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள்மூலம் சுமார் 1.80 கோடி குடும்ப அட்டைதாரர்களின் மாதாந்திர அத்தியாவசியப் பொருட்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளின் தோற்றப் பொலிவினை உயர்த்தும் வகையில் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் ஒரே மாதிரியான பெயர்ப்பலகை வைத்தும், நியாய விலைக் கடைகளின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் ஒரே மாதிரியான வண்ணங்கள் பூசியும், கண்ணாடியுடன் கூடிய நவீன முகப்பு வைத்தும், அத்தியாவசியப் பொருட்களை பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் காட்சிப்படுத்தவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர சென்னை மாநகரில் நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டப்படுவதற்காக அரசு ரூ. 8.78 கோடி ஒப்பளித்துள்ளது. இவ்வாறான ஏற்பாடுகள் வருங்காலத்தில் நியாய விலைக் கடைகள் புதுப்பொலிவுடன் திகழ்ந்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நிறைவைத் தரும் வகையில் அமையும் என்பதில் ஐயமில்லை.

நியாய விலைக் கடைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

5. நியாய விலைக் கடைக் காலிப் பணியிடங்கள் சங்க மிகைப் பணியாளர்களைக் கொண்டு நிரப்ப முன்னுரிமை அளிக்கப்பட்டு நிரப்பப்பட்டும், அவ்வாறு மிகைப் பணியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் மாவட்ட வேலைவாய்ப்பகம்மூலம் பட்டியல் பெற்று நேரடியாக நிரப்பப்பட்டும் வருகிறது. 28-2-2010 வரை நியாய விலைக் கடை காலிப் பணியிடங்களுக்கு 1,917 விற்பனையாளர்களும், 346 கட்டுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2010 ஏப்ரல் 15]

நியாய விலைக் கடைகளைப் பிரித்தல்

6. குடும்ப அட்டைதாரர்களுக்கு மேலும் சிறப்பாக சேவை செய்ய ஏதுவாக, 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள 455 நியாய விலைக் கடைகளும், 1,500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள 50 நியாய விலைக் கடைகளும் பிரிக்கத் தகுதியானவை எனக் கண்டறியப்பட்டது. இந்நடவடிக்கை காரணமாக 367 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் 40 புதிய நியாய விலைக் கடைகள் விரைவில் திறக்கப்படவுள்ளன. மீதமுள்ள நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டவுடன் அவை பிரிக்கப்பட்டுப் புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இயல் – 9

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், ஒரு மாவட்டத்தில் பல்வேறு வகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வழிவகை செய்கிறது. தமிழகத்தில் இத்திட்டம் ஏற்கெனவே 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டும், 6 மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டும் வருகிறது. அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுவான உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும், விளிம்புத் தொகை அளித்தும், கூட்டுறவு அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் திறனை அதிகரித்தும், பயிற்சி அளிப்பதன் மூலமாக சேவை மற்றும் வாழ்திறனையும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

2. இத்திட்டத்தின் கால அளவு ஐந்தாண்டுகளாகும். இத்திட்டத்திற்கான நிதியுதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தமிழக அரசுக்கு கடனாக வழங்கப்பட்டு, தமிழக அரசால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கடன் மற்றும் பங்குத்தொகையாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தில் மேலாண்மைத் திட்டத்திற்கான செலவினங்களை முழுமையாக இந்திய அரசும், தமிழக அரசும் மானியமாக வழங்குகின்றன. மாவட்ட அளவில், இத்திட்டச் செயலாக்கத்தினை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு கண்காணிக்கிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி திட்ட செயலாக்க முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

(i) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கான நிதி உதவி

3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குப் புதிய கிடங்குகள், கூடுதல் கிடங்குகள், நவீனக் கட்டடங்கள் கட்டுவதற்கும், கிடங்குகள் பழுதுபார்ப்பதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும் வேளாண்மை விற்பனைத் திட்டம் மற்றும் பதனிடுதல் போன்ற துணைத் திட்டங்களுக்கும் 25% மானியம் இந்திய அரசிடமிருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்தில் வங்கியின் அனைத்து வகையான

2010 ஏப்ரல் 15]

உள்கட்டமைப்புகளான வங்கி முகப்பு நிறுவுதல், பாதுகாப்பு அறை, நகைப் பாதுகாப்புப் பெட்டகம், பாதுகாப்புப் பெட்டகம், பணம் எண்ணும் கருவி, மின்னணு அளவை இயந்திரம், கணினி மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து வகையான கருவிகள், உபகரணங்களுடன் கூடிய இயந்திரக் கலப்பை, அறுவடை இயந்திரம், மருந்து தெளிப்பான் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் ஆகியவை வாங்குவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. சமீப காலத்தில் பொதுச் சேவை மையம் அமைப்பதற்கு நிதியுதவியும் செய்யப்படுகிறது. இத்துடன் தேவையுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் வணிக வளர்ச்சிக்கு ஏதுவாக விளிம்புத் தொகை வழங்கப்படுகிறது.

(ii) கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்கள்

4. இத்திட்டத்தில் அலுவலகக் கட்டடம், கிடங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும் மற்றும் கணினி, தளவாடச் சாமான்கள், விசைக் கருவிகள் (கைத்தறி) மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கும், கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்களுக்கு உதவி வழங்கப்படுவதுடன் வணிகத்தைப் பெருக்குவதற்கும் 'விளிம்புத் தொகை' வழங்கப்படுகிறது.

(iii) கூட்டுறவுப் பால்வளச் சங்கங்கள்

5. ஊரக வணிக மையம் என்கிற கோட்பாட்டின் அடிப்படையில் பால் குளிரூட்டும் நிலையங்களை அமைக்க இத்திட்டத்தின்மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. பால் கொள்முதல் செய்ய வேண்டிய மையங்கள் மற்றும் மொத்த குளிரூட்டு நிலையங்களை அமைக்கவும், பால் குவளை, பால் தரச் சோதனைக் கருவிகள் போன்றவற்றை வாங்குவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும் வணிகத்தினைப் பெருக்குவதற்கு ஏதுவாக விளிம்புத் தொகையும் வழங்கப்படுகிறது.

(iv) மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள்

6. இத்திட்டத்தின்மூலம் மீன் வளத் துறையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நைலான் வலை, அலுமினியப் பாத்திரங்கள் போன்றவற்றை வாங்குவதற்கும், விற்பனைக் கூடங்கள் கட்டுவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. வணிகத்தினைப் பெருக்குவதற்கு விளிம்புத் தொகையும் வழங்கப்படுகிறது.

(v) தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

7. இத்திட்டத்தில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயந்திரக் கூடங்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவுவதற்கும் மற்றும் மேம்படுத்தப்படுவதற்கும், பணிமனையுடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. வணிகத்தினை மேலும் பெருக்குவதற்கு விளிம்புத் தொகையும் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்ட மாவட்டங்கள்

8. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் 1989 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை 15 மாவட்டங்களில் (முந்தைய பிரிக்கப்படாத 12 மாவட்டங்கள்) செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்	மாவட்டங்களின் பெயர்	செயல்படுத்தப் பட்ட ஆண்டு	திட்டத் தொகை
1.	விருதுநகர்	1989-1995	862.51
2.	கடலூர் (முந்தைய தென்னாற்காடு மாவட்டம்)	1992-1997	1506.97
3.	விழுப்புரம்		
4.	கோயம்புத்தூர்	1995-2001	1080.99
5.	திருப்பூர்		
6.	தருமபுரி	1995-2001	1160.25
7.	கிருட்டிணகிரி		
8.	திருவண்ணாமலை	1996-2001	816.58
9.	காஞ்சிபுரம்	1998-2005	1123.88
10.	இராமநாதபுரம்	2000-2004	687.03
11.	திருச்சிராப்பள்ளி	2002-2008	1216.98
12.	தஞ்சாவூர்	2002-2008	1101.09
13.	பெரம்பலூர்	2002-2008	937.81
14.	அரியலூர்		
15.	திருவாரூர்	2002-2008	1222.44
	மொத்தம்		**11716.53**

2010 ஏப்ரல் 15]

திட்டம் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்ட மாவட்டங்களில் வழங்கப்பட்ட/ உருவாக்கப்பட்ட முக்கிய உள்கட்டமைப்பு வசதிகள்

வ. எண்	மாவட்டம்	பாதுகாப்பு அறை	கிடங்கு	அலுவலகத்துடன் கூடிய கிடங்கு	அலுவலகக் கட்டடம்	கிடங்குகள் பழுதுபார்த்தல்	அலுவலகக் கட்டடம் பழுதுபார்த்தல்	இரும்புப் பெட்டகம்
1.	விருதுநகர் (1989-1995)	110	103	5	-	-	-	128
2.	கடலூர் மற்றும் விழுப்புரம் (முந்தைய தென்னாற்காடு மாவட்டம்) (1992-1997)	152	149	2	5	-	-	178
3.	கோயம்புத்தூர் (1995-2001)	-	77	-	-	-	-	-
4.	தருமபுரி (1995-2001)	32	96	8	-	-	-	116
5.	திருவண்ணாமலை (1996-2001)	8	2	2	21	-	-	43
6.	இராமநாதபுரம் (2000-2004)	13	35	-	1	-	-	74
7.	காஞ்சிபுரம் (1998-2005)	53	12	28	42	-	-	65
8.	திருவாரூர் (2002-2008)	35	13	28	18	47	3	57
9.	தஞ்சாவூர் (2002-2008)	9	10	25	12	26	5	69
10.	திருச்சிராப்பள்ளி (2002-2008)	21	26	19	16	32	40	49
11.	பெரம்பலூர் (2002-2008)	14	13	11	23	39	12	32
	மொத்தம்	447	536	128	138	144	60	811

[2010 ஏப்ரல் 15

தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் மாவட்டங்கள்

9. கீழ்க்கண்ட ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது:

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு	மொத்த திட்ட ஒதுக்கீடு	28-2-2010 வரை விடுவிக்கப்பட்ட தொகை
1.	தேனி	*2005-2006*	*987.73*	*851.086*
2.	தூத்துக்குடி	*2005-2006*	*942.08*	*811.730*
3.	சேலம்	*2008-2009*	*2651.580*	*1441.650*
4.	ஈரோடு	*2008-2009*	*3564.430*	*1986.590*
5.	மதுரை	*2008-2009*	*2439.680*	*1445.442*
6.	புதுக்கோட்டை	*2008-2009*	*1437.560*	*854.041*
	மொத்தம்		*12023.06*	*7390.539*

தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் முக்கிய உள்கட்டமைப்பு வசதிகள்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	பாதுகாப்பு அறை	கிடங்கு	கிடங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம்	கூடுதல் கிடங்கு	அலுவலகக் கட்டடம்	கிடங்குகளை பழுதுபார்த்தல்	அலுவலகக் கட்டடம் பழுதுபார்த்தல்	இரும்புப் பெட்டகம்
1.	தேனி *(2005-2010)*	*13*	*12*	*2*	*17*	*7*	*26*	*13*	*16.*
2.	தூத்துக்குடி *(2005-2010)*	*20*	*2*	-	*4*	*14*	*24*	*42*	*9*
3.	சேலம் *(2008-2013)*	*7*	-	*4*	*8*	*5*	*13*	*4*	*42*
4.	ஈரோடு *(2008-2013)*	*21*	-	*10*	*8*	*2*	*18*	*3*	*45*
5.	மதுரை *(2008-2013)*	*23*	-	*32*	*5*	*1*	*66*	*40*	*9*
6.	புதுக்கோட்டை *(2008-2013)*	*4*	-	-	-	-	*21*	-	*12*
	மொத்தம்	*88*	*14*	*48*	*42*	*29*	*168*	*102*	*133*

2010 ஏப்ரல் 15]

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி உதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டு செயல்படுத்தப்படவுள்ள மூன்று மாவட்டங்கள்

10. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்து நிதி உதவியும் கீழ்க்கண்டவாறு ஒப்பளிப்பு செய்துள்ளது:—

(ரூ. இலட்சத்தில்)

வ.எண்	மாவட்டம்	மொத்த திட்ட ஒதுக்கீடு
1.	திருநெல்வேலி	4220.85
2.	திண்டுக்கல்	3085.78
3.	சிவகங்கை	2743.80

11. நாகப்பட்டினம், கரூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களின் திட்ட அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. நீலகிரி மாவட்ட திட்ட அறிக்கை மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த குழுக் கூட்டத்தின் பரிசீலனையில் உள்ளது.

பயிற்சித் திட்டம் மற்றும் செயல்திறன் மேம்படுத்துதல்

12. கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குச் சேவை செய்வதும் சங்கங்களின் வாழ்திறனை மேம்படுத்துவதும் பணியாளர்களின் முக்கியப் பணிகளாகும். ஆதலால், பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்த அளிக்கப்படும் பயிற்சி இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். திட்டமிடுதல், கூட்டுறவு அமைப்புகளை நிர்வகித்தல் போன்றவற்றில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொது மேலாளர்கள் மற்றும் வளர்ச்சி அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர்கள் ஈடுபாட்டுடன் பங்குபெறவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் வணிகத்தை அதிகரிக்கும் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

திட்டத்தின் செயல்விளைவுகள்

13. இத்திட்டம் செயல்படுத்தப்படும் இடங்களில் உறுதியான பலனை ஏற்படுத்தியுள்ளன. புதுப்பிக்கப்பட்ட மற்றும் புதிய

[2010 ஏப்ரல் 15

கட்டடங்களின் கட்டமைப்பு உறுப்பினர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி வணிக வளர்ச்சியையும் அதிகரித்துள்ளது. கூடுதல் கிடங்குகள் கட்டப்பட்டதால் அதிகமான ஈட்டுக் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. விளிம்புத்தொகை, கடன் பெறும் திறனை அதிகப்படுத்தி நிதி உதவி பெறும் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரத்தினை விரிவுபடுத்துகிறது.

2010 ஏப்ரல் 15]

இயல் – 10

கூட்டுறவுத் தேர்தல்

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் அதன் தொடர்புடைய விதிகளின்படி, மாநிலத்தில் உள்ள தொடக்க, மத்திய, தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை 2007 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் தேதி முதற்கொண்டு நடத்த மாநில அரசு ஆணையிட்டது. ஆனால் தேர்தலின்போது நிலவிய சில விரும்பத்தகாத நிகழ்வுகளால், தேர்தல் நடவடிக்கைகளை அரசு இரத்து செய்வதைத் தவிர வேறு வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டது. அரசின் இந்த உத்தரவு தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சென்னை உயர் நீதிமன்றம், நடந்து முடிந்த தேர்தல் மற்றும் நடைபெற்று வந்த தேர்தலை இரத்து செய்த அரசாணையை இரத்து செய்தது. இதில் எழுந்துள்ள சட்டப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இவ்வாணையினை எதிர்த்து, அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டவுடன், கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடத்திட உரிய மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

இணைப்பு II

(321 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

முன்னுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு வழங்கி, "உறுபசியும் ஓவாப் பிணியும்" சேரா இயல்பினதாக தமிழகத்தை உருவாக்குவதே இந்த அரசு பின்பற்றும் உணவுக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுவதற்குப் போதுமான அளவு உணவுப் பொருட்கள் மக்களுக்கு கிடைக்கும் வழியை உருவாக்குதல், மக்கள் வாங்கும் திறனறிந்து விற்பனை விலையை நிர்ணயித்தல், எளிதில் மக்கள் அணுகி பெறக்கூடிய வகையில் கடைகளை அமைத்து செயல்படுத்துவது ஆகியவை அவசியமானவை என்பதைக் கருத்தில் கொண்டு இந்த நோக்கங்களை நிறைவேற்றத் தக்க வகையில் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. மத்திய அரசு குறியிலக்குடன் கூடிய பொது விநியோகத் திட்டத்தை வலியுறுத்தி வந்தாலும், குறியீட்டு முறையை பின்பற்றும்போது தகுதியான வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் வறுமையின் பிடியில் அகப்படும் வாய்ப்புள்ள பிற குடும்பங்கள் பொது விநியோகத் திட்டத்திலிருந்து விடுபட்டு விடக்கூடிய வாய்ப்புள்ளதால் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் என வகைப்பாடு செய்யப்படுவதில்லை. வறுமைக் கோடு என்பது அன்றாடம் மாறி வரும் வருமானம் மற்றும் இதர நிலையற்ற அளவுகோல்களின் அடிப்படையில் கணக்கிடப்படுவதாலும், குறைபாடின்றி கணக்கெடுக்கும் முறை

இல்லாத நிலையிலும், துல்லியமான கணக்கெடுப்பு செய்வது இயலாத ஒன்று. இதனால் பல தகுதியான குடும்பங்கள் விடுபட்டுவிட வாய்ப்புள்ளது. மேலும், வறட்சி, வறுமைக் கோட்டிற்கு மேல் என வகைப்பாடு செய்திருந்தாலும், வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் எண்ணற்ற குடும்பங்கள் வறுமையின் பிடியில் மீண்டும் அகப்படக்கூடிய அபாய நிலை உள்ளதாலும், கணக்கெடுப்பு முறைகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் விடுபடாமல் கணக்கெடுப்பு செய்யத்தக்க, அதேநேரத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய, வழிமுறைகள் இல்லாததாலும், இம்முறை சமூக அளவில் பாதிப்பையும், உணவுப் பாதுகாப்புக்கு குந்தகத்தையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. எனவேதான், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் என வகைப்பாடு செய்வதை இந்த அரசு நிர்வாக ரீதியாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டமே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3. ஏழை, எளிய மக்களின் வாங்கும் திறனைக் கருத்தில் கொண்டு கலைஞர் அரசு பொறுப்பேற்றவுடன், பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியை கிலோ ரூ.3.50-லிருந்து குறைத்து ரூ.2/-க்கு வழங்க ஆணையிட்டது. "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் நின்று செயல்படும் கலைஞர் தலைமையில் நடைபெறும் இந்த அரசு, அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15-09-2008 முதல் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2/-லிருந்து "கிலோ அரிசி ரூ.1/-" எனக் குறைத்து ஆணையிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவு அவரது பிறந்த நாளன்று நனவாக்கப்பட்டது. இந்த பெரும் முயற்சியால் தமிழகத்தில் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு என்பது உறுதி செய்யப்பட்டது.

4. அன்றாடம் உயர்ந்து வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் ஏழை, எளிய மக்கள் இன்னலுறாவண்ணம் பாதுகாக்க இந்த அரசு ஒரு தொலைநோக்குப் பார்வையோடு 14-04-2007 அன்றே சிறப்பு பொது விநியோகத் திட்டத்தைத் துவக்கி அத்தியாவசியப் பொருட்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமைப் பொருட்கள் போன்றவற்றையும் இவற்றோடு அத்தியாவசியமான 10 மளிகைப் பொருட்கள் அடங்கிய பொட்டலத்தையும் மானிய விலையில் வழங்கி வருகிறது. சமீப

[2010 ஏப்ரல் 15

காலமாக ஏற்பட்ட பருப்பு, சர்க்கரை போன்றவற்றின் விலை உயர்வினால் ஏழை மக்கள் பாதிக்காவண்ணம் அவர்களின் நலன் கருதி, கடும் நிதிச் சுமையையும் பொருட்படுத்தாமல், 2009-2010 ஆம் ஆண்டுக்கான உணவு மானியத்தை ரூ.2,800 கோடி அளவிலிருந்து ரூ.4,000 கோடியாக உயர்த்தி ஏற்கெனவே இருந்த மானிய விலையிலேயே பொருள்களைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

5. பெருகி வரும் முறையற்ற வணிக நடைமுறைகள், மாறி வரும் தொழில் அணுகுமுறைகள் ஆகியவற்றால் அதிகரித்து வரும் ஏமாற்று வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்க உரிய விழிப்புணர்வை மேற்கொண்டு, அமைப்பு ரீதியான நுகர்வோர் குறைகளைக் களையும் முறைகளை வலுப்படுத்துவது இத்துறையின் மற்றோர் இன்றியமையாப் பணியாகும். நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஏமாற்று நடவடிக்கைகளைத் தடுக்கவும், ஏமாற்றுபவர்கள்மீது உரிய, சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் நுகர்வோர் குறைதீர் மன்றங்களை முறையாகச் செயல்படுத்தி நுகர்வோர் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாத்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

இயல் – 1

பொது விநியோகத் திட்டம்

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் அல்லது வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு குறியிலக்குடன் கூடிய பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அறிவுரைகள் வழங்கினாலும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் என வகைப்படுத்துவது தகுதியான வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மற்றும் பாதிப்புக்குள்ளாக வாய்ப்புள்ள, பிற குடும்பங்கள் பொது விநியோகத் திட்ட பயனை நுகர வாய்ப்பில்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டு சமூக ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் நிர்வாக ரீதியாக செயல்முறைப்படுத்துவது இயலாது என்றும் அரசு கருதுகிறது. எனவே, குறியிலக்குடன் கூடிய பொது விநியோகத் திட்டம் கீழ்கண்ட காரணங்களால் பின்பற்றப்படவில்லை:—

(i) வறுமைக் கோடு என்பது சரியாக வரையறுக்கப்பட்டு, பிழையின்றிக் கணக்கெடுப்பு செய்வதற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரையறைகள் மற்றும் வழிமுறைகள் தற்போது இல்லை. குறியீடு அடிப்படையில் உள்ள கணக்கெடுப்பு முறைகளிலும் தவறுகள் ஏற்படுகின்றன. குறியிலக்குடன் கூடிய பொது விநியோகத் திட்டத்தை பின்பற்றும் பல மாநிலங்களில் அதிகமான எண்ணிக்கையில் தகுதியான நபர்கள் விடுபட்டுள்ளனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவை சமூக அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

(ii) வறுமைக் கோட்டை கணக்கிடும்போது உள்ள குடும்பத்தின் நிலை காலப்போக்கில் மாற வாய்ப்புள்ளது. வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களின் காரணமாக குடும்பத்தின் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள பல குடும்பங்கள் வறுமையின் பிடியில் மீண்டும் அகப்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை உணர்ந்து உடனே செயல்படுவதற்கு அரசு நிர்வாகம் இடம் தருவதில்லை.

(iii) கணக்கெடுப்பு செய்யும் நிறுவனத்தின் பாரபட்சமான செயல்பாடு, களப்பணியில் ஏற்படும் குறைபாடுகள்

[2010 ஏப்ரல் 15

ஆகியவற்றால் குறியிலக்கு செய்வது நிர்வாக ரீதியாக கடினமான பணியாக உள்ளது. மேலும், இது உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் சங்கடம் ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது.

2. எனவே, உணவுப் பாதுகாப்பை வழங்குவதில் குறியிலக்குடன் கூடிய பொது விநியோகத் திட்டத்தைவிட அனைவருக்குமான பொது விநியோகத் திட்டமே சிறந்தது என்பதை மாநில அரசு அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளது. எனினும் வறியவர்களிலும் வறியவர்கள் என உள்ளாட்சி அமைப்புகள்மூலம் தெரிவு செய்யப்படும் அந்தியோதயா அன்னயோஜனா (AAY) குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் வழங்குவதன்மூலம் குறைந்தபட்ச அளவில் குறியிலக்கு செய்யப்படுகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றுவது குறித்து மத்திய அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. இதன்படி வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 25 கிலோ அரிசி வழங்கப்படும். வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களைக் கணக்கெடுப்பதில் இலகுவான வழிமுறைகளைப் பின்பற்றி பாதிக்கப்படும் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களையும் உள்ளடக்கி கணக்கெடுப்பு செய்தபின் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்தலாம் என இம்மாநில அரசு மத்திய அரசிற்கு கருத்து தெரிவித்துள்ளது.

3. 2004-2005 ஆம் ஆண்டு என்.எஸ்.எஸ். அறிக்கை (NSS Report) எண் 508, நுகர்வோர் செலவினங்களின் அளவு மற்றும் வகையின்படி, தமிழ்நாட்டில் அரிசியை உணவாகப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை கிராமப்புறங்களில் 93 சதவிகிதமாகவும், நகர்ப்புறங்களில் 91 சதவிகிதமாகவும் உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. மேலும், அரிசியின் நுகர்வு கிராமப்புறங்களில் நபர் ஒருவருக்கு, மாதந்தோறும் 10.165 கிலோ எனவும், நகர்ப்புறங்களில், 8.632 கிலோ எனவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

4. பொது விநியோகத் திட்டம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலரும் சென்னை மாநகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் துணை ஆணையர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலரும்

2010 ஏப்ரல் 15]

பொறுப்பு ஏற்று இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றனர். சென்னை தவிர பிற மாவட்டங்களில் பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பேற்றுள்ளனர். சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணை ஆணையர் இப்பணியை நேரடியாகக் கண்காணித்து வருகிறார்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஒரு மொத்த கொள்முதல் மற்றும் விற்பனை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. இக்கழகம், பொது விநியோகத் திட்டத்தில் வழங்குவதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை இந்திய உணவுக் கழகத்திலிருந்து எடுத்து மாநிலம் முழுவதும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள 220 செயல்முறை சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைக்கிறது. இவ்வாறு சேமித்து வைக்கப்படும் பொருள்கள் முதன்மைச் சங்கங்களால் மாதந்தோறும் ஒதுக்கீட்டிற்கு ஏற்ப நகர்வு செய்யப்பட்டு அவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நியாயவிலை அங்காடிகளுக்கு நேரடியாகக் கொண்டு சென்று வழங்கப்படுகின்றன. இதேபோன்று சர்க்கரையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்து அதன் கிடங்குகள்மூலம் நியாயவிலை அங்காடிகளுக்கு வழங்குகின்றது. ஒவ்வொரு ஆண்டும், இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருள்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு இயக்கம் செய்வதற்காக போக்குவரத்து ஒப்பந்ததாரர்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நியமனம் செய்கிறது. இதேபோல கூட்டுறவுச் சங்கங்களும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருள்களை எடுத்து நியாயவிலை அங்காடிகளுக்குக் கொண்டு செல்வதற்கு ஒப்பந்தப்புள்ளி முறை மூலம் போக்குவரத்து ஒப்பந்ததாரர்களை நியமனம் செய்கின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான இதர இன்றியமையாப் பொருள்களை வெளிச்சந்தையில் ஒப்பந்தப்புள்ளி மூலமாகவோ அல்லது மைய அரசின் நிறுவனங்களிடமிருந்து நேரடியாகவோ கொள்முதல் செய்கின்றது. மண்ணெண்ணெய்யைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்த மண்ணெண்ணெய் வணிகர்களிடமிருந்து

மண்ணெண்ணெய்யைப் பீப்பாய்களில் எடுத்து நியாய விலைக் கடைகளுக்கு நேரடியாகவோ அல்லது மொத்த வணிகர்கள் டேங்கர் லாரிகள் மூலமாகவோ நியாய விலை அங்காடிகளுக்கு வழங்குகின்றன. மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களுக்கு, மொத்த வணிகர்களால் டேங்கர் லாரிகளில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

6. இன்றியமையாப் பொருள்கள் கிடங்குகளிலிருந்து இயக்கம் செய்யப்படும்போது வழியில் கடத்தப்படுவதைத் தடுக்க நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்கள் அடங்கிய அட்டவணையுடன் இப்பொருள்கள் வாகனங்களில் இயக்கம் செய்யப்படுகின்றன. முந்தைய மாதத்தின் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவில் *60* சதவிகிதம் முன்நகர்வு செய்து பொது விநியோக அங்காடிகளுக்கு முன்னதாகவே வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நியாயவிலை அங்காடிகளில் போதுமான அளவு அத்தியாவசியப் பொருள்கள் இருப்பு வைக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உணவுப் பொருள் வழங்கல், வருவாய்த் துறை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கண்காணிக்கின்றனர். அங்காடியின் தேவை, மாத முடிவில் உள்ள பொருள்களின் இறுதி இருப்பு போன்றவற்றைக் கணக்கிட்டு அவற்றின் அடிப்படையில், ஒவ்வொரு மாதமும் நியாயவிலைக் கடைகளுக்கான இன்றியமையாப் பொருட்கள் நிகரமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒதுக்கீட்டின் அடிப்படையில் அங்காடிகளை நடத்தும் நிறுவனங்கள், அங்காடிகளில் விற்பனை அளவு மற்றும் இருப்பு வசதியைப் பொறுத்து இன்றியமையாப் பொருள்களைப் பெற்று நியாய விலை அங்காடிகளுக்கு அனுப்புகின்றன. இவ்வாறாக நியாய விலை அங்காடிகளில் அத்தியாவசியப் பொருள்கள் போதிய அளவில் தொடர்ந்து இருப்பு வைக்கப்படுவது உறுதி செய்யப்படுவதுடன் இருப்பு விவரமும் கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

நியாய விலைக் கடைகள்

7. பெரும்பாலான நியாய விலை அங்காடிகள் கூட்டுறவுச் சங்கங்களாலும் சில நியாய விலை அங்காடிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. இம்மாநிலத்தில் நியாய விலை அங்காடியை நடத்த தனியார் அனுமதிக்கப்படுவதில்லை. கிராமப்புற மகளிரை ஊக்கப்படுத்தவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் மகளிர் சுய

2010 ஏப்ரல் 15]

உதவிக் குழுக்கள் நியாய விலை அங்காடிகளை நடத்துவதற்கு அரசு அனுமதித்துள்ளது. 28-02-2010 அன்றைய நிலவரப்படி 617 நியாய விலை அங்காடிகளை மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தி வருகின்றன. இதேபோன்று நியாய விலை அங்காடிகளை ஊராட்சிகளே நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை வெளியிட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்த ஒரு ஊராட்சியும் நியாய விலை அங்காடியை நடத்த முன் வரவில்லை.

8. மக்கள் வசிக்கும் இடங்களுக்கு மிக அருகிலேயே நியாய விலை அங்காடிகளை அமைக்க இந்த அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. எனவே, குடும்ப அட்டைதாரர்கள் எவரும் 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாகச் சென்று பொருள்கள் வாங்க வேண்டிய நிலை இல்லாமல் நியாய விலை அங்காடிகளைத் திறக்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் நியாய விலை அங்காடியில் கிராமப் பகுதிகளில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும், நகர்ப்புறங்களில் குறைந்தபட்சம் 800 அட்டைகளும் இருக்க வேண்டுமென அரசு நெறிமுறைகளை வகுத்துள்ளது. இதன்மூலம் மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் மக்கள் வசிக்கும் பகுதிகளின் அருகிலேயே நியாய விலைக் கடைகள் அமைக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. எளிதாக அணுக இயலாத பகுதிகள், மலைப்பகுதி, சட்ட ஒழுங்குப் பிரச்சினை உள்ள குக்கிராமங்கள் போன்ற இடங்களில் அட்டைகள் எண்ணிக்கை குறைந்த அளவில் இருந்தாலும் அத்தகைய நேர்வுகளில் விதிவிலக்காக நெறிமுறைகளைத் தளர்வு செய்து பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்க அரசு அனுமதி அளிக்கிறது. இத்தகைய பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கு கிராம மக்கள் வாடகையின்றி கட்டடம் தர வேண்டும். இந்த அரசால் 2006 ஆம் ஆண்டு முதல் கூடுதலாக 1,700 பகுதிநேரக் கடைகளும் 551 புதிய முழுநேரக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. இதனால் குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளை எளிதில் அணுகி பொருள்களைப் பெறமுடிகிறது. பொதுமக்களின் வசதிக்காக நியாய விலைக் கடைகளில் பொருட்கள் வழங்குவதை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படும் என 2009-2010 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிப்பு வெளியிடப்பட்டது. 28-2-2010 வரை 346 கடைகள்

பிரிக்கப்பட்டுள்ளன. தகுதியான இடங்களைத் தேர்வு செய்து மீதமுள்ள கடைகளையும் பிரிப்பதற்கு சீரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9. 28-02-2010 அன்றைய நிலவரப்படி இம்மாநிலத்தில் 30,924 நியாய விலை அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 23,978 அங்காடிகள் முழு நேர அங்காடிகள். 6,946 அங்காடிகள் பகுதிநேர அங்காடிகள். இதன் விவரங்கள் பின்வருமாறு:—

வ. எண்	நிறுவனம்	முழு நேர அங்காடி	பகுதி நேர அங்காடி	மொத்தம்
1.	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்	1165	96	1261
2.	கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் இயங்குபவை)	22130	6768	28898
3.	இதர கூட்டுறவுச் சங்கங்கள் (செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டில் இயங்குபவை)	125	13	138
4.	மகளிர் நடத்தும் நியாய விலை அங்காடிகள் (சுய உதவிக் குழுக்கள் நடத்தும் அங்காடிகள் உட்பட)	548	69	617
5.	கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நடமாடும் நியாய விலை அங்காடிகள்	10	–	10
	மொத்தம்	**23978**	**6946**	**30924**

2010 ஏப்ரல் 15]

குடும்ப அட்டைகள்

10. இம்மாநிலத்தில் தங்கள் தேவை மற்றும் விருப்பத்திற்கு ஏற்றவாறு குடும்ப அட்டைதாரர்களே தங்களுக்கு எந்த வகையான குடும்ப அட்டைகள் தேவை என்பதைத் தேர்வு செய்து கொள்ளலாம். 28-02-2010 அன்றைய தேதியில் இம்மாநிலத்தில் புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் விவரங்கள் பின்வருமாறு:—

வ. எண்	குடும்ப அட்டையின் வகை	தகுதியான இன்றியமையாப் பொருள்கள் விவரம்	குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
1	பச்சை நிற அட்டைகள் (அரிசி விருப்ப அட்டைகள்)	அனைத்துப் பொருள்களும்	1,84,43,227
2	வெள்ளை நிற அட்டைகள் (சர்க்கரை விருப்ப அட்டைகள்)	அரிசி தவிர அனைத்துப் பொருள்களும்	10,67,821
3	காக்கி நிற அட்டைகள் (காவலர் அட்டைகள்)	அனைத்துப் பொருள்களும்	59,460
4	வெள்ளை நிற அட்டைகள் (எப்பொருளும் வேண்டாத அட்டைகள்)	எந்தப் பொருளும் இல்லை	62,443
	மொத்தம்		1,96,32,951

11. குடும்ப அட்டைதாரர்களை வறுமைக் கோட்டிற்குக்கீழ், வறுமைக் கோட்டிற்கு மேல் என்று தமிழக அரசு வகைப்படுத்தாவிட்டாலும், உச்ச நீதிமன்றத்தின் அறிவுரைகளின்படி வறியவர்களில் வறியவர்களைக் கண்டறிந்து அவர்கள் பயன்பெறத்தக்க வகையில் அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. அவர்களது குடும்ப அட்டைகளில் அந்தியோதயா அன்னயோஜனா திட்ட முத்திரையிடப்பட்டு அத்தகைய குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களிலிருந்து வறுமையிலும் வறுமையில் உள்ள தகுதியுள்ள குடும்பங்களைத் தேர்வு செய்து ஒதுக்கீடு செய்யப்படும் பயனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப

மத்திய அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளின்படி பயனாளிகள் அனுமதிக்கப்படுகின்றனர். பயனாளிகளின் பட்டியல் அவ்வப்போது தேர்வு செய்யப்பட்டு காலியிடங்களை நிறைவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பயனாளிகளின் குடும்ப எண்ணிக்கை 18,64,600 ஆகும்.

திருநங்கையர்களுக்கு குடும்ப அட்டைகள்

12. திருநங்கையர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி அவர்கள்தம் குடும்பங்களிலிருந்து பிரிந்து சென்று மற்ற திருநங்கையர்களுடன் சேர்ந்து வாழ்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, திருநங்கையர்களுக்குள்ள தனிப்பட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கும் குடும்ப அட்டைகள் எளிதில் கிடைக்கும் வகையில் வழிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. திருநங்கையர்களின் கோரிக்கையைப் பரிவுடன் ஏற்று இந்த அரசு, திருநங்கையர்கள் நல வாரியம் அமைத்து அவர்களுக்கென அடையாள அட்டையும் வழங்கியுள்ளது. அடையாள அட்டைகளின் அடிப்படையில் உரிய விசாரணைக்குப் பின் திருநங்கையர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. 28-02-2010 வரை திருநங்கையர்களுக்கு 946 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

காவலர்களுக்கான குடும்ப அட்டைகள்

13. 12-5-2008 அன்று சட்டப் பேரவையில் உள் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வட்ட காவல் ஆய்வாளர்மூலம் காவலர்களுக்கு மானிய விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்கும் திட்டத்தில் நடைமுறைச் சிக்கல் உள்ளது எனக் குறிப்பிட்டு 1-10-2008 முதல் காவலர் குடும்ப அட்டைகளுக்கு நியாயவிலை அங்காடிகள் மூலமே மானிய விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படுமென்றும், காவலர் குடும்பங்கள் அவர்கள் வீட்டிற்கு அருகிலுள்ள நியாய விலை அங்காடியில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட

2010 ஏப்ரல் 15]

அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில் புழக்கத்திலிருந்த 29,246 காவலர் குடும்ப அட்டைகளுக்கு உள்தாள் இணைத்து நியாய விலைக் கடைகளில் இணைக்கப்பட்டன. மேலும், அரிசி விருப்ப மற்றும் சர்க்கரை விருப்ப குடும்ப அட்டை வைத்திருந்த காவலர் குடும்பங்கள் மற்றும் இதுவரை குடும்ப அட்டை பெறாத காவலர் குடும்பங்கள் என 30,214 குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 28-02-2010 அன்றுள்ளபடி 59,460 குடும்ப அட்டைகள் காவலர்களுக்கு வழங்கப்பட்டு புழக்கத்தில் உள்ளன. காவலர் குடும்ப அட்டைகளுக்கு கீழ்க்கண்ட அளவுப்படி மானிய விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	இன்றியமையாப் பொருள்கள்	குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் குறைந்தபட்ச அளவு	குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் அதிகபட்ச அளவு
1	அரிசி	5 கிலோ	20 கிலோ
2	சர்க்கரை	½ கிலோ	2 கிலோ
3	கோதுமை	½ கிலோ	2 கிலோ
4	பாமாயில்	¼ லிட்டர்	1 லிட்டர்
5	துவரம் பருப்பு	1 கிலோ	4 கிலோ
6	உளுத்தம் பருப்பு	1 கிலோ	4 கிலோ

அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில், துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியன பொது விநியோகத் திட்ட விலையில் 50 சதவீத மானியத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. மண்ணெண்ணெய் பொது விநியோகத் திட்ட அளவு மற்றும் விலையிலேயே விற்பனை செய்யப்படுகிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விநியோக அளவு

14. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியன வழங்கப்படுகின்றன. விநியோகம் செய்யப்படும் பொருள்களும், அவற்றின் விலை மற்றும் வழங்கப்படும் அளவுகளின் விவரமும் வருமாறு:—

[2010 ஏப்ரல் 15

வ. எண்	இன்றியமையாப் பொருள்	விற்பனை விலை (கிலோ/லிட்டர் ஒன்றுக்கு)	ஒரு குடும்ப அட்டைக்கான விநியோக அளவு
பொது விநியோகத் திட்டத்தின்கீழ்			
1	அரிசி	ரூ.1.00	(i) அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகள் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாமல் மாதம் ஒன்றுக்கு 35 கிலோ (ii) இதர குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றுக்கு பெரியவர் ஒருவருக்கு 4 கிலோ, சிறியவர் ஒருவருக்கு 2 கிலோ, குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 12 கிலோ அதிகபட்சம் 20 கிலோ. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச அளவு 16 கிலோ, அதிகபட்ச அளவு 24 கிலோ.
2	சர்க்கரை	ரூ.13.50	நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 500 கிராம். குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு அதிகபட்ச அளவு 2 கிலோ. சர்க்கரை விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக 3 கிலோ சர்க்கரை

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

3	கோதுமை	ரூ.7.50	சென்னை நகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ வரை. இதர பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 கிலோ வரை.
4	மண்ணெண்ணெய்	ரூ. 8.40 முதல் ரூ. 9.00 வரை	குடும்ப அட்டைதாரர் குடியிருக்கும் இடத்தின் அமைவிடத்தைப் பொறுத்து 3 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை (மேலும் எரிவாயு இணைப்பு உருளையின் எண்ணிக்கையைப் பொறுத்து)

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ்			
5	துவரம் பருப்பு	ரூ.40.00	1 கிலோ குடும்ப அட்டை ஒன்றுக்கு
6	உளுத்தம் பருப்பு	ரூ.40.00	1 கிலோ குடும்ப அட்டை ஒன்றுக்கு
7	பாமாயில்	ரூ.30.00	1 லிட்டர் குடும்ப அட்டை ஒன்றுக்கு
8	செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு	ரூ.11.00	1 கிலோ குடும்ப அட்டை ஒன்றுக்கு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மண்ணெண்ணெய் விநியோக அளவு

வ. எண்	இடம்	2004-க்கு முன்பு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள்		2004-க்குப் பிறகு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள்	
		எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைகள்	ஒரு எரிவாயு இணைப்பு உள்ள குடும்ப அட்டைகள்	எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைகள்	ஒரு எரிவாயு இணைப்பு உள்ள குடும்ப அட்டைகள்
1	சென்னை மாநகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்கள்	10 லிட்டர்	3 லிட்டர்	5 லிட்டர்	3 லிட்டர்
2	இதர நகராட்சிகள்	6 லிட்டர்	3 லிட்டர்	5 லிட்டர்	3 லிட்டர்
3	நகரியங்கள், பேரூராட்சிகள்	5 லிட்டர்	3 லிட்டர்	5 லிட்டர்	3லிட்டர்
4	ஊராட்சிகள்	3 லிட்டர்	3 லிட்டர்	3 லிட்டர்	3 லிட்டர்
5	நீலகிரி மாவட்டம்				
	i. தலைமையிடம்	15 லிட்டர்	3 லிட்டர்	5 லிட்டர்	3 லிட்டர்
	ii. இதர நகராட்சிகள்	15 லிட்டர்	3 லிட்டர்	5 லிட்டர்	3 லிட்டர்
	iii. இதர நகரியங்கள் மற்றும் பேரூராட்சிகள்	10 லிட்டர்	3 லிட்டர்	5 லிட்டர்	3 லிட்டர்
	iv. ஊராட்சிகள்	5+5 லிட்டர்	3 லிட்டர்	3 லிட்டர்	3 லிட்டர்

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருள்கள்

அரிசி

15. தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவு அரிசி ஆகும். ஒரு சராசரி குடும்பத்திற்குத் தேவையான அரிசியின் பெரும்பகுதி பொது விநியோகத் திட்டத்தின்மூலம் நிறைவு செய்யப்படுகிறது. ஆனால், அதன் விலை மக்களின் வாங்கும் திறனுக்கு ஏற்றாற்போல் இருக்கவேண்டும் என்பது மிக முக்கியமான குறிக்கோள் ஆகும்.

2010 ஏப்ரல் 15]

எனவே, பொது விநியோகத் திட்ட அரிசி 15-9-2008 முதல் கிலோ ஒன்றுக்கு ரூ.2-லிருந்து ரூ. 1/- ஆக விலை குறைத்து வழங்கப்படுவதால் இக்குறிக்கோள் எய்தப்படுகிறது. இவ்வாறு குறைந்த விலையில் அரிசி வழங்குவதால் இத்திட்டத்திற்கு அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் ஒரு பெருத்த வரவேற்பு உள்ளது. இதனால் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில்தான் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டது.

16. மத்திய அரசால் குறியிலக்குடன் கூடிய பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இந்திய உணவுக் கழகம் மூலமாக மத்திய தொகுப்பிலிருந்து மாநிலத்திற்கு அரிசி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் இந்திய உணவுக் கழகம் நிர்ணயித்துள்ள அரிசியின் விற்பனை விலை விவரம் வருமாறு:—

வ. எண்	வகை	மாத ஒதுக்கீடு (டன்னில்)	இந்திய உணவுக் கழகத்தின் விற்பனை விலை (கிலோ ஒன்றுக்கு)
1	அந்தியோதயா அன்னயோஜனா	65,262	ரூ.3.00
2	வறுமைக்கோட்டிற்குக் கீழ்	1,04,936	ரூ.5.65
3	வறுமைக்கோட்டிற்கு மேல்	1,26,255	ரூ.8.30
	மொத்தம்	2,96,453	—

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் ஆகியவற்றுக்கான தற்போதைய மாதாந்திர 100 சதவீத அரிசித் தேவை 3.92 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். தமிழ்நாடு அரசு, அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் மற்றும் வறுமைக்கோட்டிற்கு மேல் மத்திய அரசு வழங்கும் மாதாந்திர ஒதுக்கீடு முழுவதையும் எடுத்துப் பயன்படுத்துகிறது. பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசின் சார்பாக

கொள்முதல் செய்யும் நெல் முழுவதையும் அரைவை செய்து மத்தியத் தொகுப்பில் ஈடுகட்டி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பயன்படுத்தி வருகிறது. தற்போதைய பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதாந்திர அரிசி நுகர்வு அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகள் உட்பட 3.17 இலட்சம் டன்களாகும். வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயர்வு காரணமாக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசியின் நுகர்வு அதிகரித்துள்ளது. 1-4-2009 முதல் 28-2-2010 வரை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் உட்பட விநியோகிக்கப்பட்ட அரிசியின் அளவு 34.80 இலட்சம் டன்கள்.

17. மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் அளவைவிட கூடுதலாகத் தேவைப்படும் அரிசி இந்திய உணவுக் கழக வெளிச் சந்தை விற்பனை விலைத் திட்டத்தின்கீழ் (OMSS) பெறப்படும் அரிசியிலிருந்தும் ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து ஆந்திரப் பிரதேச நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் வாங்கப்பட்ட அரிசியிலிருந்தும் ஈடு செய்யப்படுகிறது. மத்திய அரசு வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின்கீழ் டிசம்பர் 2009 மற்றும் மார்ச் 2010 வரையான காலாண்டுகளுக்கு தலா 1,26,422 டன்கள் அரிசியை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், ஜனவரி 2010 மற்றும் பிப்ரவரி 2010 ஆகிய இரு மாதங்களுக்கு தலா 1,25,157 டன்கள் அரிசியை மத்திய அரசு சிறப்பு ஒதுக்கீடாக வழங்கியுள்ளது. தேவைக்கும் ஒதுக்கீட்டிற்குமான இடைவெளியை நிரப்ப இது வழி செய்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் பொது விநியோகத் திட்ட அரிசியின் நுகர்வு குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

ஆண்டு	நுகர்வு (டன்னில்)		
	பொது விநியோகத் திட்டம்	அந்தியோதயா அன்னயோஜனா	மொத்தம்
2005-06	27,08,079	5,15,429	32,23,508
2006-07	27,20,852	6,41,937	33,62,789
2007-08	27,33,159	6,51,092	33,84,251
2008-09	29,54,786	6,77,231	36,32,017
2009-2010*	28,38,572	6,40,732	34,79,304

*பிப்ரவரி 2010 வரை

2010 ஏப்ரல் 15]

கோதுமை

18. பொது விநியோகத் திட்டத்திற்கு வறுமைக் கோட்டிற்கு மேல் என்ற வகைப்பாட்டின்கீழ் மத்திய அரசு மாதந்தோறும் *3,783* டன்கள் கோதுமையை ஒதுக்கீடு செய்கிறது. மேலும், ஏப்ரல் *2008* முதல் கூடுதல் சிறப்பு ஒதுக்கீடாக மாதம் *10,000* டன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர மத்திய அரசு பொருளாதார விலையில் ஏப்ரல் *2009* முதல் ஜூன் *2009* வரை மாதம் ஒன்றுக்கு *15,000* டன்கள் கோதுமையை கூடுதலாக வழங்கியுள்ளது. பொது விநியோகத் திட்டத்தில் மாதந்தோறும் *11,283* டன்கள் கோதுமையை நேரடியாக வழங்குவதுடன் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவும் வழங்கப்படுகிறது. கோதுமையிலிருந்து சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வைட்டமின் ஏ, ஃபோலிக் அமிலம் மற்றும் இரும்புச் சத்துடன் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு தயாரித்து வழங்குவதற்காக *5,000* டன்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்தும் வெளிச்சந்தை விற்பனை திட்டத்தின்கீழ் பெறப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்தும் தலா *2,500* டன்கள் பயன்படுத்தப்பட்டு செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு தயாரிக்கப்படுகிறது. தற்போது மத்திய அரசு வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின்கீழ் டிசம்பர் *2009* மற்றும் மார்ச் *2010* ஆகிய காலாண்டுகளுக்கு தலா *30,893* டன்கள் கோதுமையையும் ஜனவரி *2010* மற்றும் பிப்ரவரி *2010* ஆகிய மாதங்களுக்கு தலா *13,663* டன்கள் கோதுமையையும் சிறப்பு ஒதுக்கீடாக தமிழ்நாட்டிற்கு ஒதுக்கியுள்ளது. மத்திய அரசின் கூடுதல் ஒதுக்கீட்டினை கருத்தில் கொண்டு *2010* ஏப்ரல் மாதத்திலிருந்து குடும்ப அட்டைதாரர்களுக்கு கோதுமையை நேரடியாக விநியோகம் செய்வதற்காக மாதாந்திர கோதுமை ஒதுக்கீடு *11,283* டன்களிலிருந்து *15,000* டன்களாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. செறிவூட்டப்பட்ட கோதுமை மாவும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தொடர்ந்து வழங்கப்படும். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கடந்த *5*

[2010 ஏப்ரல் 15

ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட கோதுமையின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன:—

ஆண்டு	விநியோகிக்கப்பட்ட அளவு (டன்களில்)
2005-06	*71,007*
2006-07	*75,077*
2007-08	*91,167*
2008-09	*98,874*
*2009-2010**	*1,23,305*

*பிப்ரவரி 2010 வரை

சர்க்கரை

19: தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களிலுள்ள சர்க்கரை ஆலைகள் ஒவ்வொரு மாதமும் வழங்க வேண்டிய லெவி சர்க்கரை அளவைக் குறிப்பிட்டு மத்திய அரசு மாதாந்திர சர்க்கரை ஒதுக்கீட்டை இம்மாநிலத்திற்கு வழங்குகிறது. இவ்வாறு செய்யப்படும் ஒதுக்கீடு மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சர்க்கரை ஒதுக்கீட்டின்படி சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்து நியாய விலை அங்காடிகளுக்கு விநியோகம் செய்கிறது. மத்திய அரசின் மாதாந்திர லெவி சர்க்கரை ஒதுக்கீடு தற்போது 10,832 டன்களாகும். ஆனால், மத்திய அரசின் இந்த மாதாந்திர சர்க்கரை ஒதுக்கீடு தற்போதுள்ள அட்டைதாரர்களின் தேவைக்குப் போதுமானதாக இல்லாததால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின்மூலம் லெவி அல்லாத சர்க்கரையை வெளிச்சந்தை விலையில் கொள்முதல் செய்து அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகிறது. 2009-2010 ஆண்டு பிப்ரவரி மாதம் வரை குடும்ப அட்டைதாரர்களுக்கு சராசரியாக ஒரு மாதம் விநியோகம் செய்யப்படும் சர்க்கரையின் அளவு 33,055 டன்களாகும். சமீப காலமாக வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை உயர்ந்துள்ளதைத் தொடர்ந்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சர்க்கரையின் நுகர்வும் உயர்ந்து வருகிறது. வெளிச்சந்தையில் கொள்முதல் செய்யப்படும் லெவி அல்லாத

2010 ஏப்ரல் 15]

சர்க்கரையின் வெளிச்சந்தை விலைக்கும் பொது விநியோகத் திட்ட சர்க்கரையின் விலைக்கும் இடையே உள்ள விலை வித்தியாசத் தொகையை உணவு மானியமாக தமிழக அரசு வழங்கி வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் நுகர்வு செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு பின்வருமாறு:—

ஆண்டு	நுகர்வு அளவு (டன்களில்)
2005-06	3,30,515
2006-07	3,53,000
2007-08	2,90,048
2008-09	3,48,220
2009-2010*	3,71,945

*பிப்ரவரி 2010 வரை

மண்ணெண்ணெய்

20. இம்மாநிலத்திற்கு மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 59,780 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கி வந்தது. இந்த ஒதுக்கீடு 2004 ஆம் ஆண்டிற்கு முன்பு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மட்டுமே மண்ணெண்ணெய் வழங்குவதற்குப் போதுமானதாக உள்ளது. 2004 ஆம் ஆண்டிற்குப் பிறகு வழங்கப்பட்ட 49,56,932 புதிய குடும்ப அட்டைகளுக்குப் போதுமான அளவு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு கிடைக்காததால் இந்த அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க இயலாத சூழ்நிலை இருந்தது. இம்மாநிலத்திற்கு கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்ற இவ்வரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை. எனினும், எரிவாயு இணைப்புகளை குடும்ப அட்டைகளில் முத்திரையிடும் பணியை விரைவுபடுத்தியதன்மூலம் ஏற்பட்ட சேமிப்பைக் கொண்டு இதுவரை மண்ணெண்ணெய் வழங்கப்படாத புதிதாக வழங்கப்பட்ட புதிய குடும்ப அட்டைகளுக்கும் குறைந்தபட்ச அளவு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. பொங்கல் 2008 முதல் ஒவ்வொரு விடுபட்ட குடும்ப அட்டைக்கும் ஒவ்வொரு மாதமும் 1 லிட்டர் வீதமும் ஆகஸ்ட் 2008 முதல் மாதம் 3 லிட்டர் வீதமும் வழங்க அரசு ஆணையிட்டு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. போலி குடும்ப அட்டைகளை ஒழிப்பதற்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாகவும், கைவண்டிக்காரர்களுக்கு செய்யப்பட்ட மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை முறைப்படுத்தியதன் காரணமாகவும் கூடுதலாக மண்ணெண்ணெய் சேமிப்புக்கு வழி ஏற்பட்டது. இதன் காரணமாக நகர்புறங்களில் உள்ள இத்தகைய குடும்ப அட்டைகளுக்கு மார்ச் 2010 முதல் 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. ஏப்ரல் முதல் ஜூன் 2010 வரையிலான காலாண்டுக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குறைக்கப்பட்டு 1,58,412 கிலோ லிட்டர் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் அளவுகளிலேயே தொடர்ந்து மண்ணெண்ணெய் வழங்கப்படும். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட மண்ணெண்ணெய் அளவுகள் பின்வருமாறு:—

ஆண்டு	விநியோகிக்கப்பட்ட அளவு (கிலோ லிட்டரில்)
2005-06	6,86,018
2006-07	6,58,835
2007-08	6,62,987
2008-09	7,21,621
2009-2010*	6,22,225

*பிப்ரவரி 2010 வரை

21. தமிழ்நாடு அரசால் எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து மண்ணெண்ணெய் கொள்முதல் செய்யப்படும் கொள்முதல் விலைக்கும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் விற்பனை விலைக்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகை 1 லிட்டருக்கு 60 பைசா ஆகும். இந்த விலை வித்தியாசத் தொகையை அட்டைதாரர்களிடம் வசூலிக்காமல் 01-01-2001 முதல் அரசே இந்த நிதிச் சுமையை ஏற்றுக்கொண்டுள்ளது. 1-3-2002 முதல் எண்ணெய் நிறுவனங்களின் சேமிப்பு மையங்களிலிருந்து மொத்த மண்ணெண்ணெய் வணிகரின் வணிகத் தலம் அமைந்துள்ள இடத்திற்கு இடையே உள்ள தூரத்தை கணக்கில்கொண்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய்யின் சில்லறை விற்பனை விலை லிட்டர் ரூ.8.40 முதல் ரூ.9.00 வரை நிர்ணயம்

2010 ஏப்ரல் 15]

செய்யப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் மொத்த வணிகர்களுக்கான விளிம்புத் தொகை மற்றும் போக்குவரத்து விளிம்புத் தொகை ஆகியவற்றை 23-05-2007 முதல் அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இந்த விலை உயர்வினை குடும்ப அட்டைதாரர்களிடம் வசூலிக்காமல் அரசே இத்தொகையை மானியமாக வழங்கி வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு அரசு 4.29 கோடி ரூபாயை மானியமாக செலவு செய்கிறது. இதில், மைய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு மண்ணெண்ணெய்க்காக வழங்கும் மானியம் அடங்காது.

22. மண்ணெண்ணெய் விநியோகத்தை முறைப்படுத்தி விநியோகம் செய்வதற்காக மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களை அமைக்க அரசு ஆணையிட்டது. ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் மூலம் 5,000 முதல் 15,000 குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களில் மண்ணெண்ணெய் எப்போதும் இருப்பு இருப்பதுடன், அவை சரியான அளவில் அட்டைதாரர்களுக்கு வழங்குவதும் உறுதி செய்யப்படுகிறது. தற்போது இம்மாநிலத்தில் 312 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் செயல்படுகின்றன. இவற்றில் 269 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்களாலும், 43 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. 312 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 53 நிலையங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் 36 மண்ணெண்ணெய் நிலையங்களும் கணினி முறையில் (Online) பட்டியல் போடும் மின்னணு பட்டியல் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றன. இதன்மூலம் மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களில் வரவு, விற்பனை மற்றும் இதர கணக்குகளை உடனுக்குடன் கண்காணிக்க வழி ஏற்படும். 2010-2011 ஆம் ஆண்டில் அனைத்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களிலும் மின்னணுப் பட்டியல் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பிற பொருள்கள்

23. மாநில அரசு 14-4-2007 முதல் சென்னையிலும், மே 2007 முதல் பிற மாவட்டங்களிலும் சிறப்புப் பொது விநியோகத்

திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருள்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்கிறது. பருப்பு வகைகள் குடும்ப அட்டைதாரர்களுக்கு அதிகமான மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கோதுமையிலிருந்தும், வெளிச்சந்தை விற்பனை விலைத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கோதுமையிலிருந்தும் ஒரு பகுதியை அரைவை செய்து செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக அட்டைதாரர்களுக்கு வழங்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தப் பொருட்கள் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மாநில அரசு, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பருப்பு வகைகள், பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மற்றும் மளிகைப் பொருட்கள் பொட்டலம் ஆகியவற்றை மானிய விலையில் வழங்கும் திட்டத்தை 30-06-2011 வரை நீட்டித்துள்ளது. 14-04-2007 முதல் 28-02-2010 வரை விநியோகிக்கப்பட்ட பொருட்களின் விவரம் பின்வருமாறு:—

வ. எண்	பொருள்கள்	விநியோகிக்கப்பட்ட அளவு (டன்களில்)		
		2007-2008	2008-2009	2009-2010
1	துவரம் பருப்பு	21912	76058	114954
2	உளுத்தம் பருப்பு	12029	29630	55318
3	பாமாயில் (கி.லி.)	24725	83238	118191
4	செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு	534	27225	34348
5	ரவை	1889	2246	5627
6	மைதா	5864	8597	19744

24. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்கள் வெளிச்சந்தையில் ஒப்பந்தப்புள்ளி மூலமோ அல்லது மத்திய அரசின் நிறுவனங்களிடமிருந்தோ அல்லது உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி மூலமோ வாங்கப்படுகின்றன. மத்திய அரசின் திட்டத்தின்கீழ் பருப்பு வகைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.10/-ம் சமையல் எண்ணெய் வகைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.15/-ம் மானியமாக அளிக்கப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம்

2010 ஏப்ரல் 15]
வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 20,000 டன்கள் கனடா பருப்பு, 2,250 டன்கள் துவரை, 19,590 டன்கள் முழு உளுந்து, 1,21,482 கிலோ லிட்டர் பாமாயில் ஆகியவற்றை மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து மானிய விலையில் கொள்முதல் செய்து சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் வழங்கியுள்ளது.

25. மளிகைப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பாதிக்கப்படும் ஏழை, எளிய மக்களுக்கு உதவும் பொருட்டு 10 மளிகைப் பொருள்கள் அடங்கிய பொட்டலம் ரூ.50/- என்ற விலையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாதமும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க அரசு ஆணை பிறப்பித்தது. பொட்டலத்தில் அடைக்கப்பட்ட இந்த மளிகைப் பொருட்களின் மொத்தக் கொள்முதல் விலை சுமார் ரூ.80/-ஆக இருந்தாலும், மளிகைப் பொருள்களின் கொள்முதல் விலைக்கும் பொது விநியோகத் திட்ட விற்பனை விலைக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு மானியமாக ஏற்றுள்ளது. குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்திற்கேற்ப இப்பொட்டலத்திலுள்ள 10 பொருட்களும் தனித் தனியாக விற்பனை செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கிய நாளான 02-10-2008-லிருந்து பிப்ரவரி 2010 வரை 1,74,74,127 பொட்டலங்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டில் மட்டும் பிப்ரவரி 2010 வரை 58,15,130 பொட்டலங்கள் விற்கப்பட்டுள்ளன.

உணவு மானியம்

26. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையைவிட மிகக் குறைவாக உள்ளது. இதன் விளைவாக ஏற்படும் விலை வித்தியாசத் தொகையை மாநில அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மானியமாக வழங்குகிறது. மத்திய அரசின் ஒதுக்கீட்டைவிட கூடுதலான அரிசி தேவையை ஈடு செய்வதற்கு அரிசி வாங்கியதாலும், சர்க்கரை நுகர்வு அதிகரித்ததால் வெளிச்சந்தையில் சர்க்கரையை லெவி அல்லாத விலையில் வாங்கியதாலும், விலைவாசி உயர்வு காரணமாக அதிக விலையில் பருப்பு வாங்கியதாலும் 2009-2010 ஆம் ஆண்டிற்கு உணவு மானியத்தை அரசு ரூ.4,000 கோடியாக உயர்த்தி வழங்கியது. சர்க்கரை, பயறு வகைகளின்

[2010 ஏப்ரல் 15

வெளிச்சந்தை விலை குறைந்துள்ளதால் இப்பொருட்களின் மீதான மானியம் குறையும் என்பதைக் கருத்தில் கொண்டு, 2010-11-க்கான உணவு மானியம் ரூ.3,750 கோடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் உணவு மானியமாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் பயன்படுத்தப்பட்ட தொகை பின்வருமாறு:—

ஆண்டு	வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)	பயன்படுத்தப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
2003-2004	800	734.85
2004-2005	1035	1017.78
2005-2006	1200	1559.64
2006-2007	1950	1833.02
2007-2008	1950	1961.06
2008-2009	2700	2795.85
2009-2010	4000	—
2010-2011	3750	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

இயல் – 2

பொது விநியோகத் திட்ட நிர்வாகம்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ் பொது விநியோகத் திட்டம் செயல்பட்டு வருகிறது. பெரும்பாலான நியாயவிலைக் கடைகளை நடத்தும் கூட்டுறவுத் துறையுடனும் அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்து சேமித்து பொது விநியோகத் திட்ட அங்காடிகளுக்கு வழங்கும் பணிகளை மேற்கொள்ளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துடனும் இத்துறையின் மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவிலான அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் வழக்கமான கடத்தல் தடுப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இது தவிர, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையும் கடத்தல் தடுப்புப் பணிகளை மேற்கொள்கிறது. பொது விநியோகத் திட்ட நிர்வாகம், குடும்ப அட்டை வழங்குதல் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குதல் போன்ற பணிகளை செயல்முறைபடுத்துகிறது. புதிய குடும்ப அட்டை வழங்குதல், திருத்தங்கள், நீக்குதல், சேர்த்தல் மற்றும் அவ்வப்போது விவரங்களைப் புதுப்பித்தல் மற்றும் குடும்ப அட்டை விவரங்களை ஒப்பிடுதல் ஆகிய பணிகள் குடும்ப அட்டை மேலாண்மையில் அடங்கும். அத்தியாவசியப் பொருட்கள் வழங்குதல் என்பது மாதாந்திர ஒதுக்கீடு, நகர்வினைக் கண்காணித்தல், பொருட்களை வழங்குதல், ஆய்வுகள், கடத்தலை தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றைக் கொண்டதாகும். குடும்ப அட்டை வழங்குதல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் வட்ட வழங்கல் அலுவலகங்கள் மற்றும் சென்னை நகரத்தின் மண்டல அலுவலகங்கள் பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளதால் இவ்வலுவலகங்கள் மக்கள் எளிதில் அணுகி பயன்பெறத்தக்க வகையில் அமைய இந்த அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. புதிய குடும்ப அட்டை வழங்குதல் மற்றும் திருத்தங்களுக்கான எளிய வழிமுறைகள், பொது மக்களின் குறைகளை அறிந்து தீர்வு செய்யும் பொறுப்பான நிர்வாக அமைப்பு, பொது மக்களுக்கான சேவையை மேம்படுத்தும் மின்னணு நிர்வாகம், போலிக் குடும்ப அட்டைகளைக் களைவதற்கான தீவிரக் கணக்கெடுப்பு,

கடத்தலைத் தடுப்பதற்கு ஏதுவாக தீவிர ஆய்வு மேற்கொண்டு சட்ட நடைமுறைகளை கடுமையாக செயலாக்கம் செய்வது போன்ற பணிகள் இத்துறையின் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாகும்.

குடும்ப அட்டை வழங்கும் நடைமுறையை எளிதாக்குதல்

2. குடும்ப அட்டைகள் வழங்கும் நடைமுறையை சீரமைத்து எளிதாக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் மூலம் தகுதியான குடும்பங்களுக்கு சிரமமின்றியும் விரைவாகவும் குடும்ப அட்டைகள் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. மேலும், இந்தப் பணியை சீரமைக்க ஏதுவாக குடும்ப அட்டை அச்சடித்தல் மற்றும் விவரங்களைத் தொகுக்கும் பணிகள் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை மாநகரில் உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 28-02-2010 வரை 15,38,841 புதிய குடும்ப அட்டைகள் தகுதியான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

3. பொது மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவதில் உள்ள நடைமுறைகளை மேம்படுத்த கீழ்க்காணும் நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

➢ பிப்ரவரி 2008 முதல் புதிய குடும்ப அட்டை பெற விண்ணப்பிப்பதற்கு புதிய படிவம் நிர்ணயிக்கப்பட்டு அப்படிவங்கள் இணையதளத்திலும் மாவட்டங்களில் வட்ட வழங்கல் அலுவலகங்களிலும், சென்னை மாநகரத்தில் உதவி ஆணையர் அலுவலகங்களிலும் பொதுமக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

➢ உரிய ஆவணங்களை இணைத்துக் கொடுக்கப்படும் தகுதியான விண்ணப்பங்களுக்கு 60 நாட்களுக்குள் குடும்ப அட்டைகள் வழங்க காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டை வழங்குவதில் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சியர்கள், நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை ஒவ்வொரு வாரமும் ஆய்வு செய்கின்றனர்.

➢ 1-1-2010 முதல் குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்குவதற்கு தயாராக உள்ளது என்பதை

2010 ஏப்ரல் 15]

விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவல் சேவை (SMS) அல்லது மின்னணு அஞ்சல்மூலம் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக சம்பந்தப்பட்ட அலுவலகங்களிடமிருந்து பொதுமக்கள் குடும்ப அட்டைகளைப் பெறுவது எளிதாகும். எனவே விண்ணப்ப தாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் அலைபேசி எண்ணையோ அல்லது மின்னணு அஞ்சல் முகவரியோ அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

➢ 15-4-2010 ஆம் நாள் முதல் திருச்சி மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக கணினிவழி விண்ணப்பம் மற்றும் பணிமுறை மென்பொருள் அமல்படுத்தப்பட்டு விண்ணப்பம் பெறும் முறை எளிதாக்கப்படும். விண்ணப்பங்கள் பெறப்பட்டதை உறுதி செய்து அவற்றின்மீது நடவடிக்கை உரிய காலக் கெடுவிற்குள் எடுக்கப்படும். இதனால் கணினிவழிமூலம் ஒவ்வொரு விண்ணப்பத்தின் நிலை குறித்து பொதுமக்கள் உடனுக்குடன் அறிய இயலும்.

➢ இதர சேவைகள், மக்கள் சாசனத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவின்படி முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதா என்பதும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. உணவுப்பொருள் வழங்கல் துறையின் இணையதள முகவரியான www.consumer.tn.gov.in-ல் மக்கள் சாசனம் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் புதிய குடும்ப அட்டை பெறும் வழிமுறைகள் மற்றும் பிற சேவைகள் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

4. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்த வட்ட வழங்கல் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களில் கீழ்க்காணும் நீண்ட காலத் திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

➢ தாம்பரம் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு ரூ.70 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2010-2011 ஆம் ஆண்டில் அம்பத்தூர் மண்டலத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட ரூ. 80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

[2010 ஏப்ரல் 15

- உதவி ஆணையர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களை நவீனமயமாக்குவதற்கு ரூ.25 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- உதவி ஆணையர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகப் பணியாளர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக மத்திய அரசு ரூ.11.39 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் பயனாக 2010 ஜூன் மாதத்திற்குள் 1300 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

- வட்ட வழங்கல் அலுவலகங்கள் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களில் திடீர் சோதனைகள் மற்றும் தணிக்கை முறையை வலுவாக்குவதற்கு சிறப்புக் குழுக்கள் மாநில அளவில் அமைக்கப்பட்டு வாரந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(ஈ) பொதுமக்கள் புகார்களைத் தீர்வு செய்தல்

5. பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடு, குடும்ப அட்டைதாரர்களுக்கு முழு மனநிறைவை அளிப்பதாக இருக்க வேண்டும் என அரசு கருதுவதால் பொதுமக்கள் அளிக்கும் புகார்களைக் களைவதற்கு அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. எனவே, பொது விநியோகத் திட்டம் தொடர்பான புகார்களுக்கு எல்லா நிலையிலும் அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவை உடனுக்குடன் தீர்வு செய்யப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப் பிரிவு, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் அலுவலகம், பல்வேறு அலுவலகங்கள் மற்றும் கள அலுவலர்கள்மூலம் புகார் மனுக்கள் பெறப்படுகின்றன. இதுதவிர, பொது மக்கள் தங்கள் குறைகளை கணினிவழி முறையில் பதிவு செய்ய உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் www.consumer.tn.gov.in என்ற இணைய தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விணையதளத்தின்மூலம் 1-4-2008 முதல் 31-3-2009 வரை 1121 புகார்கள் கணினிவழியில் பதிவுசெய்யப்பட்டு 1103 புகார்கள் தீர்வுசெய்யப்பட்டுள்ளன. 1-4-2009 முதல் 28-2-2010 வரை பதிவு செய்யப்பட்டுள்ள 2220 புகார்களில் 1363 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

2010 ஏப்ரல் 15]

6. மாவட்ட அளவில் பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலும், கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள் வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையிலும் அமைக்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் சுமுகமான செயல்பாடு உறுதி செய்யப்படுகிறது. இந்த ஆலோசனைக் குழுக்களில் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. மாநில அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் தலைமையில் அமைக்கப்பட்டு காலாண்டிற்கு ஒரு முறை கூடுகிறது.

7. பொதுமக்களின் குறைகளை, அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று தீர்வு செய்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாதமும் வட்ட அளவிலும், மண்டல அளவிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்வு செய்து மக்கள் குறைதீர் கூட்டங்கள் நடத்தப்படும் என மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்கள். இதன்படி ஒவ்வொரு மாதமும், புதிய குடும்ப அட்டைகள் பெறுவதற்கான வழிமுறைகள், நியாய விலை அங்காடிகளில் வழங்கப்படும் சேவைகள் உட்பட இதர சேவைகள் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கவும், அப்பகுதியிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் விண்ணப்பதாரர்களின் குறைகளைக் கேட்கவும் இத்தகைய கூட்டங்கள் மாதந்தோறும் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. கீழ்க்காணும் காரணங்களினால் இத்திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது:

- குடும்ப அட்டைதாரர்களின் முகவரி மாற்றம், பெயர் சேர்ப்பு, பெயர் நீக்கம் முதலானவை அந்த இடத்திலேயே செய்து முடிக்கப்படுவதன்மூலம் அட்டைதாரர்கள் அலுவலர்களை பலமுறை சந்திக்க வேண்டிய நிலை தவிர்க்கப்படுகிறது.

- அட்டைதாரர்கள் அலுவலர்களை எளிதாகச் சந்தித்து குடும்ப அட்டைகள் மற்றும் பொது விநியோகத் திட்டம் தொடர்பான நடைமுறைகளை நேரில் கேட்டறிந்து விதிமுறைகளைப் பின்பற்றுவது அதிகரித்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

8. 2009-2010 ஆம் ஆண்டில் 01-04-2009 முதல் 28-02-2010 வரை 4168 மக்கள் குறைதீர் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களில் பெறப்பட்ட 1,68,189 புகார் விண்ணப்பங்களில் 1,46,058 விண்ணப்பங்கள் அவ்வப்போதே தீர்வு செய்யப்பட்டுள்ளன. நியாய விலைக் கடை விற்பனையாளர்களுக்கான கையேடு அச்சிடப்பட்டு மாநிலத்தில் உள்ள அனைத்து விற்பனையாளர் களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த கையேட்டின் அடிப்படையில் நியாய விலைக் கடை விற்பனையாளர்களுக்கு ஒவ்வொரு காலாண்டும் பயிற்சி வகுப்புகள் நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

போலி குடும்ப அட்டைகளைக் களைதல்

9. போலி குடும்ப அட்டைகளைக் களையவும், குடும்ப அட்டைகளில் உள்ள விவரங்களைச் சரிபார்க்கவும் மாநிலத்தின் புழக்கத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைகளையும் 100% வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கலாம் என அரசு முடிவெடுத்தது. முதற்கட்டமாக 3 மாவட்டங்களில் பணி தொடங்கப்பட்டு 2.06 இலட்சம் குடும்ப அட்டைகள் இறுதியாக இரத்து செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக எடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் 5.66 இலட்சம் குடும்ப அட்டைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக 14 மாவட்டங்களில் பணி தொடங்கப்பட்டு 18.70 இலட்சம் குடும்ப அட்டைகள் போலியாக இருக்கலாம் எனக் கருதி பொருள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. நான்காம் கட்டமாக 5 மாவட்டங்களில் பணி தொடங்கப்பட்டு 4.32 இலட்சம் குடும்ப அட்டைகள் போலியாக இருக்கலாம் எனக் கருதப்பட்டு பொருள் நிறுத்த ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணியின் இறுதியில் சுமார் 18 முதல் 20 இலட்சம் போலி குடும்ப அட்டைகள் தமிழ்நாட்டில் இரத்து செய்யப்படலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடத்தல் தடுப்புப் பணிகள்

10. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் இன்றியமையாப் பொருள்கள் அதிக அளவு மானியத்துடன் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. இதனால் சமூக விரோதிகள் இந்தப் பொருட்களை கடத்தி, கள்ளச் சந்தையில் விற்க முயலுகின்றனர். இத்தகைய குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, கடும் தண்டனை பெற்றுத்தர அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2010 ஏப்ரல் 15]

பொது விநியோகத் திட்டத்தில் கடத்தல் தடுப்புப் பணிகளை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையும், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையும் மேற்கொள்கின்றன.

11. மாநில அளவில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளருக்கு செயலாக்கப் பணிகளை நிறைவேற்ற உதவி ஆணையர் (ஆய்வு) மற்றும் ஒரு பறக்கும் படை கண்காணிப்பாளர் ஆகியோர் உதவி செய்கின்றனர். மாவட்ட அளவில், பொது விநியோகத் திட்ட செயலாக்கப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சென்னையைப் பொறுத்தவரை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணை ஆணையாளரும் ஒருங்கிணைந்து கண்காணிக்கின்றனர். சென்னை மாநகரத்திலும் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பறக்கும் படைகள் பொது விநியோகத் திட்ட செயலாக்கத்தினை உன்னிப்பாகக் கண்காணித்து அத்தியாவசியப் பொருள்கள் முறைகேடாகக் கடத்தப்படுவதைத் தடுக்கின்றன. பொது விநியோகத் திட்டத்தை திறம்பட மேற்பார்வை செய்து கண்காணிப்பதற்கு ஏதுவாக உணவுப் பொருள் வழங்கல் துறையின் மாவட்ட வழங்கல் அலுவலர்கள், பறக்கும் படையினர் மற்றும் தனி வட்டாட்சியர்களின் கழிவு செய்யப்பட்ட 7 வாகனங்களுக்குப் பதிலாக புதிதாக வாகனங்கள் வாங்குவதற்கு 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.36.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. அனைத்து மாவட்ட மற்றும் வட்ட வழங்கல் அலுவலர்களுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் தீவிர அமலாக்கம் மற்றும் செயல்பாட்டை மேம்படுத்த செல்லிடத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் பறக்கும் படைகள் மேலும் சிறப்பாகப் பணிபுரிய அவற்றுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து பறக்கும் படை வட்டாட்சியர்களுக்கும் பதுக்கல், கடத்தல் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கவும், திடீர் தணிக்கைக்கு ஏற்பாடு செய்யவும் 2008-2009 ஆம் ஆண்டில் செல்லிடத் தொலைபேசி வழங்கப்பட்டு மாதாந்திர உச்சவரம்புக் கட்டணமாக ரூ.800/-ம் அனுமதித்து வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பறக்கும் படையினரின் பணித் திறனை மேம்படுத்தும் நோக்குடன் பறக்கும் படைப் பணியாளர்களின் பணியினை ஆய்வு செய்யும் முறையும், திறமையற்ற மற்றும் சந்தேகிக்கும் வகையில் செயல்படும்

[2010 ஏப்ரல் 15

அலுவலர்களை உடனுக்குடன் பறக்கும் படையிலிருந்து மாற்றம் செய்யும் முறையும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

13. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் நேரடிக் கண்காணிப்பில் விழிப்புப் பணிக் குழு அலுவலர் தலைமையில் ஒரு குழு செயல்படுகிறது. இக்குழு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் இருந்து பொருட்கள் கடத்தப்படுகின்றனவா என்பதை ரகசியமாக விசாரித்து அறிந்து விவரங்களைச் சேகரித்து தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும், இந்திய உணவுக் கழகக் கிடங்கிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிற்கு அத்தியாவசிய பொருள்கள் எடுத்துச் செல்லும்போது பொருள்கள் கடத்தப்படாமல் கண்காணித்தும் வருகிறது. இந்த விழிப்பு பணிக் குழு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகள், நெல் அரைவை முகவர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலை அங்காடிகளில் திடீர் தணிக்கை மேற்கொண்டு தவறு செய்யும் அரைவை முகவர்கள் மற்றும் பணியாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதேபோல் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் சிறப்புத் தணிக்கைக் குழுக்கள் கூட்டுறவுத் துறையில் நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

14. குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறை, கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள முதுநிலை காவல் துறை அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறது. இவருக்கு உதவியாக காவல் துறை தலைவர் ஒருவரும் பணிபுரிகிறார். இந்தப் பிரிவில் 236 பணியாளர்கள் மாநிலம் முழுவதும் செயல்படும் 20 அலகுகளில் பணிபுரிகின்றனர். இன்றியமையாப் பொருள்கள் கடத்தலைத் தடுக்கும் நோக்கத்துடன் காலமுறையில் திடீர் சோதனை மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி மற்றும் இதர அத்தியாவசியப் பொருள்களைக் கடத்துவதற்கான செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மற்றும் சமூக விரோதிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் இன்றியாமையாப் பண்டங்கள் விநியோகப் பராமரித்தல் சட்டம் 1980 மற்றும் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் ஆகியவற்றின்மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தடுப்புக் காவலில் வைக்கப் படுகின்றனர். மேலும், குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத்

2010 ஏப்ரல் 15]

துறை அலகுகள், அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கல், கடத்தல் தொடர்பான தகவல்களை ரகசியமாகச் சேகரித்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருள்களை அதிக அளவில் கடத்தும் இத்தகைய குற்றவாளிகள்மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

15. குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலகுகளுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டன. இத்துறையைச் சீரமைக்கும் நோக்கத்துடன் அரசு கூடுதலாக 40 பணியாளர்களை அனுமதித்து திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய நான்கு மாவட்டங்களில் கூடுதல் அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இந்த மாவட்டங்களில் தீவிர செயலாக்கத்திற்கு மிகுந்த வழிவகை ஏற்பட்டுள்ளது.

16. 2009 ஆம் ஆண்டில் 116 நபர்கள் கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகப் பராமரித்தல் சட்டம், 1980-ன்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். ஆண்டுவாரியாக பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் அளவு விவரம், கைது செய்யப்பட்ட நபர்கள், கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் விநியோகப் பராமரித்தல் சட்டம், 1980-ன்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்களின் விவரம் வருமாறு:—

வ. எண்.	ஆண்டு	கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	கள்ளச் சந்தை தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	கைப்பற்றுகை செய்யப்பட்ட பொது விநியோகத் திட்ட அரிசியின் அளவு (மெ.டன்னில்)	கைப்பற்றுகை செய்யப்பட்ட மண்ணெண்ணெய்யின் அளவு (கி.லிட்டரில்)
1	2005	793	7	6395	608
2	2006	1969	75	13014	525
3	2007	2399	63	20036	595
4	2008	4040	135	14901	613
5	2009	6419	116	10804	455
6	2010**	550	12	316	34

*****28-2-2010 வரை***

[2010 ஏப்ரல் 15

17. பொது விநியோகத் திட்ட அத்தியாவசிய பொருள்கள் பதுக்கல் மற்றும் கடத்தலைத் தடுக்க கீழ்க்காணும் கூடுதல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன:

➤ உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் நம்பகத்தன்மை வாய்ந்த அலுவலர்களைக் கொண்டு, மாநில அளவில் சிறப்பு செயலாக்க குழுக்கள்மூலம் திடீர் சோதனைகள் மேற்கொள்ளும் முறை பின்பற்றப்படுகிறது. 1-4-2009 முதல் 28-2-2010 வரை இதுபோன்று 24 திடீர் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தணிக்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் (உணவு) மற்றும் உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவால் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டில் ஏற்படும் குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு தீர்வுகாண வழி ஏற்படுகிறது. மேலும் முறைகேடுகள் புரிந்தவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு தணிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வட்ட வழங்கல் அலுவலகங்களிலும், கிடங்குகளிலும், நியாய விலைக் கடைகளிலும், விதிகளும் வழிமுறைகளும் உரியவாறு பின்பற்றப்படுவதற்கு வழிவகுத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நன்கு சேவை செய்ய முடிகிறது.

➤ சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள் கடத்துவதை தெரிவிக்க ஏதுவாக கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கட்டுப்பாட்டு அறைகளின் தொலைபேசி எண்கள் விளம்பரம் செய்யப்பட்டுள்ளன.

➤ நியாய விலைக் கடைகளில் முறைகேடுகளில் ஈடுபடும் நியாய விலை அங்காடிப் பணியாளர்கள்மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 91 நியாய விலை அங்காடிப் பணியாளர்கள்மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

- பொது விநியோகத் திட்ட இன்றியமையாப் பொருள்கள் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் அனுமதிகளை இரத்து செய்யவும், ஓட்டுநர்களின் உரிமங்களை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2009 ஆம் ஆண்டில் கடத்தலில் ஈடுபட்ட 237 வாகனங்களின் அனுமதிகள் இரத்து செய்யப்பட்டதுடன், கடத்தலில் ஈடுபட்ட 16 நபர்களின் ஓட்டுநர் உரிமங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டில் 28-02-2010 வரையிலான காலத்தில் 67 வாகன உரிமங்களும் 61 ஓட்டுநர் உரிமங்களும் இரத்து செய்யப்பட்டன.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சில நெல் அரைவை முகவர்கள், முறைகேடாக பொது விநியோகத் திட்ட அரிசியைப் பெற்று அவற்றை அரைவை செய்த அரிசி போல மறு சுழற்சி செய்வது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது அரைவை அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது. அத்தகைய அரைவைதாரர்கள் கறுப்புப் பட்டியலில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொது விநியோகத் திட்டத்தில் மின் ஆளுமை

18. மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் தேசிய மின் ஆளுமை நடவடிக்கைத் திட்டத்தின்கீழ் மின் ஆளுமைத் திட்டத்தினை 4.92 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. இதன்படி, பொது விநியோகத் திட்ட செயல்பாடுகளை மின் ஆளுமைக்கு உட்படுத்தவும், பொதுமக்களுக்கு மின் ஆளுமைச் சேவையை அளிக்கவும் இயலும். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

- கணினிகள், அச்சுப்பொறி முதலிய வன்பொருட்களை சென்னை நகரத்தில் துணை ஆணையர், உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் மற்றும் மாவட்டங்களில், மாவட்ட வழங்கல் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்துடன் அனைத்து வட்ட வழங்கல் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலகங்கள் தமிழ்நாடு மாநில அகலக்கற்றை அலை வரிசை (TNSWAN) மூலம் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகர அலுவலகங்கள் அகலக்கற்றை அலைவரிசைமூலம்

(Broadband) இணைக்கப்பட்டுள்ளன. அலுவலகங்களுக்கு இடையேயான கடிதப் போக்குவரத்து, புகார்தாரர்களுடன் செய்யப்படும் கடிதப் போக்குவரத்து ஆகியவை பெரும்பகுதி மின் அஞ்சல் முறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

- தேசிய தகவல் மையத்தின் (National Informatics Centre) உதவியுடன் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருள்களுக்கான ஒதுக்கீடு ஆணைகள் வழங்குவதற்கு மென்பொருள் தயாரிக்கப்பட்டு கடந்த *2008* முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த கணினிவழி (Online) ஒதுக்கீடு முறை, வட்ட வழங்கல் அலுவலகங்கள் ஒதுக்கீடு ஆணையைப் பிறப்பிப்பதற்கான விதி முறைகளைக் கடைப்பிடிப்பதையும், ஒதுக்கீடு வழங்குவதில் ஒளிவு மறைவில்லா நடவடிக்கை கடைப்பிடிக்கப்படுவதையும் உறுதி செய்கிறது. இந்த மென்பொருள், அமைப்பு ரீதியான தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

- *2009* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கணினி வழி (Online) முறையில் பொதுமக்கள் இத்துறையின் இணைய தளமான http://www.consumer.tn. gov.in/commodities.htm-ல் தங்களது மின் அஞ்சல் முகவரியைப் பதிவு செய்து கொண்டு மாவட்டத்தில் அமைந்துள்ள குறிப்பிட்ட ஒரு நியாயவிலை அங்காடிக்கான நடப்பு மாத அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டு விவரங்களைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பம் அனுப்புபவர்கள் தங்கள் விண்ணப்பத்தில் கைபேசி எண்ணையோ அல்லது இ-மெயில் முகவரியையோ அளிக்கும் நேர்வில் புதிய குடும்ப அட்டை அச்சிட்டு வழங்கத் தயாராக உள்ளது என்பதை குறுந்தகவல் சேவை மூலம் அல்லது இ-மெயில்மூலம் தெரிவிக்கப்படும். இதனால் விண்ணப்பதாரர்கள் குடும்ப அட்டை அச்சிட்ட உடன் குடும்ப அட்டைகளைப் பெறுவதற்கு ஏதுவாகும்.

- கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் அன்றாடத் தேவையின் அடிப்படையில் ஒவ்வொரு

2010 ஏப்ரல் 15]

இன்றியமையாப் பொருளின் இருப்பினை உறுதி செய்வதற்காக குறுந்தகவல் சேவை (SMS) அடிப்படையிலான கண்காணிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நியாய விலைக் கடையில் ஒவ்வொரு நாளும் பொருளின் இருப்பினை அறிந்து தேவைக்கேற்ப பொருட்களை உடன் அக்கடைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க முடிகிறது. இதன் பயனாக வட்ட மற்றும் மாநில அளவிலான கண்காணிப்பு அலுவலர்கள் பொருட்களை, குறிப்பாக சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களை குறிப்பிட்ட காலத்தில் நகர்வு செய்ய முடிகிறது.

- சென்னை மாநகரில் உள்ள 1,592 நியாய விலைக் கடைகளில் மின்னணுப் பட்டியல் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம் ஒவ்வொரு கடையிலும் நடைபெறும் விற்பனை மற்றும் இருப்பு ஆகியவற்றின் விவரங்களைக் கணினிமூலம் கண்காணிக்கலாம். மேலும், தீவிர முறைகேடுகளையும் கண்டுபிடிக்க முடியும்.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து உணவுப் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுவதை கணினிமூலம் கண்காணிப்பதற்கு ஏதுவாக கணினிவழி கண்காணிக்கும் திட்டத்தை இக்கழகம் தொடங்கியுள்ளது. இத்திட்டம் 242 கிடங்குகளில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இன்றியமையாப் பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் நிலமுறை வரையம் திட்டத்தின் (GPS) மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

19. போலி குடும்ப அட்டைகள், போலி பட்டியலிடுதல், பொருட்களின் நகர்வின்போது நடைபெறும் தவறுகள் ஆகியவற்றை உரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அமைப்பு ரீதியாக (system intervention) தடுக்கும் முறைகளைக் கையாண்டும் மற்றும் குடும்ப அட்டைகளில் புள்ளி விவரங்களை தொடர்ந்து பராமரித்து, புதிய அட்டை பெறுதல், முகவரி மாற்றம் போன்றவற்றிற்கு விரைவாக செயல்படும் எளிய நடைமுறைகள்மூலம் பொது விநியோகத் திட்டத்தின்

[2010 ஏப்ரல் 15

செயலாக்கத்தில் உரிய நிர்வாக சீர்திருத்தத்தை ஏற்படுத்தி பொதுமக்களுடன் நட்புறவாக இருப்பது அவசியமாகிறது. பொது விநியோகத் திட்டத்தில் முழு மின்னணு நிர்வாகத்தைக் கொண்டுவந்து மேற்கண்ட சீரமைப்பை மேற்கொள்வது அவசியம் எனக் கருதப்படுகிறது. அங்க அடையாளப் பதிவு செய்தல், ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளை நீக்குதல், புதிய குடும்ப அட்டை வழங்குதல், பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்தும் அனைத்து நிறுவனங்களுக்கும் பணி மென்பொருள் முறைமூலம் ஒருங்கிணைத்தல், கடத்தலைத் தடுத்தல் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக முழு மின்னணு நிர்வாகத்தை கொண்டுவருவதற்கு துறைக்கு உதவி செய்யும் ஒரு கலந்தறிதற்குரிய நிறுவனத்தை (consultant) நியமனம் செய்வதற்கு அரசு ரூ.50 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்த கலந்தறிதற்குரிய நிறுவனத்திடமிருந்து (consultant) பெறப்பட்ட முதல் அறிக்கையின் அடிப்படையில் முழு மின்னணு நிர்வாகத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2010 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதம் நடைபெறும் தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்தவுடன் இந்திய அடையாள ஆணைய அங்க அடையாள விவரக் குறிப்பின் அடிப்படையில் அங்க அடையாளப் பதிவுகளை மாநில அரசுடன் இணைந்து மேற்கொள்ளலாம் என புது டெல்லி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பதிவாளரை மாநில அரசு கோரியுள்ளது. புதிய குடும்ப அட்டைகள் வழங்கும்போது தனி நபர் பதிவுகள் பெற இந்திய அங்க அடையாள ஆணையத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்ற ஏதுவாக புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலம் 30-06-2011 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் 15]

இயல் – 3

விலைவாசிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

2007 ஆம் ஆண்டு உலக அளவில் இன்றியமையாப் பொருட்களின் விலை குறிப்பாக உணவு தானியங்கள் மற்றும் சமையல் எண்ணெய் விலை இது வரை கண்டிராத அளவுக்கு ஏற்றம் கண்டது. உணவு தானியங்களின் உற்பத்தி உலக அளவில் குறைந்ததால் ஏற்பட்ட பற்றாக்குறையின் காரணத்தாலும், வளர்ந்து வரும் நாடுகளில் நுகர்வு அதிகமாக இருந்த காரணத்தாலும், உணவுப் பொருட்களின் விலை உயர்ந்தது. உலக அளவில் கச்சா எண்ணெய்யின் விலை உயர்ந்ததால் சமையல் எண்ணெய் விலையும் உயர்ந்தது. சமையல் எண்ணெய்யைப் பொறுத்தவரை இறக்குமதியையே நமது நாடு பெரிதும் நம்பி இருப்பதால் இதன் தாக்கம் நம் நாட்டிலும் பிரதிபலித்தது. நல்ல விளைச்சல் காரணமாகவும் கச்சா எண்ணெய்யின் விலை வீழ்ச்சியின் காரணமாகவும் இன்றியமையாப் பொருட்களின் விலை சற்று தணியத் தொடங்கியது. 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பருவ மழை தாமதமான காரணத்தாலும், உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்து தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவும் அத்தியாவசியப் பொருட்களின் விலை மீண்டும் உயர ஆரம்பித்தது. இதனால், பருப்பு வகைகள் மற்றும் சில காய்கறிகளின் விலைகளும் உயர ஆரம்பித்தன. இதன் விளைவாக உணவுப் பொருட்களின் பணவீக்கம் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் தேதி இதுவரை இல்லாத அளவான 19.83 சதவிகிதத்தை எட்டியது. எனினும், 2010 மார்ச் மாதம் 27 ஆம் தேதி நிலவரப்படி உணவுப் பொருட்களின் பணவீக்கம் 17.70 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

2. சில குறிப்பிட்ட பயிர்களின் தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையே உள்ள இடைவெளி மற்றும் இதனால் பற்றாக்குறை ஏற்படுமோ என்று மக்கள் மனதில் ஏற்படும் அச்சம் ஆகியன விலைவாசி உயர்வுக்கு காரணமாக அமைகின்றன. தேசிய அளவில் ஏற்பட்ட இந்த விலை மாற்றங்கள் தமிழ்நாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்தியதால் மத்திய, மாநில அரசுகள் பல நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளை எடுத்தன. நீண்ட காலத் திட்டமாக, பற்றாக்குறை உள்ள குறிப்பிட்ட சில பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கி தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை நிறைவு செய்வதற்கு ஏதுவாக

[2010 ஏப்ரல் 15

பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறுகிய கால நடவடிக்கையாக, மத்திய, மாநில அரசுகள் வர்த்தகம், நிதி மற்றும் பணம் சார்ந்த கொள்கைகளில் மாற்றங்களைச் செய்து, விலையைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில பொருட்களின் ஏற்றுமதிக்கு தடை விதித்தும், சில பொருட்களின் இறக்குமதிக்கு சுங்க வரியை நீக்கியும், குறைத்தும் கடினமான பணம் சார்ந்த கொள்கையை (Monetary Policy) பின்பற்றியும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக விலைவாசி குறைய ஆரம்பித்தது. மத்திய, மாநில அரசுகள் பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டு அத்தியாவசியப் பொருட்களை மானிய விலையில் பொதுமக்களுக்கு வழங்கியதால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் இந்த விலைவாசி உயர்வின் தாக்கத்திலிருந்து விடுபட வாய்ப்பு ஏற்பட்டது. பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், அரிசி, சர்க்கரை போன்ற முக்கியமான பொருட்களுக்கு இருப்பு எல்லை நிர்ணயிக்கப்பட்டு பதுக்கல் தடுக்கப்பட்டது. மேலும், பதுக்கலை ஒழிப்பதற்கு ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் சாதாரண மக்களுக்கு விலைவாசி உயர்வினால் ஏற்பட்ட பாதிப்பை தணிக்க உதவியது.

நீண்ட கால நடவடிக்கையாக உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குதல்

3. உணவு தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் போன்ற குறிப்பான வேளாண் பொருட்களின் விலை உயர்வைத் தடுக்க வேண்டுமெனில் உள்நாட்டு உற்பத்தியை அதிகப்படுத்தி இறக்குமதியைக் குறைக்க வேண்டியது அவசியம். பற்றாக்குறையைப் போக்க அதிக அளவு விளைச்சலைத் தரக்கூடிய உயர் ரக விதைகளை போதிய அளவு வழங்கி, புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். செம்மை நெல் சாகுபடித் திட்டத்தில் தமிழ்நாட்டில் நெல் உற்பத்தித் திறன் குறிப்பிட்ட அளவு உயர்த்தப்பட்டுள்ளது. உணவு தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் மேம்படுத்துவதற்குரிய இம்மாதிரியான திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மாநில அரசு, தலைமைச் செயலாளர் தலைமையில் சிறப்பு பணிக்

2010 ஏப்ரல் 15]

குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழு பருப்பு வகைகளின் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக வழிமுறைகளைக் கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தி இலக்கை எட்ட எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி பரிந்துரைக்க உள்ளது. இந்த நடவடிக்கைகளால் தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை நீங்கி எதிர்காலத்தில் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்துதல்

4. (i) தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களும் அடங்கும். 15-09-2008 முதல் ஒரு கிலோ அரிசி ரூ.1/- என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் சுமார் 3.17 இலட்சம் டன்கள் அரிசி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்படுகிறது. மத்திய அரசு 2.96 இலட்சம் டன்கள் அரிசியை ஒவ்வொரு மாதமும் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்த போதிலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தேவையான அரிசியை முழுமையாகவும் தட்டுப்பாடின்றியும் வழங்குவதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. மத்திய அரசு ஒதுக்கீட்டைவிடக் கூடுதலாக தேவைப்படும் அரிசியானது இந்திய உணவுக் கழகத்தில் வெளிச் சந்தை விற்பனை விலைத் திட்டத்தின் (OMSS) கீழ் டிசம்பர் 2009 மற்றும் மார்ச் 2010 உடன் முடிந்த காலாண்டுகளுக்கு வழங்கப்பட்ட 2,52,844 டன்கள் அரிசியைக் கொண்டும், 2010 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட 1,25,157 டன்கள் சிறப்பு ஒதுக்கீட்டில் பெறப்பட்ட அரிசியைக் கொண்டும் ஈடு செய்யப்படுகிறது. இது தவிர மாநில அரசு ஆந்திர மாநிலத்திலிருந்து ஆந்திர நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் 1.00 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்துள்ளது. இந்த நடவடிக்கைகளால் அரசுக்கு பெரும் நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது. எனினும், பொதுமக்களை விலைவாசியின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கவும் வெளிச் சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தைப் போக்கவும், இந்த அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. குறுவை சாகுபடி பொய்த்துப் போனதால் 2010-2011 ஆம் ஆண்டில் பயிர்களின் விளைச்சல் இல்லாதபோதும்

கூட பொது விநியோகத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வருவதால் வெளிச் சந்தையில் அரிசி விலை தற்போது குறைந்துள்ளது. மேலும், கொள்முதலை அதிகரிக்க கிரேடு A வகை நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 70/-ம், சாதாரண வகை நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50/-ம் ஊக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

(ii) 2007-ல் விலைவாசி கடுமையாக உயர்ந்தபோது, இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் 2007 மே மாதம் முதல் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் கோதுமை மாவு போன்ற பொருட்கள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அதன்பின், 10 மளிகைப் பொருட்கள் அடங்கிய பொட்டலம் ரூ. 50/- என்ற மானிய விலையில் விற்பனை செய்வது இத்திட்டத்துடன் சேர்க்கப்பட்டது. தற்போது ஒரு மாதத்திற்கு சுமார் 10,000 டன்கள் முதல் 12,000 டன்கள் துவரம் பருப்பும், 5,000 முதல் 6,000 டன்கள் உளுத்தம் பருப்பும், 1 முதல் 1.2 கோடி லிட்டர் பாமாயில் எண்ணெய்யும், 4,500 முதல் 5,000 டன்கள் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மற்றும் 10 முதல் 15 இலட்சம் மளிகைப் பொருட்களின் பொட்டலங்களும் விற்பனை செய்யப்படுகின்றன. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றின் வெளிச் சந்தை விலை 2009 ஆம் ஆண்டு கிலோ ஒன்றுக்கு ரூ. 100 என்று இருந்தபோதிலும் இந்த அரசு சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இந்த பொருட்களின் விலையை உயர்த்தாமல் இந்த நிதிச் சுமையை அரசே ஏற்றுக்கொண்டு பருப்பு வகைகளின் விலையை மட்டும் சிறிது மாற்றி ஒரு கிலோ ரூ.40/- என்ற விலையிலேயே தொடர்ந்து விற்பனை செய்து வருகிறது. பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் இப்பொருட்களை அதிக அளவில் பொதுமக்கள் வந்து வாங்குவதே இத்திட்டம் பொதுமக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதைக் காட்டுகிறது.

2010 ஏப்ரல் 15]

(iii) *2009* ஆம் ஆண்டு துவரம் பருப்பு விலை உயர்ந்தபோது மாநில அரசு துவரம் பருப்புக்கு மாற்றாக விலை குறைவான கனடா பருப்பை அறிமுகப்படுத்தியது. *23,500* டன்கள் கனடாவிலிருந்து இறக்குமதி செய்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்தது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், துவரம் பருப்பையும் நேரடியாக இறக்குமதி செய்தது. இதனால் துவரம் பருப்பின் இருப்பு அதிகரித்து துவரம் பருப்பின் விலை குறைய ஆரம்பித்தது.

(iv) கரும்பு உற்பத்தியின் அளவு குறைந்ததால், நாட்டில் சர்க்கரை உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சர்க்கரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. *40/-* வரை உயர்ந்து காணப்பட்டது. சர்க்கரை இருப்பில் தட்டுப்பாடு ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டதால் உலக அளவிலும் விலை உயர்வு காணப்பட்டது. இந்த விலை உயர்வின் விளைவுகளில் இருந்து சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது என இந்த அரசு கருதி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களுக்கு உரிய அளவுப்படி கிலோ ரூ.*13.50* என்ற மானிய விலையிலேயே சர்க்கரை வழங்கப்பட்டது. மத்திய அரசு *10,832.30* டன்கள் லெவி சர்க்கரையை மட்டும் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்தபோதும், அரசு மாதந்தோறும் *34,000* டன்களுக்கும் அதிகமாக சர்க்கரையை விநியோகம் செய்கிறது. இதற்கு தேவைப்படும் நிகர சர்க்கரை தேவையை தமிழ்நாடு சர்க்கரை இணையத்திடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்கிறது. வெளிச் சந்தையில் சர்க்கரை விலை உயர்ந்துள்ள நிலையில் பொது விநியோகத் திட்டத்தில் சர்க்கரையின் நுகர்வும் அதிகரித்துள்ளது. வழக்கமான மாதாந்திர நுகர்வு அளவான *20,000* முதல் *25,000* டன்களிலிருந்து தற்போது *34,000* முதல் *35,000* டன்கள் வரை நுகர்வு உயர்ந்துள்ளது. இதன் காரணமாக அரசு வழங்கும் உணவு மானியம் கணிசமாக உயர்ந்துள்ளது.

[2010 ஏப்ரல் 15

(v) கோதுமை விளைச்சல் அதிகமாக இருந்த காரணத்தாலும், போதுமான அளவு இருப்பு இருந்த காரணத்தாலும் கோதுமையைப் பொறுத்த வரை விலைவாசி உயர்வு இல்லை. எனினும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கோதுமையின் அளவு உயர்த்தப்பட்டதுடன் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவின் அளவும் உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கோதுமையின் சராசரி நுகர்வு மாதம் ஒன்றுக்கு 6000 டன்கள் ஆகும். தற்போது இந்த நுகர்வு அதிகரித்து மாதம் ஒன்றுக்கு 11,200 டன்களை எட்டியுள்ளது. வழக்கமாக பெறப்படும் மாதாந்திர ஒதுக்கீடான 3,783 டன்கள் மற்றும் சிறப்பு ஒதுக்கீடான 10,000 டன்கள் ஆகியவற்றை பயன்படுத்தி பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் கோதுமையின் அளவை மாநில அரசு அதிகரித்துள்ளது. இது தவிர பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பெறப்படும் கோதுமையிலிருந்து 2500 டன்களையும் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வெளிச் சந்தை விற்பனை விலை திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கோதுமையிலிருந்தும் கோதுமையைப் பயன்படுத்தி 5,000 டன்கள் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு தயாரித்து வழங்கப்படுகிறது. இது தவிர கோதுமையும் தனியாக வழங்கப்படுகிறது.

இருப்பு கட்டுப்பாடு

5. பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் மற்றும் எண்ணெய் வித்துக்கள் அரிசி மற்றும் நெல் ஆகியவற்றிற்கு இருப்பு எல்லை நிர்ணயித்து மாநில அரசு அறிவிக்கை செய்துள்ளது. வணிக நடைமுறைகளை கூர்ந்தாய்வு செய்ய மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பதுக்கலைத் தடுக்க ஆய்வுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. பதுக்கி வைக்கப்பட்டிருந்த 165 டன்கள் சர்க்கரை பறிமுதல் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் பருப்பு உற்பத்தி போதுமான அளவு இல்லாத நிலையில் இருப்பு எல்லை மீறல் இனங்கள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், பதுக்கலைத் தடுக்க வணிகர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

பிற நடவடிக்கைகள்

6.(அ) பருப்பு வகைகளின் மொத்த விலைக்கும், சில்லறை விலைக்கும் அதிகமாக வேறுபாடு இருப்பதன் காரணமாக உளுத்தம் பருப்பு மற்றும் துவரம் பருப்பு ஆகியவற்றை 27-01-2010 முதல் பொருளாதார விலையில் விற்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது. இதற்குத் தேவைப்படும் பருப்பினை அரைவையாளரிடம் இருந்து நேரடியாக வாங்கி கூட்டுறவு மொத்த பண்டகசாலை நடத்தும் 200 கூட்டுறவு அங்காடிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் 25 அமுதம் பலபொருள் சிறப்பு அங்காடிகள், கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 295 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. அடக்கவிலை மற்றும் சந்தையின் போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பொருள்களின் விற்பனை விலை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட பின் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் 323 டன்கள் துவரம் பருப்பு, 29 மெட்ரிக் டன்கள் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை விற்பனை செய்துள்ளன. தற்போது முதல் ரக துவரம் பருப்பு விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 60/-, இரண்டாம் ரக துவரம் பருப்பு விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 55/-, கனடா பருப்பின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 47/-, உளுத்தம் பருப்பு முதல் ரகம் கிலோ ரூ. 55/-, இரண்டாம் ரக உளுத்தம் பருப்பு விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 53/- ஆகும். குடும்ப அட்டைகள் இல்லாமலேயே பொதுமக்கள் தங்களுக்கு தேவைப்படும் அளவை வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[2010 ஏப்ரல் 15

(ஆ) காய்கறி விளைச்சல் நிலையற்ற தன்மை கொண்டவை என்பதாலும் ஒவ்வொரு பருவத்திலும் இவற்றின் உற்பத்தி மாறுதலுக்கு உட்பட்டது என்பதாலும் இவற்றின் விலை நிலையற்ற தன்மை கொண்டது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் காய்கறிகளை விற்பனை செய்வது சாத்தியமில்லை என்றாலும் காய்கறிகள் விலை அவ்வப்போது ஏறுமுகமாக இருக்கும்போது மட்டும் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நியாய விலைக் கடைகளிலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக காய்கறிகளை கொள்முதல் செய்து அவற்றை பலபொருள் அங்காடிகள் மற்றும் இடவசதி உள்ள நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்கின்றன.

(இ) பொருட்களின மீதான வரி விதிப்பினை மாற்றம் செய்து பொருட்களின் விலையைக் குறைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. பருப்பு வகைகள் மற்றும் பயறு வகைகள் மீதான விற்பனை வரி முழுவதும் நீக்கப்பட்டுள்ளது. கோதுமையைப் பொறுத்தவரை விற்பனை வரி 2% ஆகக் குறைக்கப்பட்டது. கடலை எண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் மீதான விற்பனை வரி நீக்கப்பட்டது. சூரிய காந்தி எண்ணெய்யைப் பொறுத்தவரை விற்பனை வரி 1% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அரிசியைப் பொறுத்த மட்டில் விற்பனை வரி விதிக்காத மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

7. மாநில அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக பொதுமக்கள் விலை உயர்வின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். மேலும், சில பொருட்களின் விலையும் குறைய ஆரம்பித்துள்ளது. 2009 நவம்பர் மாதத்தில் அதிக விலையில் விற்கப்பட்ட துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாசிப் பருப்பு, தனியா, உருளைக் கிழங்கு, தக்காளி, வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் 2010 பிப்ரவரி மாதத்தில் குறைந்து காணப்பட்டன. இதே கால அளவில்

1. பொன்னி, புழுங்கல் அரிசி மற்றும் பச்சரிசி ஆகியவற்றின் விலைகள் முறையே 14% மற்றும் 15% ஆகக் குறைந்துள்ளன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஏப்ரல் 15]

2. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பயத்தம் பருப்பு ஆகியவற்றின் விலைகள் முறையே 24%, 11%, 6% ஆகக் குறைந்துள்ளன.

3. உருளைக் கிழங்கு, தக்காளி மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் முறையே 32%, 53% மற்றும் 24% ஆகக் குறைந்துள்ளன.

8. வரும் ஆண்டில் உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கும்பட்சத்தில் அத்தியாவசியப் பொருட்களின், குறிப்பாக வேளாண் பொருட்களின் விலை குறையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், வேளாண் விளைபொருட்களை மிகவும் குறைந்த விலையில் விற்க நேரிடும் சூழ்நிலை ஏற்பட்டால் இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் ஊக்கத்தை விவசாயிகள் இழக்க நேரிடலாம். எனவே, விலைவாசி நிலவரத்தை இந்த அரசு கவனமாகக் கண்காணித்து, ஒரு புறம் நிலவி வரும் சில்லறை விலையினை கருத்தில் கொண்டும், மறுபுறம் விவசாய சமூகத்தின் உற்பத்தி செலவினை கவனத்தில் கொண்டும், ஒரு நடுநிலையான நிலைப்பாட்டுடன் நுகர்வோர்களுக்கும் விவசாயி களுக்கும் பாதிப்பு ஏற்படாத சூழ்நிலையை உறுதி செய்யவேண்டியது அவசியமாகும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 15

இயல் – 4

இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டம்

எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இரண்டு எரிப்பான்கள் கொண்ட அடுப்புடன் கூடிய இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் 2006-2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எரிசக்தி பாதுகாப்பு அளிப்பதற்காகவும், விறகு, மாட்டுச் சாணம் போன்ற எரிபொருள்களைப் பயன்படுத்துவதன்மூலம் பெண்களுக்கு ஏற்படும் உடல் நலக் கேடுகளிலிருந்து அவர்களைக் காக்கவும், அரசு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

2. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 60 கோடி செலவில் 3 இலட்சம் பயனாளிகளுக்கு தமிழக அரசு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கியது. 2007-2008 ஆம் ஆண்டில் 8 இலட்சம் பயனாளிகளுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டன. இதற்காக மாநில அரசு ரூ.166.47 கோடி விடுவித்தது. 2008-2009 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு 6 இலட்சம் இணைப்புகள் விடுவித்துள்ளது. இதற்காக அரசு ரூ. 154.98 கோடி விடுவித்துள்ளது. இந்தப் பயனாளிகள் அனைவருக்கும் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மத்திய அரசு 2009-2010 ஆம் ஆண்டிற்கு 6 இலட்சம் சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்க அனுமதித்தது. இதற்காக ரூ. 140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இணைப்புகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்து 2010-2011 ஆம் ஆண்டிற்கு 6 இலட்சம் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்கு மாநில அரசு ரூ.140 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

2010 ஏப்ரல் 15]

இயல் – 5

நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் ஏமாற்றி சுரண்டப்படுவதைத் தடுத்து அவர்களுக்கு உரிய பாதுகாப்பை அளிப்பதே மாநில அரசின் நுகர்வோர் பாதுகாப்புக் கொள்கையின் தலையாய நோக்கமாகும். உலகமயமாக்கல் கொள்கை, வணிகச் சந்தையின் தீவிரப் போக்கு ஆகியவற்றால் நுகர்வோர்கள், முறையற்ற வணிகம் மற்றும் ஏமாற்றுதல், சுரண்டுதல் ஆகியவற்றிற்கு ஆட்படுகிறார்கள். போலியான விளம்பரங்கள் முறையற்ற வணிகப் போக்கு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றால் பொதுமக்கள் மோசமான உடல்நலக் கேடுகளாலோ அல்லது நிதியிழப்பாலோ அவதிப்படுகிறார்கள். எனவே, நுகர்வோர்கள் அவர்களது உரிமைகள் குறித்து தெரிந்து கொள்வதற்கும் ஏமாற்று வணிகப் போக்கு ஆகியவற்றைக் குறித்து அறிந்துகொள்வதற்கும் அவர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அவசியமாகிறது. இதனால் காலச் சூழலுக்கேற்ப சட்டங்களையும், வழிமுறைகளையும் மாற்றியமைத்து நுகர்வோர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும்வண்ணம் அதிகாரம் உடையவர்களாக மாற்றுவது அவசியமாகிறது.

2. குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள், மாவட்ட நுகர்வோர் தகவல் மையங்கள் அமைத்தல், விழிப்புணர்வு முகாம்கள், பயிற்சி வகுப்புகள் நடத்துதல், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் ஆகிய நுகர்வோர் சிறப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. மாநில நுகர்வோர் உதவி அமைப்பு போன்ற புதிய திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ள சிறப்புத் திட்டங்கள் பின்வருமாறு:—

- நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நன்கு ஊக்குவிக்க ஏதுவாக நுகர்வோர் குறைபாடுகள் தொடர்பான கோரிக்கைகளை விரைவாகவும், சிறப்பாகவும் தீர்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாநில 'நுகர்வோர் பாதுகாப்பு விருது' வழங்கப்பட்டு உள்ளது. "உலக நுகர்வோர் உரிமை தினம் 2009" மாநில அளவில் திருநெல்வேலியில் 13-02-2010 அன்று கொண்டாடியபோது நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

[2010 ஏப்ரல் 15

➤ *2009-2010 ஆம் ஆண்டில் மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் கூட்டங்கள் விரைவில் நடத்தப்பட உள்ளன.*

➤ *உலக சுகாதார மையம் போன்ற பல்வேறு ஒருங்கிணைந்த நாடுகளுடைய அமைப்புகளின் பிரதிநிதித்துவம் கொண்டுள்ள பன்னாட்டு நுகர்வோர் அமைப்புகளின் கூட்டமைப்பில் அரசு உறுப்பினராக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முறையாகச் சேர்ந்துள்ளது. வரும் காலங்களில் பன்னாட்டு நுகர்வோர் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதன்மூலம் இத்துறை அதிக எண்ணிக்கையிலான நுகர்வோரின் குறைகளைத் தெளிவுடன் அறிந்து அதற்கான தீர்வுகளையும் காண முடியும்.*

சிறப்பு நுகர்வோர் பாதுகாப்புத் திட்டங்கள்

3. தமிழ்நாட்டில், மாநில அரசு 2009-2010 ஆம் ஆண்டில் நுகர்வோர் கல்வி மற்றும் உரிமைகள் ஆகியன குறித்து பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த பல திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

(i) கிராமப்புற அடித்தட்டு மக்களுக்கு விழிப்புணர்வு

மாவட்ட அளவில் நுகர்வோர் விழிப்புணர்வு உருவாக்கிட 2009-2010 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ரூ. 58 இலட்சம் நிதி உதவி மானியமாக வழங்கியுள்ளது. இந்த நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 2010-2011-ல் நடத்தப்படும்.

(ii) நுகர்வோர் விழிப்புணர்வு பிரச்சாரம்

நுகர்வோர் வாங்கும் பொருட்களின் தரம் மற்றும் நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து குறுந்தகடுகள் தயாரித்து தொலைக்காட்சி மற்றும் வானொலியில் பிரச்சாரம் செய்யும் நோக்கத்திற்காக 2009-2010 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ரூ.40 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 2010-2011-ல் செயல்படுத்தப்படும்.

2010 ஏப்ரல் 15]

(iii) விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் ஆர்வமூட்டுதல்

விவசாயிகளுக்கும் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய இயக்கங்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் 2010 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ரூ.10.92 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் 4,500 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள்.

(iv) மாநில நுகர்வோர் உதவி அமைப்பு (State Consumer Helpline)

நுகர்வோர்களின் குறைகளைக் கேட்டு அதற்கு உடனடித் தீர்வு காண ஆலோசனை வழங்க ஏதுவாக அனைத்து மாநிலங்களும் மாநில நுகர்வோர் உதவி அமைப்பை தொடங்க வேண்டுமென மத்திய அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது. நுகர்வோர் பிரச்சினைகளைத் தீர்வு செய்யும் இத்தகைய மாற்று வழியான மாநில நுகர்வோர் உதவி அமைப்பை நிறுவ இந்திய அரசு ரூ.27.60 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் இந்த அமைப்பு 2009 ஆம் ஆண்டு நவம்பர் 2-ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரை 19,760 புகார்கள் பெறப்பட்டு அவற்றில் 7,106 புகார்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

(v) தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரம் பெற்ற சங்கம் (TANSSCOPE)

மாநில நுகர்வோர் உதவி சேவை அமைப்பு செயல்படவும், இத்துறையின் வெளியீடான 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' போன்ற நுகர்வோர் தொடர்புடைய மாதாந்திர இதழ் வெளியிடுதல் போன்ற செயல்பாடுகளுக்காக மாநில அரசு "தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரம் பெற்ற சங்கம்" என்ற ஒரு சங்கம் நிறுவ அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது. இச்சங்கம் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் 70/2009 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சங்கம் மத்திய அரசு, மாநில அரசு, தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நிதியுதவி பெற்று நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை பெரிய அளவில் செயல்படுத்தப் பாடுபடும்.

[2010 ஏப்ரல் 15

(vi) குடிமக்கள் நுகர்வோர் மன்றம்

அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் அமைக்க ஊக்கம் அளிக்கப்பட்டு அவை பயனுள்ள குழுக்களாக உருவாவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நுகர்வோர் மன்ற மாணவ உறுப்பினர்களை அண்மையில் உள்ள முதன்மை வணிகத் தலங்கள், அலுவலகங்கள், ஆய்வகங்கள் போன்றவற்றிற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு கலப்படப் பொருள்களை கண்டறிதல், முறைகேடுகள் எவ்வாறெல்லாம் நடைபெறுகின்றன, அவற்றை எவ்வாறு தடுப்பது போன்றவை கல்வி கண்காட்சிகள் மற்றும் செயல்விளக்கங்களில் செய்து காட்டப்படுகின்றன. தற்போது பள்ளிகளில் 1000 நுகர்வோர் மன்றங்களும், கல்லூரிகளில் 500 நுகர்வோர் மன்றங்களும், அரசு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. பல கல்வி நிறுவனங்கள், அரசு நிதியுதவியை எதிர்பாராது தாங்களே ஆர்வத்துடன் நுகர்வோர் மன்றங்களைத் தொடங்கி நடத்தி வருகின்றன. தற்போது 2000 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் உள்ளன. 2009-2010 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து 1 கோடி ரூபாய் நிதியுதவி பெறப்பட்டு, தற்போது 500 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களுக்கு ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.50 இலட்சமும் 1000 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களுக்கு 2010-2011 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

தமிழ்நாடு நுகர்வோர் நல நிதி

4. மத்திய, மாநில அரசுகள் 50:50 என்கிற விகிதத்தில் அளித்த மூலதனப் பங்களிப்புத் தொகை முறையே 50 இலட்சம் ரூபாயைக் கொண்டு மாநில அரசு வைப்பு நிதி ஒன்றை உருவாக்கியது. இந்த நிதியைப் பயன்படுத்தும் விரிவான வழிமுறைகளுடன் தமிழ்நாடு நுகர்வோர் நல நிதி விதிகள், 2007-ல் உருவாக்கப்பட்டு அவ்விதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. அவ்விதிகளில் மாவட்ட மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் வழக்குத் தொடுக்கும் நுகர்வோர்கள் செலுத்தும் வழக்குக் கட்டணம் மற்றும் அந்தக் குறைதீர் மன்றங்களின் தீர்ப்பாணைகளில் விதிக்கும் அபராதத் தொகை ஆகியவை இந்த நிதித் தொகுப்பில் சேர்ந்திட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர்வோர் நல நிதி விதிகளில் கண்டுள்ள வழிகாட்டுதல்களுக்குட்பட்டு ஊடகங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் அமைப்புகள்மூலம்

2010 ஏப்ரல் 15]

நுகர்வோர் கல்வி வளர்ச்சிக்காகவும், ஆராய்ச்சிக்காகவும் இந்த நிதித் தொகுப்பு பயனுள்ள வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

5. 2009-2010 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்வோர் நல நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியைக் கொண்டு 2010-2011 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:—

- ➢ பள்ளி மற்றும் கல்லூரிகளில் செயல்பட்டு வரும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவில் ஒருங்கிணைப்பாளர்களை நியமனம் செய்தல்.
- ➢ மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- ➢ நுகர்வோர் விழிப்புணர்வு அடையும் பொருட்டு எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கைகளுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

2010-2011 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்று தமிழ்நாடு நுகர்வோர் நல நிதியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு நுகர்வோர் கவசம் / மாத இதழ்

6. நுகர்வோர்கள் அவர்களது உரிமைகள் பற்றி பொதுவாகவும், ஒவ்வொரு துறை குறித்த சட்டங்கள், தரங்கள், விதிகள் மற்றும் குறியீடுகள் பற்றிய விவரங்களை செய்தி ஊட்டகங்கள்மூலமும் அறிந்திடும் நோக்கத்துடன் "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்னும் மாதாந்திர இதழ் புதிதாக வடிவமைக்கப்பட்டு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரால் வெளியிடப்பட்டு வருகின்றது. அதன் பிரதிகள் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பொது நூலகங்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன. நுகர்வோர் கவசம் 2008-2009 ஆம் ஆண்டில் இந்திய செய்தித்தாள் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டு விற்பனை விலை ரூ.10/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 7000 பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டு அனைத்து பொது நூலகங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த இதழை அச்சிட்டு

வெளியிடுவதற்காக 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.7.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சந்தாவாக ரூ.2.09 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் குறைகளுக்கு சட்டத்தின்மூலம் தீர்வு

7. 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்டம் என்று மூன்று நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய குறைதீர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:—

(i) தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புது தில்லி

(ii) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் (மாநிலத் தலைநகரங்கள்) மற்றும்

(iii) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் (மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்கள்)

(i) தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புது தில்லி

இவ்வாணையம், அனைத்து மாநிலங்களிலும் உள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்கும் மேல் முறையீட்டு ஆணையமாக புது தில்லியில் செயல்படுகிறது. இவ்வாணையத்தில், ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணங்களுக்கு நுகர்வோர் நேரடியாக வழக்கு தொடரலாம். தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையமானது, அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரமும் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

(ii) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் ரூ.20 இலட்சத்திற்கு மேல் ரூ.1 கோடி வரையிலான நிவாரணம் வேண்டி நுகர்வோர்கள் வழக்கு தொடரலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியை தலைவராகக் கொண்டுள்ளது. தற்போது மாநில குறைதீர் ஆணையத்தின் உறுப்பினர்களை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தியும், அவர்களில் இருவர் நீதிமுறை அறிவுசார் உறுப்பினர்களாக இருக்கவும், ஆணையத்தின் நடவடிக்கைகள் மதுரையிலிருந்தும் செயல்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2010 ஏப்ரல் 15]

இவ்வாணையம், இம்மாநிலத்தில் உள்ள முப்பது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களிலும் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரமும் மாவட்ட மன்றங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும். மாநில ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் நிர்வாகத்தைக் கவனிக்க பதிவாளர் துறைத் தலைவராக செயல்படுகிறார். மாநில ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து பிப்ரவரி 2010 வரை 21,033 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 18,306 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. இது 87 சதவீதம் ஆகும். மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உள்கட்டமைப்புகளை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் 2010-2011 ஆம் ஆண்டுக்கு ரூ.11.00 இலட்சம் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஏற்படுத்த வேண்டும். தற்போது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் முப்பது மாவட்டங்களில் செயல்படுகின்றன. இம்மன்றங்களில் மாவட்டங்களின் எல்லைக்குட்பட்ட நுகர்வோர் ரூபாய் இருபது இலட்சம் வரை மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். இம்மன்றத்தின் தலைவர், ஓய்வு பெற்ற ஒரு மாவட்ட நீதிபதியாவார். இதில் ஒரு ஆண் மற்றும் பெண் ஆக இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். மாவட்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து பிப்ரவரி 2010 வரை 93,041 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 84,859 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. இது 91 சதவீதம் ஆகும். மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, திருவண்ணாமலை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

8. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் காலியாக இருந்த பதவிகளை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவை சீராக நடைபெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தி கூடுதல்

[2010 ஏப்ரல் 15

தீர்ப்பாயம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் பயனாக கூடுதலாக நீதி முறை சார்ந்த இரு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். எனவே, நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவற்றின்மூலம் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு மாநில அரசு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கும். மாவட்ட மற்றும் மாநில அளவில் இயங்கிவரும் நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதை இந்த அரசு உறுதி செய்யும். மாநில அரசு, மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளதால், மாநிலத்தில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் மேலும் வலுவடைந்து, நுகர்வோர் பாதுகாப்பு குறித்த எண்ணங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்வதற்கு வகை செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 15]

இயல் – 6

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் நாள் இந்திய நிறுமச் சட்டம், 1956-ன்கீழ் தொடங்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டில் தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனமாக மாற்றப்பட்டது. இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்தல் ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியமான பணிகளாகும். மேலும் இந்நிறுவனம் மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்கு தேவையான பருப்பு மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்து விநியோகம் செய்து வருகிறது.

2. இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர் குழுவை தமிழக அரசு நியமனம் செய்கிறது. நிர்வாக வசதிக்காக இந்நிறுவனம் 33 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் / துணை ஆட்சியர் நிலையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தில் 8525 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

3. பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்நிறுவனத்தின் பணிகள் பின்வருமாறு:—

(அ) பொது விநியோகத் திட்டம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோக திட்டத்திற்குத் தேவையான அரிசி மற்றும் கோதுமையினை இந்திய உணவுக் கழகச் சேமிப்புக் கிடங்குகளிலிருந்தும், சர்க்கரையை சர்க்கரை ஆலைகளில் இருந்தும் எடுத்து 220 செயல்முறைக் கிடங்குகளுக்குக் கொண்டு சென்று பொது விநியோகத் திட்டக் கடைகளுக்கு விநியோகம் செய்கிறது. மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1261 நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகிறது. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப்

[2010 ஏப்ரல் 15

பொருட்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சமையல் எண்ணெய், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றை கொள்முதல் செய்து மானிய விலையில் விற்பனை செய்கிறது. நியாய விலைக் கடைகளில் பொருட்களின் இருப்பானது குறுந்தகவல் சேவையின்மூலம் தினமும் கண்காணிக்கப்படுகிறது.

(ஆ) நெல் கொள்முதல்

(i) இம்மாநிலத்தில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம் 1-10-2002 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்திய உணவுக் கழகத்தின் சார்பாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்கிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகள் மற்றும் தனியார் நெல் அரைவை முகவர்கள்மூலம் அரைவை செய்யப்பட்டு பெறப்படும் அரிசியை மைய அரசின் மத்திய தொகுப்பில் ஈடுகட்டி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்படுகிறது.

(ii) 2009-2010 கரீப் பருவத்திற்கு மத்திய அரசு நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.950/- எனவும், கிரேடு 'ஏ' வகை நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.980/- எனவும் நிர்ணயம் செய்துள்ளது. மேலும் இந்த குறைந்தபட்ச ஆதரவு விலைக்கும் மேல் ஊக்கத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50/-ம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. ஆனால், மாநில அரசு விவசாயிகளை ஊக்கப்படுத்தவும், நெல் கொள்முதலை அதிகரிக்கவும் சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத்தொகை ரூ.50/-ஐச் சேர்த்து ரூ.1050/- என்ற விலையிலும் கிரேடு 'ஏ' வகை நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத்தொகை ரூ.70/-ஐச் சேர்த்து ரூ.1100/- என்ற விலையிலும் கொள்முதல் செய்து வருகிறது. இந்நோக்கத்திற்காக 2010-2011 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 300 மூட்டைகள் மற்றும் அதற்கு

2010 ஏப்ரல் 15]

அதிகமாக நெல் இருப்பு வைத்திருக்கும் விவசாயிகளை அலுவலர் குழு அணுகி, அவர்களது வீட்டிலிருந்தே லாரிகளில் நெல் கொள்முதல் செய்யும் முறை இந்த கரீப் பருவம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2009-2010 கரீப் பருவத்தில் 31-3-2010 வரை 12,41,767 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(iii) நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யப்படும்போது, சரியான எடையில் கொள்முதல் செய்யப்படுவதை உறுதி செய்யும் நோக்கத்தில் நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு மின்னணு எடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் இந்நோக்கத்திற்காக ரூ.77 இலட்சம் செலவில் 1100 மின்னணு எடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 250 மின்னணு எடை இயந்திரங்கள் வாங்குவதற்காக 2009-2010 ஆம் ஆண்டில் ரூ. 23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 23 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. இவற்றின் சராசரி அரைவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 45,400 டன்கள் ஆகும். 2008-2009 ஆம் கரீப் பருவத்தில் 2.41 இலட்சம் டன்கள் நெல் நவீன அரிசி ஆலைகளில் அரைவை செய்யப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 23 நவீன அரிசி ஆலைகளில் 7 அரிசி ஆலைகள் புதிய தொழில்நுட்பத்துடன் ரூ.21 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான கருத்துருவினை பரிசீலித்த அரசு ரூ.22.40 கோடி செலவில் ஏழு நவீன அரிசி ஆலைகளை நவீனமயமாக்க அனுமதித்து பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

(v) கடந்த 5 கரீப் பருவங்களில் நெல் கொள்முதல், நவீன அரிசி ஆலைமூலம் அரைவை, தனியார் அரைவை முகவர்மூலம் அரைவை மற்றும் பொது விநியோகத்

திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட அளவு ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(டன்களில்)

கரீப் ஆண்டு	கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு	அரைவை செய்யப்பட்ட நெல்		பயன் படுத்தப்பட்ட அரிசியின் அளவு
		நவீன அரிசி ஆலை	தனியார் அரைவை முகவர்	
2005–2006	13,81,570	2,29,150	11,43,888	9,30,265
2006–2007	16,07,803	2,39,943	13,58,364	10,79,300
2007–2008	14,49,464	2,51,998	11,82,762	9,70,976
2008–2009	17,92,816	2,41,028	15,30,833	11,87,188
2009-2010	12,41,767	99,289	3,03,664	2,37,920

(vi) அரைவை செய்யப்பட்ட அரிசியினை மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிற்கு சரிக்கட்டும்போது பொருளாதார விலைக்கும் மைய அரசு விற்பனை விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை மைய அரசு மானியமாக வழங்குகிறது. கடந்த 5 ஆண்டுகளில் மைய அரசிடமிருந்து பெற்ற மானியம் பின்வருமாறு:—

வரிசை எண்	ஆண்டு	பெறப்பட்ட மானியம் (ரூபாய் கோடியில்)
1.	2005–2006	195.07
2.	2006–2007	366.52
3.	2007–2008	290.84
4.	2008–2009	627.30
5.	2009-2010	520.01

டிசம்பர் 2009 வரை

(இ) கிடங்குகள் மற்றும் சேமிப்பு வசதி

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 5.86 இலட்சம் டன் கொள்ளளவு கொண்ட 220 செயல்முறைக் கிடங்குகள் உள்ளன. இதில் 178 கிடங்குகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமானவையாகும்.

2010 ஏப்ரல் 15]

நாகப்பட்டினம் மாவட்டம் கீவளூரில் 1000 டன் கொள்ளளவுடன் கிடங்கு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. பொது விநியோகத்திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்படும் பொருட்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளதால் பெரும்பாலான மாவட்டங்களில் கூடுதல் சேமிப்பு வசதி தேவைப்படுகிறது. 77,000 டன்கள் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டுவதற்குத் தேவையான காலி மனைகள் பல மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வசம் உள்ளன. இந்த இடங்களில் படிப்படியாக கிடங்குகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2010-2011 ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், செம்பரம்பாக்கம் கிராமத்தில் 1500 டன்கள் கொள்ளளவு கொண்ட கிடங்கினை ரூ.60 இலட்சம் செலவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நெல் மற்றும் இதர இன்றியமையாப் பொருட்களை சேமித்து வைக்க 3.69 இலட்சம் டன்கள் கொள்ளளவுள்ள சேமிப்புக் கிடங்குகள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஈ) அமுதம் பலபொருள் அங்காடிகள்

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னையில் 21 இடங்களிலும் கடலூரில் 4 இடங்களிலும் அமுதம் பலபொருள் அங்காடிகளை நடத்தி வருகிறது. மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து இன்றியமையாப் பொருட்களையும் இந்த அங்காடிகள் விற்பனை செய்கின்றன. அமுதம் பலபொருள் அங்காடிகள் தரமான பொருட்களை மற்ற அங்காடிகளைக் காட்டிலும் குறைந்த விலையில் விற்பனை செய்வதால் ஏழை மற்றும் நடுத்தர மக்களிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்று விலைவாசி உயர்வை கட்டுபடுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இந்த அங்காடிகளில் விற்பனை அளவு ரூ.19.08 கோடியாகும். ஆனால், 2008-2009 ஆம் ஆண்டில் இவற்றின் விற்பனை ரூ.27.12 கோடியாகும். இந்த விற்பனையின் காரணமாக ரூ.65.99 இலட்சம் இலாபம் கிடைத்துள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை இந்த அங்காடிகளில் மேற்கொள்ளப்பட்ட விற்பனை அளவு சுமார் ரூ.29.40 கோடியாகும்.

(உ) சிமெண்ட் விற்பனை

6. சிமெண்ட் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, ஒரு மூட்டை உள் நாட்டு சிமெண்டினை சலுகை விலையில்

ரூ.200/- வீதம் விற்பனை செய்ய அரசு 24-1-2008 முதல் ஆணையிட்டுள்ளது. 28-02-2010 வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் 9,79,330 டன்கள் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(ஊ) இதர செயல்பாடுகள்

7. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து வளர்ச்சித் திட்டம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகள் விடுதிகள் போன்றவற்றுக்கு தேவையான அரிசி மற்றும் இதர உணவுப் பொருட்களை மாதந்தோறும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்குகிறது. காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை மற்றும் வனத் துறை ஆகிய துறைகளின் பணியாளர்களின் குடும்ப அட்டைகளுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்களையும் இக்கழகம் கொள்முதல் செய்து விநியோகம் செய்கிறது. மத்திய அரசின் நலத் திட்டங்களான அன்னபூர்ணா திட்டம் மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் போன்ற நலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அரிசியினை இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து விநியோகிக்கிறது. இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வழங்குவதற்கான எரிவாயு அடுப்புகளையும், இரப்பர் குழாய்களையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்து வருகிறது.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கடலூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பெட்ரோல், டீசல் சில்லரை விற்பனை நிலையங்களை நடத்துதல் மற்றும் திருவண்ணாமலை, திருச்சி, ஊட்டி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் எரிவாயு அலகுகளை நடத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டுவருகிறது. உள்ளூர் சந்தையில் போதுமான அளவு துவரம் பருப்பு இருப்பு இல்லாத காரணத்தால் ஏற்பட்டுள்ள நிலைமையை அகற்றுவதற்காக துவரம் பருப்பு போன்ற சத்துள்ள கனடா பருப்பை இறக்குமதி செய்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 23,500 டன்கள் கனடா பருப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசிற்கு சொந்தமான சில நிறுவனங்களிடமிருந்து துவரம்

2010 ஏப்ரல் 15]

பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை கொள்முதல் செய்யும் பணியையும் இக்கழகம் செய்து வருகிறது.

புதிய முயற்சிகள்

9. (i) தனி கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் களப் பணியிடங்களில் நடைபெறும் செயல்பாடுகளைக் கண்காணிக்க இயலும். கொள்முதல் உச்சகட்ட நேரங்களில் விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் இன்னல்களை கைபேசிகள்மூலம் தெரிவிக்கும்போது, அவை சம்பந்தபட்ட மண்டல மேலாளர்களுக்கு இ-மெயில்மூலம் அனுப்பப்பட்டு தீர்வுகாண முடிகிறது. இன்றியாமையா பொருட்களின் இருப்பு நிலை மற்றும் இவற்றை கிடங்குகளுக்கும் நியாயவிலைக் கடைகளுக்கும் கொண்டு செல்லுதல் ஆகியவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு கட்டுப்பாட்டு அறை மேலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ii) இந்திய உணவுக் கழகத்திலிருந்து நகர்வு செய்யப்படும் இன்றியாமையாப் பொருட்களின் நகர்வினை குறுந்தகவல் சேவை (SMS) மூலம் கண்காணித்தல்

இந்திய உணவுக் கழகத்தின் 33 கிடங்குகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை நகர்வு செய்யும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பணியாளர்களுக்கு பட்டியலிடும் இயந்திரங்கள் (hand-held terminals) வழங்கப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள், இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு நகர்வு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் வாகனப் பட்டியலினை (truck memo) தானாகவே தயார் செய்து குறுந்தகவல் சேவைமூலம் தலைமையகத்திற்கு அனுப்பிவிடும். இதன் மூலமாக இன்றியமையாப் பொருட்கள் கொண்டு செல்வதைக் கண்காணிக்க இயலும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து, பொருள்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன என பதில் அனுப்பப்பட்டு, தலைமையகத்தில் பெறப்படும்போது, ஒவ்வொரு நாளும் அவை ஒப்பிடப்படுவதால், பொருட்கள் கடத்தப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

[2010 ஏப்ரல் 15

(iii) பொது விநியோகத் திட்ட சுமை உந்துகளின் நகர்வினை ஜி.பி.எஸ். திட்டத்தின்மூலம் கண்காணித்தல்

இந்தத் திட்டம் கிடங்குகளிலிருந்து எடுக்கப்படும் பொருள்கள், கடத்தலுக்கு உட்படாமல் நியாயவிலைக் கடைகளுக்கு முழுமையாகச் சென்றடைவதை உறுதிசெய்கிறது. திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தலா 40 வாகனங்களில் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்லும் பாதைகளைக் கண்காணிக்கும் பொருட்டு Global positioning system கருவிகள் 1-3-2008 முதல் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் எதிர்பார்க்கப்பட்ட முடிவினை எட்டியுள்ளது. எனவே, இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக மேற்கூறிய மாவட்டங்களின் கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு பொருட்களை எடுத்துச் செல்லும் பொருட்டு ஜி.பி.எஸ். கருவிகளைப் பொருத்தவும், வழித்தட நிலப்படம் தயாரித்தல், மென்பொருள் தயாரித்தல், கட்டுப்பாட்டு அறைமூலம் கண்காணித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள M/s. EI Labs India Private Limited எனும் பெங்களூரைச் சார்ந்த நிறுவனம் திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளிமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டாம் கட்டப் பணிகள் 1-9-2009 முதல் 31-8-2011 உள்ளிட்ட காலத்தில் நிறைவேற்றப்படும்.

(iv) கிடங்குகள் கணினிமயமாக்குதல்

மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தினை அமல்படுத்தும் 8 மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் உணவுப் பொருள் மேலாண்மை குறித்த ஒருங்கிணைந்த தகவல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் செயல்முறைக் கிடங்குகளைக் கணினிமயமாக்க மைய அரசால் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதற்காக இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள 270 கிட்டங்கி / மையங்களுக்கும் வன்பொருள்கள் வழங்குகின்றது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கிட்டங்கி நடவடிக்கைகளுக்கென ஒரு மென்பொருளைத் தனியாக உருவாக்கியுள்ளது. இம்மென்பொருள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிட்டங்கிகளில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள கிட்டங்கிகளில் இம் மென்பொருள் பொருத்தப்படும். இக்கிடங்குகளில் கணினிமூலம் (Online) தயாரிக்கப்படும் பட்டியல்களை உருவாக்குவதற்காக

2010 ஏப்ரல் 15]

எல்காட் நிறுவனம்மூலம் ரூ.1.12 கோடி செலவில் அச்சு இயந்திரங்கள் வழங்கப்படும். அனைத்துக் கிடங்குகளும், மண்டல அலுவலகங்களும் தங்களது பணிகளைத் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்காக ரூ.4.38 கோடி செலவில் 5 கிலோ வாட் டீசல் மின் உற்பத்தி இயந்திரங்கள் 2010-2011 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

(v) நியாய விலைக் கடைகளுக்குப் பட்டியலிடும் இயந்திரங்கள்

சென்னை நகரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 397 நியாயவிலைக் கடைகளில் பட்டியலிடும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனால் அன்றாட விற்பனையைக் கணினிகள்மூலம் அறிய முடிகிறது, மேலும் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கும் இது உதவி புரிகிறது.

(vi) நேரடிக் கொள்முதல் நிலையங்களில் பட்டியலிடும் இயந்திரங்கள் அமைத்தல்

காவிரி பாசனப் பகுதிகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட நேரடிக் கொள்முதல் நிலையங்களில் முன்னோடித் திட்டமாக, பட்டியலிடும் இயந்திரங்களை அறிமுகப்படுத்தி அவை செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் அளவிற்கான பட்டியலைத் தானே தயார் செய்து, இந்தத் தகவல்களை குறுந்தகவல் சேவைமூலம் மத்திய சர்வருக்கு அனுப்பும். எனவே, கொள்முதல் பணி முன்னேற்றம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பணப் பட்டுவாடா, நெல் கொள்முதல் செய்வதில் தரச் சான்றுகள் போன்றவற்றை தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கள்மூலம் கண்காணிக்க இயலும்.

நிதி ஆதாரம்

10. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 கோடி ஆகும். இவற்றில் 31-03-2009-ல் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.39.01 கோடி ஆகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 2009-2010 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.4000 கோடியை மாநில அரசிடமிருந்து உணவு மானியமாகவும் பெற்றுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டுக்கு ரூ.3750 கோடியை உணவு மானியமாக அரசு ஒதுக்கியுள்ளது.

[2010 ஏப்ரல் 15

இயல் – 7

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் வேளாண் உற்பத்தி (மேம்பாட்டு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனச் சட்டம் 1956-ன்படி தோற்றுவிக்கப்பட்டது. அதன் பிறகு இச்சட்டத்திற்குப் பதிலாக 1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம் இயற்றப்பட்டது. இந்நிறுவனம் 2-5-1958 ஆம் ஆண்டு முதல் தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது இந்த நிறுவனம் அலுவல்சாரா தலைவரின் தலைமையில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலராக மேலாண்மை இயக்குநர் இந்திய ஆட்சிப் பணி நிலையில் பணியாற்றி வருகிறார். இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள கிண்டியில் அமைந்துள்ளது. மண்டல மேலாளர் தலைமையில் 7 மண்டல அலுவலகங்கள் முறையே கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

2. மாநிலம் முழுவதும் 59 இடங்களில் இந்நிறுவனம் சேமிப்புக் கிடங்குகளை அமைத்துள்ளது. இந்நிறுவனம் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டபின் நிலத்தை வாங்கி விஞ்ஞான ரீதியான சேமிப்புக் கிடங்குகளை முக்கியமான இடங்களில் கட்டி வருகிறது. உற்பத்தியாளர்களுக்கும், வணிகர்களுக்கும் மற்றவர்களுக்கும் சரக்குகளை மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்கு பற்றுச்சீட்டுகளை வழங்கி வங்கிகளில் இருந்து கடன் வசதியைப் பெற ஏற்பாடு செய்து வருகிறது. இந்நிறுவனம் வைப்பீடுதாரர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் சேமித்து வைத்த பொருட்களை எடுப்பதற்காகவும், சரக்குகளை ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரத்துப் பணிகளுக்காகவும் ஒப்பந்ததாரர்களை நியமனம் செய்கிறது. இந்நிறுவனம், அதன்சேமிப்புக் கிடங்குகளிலும், அரசு மற்றும் தனியார் கட்டடங்களிலும் பூச்சி தாக்குதல் தடுப்புப் பணிகளையும் பூச்சிக் கொல்லி நடவடிக்கைகளையும் விரிவாக்கப் பணிமூலம் மேற்கொண்டு வருகிறது.

3. இந்நிறுவனத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகளை 10 இயக்குநர்களைக் கொண்ட இயக்குநர் குழுமம் மேற்கொண்டு வருகிறது. இயக்குநர் குழுமத்திலுள்ள 10 இயக்குநர்கள் மத்திய சேமிப்புக் கிடங்கு

2010 ஏப்ரல் 15]

நிறுவனத்தாலும், தமிழ்நாடு அரசாலும் சரிசமமாக நியமிக்கப்படுகின்றனர். தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புப் கிடங்கு நிறுவனம் ஆகியவற்றால் அவ்வப்போது பொதுநலன் கருதி எடுக்கப்படும் கொள்கை முடிவுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கருத்திற்கொண்டு இந்நிறுவனம் வணிக நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகள் தகுதிவாய்ந்த தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற சேமிப்புக் கிடங்கு மேலாளர்கள் மற்றும் இதர பணியாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. சேமிப்புக் கிடங்குகளின் பணிகளை மேற்பார்வையிட முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர்கள் காலமுறையில் நேரடியாக ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். மேலும் கிடங்குகளின் பணிகளை திறம்படக் கண்காணிக்க ஏதுவாக, காலமுறையில் எதிர்பாராத ஆய்வுகள், தலைமை அலுவலகத்தின் விழிப்புப் பணி, பறக்கும் படை மற்றும் உள் தணிக்கைப் பணியாளர்கள்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

கிடங்கு வசதி மற்றும் அதன் பயன்பாடு

4. இந்நிறுவனம் தமிழ்நாடு முழுவதிலும் 59 இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் வசதியைக் கொண்டுள்ளது. பல்வேறு வைப்பீடுதாரர்களும் இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனை இணையம், தொலைத் தொடர்புத் துறை, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கனிமம் மற்றும் உலோகங்கள் வர்த்தகக் கழகம், உரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், சிமென்ட் பயன்படுத்தும் அரசுத் துறைகள், தேர்தல் ஆணையம் உள்ளிட்ட அரசுத் துறைகள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், வணிகர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் இந்நிறுவனத்தின் கிடங்கு வசதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, தனியார் சரக்கு வைப்பாளர்களும் சேமிப்புக் கிடங்கு வசதியினைப் பயன்படுத்தி வருகின்றனர். 28.02.2010 அன்றுள்ளபடி இந்நிறுவனத்தின் சொந்த சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு 6.20 இலட்சம் டன் மற்றும் வாடகை சேமிப்பு கொள்ளளவு 0.25 இலட்சம் டன் என ஆகமொத்தம் 6.45 இலட்சம் டன்களாகும். ஏப்ரல் 2009 முதல் பிப்ரவரி 2010 வரை சேமிப்புக் கிடங்குகளில் சராசரியாக 85% கிடங்கு வசதி பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

[2010 ஏப்ரல் 15

5. 2009-2010 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

இடம்	கொள்ளளவு (டன்களில்)
மீளவிட்டான் சேமிப்புக் கிடங்கு	5,000
திண்டுக்கல் சேமிப்புக் கிடங்கு	2,200
கள்ளக்குறிச்சி சேமிப்புக் கிடங்கு	3,400
தூத்துக்குடி சேமிப்புக் கிடங்கு	2,400
மொத்தம்	13,000

6. 2010-2011 திட்ட மதிப்பீட்டில் ஆத்தூர் மற்றும் பட்டுக்கோட்டையில் ஒவ்வொன்றும் 3400 டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகள் கட்டுவதற்காக ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 55,000 டன்கள் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் இந்திய உணவுக் கழகத்தின் தேவையை முன்னிட்டு கீழ்க்கண்ட 6 இடங்களில் கட்டுவதற்காக ரூபாய் 25.00 கோடி அந்நிறுவனத்தின் 2010-2011 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	இடம்	கொள்ளளவு (டன்களில்)
1	மதுராந்தகம்	5,000
2	நாமக்கல்	10,000
3	அருப்புக்கோட்டை	5,000
4	காரைக்குடி	15,000
5	கோவில்பட்டி	5,000
6	சின்னசேலம்	15,000
	மொத்தம்	55,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஏப்ரல் 15]

வணிக விரிவாக்கப் பணிகள்

7. கடந்த 4 ஆண்டுகளாக இந்திய எண்ணெய்க் கழகம், திருமங்கலம் கிடங்கிலிருந்து எண்ணெய்ப் பொருள்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் அனுப்புதல் தொடர்பான ஒப்பந்த ஆணைகளை மதுரை, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், புதுக்கோட்டை, பெரம்பலூர், கன்னியாகுமரி ஆகிய 15 மாவட்டங்களிலும் காரைக்காலிலும் நன்கு செயல்படுத்தி வருகிறது. மேலும், அம்பிகா சர்க்கரை ஆலை மற்றும் ஆரூரான் சர்க்கரை ஆலை ஆகியவற்றின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள கிடங்குகளைப் பராமரித்தல் சம்பந்தமாக தொழில் மேலாண்மை சேவையை அளித்து அதன்மூலம் கூடுதல் வருவாய் பெறுகிறது.

கணினிமயமாக்குதல்

8. இந்நிறுவனத்தின் 59 கிடங்குகளும் 7 மண்டல அலுவலகங்களும் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து மண்டல அலுவலகங்களும் தலைமை அலுவலகத்துடன் இணையதளத்தில் இணைத்து தாள்களே உபயோகிக்காத ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக அனைத்துக் கிடங்குகளையும் மண்டல அலுவலகங்களுடன் ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பணிகள் பற்றிய விவரம் அடங்கிய இணையதளம் எல்காட் நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளுக்குமான படிவங்களை இந்த இணையதளம் மூலமாகப் பெறமுடியும். எனவே, ஒப்பந்தப் புள்ளிகளை இறுதிசெய்வதில் முழுவதும் வெளிப்படையான நிர்வாகத்தைச் செயல்படுத்திட முடிகிறது.

கடன் வசதிகள்

9. 2008-2009 ஆம் ஆண்டில் பல்வேறு சரக்கு வைப்பாளர்கள் சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை அடமானம் வைத்து பல்வேறு வங்கிகள்மூலம் ரூ. 181.12 கோடி கடன் பெற்றுள்ளனர். அதேபோல் 2009-2010 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2010 வரை உள்ள காலத்தில் ரூ. 191.26 கோடி கடன் பெற்றுள்ளனர்.

[2010 ஏப்ரல் 15

நிதி நிலைமை

10. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.*800* இலட்சம் ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.*761* இலட்சம் ஆகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் *50 : 50* என்ற விகிதத்தில் பங்குதாரர்களாக உள்ளன. *2007-2008* ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த வருமானம் ரூ.*2256.84* இலட்சமாகும். ஆனால், *2008-2009* ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த வருமானம் ரூ. *2363.49* இலட்சமாகும். *2008-2009* ஆம் ஆண்டில் வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.*337.50* இலட்சத்தை இந்நிறுவனம் ஈட்டியுள்ளது. *2009-2010* ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூ.*2800* இலட்சமாகவும் இலாபம் ரூ.*786* இலட்சமாகவும் இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இயக்குநர் குழுவானது பங்குதாரர்களுக்கு *2008-2009* ஆம் ஆண்டுக்கான ஈவுத் தொகையாக *6* விழுக்காடு அதாவது ரூ.*45.66* இலட்சம் அளித்திட தீர்மானித்துள்ளது. மேற்படி ஈவுத் தொகை *2008-2009* ஆம் ஆண்டில் வரிக்குப் பிந்தைய இலாபமான ரூ.*296.41* இலட்சத்தில் *15.40* விழுக்காடாகும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS